ஸ்ரீகலா SRIKALA

ஸ்ரீகலா SRIKALA

விழியில் விழுந்து இதயம் நுழைந்து

VIZHIYIL VIZHUNTHU
ITHAYAM NUZHAINTHU

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...

TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

Download

ஸ்ரீகலாவின் “விழியில் விழுந்து இதயம் நுழைந்து”

Contents

அத்தியாயம் : 1
அத்தியாயம் : 2
அத்தியாயம் : 3
அத்தியாயம் : 4
அத்தியாயம் : 5
அத்தியாயம் : 6
அத்தியாயம் : 7
அத்தியாயம் : 8
அத்தியாயம் : 9
அத்தியாயம் : 10
அத்தியாயம் : 11
அத்தியாயம் : 12
அத்தியாயம் : 13
அத்தியாயம் : 14
அத்தியாயம் : 15
அத்தியாயம் : 16
அத்தியாயம் : 17
அத்தியாயம் : 18
அத்தியாயம் : 19
அத்தியாயம் : 20
அத்தியாயம் : 21
அத்தியாயம் : 22
அத்தியாயம் : 23
அத்தியாயம் : 24
அத்தியாயம் : 25

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

அத்தியாயம் : 1

புலர்ந்தும் புலராத அதிகாலைப் பொழுதில் சென்னையிலிருந்து திருச்சி செல்லும் புறவழிச் சாலையில் வாகனங்கள் சர்...சரென்று வேகமாக அங்குமிங்கும் விரைந்து கொண்டிருந்தது. அந்தச் சாலையின் ஓரத்தில் அமைந்திருந்த டீக்கடைக்குச் சற்றுத் தூரத்திலிருந்த குப்பைத் தொட்டியின் பக்கமிருந்து மிகத் தீனமான பெண் குரல், "தண்ணீர்...தண்ணீர்...!" என்று முனங்கியது. அந்த நிசப்தமான வேளையில் அந்தக் குரல் தெளிவாகக் கேட்டாலும், ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாததால் யாரும் அதைக் கவனிக்கவில்லை. டீக்கடைக்காரர் வாசலைப் பெருக்கி குப்பையை அள்ளிப் போடும் போது தான் அந்தக் குரலைக் கேட்டார்.

பெண்ணின் குரல் என்றதுமே பதறிப் போய்க் கடையை ஒட்டியிருந்த வீட்டினுள் சென்று தன் மனைவியை அழைத்து வந்தார். இருட்டில் வரிவடிமாகத் தெரிந்த உருவத்தைப் பார்த்துப் பதறிப் போன அந்த ஆண், "புள்ளே...நீ கால்ப்பகுதியை பிடி, நான் தலைப்பகுதியை பிடிக்கிறேன். ஆளுக்கொரு பக்கமாய்ப் பிடித்துக் கடைக்குத் தூக்கிட்டு போவோம். அதுக்குப் பிறகு மத்ததை யோசிப்போம்" வேகமாய் அவர் ஆணையிட, அந்தப் பெண்மணியும் அவர் சொன்னதைத் தட்டாமல் செய்தாள்.

கடையின் உள்ளே இருந்த பெஞ்சில் படுக்க வைக்கும் பொழுது தான் அந்தப் பெண்மணி அந்தப் பெண்ணைப் பார்த்து அலறினாள். அரை மயக்கத்தில் உடை கிழிந்து உடல் முழுவதும் நகக்கீறல்களும், ஆங்காங்கே ரத்தம் கட்டியிருந்த காயங்கள் என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்லாமல் சொல்லியது.

"ஐயோ...என்னய்யா இது அக்கிரமமாயிருக்கு. பார்த்தா பச்ச புள்ளை மாதிரி இருக்கு இதுக்கா இந்த நிலைமை" அந்தப் பெண்மணியின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

கடைக்காரருக்கும் அந்தப் பெண்ணின் நிலைக் கண்டு கண் கலங்கியது. ஆனாலும் சுதாரித்துக் கொண்டு,

PDF தமிழ் .com

“நீ கொஞ்சம் இது கூட இரு. நான் போய்ச் சூடாக் குடிக்கக் கொண்டு வர்றேன்” மனைவியின் பதிலை எதிர்பாராமல் சென்றவர், சிறிது நேரத்தில் கையில் சூடான பூஸ்டுடன் வந்தார். அதை மனைவி கையில் கொடுத்து அந்தப் பெண்ணிற்குக் கொடுக்கச் சொன்னவர், அவர் அவளுக்குப் புகட்டி முடித்ததும், இருவரும் கடையை மூடிவிட்டு அந்தப் பெண்ணை ஆட்டோவிலேற்றி மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். மருத்துவமனையில் ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட்கப்பட்டுக் கடைசியாகக் காவல்நிலையத்தில் புகார் அளிக்கக் கூறினர். அவரும் சளைக்காமல் மகளிர் காவல்நிலையம் சென்று புகார் பதிந்து விட்டு, அங்கும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலை சொல்லி விட்டு வர மாலையாகிவிட்டது. ஒருநாள் கடையைத் திறக்காவிட்டாலும் அவர்களின் வயிற்றுப்பாடு திண்டாட்டம் தான். அது கூட ஒரு இளம்பெண்ணிற்கு உதவி செய்த திருப்தியில் மறைந்துவிட்டது.

“என்ன டாக்டர்...இந்தப் பொண்ணு இன்னும் கண்ணு முழிக்கலையா? இந்தப் பொண்ணு எப்போ கண்ணு முழிச்சு நான் எப்போ கேசை முடிக்கிறது?” புலம்பியபடி அங்கே இருந்த நாற்காலியில் அமர்ந்த பெண் அதிகாரி கண்ணை மூடிக் கிடந்த பெண்ணைப் பார்த்தார். அவருக்கும் அவளைப் பார்க்க பாவமாகத் தான் இருந்தது. மெல்ல அவளுக்கு விழிப்பு வருவது போலிருக்க,

“ஏய் பொண்ணு...!” அவள் கன்னம் தட்ட, மீண்டும் அவள் கண்கள் சொருகுவது போலிருக்க, இந்த முறை பலமாகத் தட்டியவர், “நான் பேசுறது கேட்குதா...இங்கே பாரு...”

அதற்குப் பலனிருந்தது. மெதுவே கண் விழித்தவள், பயத்துடன் தன் கண்களைச் சுழற்றினாள். எதிரில் காவலதிகாரியை அதுவும் பெண் அதிகாரியை பார்த்ததும் அவள் மனதில் சிறிது நம்பிக்கை எழ, கண்களை அகல விரித்து அவரை உற்று நோக்கினாள்.

“உன் பேரு...வீட்டு அட்ரெஸ் என்ன...? இது எப்படி நடந்தது?”

பெண் அதிகாரி தன் சம்பிராதயக் கேள்விகளை அடுக்க, “ஷன்மதி...” தீனமான குரலில் பதில் சொன்னவளால் வாயை சரியாக அசைக்கக் கூட முடியவில்லை. உதட்டில் இருந்த காயம் ஒவ்வொரு வார்த்தை உச்சரிப்புக்கும் பெருத்த வலியை உண்டு பண்ணியது. அதை விட உடலெல்லாம் தீச்சுட்டது போல் தகித்தது. மனம் ‘அம்மா...அம்மா...’ என்று ஓலமிட்டு தாய் மடியை நாடியது.

“ம்...சீக்கிரம் அட்ரெஸ் சொல்லு. அப்பத்தான் உன் பேரண்ட்ஸ்க்கு இன்ஃபார்ம் பண்ண முடியும்” பெற்றோர் வந்துவிடுவார்கள் என்ற எண்ணமே தைரியத்தைக் கொடுக்கச் சிறிது வேகமாகவே தன் வீட்டின் முகவரியைக் கூறினாள்.

“உனக்கு என்ன நடந்ததுன்னு நீ சொன்னா...கேஸ் பைல் பண்ணி, இதுக்குக் காரணமானவங்களை உள்ளே தள்ள முடியும்”

“நேத்து மதியம் என் பிரண்ட் வீட்டுக்கு போயிட்டு வந்திட்டு இருந்தேன். அது கொஞ்சம் ஒதுக்குப்புறமான ஏரியாங்கறதால ஆள் நடமாட்டம் அவ்வளவா இல்லை. அப்போ என் பக்கத்தில் ஒரு கார் வந்து நின்னது. நான் சுதாரித்து விலகும் முன் மயக்கமருந்து ஸ்பிரே பண்ணி...” அதற்கு மேல் சொல்ல முடியாமல் முகத்தை மூடிக் கொண்டு அழத் துவங்கினாள்.

“இங்கே பாரும்மா...உன் வேதனை எனக்குப் புரியுது. யார் இப்படிப் பண்ணது? ஒருத்தானா இல்லை கும்பலா...இதெல்லாம் நீ சொன்னால் தான் நாங்க நடவடிக்கை எடுக்க முடியும்”

“ஒருத்தன் இல்லை மூணு பேர்...” சொல்லிக் கொண்டே தேம்பித் தேம்பி அழுதாள்.

“யார்ன்னு அடையாளம் தெரியுமா?”

“தெரியும்” என்பது போல் தலையையாட்டியவள்,

“என் கூடப் படிக்கிற சிவாவோட அண்ணன் சிபியும்...மத்த ரெண்டு பேரு யாருன்னே தெரியல”

PDF தமிழ் .com

அவளின் வாக்குமூலத்தைக் காகிதத்தில் எழுதி அதில் அவளுடைய கையெழுத்தை வாங்கிக் கொண்டவர், அந்தச் சிபியின் வீட்டு முகவரியையும் கேட்டு வாங்கிக் கொண்டார்.

“நீ ஓண்ணும் கவலைப்படாதே. அவங்களை உண்டு இல்லைன்னு பண்ணிடறேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் அப்பா அம்மா வந்துடுவாங்க”

அவர் சென்றதும் பெற்றொரின் வரவை எண்ணியபடி கண்ணை மூடிக் கொண்டாள்.

****

“மதி...” அந்தத் தாயின் கூக்குரல் அந்த மருத்துவமனையையே கிடுகிடுக்க வைக்க, அவள் மெதுவே கண்ணைத் திறந்தாள். “அம்மா...” பக்கத்தில் அமர்ந்த தாயின் மடியில் முகம் புதைத்து அழுதவளை யாராலும் சமாதானப்படுத்த முடியவில்லை.

“ஈ எறும்புக்குக் கூடத் துரோகம் நினைக்க மாட்டாளே...என் பொண்ணுக்கா இந்த நிலைமை?” மகளின் தலையை ஆறுதலாய் தடவியபடி, ஸ்ரீனிவாசனைப் பார்த்து கதறிய ஆண்டாளைக் கண்டு அவராலும் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்களில் கண்ணீர் வழிய மகளின் கால்ப்பக்கம் அமர்ந்தவர், வாடிய மலர் போல் படுத்திருந்த மகளைக் கண்டு அவருக்குமே துக்கம் நெஞ்சை அடைத்தது.

ஸ்ரீனிவாசன் மத்திய அரசாங்க ஊழியர். நடுத்தர, நிம்மதியான வாழ்க்கை. அன்பான துணைவி ஆண்டாள், இரு மக்கள்...மூத்தவள் ஷன்மதி பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதிவிட்டு தேர்ச்சிக்காகக் காத்து இருப்பவள். சிறியவள் சுவாதி எட்டாம் வகுப்புப் போகப் போகிறாள். நேற்று முழுவதும் ஷன்மதியைக் காணாமல் தேடித் தவித்தவர்களுக்கு, இன்று இரவு தான் காவல்நிலையத்திலிருந்து அழைப்பு வந்தது. பதறியடித்துக் கொண்டு வந்தவர்களுக்கு இடி போல் அந்தச் செய்தி சொல்லப்பட்டது. மனம் கனக்க மகளைப்

பார்க்க வந்தவர்கள் அவளிருந்த கோலம் கண்டு அதிர்ச்சியில் திகைத்துப் போனார்கள்.

ஸ்ரீனிவாசன் மகளின் கால்களை ஆறுதலுடன் தடவ, அவள் உடல் அதிர்ந்து கால்களை அவர் பிடியிலிருந்து இழுத்துக் கொண்டாள். அவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த நெஞ்சக் குமுறல் அழுகையாய் வெடிக்க, "ஐயோ...என்னைக் கூட என் பொண்ணால் உணர முடியலியே? பாவியாகிப் போனேனே ஆண்டாள்..." ஆண்டாள் மகளைச் சமாதானப்படுத்துவதா? இல்லை கணவனைச் சமாதானப்படுத்துவதா என்று தெரியாமல், தங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய விதியைத் தான் சபித்தார்.

மறுநாள் மதியத்திற்கு மேல் வந்த பெண் அதிகாரி, ஷன்மதி எழுதிக் கொடுத்த புகாரை ஸ்ரீனிவாசன் கையில் கொடுத்து விட்டு, "உங்க பொண்ணோட நிலைமைக்குக் காரணமான பையன் ரொம்பப் பெரிய இடம். உங்களுக்கும் அவங்களைத் தெரிந்திருக்கும்ன்னு நினைக்கிறேன்" சிபியின் தந்தையைப் பற்றிச் சொன்னதும் அவர்களின் உயரம் புரிய ஸ்ரீனிவாசனால் பதில் பேச முடியவில்லை. "கோர்ட், கேசுன்னு அலையாம உங்க பொண்ணோட மானத்தைக் காப்பாதிக்குங்க. அப்படியே போனாலும் உங்க பொண்ணு தான் விருப்பப்பட்டு வந்தான்னு பொய் சொல்லி கேசை ஒண்ணுமில்லாமல் பண்ணிருவாங்க. அதுக்கு நீங்களே விலகிக்கிறது நல்லதில்லையா? எல்லாம் உங்க பொண்ணு நல்லதுக்குத் தான் சொல்றேன்" அவரின் பேச்சே அவரின் விசுவாசம் எங்கே என்பதைச் சொல்லியது.

ஸ்ரீனிவாசன் மனம் வெட்கி, உடல் குறுக ஒன்றும் பேசாமல் சரி என்பது போல் தலையாட்டினார். மனம் கொதிக்கத் தான் செய்தது. அந்தக் கயவர்களைக் கொன்று விட உள்ளம் துடித்தது. மகளின் எதிர்காலம் கண் முன் எழ பொறுமையாய் அமைதியாய் இருந்தார். பெரியவளின் பிரச்சினை சின்னவளையும் பாதிக்கக் கூடாதே அடுத்தக் காரணமும் சேர அவர் வாய் மூடி மௌனியானார். பெண் அதிகாரியின் இந்தப் பச்சோந்தி குணத்தை நல்லவேளை

PDF தமிழ் .com

ஷன்மதி பார்க்கவில்லை. ஏனெனில் அவள் மருந்தின் வீரியத்தில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள்.

****

அரசாங்க மருத்துவமனைக்குரிய அத்துணை லட்சணங்களுடன் இருந்த அந்த மருத்துவமனைக்குள், ஜே...ஜேவென்றிருந்த கூட்டத்தை லாவகத்துடன் விலக்கி தள்ளியபடி முன்னேறினார்கள் விஷ்ணுபரத்துவும், யுவனும். இருவரும் இளம் வழக்கறிஞர்கள். பிரபல வழக்கறிஞர் காவ்யபாரதியிடம் ஜூனியராகப் பணியாற்றுகிறார்கள். இன்றும் ஒரு வழக்குச் சம்பந்தமாகத் தான் இங்கு வந்திருந்தனர். அவர்கள் அப்படிக் கடந்து செல்லும் போது தான் அந்தக் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தனர்.

“யோவ்...டாக்டரு அதான் அந்தப் பொண்ணோட பேரண்ட்சே சொல்றாங்கள்ல. அதே மாதிரி ரிப்போர்ட் எழுதறதை விட்டுட்டு ஏன் நேர்மை, கருமை...எருமைன்னு குதிக்கிற? இதுல இன்வால்வ் ஆகியிருக்கிற பசங்க எல்லாம் பெரிய இடத்துப் பசங்க. அதுல ஒருத்தன் ரொம்பப்...பெரிய...இடம். தேவையில்லாமல் வழியில போற சனியனை பனியன்ல போட்டுக்காதே அவ்வளவு தான் சொல்வேன். அவங்க நினைச்சா உன் வேலையையே இல்லாம பண்ணிருவாங்க. என்ன நான் சொல்றது புரியுதா?”

“மேடம்...நீங்க சொல்ற மாதிரி எழுதிக் கொடுத்துட்டு அப்புறம் ஏதாவது சிக்கல் வந்தா...என் வேலையே போயிரும்”

“வேலைப் போனால் என்னய்யா? நீயே புதுசா கிளினிக் ஆரம்பிக்க வேண்டியது தானே. ம்...புரியுது..! நீ பார்க்கும் பார்வைக்கு அர்த்தம் புரியுது. நீ மட்டும் நான் சொன்னப்படி இது சாதாரண ஆக்சிடெண்ட் கேஸ் தான் ரிப்போர்ட் எழுதிக் கொடு. அதுக்கு அப்புறம் இந்த வேலைப் போனா என்ன? இருந்தால் என்ன? உனக்குத் தனியா லம்ப்பா ஒரு அமௌண்ட் வாங்கிக் கொடுத்திடறேன். என்ன சரியா?”

“இவங்க...”

“இவங்க அந்தப் பொண்ணோட பேரன்ட்ஸ் தான். அவங்களும் நான் சொல்றதைத் தான் சொல்றாங்க. என்ன நான் பேசிக்கிட்டே இருக்கேன், நீங்க ரெண்டு பெரும் வாயை மூடிக்கிட்டு இருந்தா எப்படி? டாக்டர் கிட்ட சொல்லுங்க”

“ஆமாம் டாக்டர்...மேடம் சொன்னபடி எழுதிக் கொடுத்துடுங்க. அப்படியே என் பெண்ணுக்கு வெர்ஜினிட்டி சர்ட்டிபிகேட்டும் கொடுத்துடுங்க. நாங்கெல்லாம் சாதாரணப்பட்டவங்க...பின்னாடி எங்க பொண்ணு வாழ்க்கையை இந்த விசயம் எந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது” இருகரம் கூப்பியபடி கண்ணீர் விட்ட அந்தப் பெற்றோரைப் பார்க்க விஷ்ணுவுக்குப் பரிதாபமாக இருந்தது. அதேசமயம் இந்தச் சமுதாயம் மேல் கோபமாகவும் வந்தது.

“இன்னும் ஏன் யோசிக்கிறிங்க? நான் சொன்ன மாதிரி எழுதிக் கொடுங்க. அப்படியே எனக்கும் இவங்க கேட்ட சர்ட்டிபிகேட் கொடுத்துடுங்க. ஒருவேளை இவங்களே மனசு மாறி கேஸ் போட்டா...இது உதவும்ல அதுக்குத்தான்” ஈவு இரக்கமில்லாமல் பேசும் அந்தப் பெண் காவலதிகாரியைக் கண்டு, ‘நீயும் ஒரு பெண் தானே’ என்று கேட்க வேண்டும் போல் எழுந்த உணர்ச்சியை முயன்று தன் கட்டுக்குள் கொண்டு வந்தான் விஷ்ணு.

“சரிங்க மேடம்...நீங்க சொன்னபடி செய்றேன்” மருத்துவர் சம்மதம் சொல்ல, அந்த அதிகாரியும் அவரும் ஏதோ பேசியப்படி வெளியில் சென்றனர்.

“ஏங்க இப்படிப் பண்ணிட்டீங்க? நம்ம பொண்ணு இப்படிக் குத்துயுரும் குலையுயிருமாய் இருப்பதற்கு அவங்க தானே காரணம். அவங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்காமல் இப்படிப் பண்ணிட்டீங்களே”

“எனக்கு மட்டும் நீ சொல்றது போல் கோபம் ஆத்திரம் எல்லாம் இல்லாமல் இல்லை. ஆனால் கோர்ட் கேசுன்னு போனா நம்ம பொண்ணு தாங்குவாளா? அது அவள் எதிர்காலத்தைப் பாதிக்காதா? அவளை மட்டுமல்ல அடுத்து பெத்து வச்சிருக்கியே அவளையும் சேர்த்து தான்

PDF தமிழ் .com

பாதிக்கும். இந்த உலகம் இருக்கப்பட்டவங்களுக்குச் சாதகமாகத் தான் பேசும். நம்மை மாதிரி இல்லாதவங்களைக் கண்டால் அதுக்கு இளக்காரம் தான். நான் என்ன பண்ணுவேன் ஆண்டாள்?" ஸ்ரீநிவாசன் மனைவியிடம் கதறினார்.

"நீங்க அழுற சத்தத்தில் மதி எழுந்துக்கப் போறா...வாங்க வெளியில் போவோம்" ஆண்டாள் அவரைச் சமாதானம் செய்து வெளியில் அழைத்துச் செல்ல, விஷ்ணு அந்தப் பெண்ணின் முகத்தைக் காணயெண்ணி உள்ளே சென்றான். அவனுடன் யுவனும் சென்றான்.

அவளுக்குப் பதினேழு வயதுதான் இருக்கும். கன்னமிரண்டிலும் கைவிரல்கள் தங்கள் பதிவை சிவப்பாய்ப் பதித்திருக்க, கீழுதடு கிழிந்து ரத்தம் கசிய, கழுத்துக் கையிலெல்லாம் நகக்கீறல்கள் அழுத்தமாய்த் தடத்தைப் பதிந்திருக்கப் பார்க்கவே பரிதாபமாக இருந்தாள். அவனுக்கு மட்டும் அதிகாரம் இருக்குமேயானால் அவளை வன்கொடுமை செய்த அந்தக் கயவர்களைத் தூக்கிலிட்டிருப்பான். அந்தளவுக்கு அவன் மனம் உலைகளமாய்க் கொதித்தது. எத்தனையாண்டுகள் ஆனாலென்ன பெண்கள் பாதிக்கப்படுவது மட்டும் நிற்க போவதில்லை மனதில் எண்ணியவனுக்கு ஆயாசமாக இருந்தது.

"விஷ்ணு பார்க்கவே பரிதாபமா இருக்குடா. விலாசினி வயசு தான் இருக்கும் போலிருக்கு" யுவனுக்குக் கண்கள் கலங்கியது. விலாசினி அவனின் செல்லத் தங்கை.

அந்நேரம் அவளிடமிருந்து மெல்லிய முனங்கல் வரக் கூர்ந்து கவனித்தான்.

"டேய்...ச்சீ...அங்கெல்லாம் தொடாதேடா. ப்ளீஸ்...வலிக்குது...என்னை விட்டுடுங்களேன். ஏன்டா இப்படி இம்சை பண்றீங்க? என்னால முடியலடா. டேய்... வேண்டாம்டா... வேண்டாம்டா..."

உடம்பெல்லாம் முறுக்கேறி அவள் உடல் தூக்கிப் போட, என்ன செய்வது என்று தெரியாமல் இருவரும் திகைத்துப்

போய் விழித்தனர். யுவன் செவிலிப் பெண்ணை அழைப்பதற்காக வெளியில் ஓடினான்.

விஷ்ணு கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அவள் கையைப் பிடித்து அமைதிப்படுத்த முயன்றான். அவன் கைப்பட்டதும் எங்கிருந்து தான் அவளுக்குத் தைரியம் வந்ததோ...

“டேய் நாயே...எவ்வளவு தைரியமிருந்தால் என்னைத் தொடுவே?” பாதியெழுந்த நிலையில் தீயாய் அவனைப் பார்த்து உறுத்து விழித்தவளைக் கண்டு விஷ்ணு பயந்து ஓரடிப் பின்னே நகர்ந்தான்.

“மதி...என்னம்மா இது? கொஞ்சம் அமைதியாயிறு” அதற்குள் அவள் அம்மா வந்துவிட அம்மாவின் வயிற்றில் முகத்தைப் புதைத்துக் கொண்டு,

“இவனைப் போகச் சொல்லுங்க...இங்கிருந்து போகச் சொல்லுங்க” ஆங்காரமாய்க் கத்தியவளின் உணர்வு விஷ்ணுவுக்குப் புரிய அங்கிருந்து வேகமாய் வெளியேறினான். அவன் பின்னேயே வந்த ஸ்ரீநிவாசன், “சார்...தப்பா நினைச்சுக்காதீங்க”

“பரவாயில்லைங்க...அவங்க சத்தம் போடவும் தான் அவங்க கையைப் பிடித்து ஆறுதல் படுத்தினேன். நீங்க தப்பா நினைக்கலைன்னா...உங்க பொண்ணுக்கு என்ன நடந்ததுன்னு சொல்றீங்களா? நான் லாயர் தான், என்னால் முடிந்தளவு உதவி செய்றேன்”

“அதெல்லாம் வேண்டாம் தம்பி...எல்லாம் எங்க கெட்ட நேரம்...!” மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் மகளின் அறையை நோக்கி நடந்தவரை ஆதங்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவனின் தோளைத் தட்டிய யுவன், “நர்ஸ் வந்துட்டாங்க...இனி அவங்கப் பார்த்துக்குவாங்க. வா...போகலாம்”

ஒன்றும் பேசாமல் அவனுடன் நடந்தவன், வாகனம் நிறுத்துமிடம் வந்ததும்,

“நீயே வண்டியை ஓட்டுடா”

“டேய்...வந்த வேலையை நாம் பார்க்கவேயில்லைடா”

PDF தமிழ் .com

“மனசு சரியில்லை யுவன். நாளைக்கு வரலாம் ப்ளீஸ்...”

“இந்த மாதிரிக் கேஸ் எத்தனை பார்த்திருக்கிறோம்...! அப்போவெல்லாம் இல்லாத...”

“ப்ளீஸ்...யுவன்” விஷ்ணுவின் கெஞ்சல் குரலில் யுவன் அமைதியாகி வண்டியை எடுத்தான்.

விஷ்ணுவின் மனக்கண்ணில் அவளின் பரிதாப முகம் எழுந்தது. அந்த நிலையிலும் அவன் கைத் தொட்டதும் பார்த்தாளே ஒரு தீப்பார்வை. அவள் பார்த்த அந்தப் பார்வை அவன் விழியில் விழுந்து இதயத்தைச் சுட்டது. முதன்முறையாக ஆணாய் பிறந்ததுக்காக வெட்கப்பட்டான். அதிலும் அவள் வெறுப்பிற்குத் தான் ஆளானதை எண்ணி மனதுக்குள் மறுகினான்.

“ப்ளீஸ்...வலிக்குது... என்னால முடியலடா. டேய்... வேண்டாம்டா... வேண்டாம்டா...” அவளின் வார்த்தைகள் அவன் காதில் மீண்டும் மீண்டும் ஒலிக்க வேதனையுடன் கண்ணை மூடிக் கொண்டான்.

அத்தியாயம் : 2

“சௌக்கியமா இருக்கியா அப்பு? என்ன இந்த நேரத்துல ஃபோன் பண்ணியிருக்க? ஏதாச்சும் பிரச்சினையா ராசா” யோகேந்திரன் குரல் பாசமாய் ஒலிக்க, விஷ்ணுவின் உள்ளம் அவர் பாசத்தில் உருகியது.

தேனி மாவட்டத்திலுள்ள கம்பம் தான் விஷ்ணுபரத்தின் ஊர். தந்தை யோகேந்திரன்...அவர் பேச்சில் தான் கிராமத்து வாடை வீசும். ஆனால் BA பட்டதாரி. கல்லூரி படிப்பு முடிந்ததும் பரம்பரைத் தொழிலான விவசாயத்தைக் கையில் எடுத்து அதில் பல மாற்றங்களைச் செய்து அதிக லாபத்தைக் கண்டவர். அன்னை யசோதா...யோகேந்திரனின் அக்காள் மகள். பரம்பரை பகைக் காரணமாக எதிராளியின் கும்பலை சேர்ந்த ஒருவன் யசோதாவை தூக்கிச் சென்று மானபங்கப்படுத்தி விட்டு, அதன் பின் அவனே போனால் போகிறது என்று அவளுக்கு வாழ்க்கைக் கொடுக்க முன் வர, அப்பொழுது கொதித்தெழுந்து ‘அவளை இந்த இழிநிலைக்கு ஆளாக்கிய உன்னை, அவள் கல்யாணம் பண்ணிக் கொள்வதும், தூக்குப் போட்டு சாவதும் ஒண்ணுடா. என் அக்கா மகளுக்கு வாழ்க்கைக் கொடுக்க நீ யாரடா நாயே?’ என்று அவனை அடித்து உதைத்துப் பந்தாடியவர், அதற்குப் பின் பல வருடப் போராட்டங்களுக்குப் பிறகு யசோதாவின் மனதை மாற்றி அவரின் சம்மதத்துடன் அவரைக் கைப்பிடித்த கனவான். அவர்களின் அன்பான, கருத்தொமித்த தாம்பத்தியத்திற்குச் சாட்சியாக விஷ்ணு மற்றும் அவன் தங்கை ஷர்மிளா. ஷர்மிளா மதுரையிலுள்ள பெண்கள் கல்லூரியில் B.Sc கணினி அறிவியல் மூன்றாம் வருடம் படிக்கிறாள்.

“அப்பா...மனசே சரியில்லை. அதான் உங்களுக்கு ஃபோன் பண்ணினேன்” காலையில் நடந்ததை அவரிடம் கூறியவன், “இப்படியெல்லாம் மனசாட்சி இல்லாமல் இருக்காங்களே. அதுவும் அந்த அதிகாரியே ஒரு பெண். பெண்ணான அவளே இப்படித் துரோகம் செய்கிறாளே, இவளை எல்லாம்...”

PDF தமிழ் .com

“விஷ்ணு...கோர்ட்டில் இது போல் ஆயிரம் கேஸ் தினமும் நீ பார்க்கிற. உனக்குத் தெரியாதது ஒண்ணுமில்லை. அவளோட பெற்றோருக்கே அதில் விருப்பமில்லை எனும் போது உன்னால் என்ன செய்ய முடியும்? ஒரு பெண்ணைப் பெற்ற தகப்பனாய் அந்தப் பெற்றோர் சொல்வதில் இருக்கும் நியாயம் எனக்கு நல்லாப் புரியுது. அவளுக்கு நிச்சயம் நல்ல வாழ்க்கை அமையும். நீ கவலைப்படாதே”

“சரிப்பா...உங்க கூடப் பேசினதுக்கு அப்புறம் தான் மனசு நிம்மதியாயிருக்கு...” விஷ்ணு தாய் தங்கை நலம் விசாரித்து விட்டு அலைப்பேசியை வைக்க, யோகேந்திரன் யோசனையுடன் அலைப்பேசியையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரும் ஒரு காலத்தில் அவனின் மனநிலையில் இருந்தவர் தான், அதனாலோ என்னவோ அவரின் அனுபவத்திற்கு மகனின் உணர்வுகள் செல்லும் பாதை லேசாகப் புரிய ஆரம்பித்தது. ‘சரித்திரம் திரும்புகிறதோ’ என்ற எண்ணம் மனதில் அந்தக் கணம் எழ, அதனால் வரும் நடைமுறை சிக்கல்களைச் சந்தித்தவர் என்பதால் யோசனையில் ஆழ்ந்தார்.

****

“அக்கா உன் கிளிப்பை நான் எடுத்துக்கிறேன்...” என்று சொன்ன சுவாதி, ஷன்மதி அடிக்க வருவாளோ என்றெண்ணி அவளறையை விட்டு சிட்டாகப் பறக்க, தங்கையை ஒரு பார்வை பார்த்து விட்டு மீண்டும் ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டு ஆண்டாளின் மனம் ஊமையாய் அழுதது. மருத்துவமனையில் இருந்து வந்ததிலிருந்து அவளின் செயலில் எந்த ஒரு மாற்றமுமில்லை. இப்படியே ஜன்னல் அருகே நின்று கொண்டு வெளியில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். முன்பிருந்த ஷன்மதியாய் இருந்திருந்தால் கதையே வேறு. சுவாதியிடம் ‘என் கிளிப்பைக் கொடுடி...’ என்று வீட்டை சுற்றி ஓட்டப் பந்தயம் நடத்தியிருப்பாள். இந்த அமைதி அவளுக்குப் புதிது. மகளை இந்தக் கதிக்கு ஆளாக்கியவனை, ‘நாசமாய்ப் போக...நல்ல சாவே அவனுக்கு வராது...’ என்று லட்சம் தடவையாவது சாபம் விட்டிருப்பார் ஆண்டாள்.

“அப்பா உங்களிடம் பேச வேண்டும்...” ஷன்மதியின் குரல் கேட்டு ஆண்டாளும் அடுப்பை அணைத்து விட்டு வரவேற்பறைக்கு வந்தார்.

“சொல்லு மதி...” ஸ்ரீனிவாசன் பரிவோடு கேட்க, “கேஸ் எந்த அளவில் இருக்கு?” மகளின் கேள்வி புரிந்தாலும், “என்ன கேஸ்...?” புரியாத பாவனையில் கேட்டார்.

“அதாம்ப்பா...அந்த சிபி மேல்...என்னை இந்த மாதிரி...” தந்தையிடம் அதற்கு மேல் விளக்கி சொல்ல முடியாதவளாய் தலையைக் குனிந்து கொண்டாள்.

“கேசை நான் வாபஸ் வாங்கிட்டேன்” நிதானமாகச் சொன்ன தந்தையை, “அப்பா...” அதிர்ந்து போய்ப் பார்த்தாள். “ஏன்ப்பா இப்படிப் பண்ணினீங்க? அவங்க தப்புச் செஞ்சவங்க...தண்டனை அனுபவிக்க வேண்டாமா? நான் படுற வேதனை உங்க கண்ணில் படலையா?”

“மதி...உன் வேதனைப் பார்த்து தான்ம்மா அப்படிச் செய்தேன். அவங்களால நீ ஒரு தடவை அவமானப்பட்டது போதும், இதில் கோர்ட் படியேறி தினம் தினம் நீ அவமானப்படணுமா? அவங்கயெல்லாம் பணக்காரங்க சட்டத்தையே விலைக்கு வாங்குறவங்க. அவங்க கிட்டப் போய் நாம மோத முடியுமா? அப்படியே மோதினாலும் நாம்தான் சுக்குநூறாக உடைந்து போகணும். அதனால இதைப் பற்றி இனி பேச வேண்டாம். கெட்டக் கனவா நினைச்சு இதை மறந்துட்டுப் படிப்பை பாரு. அப்புறம் இன்னொரு விசயம் நீ செய்யப் போற காரியம் உன் தங்கையையும் பாதிக்கும் என்பதை மனதில் வைத்துக் கொள்”

“அப்பா...எப்படிப்பா...உங்களால இப்படிப் பேச முடியுது? அப்போ என் கண்ணீருக்குப் பதில் கிடைக்காதா? நீங்கள் என்ன சொன்னாலும் சரி...இதை என்னால் இப்படியே விட முடியாது”

“மதி...” ஸ்ரீனிவாசனின் குரல் உயர்ந்தது. அதைக் கண்டு பயந்து சுவாதி ஆண்டாள் பின்னே மறைந்து நின்று கொண்டாள். என்ன நடக்கிறது? என்று அவளுக்குப் புரியவில்லை. ஆண்டாள் மகளின் தைரியம் கண்டு

PDF தமிழ் .com

மனதுக்குள் பெருமைப்பட்டாலும் அவளின் எதிர்காலம் அவர் கண் முன் நின்று பயமுறுத்தியது.

“அவங்க நினைச்சா எது வேண்டும்னாலும் செய்வாங்கன்னு நான் சொன்னேன்ல, அது என்னன்னா நீ கோர்ட்டுக்கு போனா...நீயே தான் அந்தப் பசங்க கூடப் போனதா சொல்வாங்களாம். இதுக்கு என்ன அர்த்தம்ன்னு உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. அதுவும் அந்த லேடி போலீசே காசை வாங்கிட்டு அவங்களுக்குச் சாதகமா பேசறா. பெண்ணான அவளாலேயே உன் துன்பத்தைப் புரிந்து கொள்ள முடியல, இதில் மத்தவங்க உனக்கு நீதி வழங்கிடுவாங்களா? இப்போ சொல்லு உன்னை நீயே அசிங்கப்படுத்திக்கப் போறியா? அதுக்குத் தான் முன்ஜாக்கிரதையாக உனக்கு வெர்ஜினிட்டி சர்ட்டிபிகேட் வாங்கிட்டேன். இனி ஒரு பய என் பொண்ணைத் தப்பா பேச முடியாது” நடுத்தரவர்க்க குடும்பத் தலைவனாக, இரு பெண்ணின் தந்தையாக அவர் பேச, ஷன்மதி அதிர்ச்சியில் அதிர்ந்து போய்த் தந்தை பேசியதைக் கேட்டு நம்பமுடியாமல் பின்னேயே நகர்ந்தவள் சுவர் இடிக்க, அப்படியே சரிந்து அமர்ந்தாள்.

“மதி...அப்பா உன் நல்லதுக்குத் தானே சொல்றார். அவர் சொல்றதையும் கொஞ்சம் கேளும்மா” ஆண்டாள் மகள் அருகில் அமர்ந்து ஆறுதலுடன் அவளை அணைத்துக் கொண்டு கூற, “அம்மா...அப்பா ஏன்ம்மா இப்படிப் பண்ணினார்? ஒரு பேப்பரை வச்சுத்தான் நான் கன்னிப் பெண்ணா இல்லையான்னு தீர்மானிக்கணுமா, எனக்கு ரொம்ப அவமானமா இருக்கும்மா. என் உடம்பு வேண்டுமானால் அந்த அயோக்கியங்களால கறை படிந்திருக்கலாம், ஆனால் என் மனசு எந்தவொரு கறையும் படியாத சொக்கத்தங்கம்ன்னு உங்களுக்கும், அப்பாவுக்கும் தெரியாதா? உங்க பொண்ணைப் பத்தி உங்களுக்குத் தெரியாது. அப்புறம் ஏன் இப்படிச் செய்திங்க?” கதறியழுதவளை சமாதானம் செய்யும் வகையறியாமல் பார்த்துக் கொண்டு இருந்தனர் சமூகம் என்ற கைவிலங்கு மாட்டப்பட்டுச் சூழ்நிலைக் கைதியான அந்த அப்பாவி பெற்றோர்.

ஷன்மதி கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள், “அப்பா...அந்த பெண் போலீஸ் அப்படி நடந்துகிட்டாங்கன்னா அவங்களை மாதிரி ஒருத்தர் ரெண்டு பேர் இருக்கலாம். அதுக்காக எல்லோரும் கெட்டவங்க கிடையாது. நல்லவங்களும் இருக்கத்தான் செய்றாங்க. அவங்களால தான் நீதி இன்னமும் சாகாமல் வாழுது. அப்படிப்பட்ட யாராவது எனக்கு உதவுவாங்கன்னு நம்பிக்கையிருக்கு”

“நீ சொல்ற மாதிரி நல்லவன் நூற்றில் ஒருத்தன், ரெண்டு பேருதான். மத்த தொண்ணுற்றொன்பது... தொண்ணுத்திஎட்டு பேர் கெட்டவங்க இருக்கத் தானே செய்றாங்க. அவங்களால பிரச்சினை வந்துவிடக் கூடாதுன்னு தான் நான் சொல்றேன். பேசாம நான் சொல்றதைக் கேளு” இனி இவர்களிடம் பேசி பிரயோஜனம் இல்லை என்றெண்ணி பெற்றோரை பாராது தன்னறைக்கு வந்து கதவை தாளிட்டுக் கட்டிலில் அமர்ந்தாள்.

அன்று நடந்தது மனதுக்குள் படம் போல் ஓடியது. தன்னருகில் கார் வந்து நின்றதும் அதிலிருப்பவர்கள் யார் என்று பார்க்கும் முன் மயக்கமருந்தை அவள் முகத்தில் தெளிக்க அவள் மூர்ச்சையானாள். மயக்கம் தெளிந்து விழிக்கும் போதுதான் கடத்தியவன், அவன் வகுப்பில் படிக்கும் சிவாவின் அண்ணன் சிபி என்று தெரிந்தது. சிபியை சிவாவுடன் அடிக்கடி பள்ளியில் பார்த்திருக்கிறாள். மரியாதை நிமித்தம் இரண்டொரு வார்த்தை பேசியும் இருக்கிறாள். அவனுடன் இன்னமும் இருவர் இருந்தனர். அவன் ஏன் தன்னைக் கடத்தினான்? என்று அவள் யோசிக்கும் போதே...சிபி அருகில் வர, அவளுக்கு ஏதோ தவறு என்று புரிந்ததே ஒழிய என்ன என்று புரியவில்லை.

சிபி தன்னைத் தொடக் கூடாத பகுதியில் தொட உடல் கூசி அவனைப் பிடித்துத் தள்ள முடியாமல் கைகள் கட்டப்பட்டு இருக்க, கால்களால் தடுக்கலாம் என்று பார்த்தால் அதுவும் கட்டப்பட்டு இருக்க, ஒன்றும் செய்ய முடியாதவளாய், “வேண்டாம்...அங்கேயெல்லாம் தொடாதே...” அவள் கெஞ்சிக் கதற, “உன்னைச் சும்மா பார்த்துகிட்டு இருக்கிறதுக்கா உன்னைத் தூக்கிட்டு வந்தேன். ரொம்ப

PDF தமிழ் .com

நாளா உன் மேலே ஒரு கண். இன்னைக்குத் தான் நீ தனியா மாட்டின. நீ வேண்டாம்ன்னு சொன்னாலும் எனக்கு வேணுமே” பொறியியல் கல்லூரியில் மூன்றாமாண்டு படிக்கும் அவன் எல்லாக் கெட்ட விசயங்களையும் கற்றுத் தேர்ந்திருந்தான்.

அதன் பின் சிபியும் அவன் நண்பர்களும் அவளைக் கொடுமைப்படுத்தியதை வார்த்தையால் விவரிக்க முடியாது. அந்த நேரத்தில் தான் இறந்து போகக் கூடாதா? இல்லை மயக்கமாவது அடையக் கூடாதா? என்று சித்திரவதை தாங்காமல் மனதுக்குள் புலம்பியவளுக்கு அந்தக் கடவுள் கூடக் கருணைக் காட்டவில்லை. முழுச் சுயநினைவுடன் அவளுக்கு நேர்ந்த கொடுமையைத் தட்டிக் கேட்க முடியாமல் அவளிருந்த நிலையை இப்பொழுது நினைக்கும் போதும் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

வெகுநேரம் அழுதவளின் கண்ணீர் கூட வற்றிப் போயிற்று, ஆனால் மனதின் துயரம், வேதனைக் கொஞ்சமும் குறையவில்லை, மாறாக அது அதிகரித்துக் கொண்டே போனது. தன் துக்கமெல்லாம் கண்ணீரில் கரைத்த பின் தான் அவளால் யோசிக்க முடிந்தது. தவறு செய்யாத தான் மட்டும் வேதனையில் அழுது கரைந்து கொண்டு வீட்டினுள் முடங்கிக் கிடக்க, தவறு செய்த அவர்கள் ஆண்பிள்ளைத் திமிருடன் இன்னும் பல பெண்களின் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டு வெளியில் நிம்மதியாய் திரிவார்களா?

‘ஷன்மதி...அவர்களை அப்படியே விடப் போறியா? உன்னைச் சீரழித்தவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டாமா? சபையில் தன்னைத் துகிலுரித்து அவமானப்படுத்திய கௌரவர்களைப் பார்த்துச் சபதம் போட்டு அதில் வெற்றிப் பெற்ற பாஞ்சாலியின் இனத்தில் பிறந்து விட்டு இப்படிக் கண்ணீரில் கரையலாமா? அந்தக் காலப் பெண்மணிக்கு இருந்த தைரியம் உனக்கு ஏன் இல்லாமல் போனது? அன்று அவளால் வெற்றிப் பெற முடிந்தால், இன்று உன்னாலும் இந்தக் கயவர்களை வெற்றி பெற முடியும். நீதி கேட்டு மதுரையை எரித்த கண்ணகியை போல் நீயும் பொங்கி எழு. இந்தச்

சமுதாயத்திற்காகப் பயந்து ஒதுங்காதே. நீ பயந்து ஒதுங்கினால் உன்னைக் கேவலமாகத் தான் பேசும். இதே இது நீ தைரியமாக எதிர்த்துப் போராடிப் பார், உன்னை இகழ்ந்து பேசிய சமுகமே “பாரதிக் கண்ட புதுமைப் பெண்” என்று உன்னைப் புகழ்ந்து பேசும். தன்னைத் தாக்க வருவது தெரிந்தால் ஐந்தறிவு ஜீவன் கூடச் சீற்றம் கொள்கிறது. நீ பாதிக்கப்பட்டவள், பொறுமையாய் இருந்தது போதும் பொங்கி எழு’

மனம் ஆசானாய் மாறி அறிவுரை கூற, கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தமர்ந்தாள். அடுத்து என்னவென்று சிந்திக்க ஆரம்பித்தாள். உடலும் மனமும் ரணப்பட்டு ரணப்பட்டு அந்த வலிக் கொடுத்த வேதனையில் அவள் சித்தம் திடம் பெற, இப்பொழுது அவளால் தெளிவாக முடிவெடுக்க முடிந்தது. அந்த முடிவை செயலாக்க எண்ணியவள் மனதில் பிரபல வழக்கறிஞர் காவ்யபாரதியின் பிம்பமே எழுந்தது.

இருவாரங்களுக்கு முன் பத்திரிக்கையில் வந்த செய்தி தான் அவளுக்குக் காவ்யபாரதியின் முகத்தை மறக்க முடியாமல் செய்தது. காதலனால் கைவிடப்பட்ட இளம்பெண்ணுக்கு ஆதரவாக, அவர் அந்தக் காதலனுக்கு எதிராக வழக்கு தொடுத்து போராடி அவனுடன் அந்தப் பெண்ணைச் சேர்த்து வைத்ததைத் தான் அந்தப் பத்திரிக்கையில் பாராட்டி எழுதியிருந்தனர். அதிலும் காவ்யபாரதி கூறியிருந்தது அவளை வெகுவாகக் கவர்ந்தது. ‘என் இனத்திற்கு ஒரு துன்பம் என்றால் நான் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டேன். என்னால் முடிந்தளவு அவர்களுக்கு உதவுவேன். பாதிக்கப்பட்டவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் என்னைத் தைரியமாக அணுகலாம். அவர்களுக்கு உதவி செய்ய நான் காத்துக் கொண்டிருக்கிறேன்’ அவரின் வார்த்தைகள் அவள் மனதில் ரீங்காரமிட, அவரைச் சந்திப்பது என்று முடிவு செய்தாள்.

மறுநாள் வெளியில் கிளம்பியவளை எங்கே? என்பது போல் பார்த்த பெற்றோரிடம்... கோவிலுக்கு...என்றவள் அவர்களின் பதிலை எதிர்ப்பார்க்காமல் தெருவில் இறங்கி

PDF தமிழ் .com

நடந்தாள். இதுநாள் வரை தாய் அல்லது தந்தை இவர்களில் யாராவது ஒருவர் துணையுடன் தான் அவளுக்கு வெளியில் சென்று பழக்கம். ஆனால் இன்று மனதிலெழுந்த தைரியத்துடன் புதிதாய்ப் பிறந்தது போல் வீறு கொண்டு நடந்து சென்றாள்.

****

“விஷ்ணு...காலையிலேயே என்ன யோசனை?”

“ஆங்...கூப்பிட்டியா யுவன்?”

“சரியாப் போச்சுப் போ...எத்தனை தடவை கூப்பிடறேன்? நீ என்னடான்னா சாவகாசமா கூப்பிட்டியான்னு கேட்கிற? அந்த வரதட்சணை கேஸ் பைல் கேட்டேனே முதல்ல அதை எடுத்துக் கொடு”

“இந்தா...” யுவன் கேட்டதை எடுத்துக் கொடுத்தவன் மனம் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தது.

அந்தப் பெண்ணின் வேதனைக் குரலே அவன் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்து அவனை வேதனைப்படுத்தியது. அவளுக்குத் தன்னால் உதவி எதுவும் செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கமே அவனைத் தூங்கவிடவில்லை. தன் அன்னையைப் போல் அவளும் அந்தத் துயர் அனுபவித்ததால் கூட அது இருக்கலாம். அவன் அன்னையைப் பற்றிய விசயம் அவனுக்கு ஓரளவு விவரம் புரியும் பொழுது சொந்தக்காரர்கள் மூலம் தெரிய வந்தது. அவன் பெற்றோரும் அதை மறைக்க நினைக்கவில்லை. அன்னையிடம் சென்ற மனம் மீண்டும் அந்தப் பெண்ணிடத்தில் வந்து நின்றது.

இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாளோ பாவம்...! பெருமூச்சைவிட்டவன், தலைவலிப்பது போலிருக்கக் காபி குடித்தால் நன்றாயிருக்கும் என்றெண்ணி தன் இருக்கையை விட்டு எழுந்து வெளியில் வந்தான். ஏதோ நினைவில் நடந்தவன் கண்ணில் அங்கே வரவேற்பில் நின்று கொண்டிருந்த ஷன்மதி பட, மனதில் பொங்கிய மகிழ்ச்சியுடன் அவனையுமறியாமல் அவளை நோக்கிப் போனான்.

அத்தியாயம் : 3

“விஷ்ணு...மதி கேசை நீ ஏன் எடுத்து நடத்தக் கூடாது?” காவ்யபாரதி யோசனையாய் விஷ்ணுவை பார்த்தார்.

“மேடம்...நானா...!” அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தான் விஷ்ணு.

“ஏன் உன் மேல் உனக்கு நம்பிக்கையில்லையா?”

“இல்லை மேடம்...மதி கேசை நீங்களே எடுத்து நடத்துங்க. குற்றவாளி யாராயிருந்தாலும் தண்டனையிலிருந்து தப்பிக்கக் கூடாது. அதுக்கு நீங்க தான் வாதாடணும். எனக்கு இது தான் முதல் கேஸ்...என்னையுமறியாமல் நான் சொதப்பி...அதனால் இவங்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதிக் கிடைக்காம போயிட்டா...? காலமெல்லாம் அந்தக் குற்ற உணர்ச்சி என் மனசை உறுத்தும்” என்றவன்...

ஷன்மதியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே, “கேசுக்கா பஞ்சம் மேடம்...ஏழைக்கேத்த எள்ளுருண்டை மாதிரி எனக்கேத்த வாய்க்கால் வரப்புப் பிரச்சினை, இல்லை பங்காளி சண்டைக் கேஸ் என்று வராமலா போயிடும்” ஏற்ற இறக்கத்துடன் பேசியவனைக் கண்டு அந்தச் சோகத்திலும் ஷன்மதிக்குச் சிரிப்பு வந்தது. மின்னல் கீற்றாய் அவள் முகத்தில் எழுந்த புன்னகையில் அவன் மனம் நிம்மதியடைய, அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன், சற்று முன்பு நடந்ததை நினைத்துப் பார்த்தான்.

அலுவலக வரவேற்பில் ஷன்மதியைக் கண்டவன், ஆவலுடன் அவளருகில் போக, அவளோ இவனைக் கண்டு முகம் சுளித்தவளாய் பின்னே நகர்ந்தாள். அவளின் செய்கையில் தன்னிலை உணர்ந்தவன், உள்ளே சென்று சக வழக்கறிஞரான லீலாவை அழைத்து வந்தான். வரும் வழியிலேயே அவளைப் பற்றி லீலாவிடம் சொல்லி இருந்தால், லீலா அவளைப் பரிவுடன் காவ்யபாரதியிடம் அழைத்துச் சென்றாள். காவ்யபாரதி அவள் கதையைக் கேட்டதும் கொதித்தெழுந்து விட்டார். “அவன் எவ்வளவு பெரிய கொம்பனா இருந்தாலும் சரி...நான் விடப் போறதில்லை” என்றவர் அதற்கான வேலையில் இறங்கும் போதுதான் விஷ்ணுவிடம் கேட்டார். அவன் சொன்னக்

PDF தமிழ் .com

காரணம் சரியாக இருக்கவே அவரே இந்த வழக்கைத் தானே எடுத்து நடத்தச் சம்மதித்தார்.

****

“மதி...நில்லு...நீ பாட்டுக்கு வர்றப் போற...கேட்கிறதுக்கு ஆளில்லைன்னு நினைச்சியா? பொம்பளைப் பிள்ளை அடங்கி ஒடுங்கி இருக்க வேணாமா?” வெளியில் கிளம்புவதற்காகச் செருப்பைப் போடும் போதே கத்த துவங்கிய அம்மாவை நிதானமாக ஏறிட்டுப் பார்த்த ஷன்மதி, “அடங்கி ஒடுங்கி இருந்து என்னத்தைக் கண்டேன்? அதில்லாமல் இன்னும் இழக்க என்னிடம் என்ன இருக்கு?”

“ஆண்டாள்...நீ பேசாம இரு” மனைவியைக் கடிந்த ஸ்ரீனிவாசன், “நீ போயிட்டு வாம்மா” மகளுக்குச் சம்மதம் சொல்ல, மேற்க்கொண்டு பேச்சை வளர்க்காமல் அவள் கிளம்ப, “என்னங்க...அவள் எங்கே போறாள்ன்னு...?”

“ஆண்டாள்... அவளுக்கு நடந்த கொடுமைக்கு வீட்டுக்குள் முடங்கி மனதுக்குள் புழுங்கிக் கொண்டு இருக்காமல், இந்தமட்டும் இப்படி இருக்கிறாளே என்று சந்தோசப்படு. நம்ம பொண்ணு தப்பா போக மாட்டா...” ஸ்ரீனிவாசன் அத்தோடு முடித்துக் கொள்ள, மறுப்பேச்சின்றி ஆண்டாள் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

“மதி...இந்தா இந்தப் புக்ஸ் எல்லாம் படி நல்லா இருக்கும்” லீலா கை நிறையப் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்தாள். எல்லாம் மனதை அமைதிப்படுத்தும் ஆன்மீகப் புத்தகங்கள். மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக் கொண்டவள், “ரொம்பத் தேங்க்ஸ்க்கா...!”

“நீ எனக்குத் தேங்க்ஸ் சொல்லாதே. அவனுக்குச் சொல்லு...” விஷ்ணுவை நோக்கிக் கையைக் காட்டினாள் லீலா.

விஷ்ணு புன்சிரிப்புடன் மதியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனின் பார்வையை உணர்ந்து, அவள் தன் உடலைக் குறுக்கிக் கொண்டு லீலாவின் பின் மறைந்தாள். அவளின் செயலில் அவளின் அடிப்பட்ட மனம்

அவனுக்குப் புரிந்தாலும் ஏனோ மனதில் வலி எழுவதை அவனால் தடுக்க முடியவில்லை. தலையைக் குனிந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினான். லீலாவிற்குத் தான் அவனைக் கண்டு பாவமாக இருந்தது. அவள் மதியைக் கடிந்து கொண்டாள்.

“என்ன மதி இது? விஷ்ணுவைப் பார்த்து நீ ஏன் இப்படி ஒதுங்கற?”

“அக்கா...என் நிலைமைத் தெரிந்துமா இப்படிப் பேசுறிங்க? எனக்கு ஆண்களைக் கண்டாலே வெறுப்பா இருக்கு. இவங்கன்னு இல்ல...எல்லா ஆண்களையும் சேர்த்து தான் சொல்றேன். ஆண்களைப் பார்த்தாலே நான் அனுபவித்த வேதனை தான் நியாபகம் வருது. என்னால் முடியல...” முகத்தை மூடிக் கொண்டு தேம்பியவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள் லீலா.

“மதி...இப்படி எத்தனை நாளைக்கு நீ இருக்க முடியும்? தைரியமா வெளி உலகத்தை நீ பேஸ் பண்ண வேண்டாமா? உன் கஷ்டம் புரியுது. ஆனாலும் இதையெல்லாம் தாண்டித் தான் நீ வரணும். உன் நல்லதுக்குத் தான் சொல்றேன்” அவள் சம்மதமாய்த் தலையாட்டியதும்,

“மதி...விஷ்ணு கிட்ட நீ இவ்வளவு பயப்பட வேண்டியதில்லை. அவன் ரொம்ப நல்லவன். ஒருநாள் ராத்திரி பத்து மணிக்கு அப்பாவுக்கு நெஞ்சுவலின்னு ஃபோன் வந்தது. அந்த நேரத்தில் யார்கிட்ட சொல்றதுன்னு தெரியாம முழிச்சப்போ, விஷ்ணு கேஸ் விசயமா ஃபோன் பண்ணினான். அவன்கிட்ட சொன்னதும் உடனே டாக்சி பிடிச்சிட்டு வந்து, என் ஊர் வரைக்கும் துணைக்கு வந்து, அப்பாவுக்கு நல்லாகிற வரைக்கும் கூடவே இருந்து உதவி செய்துட்டு தான் போனான். இதை நான் ஏன் உன்கிட்ட சொல்றேன்னா...உனக்கு எந்த நேரத்தில் உதவி தேவைப்பட்டாலும் அவனை நீ கூப்பிடலாம். அவன் நல்ல நண்பன்... சகோதரன்... இன்னும் சொல்லப் போனால் தகப்பன் போல் பாதுகாப்பு கொடுப்பவன். அவனை நீ முழுசா நம்பலாம். விஷ்ணு மட்டுமல்ல இங்கே இருக்கிற மத்த ஜென்ட்சும் நல்லவங்க தான். ஒருமாதிரி ஆளுங்களை

PDF தமிழ் .com

மேடம் ஜூனியரா சேர்த்துக்க மாட்டாங்க. அதனால தைரியமா இரு என்ன...!” லீலா சொன்னதும் விஷ்ணு மேல் அவளுக்குச் சிறிது மரியாதையை வந்தது. சரியென்பது போல் தலையை ஆட்டினாள்.

மதிய உணவு வேளையின் போது விஷ்ணுவும் யுவனும் அங்கே வர, யுவன் லீலாவை வம்பிழுத்தான். “லீலா கோர்ட்டு, கேசுன்னு அலைந்து அலைந்து வாழ்க்கையே ரொம்ப ட்ரையா இருக்கு. நீ சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கிட்டா...உன் கல்யாணத்தைச் சாக்கு வச்சு கண்ணுக்கு குளிர்ச்சியா நாலு பிகரை சைட் அடிப்பேன்ல. மண்டை காய்ந்து போயிருக்கிற உன் நண்பனுக்கு உதவக் கூடாதா?” யுவனின் பேச்சில் எல்லோரும் சிரிக்க, ஷன்மதியும் லேசாகச் சிரித்தாள்.

“ம்... நீ... என் கல்யாணம் இல்லை எத்தனை கல்யாணம் போனாலும் ஒரு பிகர் கூட உன்னைச் சைட் அடிக்காது. அதுக்கு எல்லாம் முக லட்சணம் வேணும் மை டியர் பிரண்ட்”

“ஏன் எனக்கென்ன குறை...?”

“ம்... வால் இல்லாதது ஒன்றுதான் குறை” நக்கலாக அவனைப் பார்த்து சிரித்தவளை,

“அப்போ என்னைக் குரங்குன்னு சொல்றியா?”

“நீயே அப்படி நினைச்சா நானா பொறுப்பு?” அலட்சியமாய்ச் சொன்னவளை,

“குரங்கோட பிரண்டும் குரங்காமே... அப்போ நீயும் குரங்கு தான்” லீலா முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல் ஆக, “ஹா... ஹா... ஹா... தொப்பி... தொப்பி...” என்று சிரித்தவனைத் துரத்தி துரத்தி அடித்தாள் லீலா. சிறிதுநேரம் நேரம் அங்கே சிரிப்பலை பரவியது.

“போதும்ப்பா... உங்க விளையாட்டு எல்லாம். கொஞ்சம் சீரியசாய் பேசலாமா?” லீலா யுவனைத் துரத்தி சோர்ந்தவளாய் நாற்காலில் அமர்ந்து கூறியவள், விஷ்ணுவிடம், “அப்புறம் மதி கேஸ் எந்தளவில் இருக்கு?” ஏனெனில் மதியின் வழக்குச் சம்பந்தமாக விஷ்ணு தான்

அலைகிறான். லீலாவிற்கு வேறு வழக்கு ஒன்று கொடுக்கப்பட்டு இருந்தது.

“கேஸ் பைல் பண்ணியாச்சு லீலா. கூடிய சீக்கிரம் விசாரணைக்காகக் கூப்பிடுவாங்க”

விஷ்ணு கூறியதும், மதியின் முகம் கருத்தது. “மதி நீ பயப்படும் அளவுக்கு ஒன்றுமில்லை” அவசரமாகச் சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டான். அவள் தன் கூட்டிற்குள் ஒடுங்கி விடுவாளே என்று அஞ்சினான்.

“கொஞ்சம் பயமாத் தான் இருக்குச் சார்...கோர்டில் நிறையக் கேள்வி கேட்பாங்களோ?” அவன் முகம் பார்த்துக் கேட்க, விஷ்ணு கண்ணிமைக்க மறந்து அவளைப் பார்த்தான்.

“எல்லோரையும் பார்த்து ரொம்பப் பயந்தா...நான்தான் பயப்படத் தேவையில்லை. நம்ம பசங்க சுத்த தங்கம்ன்னு சொல்லியிருக்கேன். என் பேரை காப்பாத்துங்கடா பசங்களா...” லீலா சொல்ல, “அடிங்...” யுவன் அவளை அடிப்பது போல் போலியாகக் கையை உயர்த்தியவன், பின் அதைக் கைவிட்டவனாகச் சிரித்தான்.

"அதெல்லாம் பயப்படாதே மதி...நாங்க எதுக்கு இருக்கோம்...நாங்க பார்த்துக்குவோம்" விஷ்ணு மதியை சமாதானப்படுத்த, அதில் நிம்மதியடைந்தவளாய் வீட்டிற்குச் சென்றாள்.

அனைவரும் எதிர்ப்பார்த்த நாளும் வந்தது. காலையிலிருந்தே பரபரப்புடன் கிளம்பியவளை அதிசயமாய்ப் பார்த்த ஆண்டாள் கணவனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுப் பேசாமல் அமைதியாய் இருந்தார். மதி நேரே சென்ற இடம் கோவில். அங்கிருந்த தூணில் சாய்ந்து கடவுளையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. வார்த்தைகளால் தன் வேதனையைச் சொல்லிப் புலம்பாமல் மௌனமாய்க் கடவுளிடம் தன் மனக் குமுறல்களை முறையிட்டாள். அவளின் வேண்டுதலுக்குச் செவி சாய்ப்பது போல் கடவுள் மௌனப் புன்னகையுடன் அருள்பாலித்துக் கொண்டிருந்தார்.

PDF தமிழ் .com

அந்நேரம் அவள் அலைப்பேசி அழைக்க எடுத்தவள் பேசும் முன், “மதி...கிளம்பிட்டியா?” விஷ்ணுவின் குரல் ஒலித்தது.

“கிளம்பிட்டேன் சார்...இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடறேன்” அவளின் குரலிலேயே அவள் அழுதது தெரிய, “நீ எங்கே இருக்கே?” “கோவிலில்...” அவளிருக்கும் இடத்தைச் சொன்னவுடன், சரி என்று ஒன்றும் பேசாமல் வைத்தான். அவன் வைத்ததும் அவள் தன் முறையிடலை மீண்டும் தொடர்ந்தாள்.

அரைமணி நேரத்தில் அங்கே வந்த விஷ்ணு, ஷன்மதியைத் தேடினான். சுற்றுமுற்றும் பார்த்தவன் விழிகளில், தூணில் சாய்ந்து கொண்டு கண்களில் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தவளைக் கண்டு வேகமாக அவளருகே வந்தான். “மதி...” விஷ்ணுவின் குரலில் திரும்பிப் பார்த்தவள் அங்கே நின்றிருந்தவனைக் கண்டு அதிசயமாய்ப் பார்த்தாள்.

“சார்...நீங்க எப்படி இங்கே?” அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தவளிடம், “சும்மா தான்...” என்றவனை வெற்றுப் பார்வைப் பார்த்தவள், “லீலாக்கா வரலையா?”

“இல்லை...அவள் நேரே கோர்ட்க்கு வருவா. வா...நாம போகலாம்” கிளம்பாமல் தயங்கி நின்றவளைப் பார்த்தவன், தன் அலைப்பேசியை எடுத்து லீலாவை அழைத்து, “மதியிடம் கொஞ்சம் பேசு லீலா” என்றவன், மதியிடம் கொடுத்து, “லீலா தான் பேசுகிறாள்”.

லீலா அந்தப் பக்கம் என்ன சொன்னாளோ, “சரிக்கா...” என்றவள், “உங்களோட கிளம்பி வரச் சொன்னாங்க” என்றவளை உற்றுப் பார்த்தவன் பின் கோவிலுக்குள் பார்வையைச் செலுத்தி, கடவுளிடம் மதிக்காக வேண்டியவன், “வா போகலாம்...” அவளை அழைத்துக் கொண்டு நீதிமன்றம் நோக்கிப் புறப்பட்டான்.

வாதி பிரதிவாதி இல்லாமலேயே அன்றைய வழக்கு தினம் கழிந்தது. குற்றவாளிகளை அடுத்து வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட தேதியில் கண்டிப்பாக ஆஜராக

வேண்டுமென்று உத்தரவிட்ட நீதபதி, அவளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய ஆணையிட்டார்.

****

“போகலாமா மதி...”

“அக்கா...எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு. அங்கே என்ன மாதிரியான டெஸ்ட் எல்லாம் எடுப்பாங்க?” அந்தச் சிறுப்பெண்ணின் அறியாமையை எண்ணி லீலாவிற்குக் கண்கள் கலங்கியது. தன்னை விட ஏழு வயது சிறியவளான இவளுக்கு இந்தத் துன்பத்தை ஏன் கொடுத்தாய் கடவுளே என்று அந்தக் கடவுளை தான் அவளால் நிந்திக்க முடிந்தது.

“பயப்படாதே மதி...நீ பயப்படற மாதிரி ஒண்ணும் இருக்காது” சமாதானம் செய்து அவளை அழைத்துச் சென்றாள் லீலா. கூடவே விஷ்ணுவும் சென்றான். அவனுக்கே மதிக்காகத் தான் ஏன் இவ்வளவு மெனக்கெடுகிறோம் என்று தெரியவில்லை.

அடுத்தடுத்து நாட்களில் ஷன்மதி தான் உடலும் மனமும் நோக அதிக வேதனையடைந்தாள். இனி வரும் ஜென்மத்தில் பெண்ணாய் பிறக்கவே கூடாது என்று நினைத்தாள். அந்தளவிற்கு அவள் மனம் காயமடைந்து இருந்தது. அன்றும் அப்படித்தான் பரிசோதனை, வழக்கு என்று அலைக்கழிக்கப்பட்டுச் சோர்ந்து வந்தவள் லீலாவின் கையைப் பிடித்துக் கொண்டு கதறியழுதாள்.

“அக்கா...இதுக்கு மேலேயும் நான் உயிரோட இருக்கணுமா? பெத்தவங்கக்கிட்ட உண்மையைச் சொல்ல முடியாம, என் மனக் குமுறலை வேதனையை யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல் அடக்கி அடக்கி வச்சே...நெஞ்சு வெடிச்சிடும் போலிருக்குக்கா. என்னால முடியல...”

லீலா அழும் அவளை எப்படிச் சமாதானம் செய்வது என்று புரியாமல் அருகிலிருந்த விஷ்ணுவை பார்க்க, மதியின் வேதனை அவனைத் தாக்கியதோ என்னமோ அவன் முகம் வேதனையில் கசங்கி...கண்கள் இறுக மூடியிருக்க, விழியோரத்தில் கண்ணீர்த் துளி முத்தாய்ப் பளபளத்தது.

PDF தமிழ் .com

லீலா அவனின் கண்ணீரைக் கண்டு ஆச்சிர்யமடைந்தவள், காரணத்தை அறிய ஆவல் இருந்த போதும், தற்பொழுது இருந்த சூழ்நிலை சரியில்லாததால் ஒன்றும் பேசாமல் மதியை சமாதானம் செய்ய முனைந்தாள்.

முதலில் சாதாரணமாக நடைப்பெற்ற வழக்கு, குற்றவாளிகளாய் பெரியயிடத்துப் பசங்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கபட்ட போதுதான் சூடு பிடிக்க ஆரம்பித்தது. அனைத்து ஊடகங்களின் பார்வையும் அந்த வழக்கின் மீது விழுந்தது. அன்று வழக்கு முடிந்து வெளியில் வந்த ஷன்மதியின் மீது அனைத்து ஊடங்களின் புகைப்படக் கருவிகளும் மழை போல் தன் வெளிச்சத்தை விடாமல் பொழிந்தது.

மின்னல் போன்று மாறி மாறி தன் மேல் விழுந்த ஒளியை சமாளிக்க முடியாமல் திணறியவள் தன் முகத்தை மறைக்க வேண்டும் என்ற எண்ணம் கூடத் தோன்றாமல், அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டாள். அனைத்து ஊடகப் புகைப்படக் கருவியும், நாளைய தலைப்பு செய்திக்கு நல்ல தீனிக் கிடைத்தது என்றெண்ணி தன் படச்சுருளில் அவளின் திகைப்பை அழகாய் பதிவு செய்தது.

அத்தியாயம் : 4

“மதி...” ஸ்ரீனிவாசனின் குரல் கர்ஜனையாய் ஒலிக்க, ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஷன்மதியின் காதில் அது விழுந்து திடுக்கிட்டு எழுந்தாள். ஒருவேளை கனவு ஏதும் கண்டு இருப்போமோ என்று கண்ணைக் கசக்கி விட்டு நிமிர்ந்து பார்த்தவளின் விழி வட்டத்தில் ருத்திரமூர்த்தியாய் நின்றிருந்த ஸ்ரீனிவாசன் விழுந்தார். அவருக்குப் பின்னே பயத்துடன் நின்றிருந்த அம்மாவையும், தங்கையையும் பார்த்தவளுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை.

“என்னப்பா...?”

“ஒண்ணும் தெரியாத மாதிரி எப்படிப் பேசறா பாரு உன் பொண்ணு...”

“நீங்க தானே அவள் எங்கே போறா வர்றான்னு கேட்காதே என் பொண்ணு நல்லவன்னு சொன்னிங்க... இப்ப மட்டும் ஏன் என் பொண்ணுன்னு சொல்றிங்க? அப்பாவுமாச்சு பொண்ணுமாச்சு எனக்கு ஒண்ணும் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அடுப்படியும், டிவியும் தான். சும்மா சும்மா என்னிடம் கத்தாதிங்க”

“அப்பா...கொஞ்சம் புரியும்படியாய் சொல்லுங்களேன். என்னாச்சு...?”

“இன்னும் என்ன ஆகணும்? நீயே பாரு...” கோபத்துடன் செய்தித்தாளை அவள் முகத்தில் விட்டெறிந்தார். குனிந்து அதை எடுத்துப் பார்த்தவளுக்கு அதில் முன்பக்கத்தின் கீழ்ப்பகுதியில் இவளின் வழக்குச் சம்பந்தப்பட்ட தகவலுடன் இவளின் புகைப்படம் பெரிதாகப் போட்டிருந்தது. செய்தியை சின்னதாகப் போட்டவன் வியாபார தந்திரமாக இவள் படத்தைப் பெரிதாகப் போட்டிருந்தான். தந்தையின் கோபத்திற்கான காரணம் புரிய அமைதியாய் இருந்தாள்.

“என்ன பேசாமலிருக்க...நான் அவ்வளவு சொல்லியும் என் பேச்சைக் கேட்காமல் இப்படி ஒரு காரியம் பண்ண உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்?”

“நான் தான் உங்க கிட்ட கேட்டேனே...நீங்க தான் மறுத்தீங்க. என்னை இப்படி ஆக்கியவங்க கட்டாயம் தண்டனை அனுபவிக்கணும்ப்பா. நியாயமா பார்த்தா நீங்க என்கூட இருந்து எனக்குச் சப்போர்ட் பண்ணனும். அந்தப் பாக்கியம் தான் எனக்குக் கிடைக்கல. அதனால் தான் நானே எனக்கு நீதி கேட்டு கோர்ட்க்கு போனேன். இதுக்கு நீங்க பெருமை தான் படணும். அதை விட்டுட்டு கோபப்பட்டா எப்படி?”

“ஆமாம்...ஆமாம்...பெருமைப்படற விசயம் தான் இங்கே நடந்திருக்கு பாரு, ஊரைக் கூட்டி சொல்ல... . இதைப் படிச்சதுக்கு அப்புறம் எத்தனை பேரு என்னைக் காறித்துப்ப போறானோ...கேவலமா பார்க்க போறானோ? அதையெல்லாம் விட உனக்கு ஒரு நல்லது இனி எப்படி நடக்கும்? உனக்கு அடுத்து இருக்காளே அவளுக்காவது நல்லது நடக்குமா? என் கவலை உனக்கு எங்கே புரியப் போகுது? நீ உன்னைப் பத்தியே யோசிச்சிட்டு இரு”

அதற்குள் அழைப்பு மணி ஒலிக்க, “போச்சு...இதைப் பார்த்துட்டு எத்தனை பேர் வரப் போறாங்களோ? யாருக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டி வருமோ?” கோபத்துடன் என்ன செய்வது என்று தெரியாமல் ஸ்ரீனிவாசன் ஷன்மதியின் கன்னத்தில் ஓங்கி அடித்து விட்டு அதே ஆத்திரத்துடன் வாயிலை நோக்கி சென்றார். காதுக்குள் ‘நொய்ங்’ என்ற சத்தம் கேட்ட பின் தான் தந்தை அடித்ததை உணர்ந்தாள்.

கன்னத்தைப் பிடித்தபடி அதிர்ச்சியுடன் இருந்தவளை, கணவன் போன திசையைப் பார்த்தபடியே அவளருகில் வந்த ஆண்டாள், “பாவிப்பெண்ணே...இப்படி அடி வாங்கவா...” அவர் முடிக்கவில்லை, அதற்குள் வாயிலிலிருந்த ஸ்ரீனிவாசனின், “யாருடா நீங்க? டேய்...பதில் சொல்லிட்டு உள்ளே போங்கடா...” அலறலில் அனைவரும் வாயிலை நோக்கி ஓடினர்.

அடியாட்கள் போலிருந்த ஐந்து பேர் ஸ்ரீனிவாசனின் கூவலை சிறிதும் சட்டை செய்யாமல் அவரைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு நேரே ஷன்மதியிடம் வந்தனர். “ஏய் நீ தானே கோர்ட்ல கேஸ் போட்ட பொண்ணு” அவர்களில்

தலைவன் போலிருந்தவன் கேட்க, அவள் பேசாமல் அவர்களை நிமிர்ந்து பார்த்ததிலேயே அவள் தான் ஆள் என்று அவனுக்குப் புரிந்து போனது. ஆண்டாள் சப்தநாடியும் ஒடுங்கிப் போய், நிற்க முடியாமல் கதவைப் பிடித்துக் கொண்டு நின்றிருக்க, அவரருகில் சுவாதி பயத்துடன் நின்றிருந்தாள்.

“இந்தாப் புள்ள...எங்க அய்யா பையன் மேல நீ கொடுத்திருக்கிற கேசை மரியாதையா வாபஸ் வாங்கிடு. இல்லைன்னா நடக்கிறதே வேற” என்று அவளை மிரட்டியவன், சுவாதியை பார்த்து, “இது உன் தங்கச்சி தானே” என்று அவளிடம் கேள்வி கேட்டவன், அவளின் பதிலை எதிர்பாராது சுவாதியின் அருகில் சென்று அவளை மேலும் கீழும் பார்த்து, “உன்னை விட இந்தக் குட்டி சூப்பரா இருக்கா. குட்டி...வயசுக்கு வந்துடிச்சா இல்லையா?” சுவாதி பயத்தில் அழ ஆரம்பிக்க, மதி வேகமாக அவளிடம் வந்து ஆறுதலாக அவளை அணைத்து, “ஏய்...என் தங்கையைப் பத்தி தேவையில்லாமல் பேசாதே” அவளுக்கு எப்படித் தான் தைரியம் வந்ததோ அவனை எதிர்த்து பேசினாள்.

“சரி நான் பேசல...அதே மாதிரி நீயும் நான் சொன்னபடி கேசை வாபஸ் வாங்கிடு. இல்லைன்னா இதில் வீணா உன் தங்கச்சி தான் பலியாகப் போறா” என்று மிரட்டி விட்டுச் சென்றவர்களைக் கண்டு விக்கித்துப் போய் நின்றாள்.

“இதுக்குத் தான் நான் படிச்சு படிச்சு சொன்னேன் கேட்டியா நீ? உன்னை...” என்ற ஸ்ரீனிவாசன் படுக்கையறைக்குப் போய்ப் பெல்ட்டை எடுத்து வந்து மதியை விளாசித் தள்ளிவிட்டார்.

“அய்யோ...அவளே இப்பத்தான் உடம்பு தேறிட்டு வர்றா...இந்த சமயத்துல நீங்க இப்படி மாட்டைப் போட்டு அடிக்கிற மாதிரி அடிக்கிங்களே? அவ தாங்க மாட்டாங்க” ஆண்டாள் ஊடே வந்து தடுக்க அவர் மேலும் சில அடிகள் விழுந்தது. இதையெல்லாம் மதி உணரும் நிலையிலில்லை திக்பிரம்மை பிடித்து அப்படியே நின்றாள். அந்த ரௌடி சொன்ன விசயத்தை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. ‘என்னால் சுவாதிக்கு ஆபத்து வருமோ?

ஐயோ...என்னாலேயே தாங்க முடியவில்லையே. சுவாதிக்கு அந்த மாதிரி நேர்ந்து... கடவுளே வேண்டாம்...' மனதுக்குள் போராடிக் கொண்டிருந்தவளின் காதில்,

"அந்தக் கேடு கெட்டவளை வீட்டை விட்டுப் போகச் சொல்லு. இதுக்கு மேலே ஒரு நொடி கூட இங்கே அவள் இருக்கக் கூடாது. அவள் தான் ஏற்கெனவே கெட்டு போயிட்டா...இதுக்கு மேலே சீரழிய அவக்கிட்ட ஒண்ணுமில்லை. மிச்சமிருக்கிற இவளையாவது நான் காப்பாத்தியாகணும். அதுக்கு அவள் முதல்ல இங்கிருந்து வெளியேறணும். போகச் சொல்லு...நான் செத்தாக் கூட வர வேண்டாம்ன்னு சொல்லு ஆண்டாள்" ஆங்காரமாய் ஸ்ரீனிவாசன் கத்திய வார்த்தைகள், அவரின் அடிகள் கொடுத்த உடல் வலியை விட அதிகமாய் மனதை வலிக்கச் செய்ய, அடிப்பட்ட பார்வை பார்த்தாள் மதி.

"என்னங்க இப்படிப் பேசுறீங்க அவளுக்கு நம்மை விட்டா யாரைத் தெரியும்? எடுத்துச் சொன்னாப் புரிஞ்சுக்குவா?"

"எடுத்துச் சொன்னாப் புரிஞ்சிக்கிற பொண்ணையா நீ பெத்து வச்சிருக்க. எத்தனை தடவை கிளிப்பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சொல்லியிருப்பேன். கேட்டாளா உம் பொண்ணு? இனியும் கேட்பான்னு சொல்றியா?"

"ஏண்டி மரம் மாதிரி நிற்கிற? இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்னு சொல்லேன்"

"அம்மா...நான் அப்படி என்ன தப்பும்மா பண்ணினேன். தவறு பண்ணியதெல்லாம் அவங்க. தப்பு பண்ணிக்கிட்டு அவங்களே இந்த மாதிரி நடந்துக்கிறப்போ நாம ஏன் பயப்படணும்?"

ஸ்ரீனிவாசன் சுவாதியை அவள் முன்னே நிறுத்தி, "அவங்க சொன்னதெல்லாம் கேட்டே தானே? அப்போ இவளுக்கு ஒரு நல்ல பதில் சொல்லு. உன்னால் இவள் பாதிக்கப்படணுமா? சரி இது எதுவும் வேண்டாம்... வா குடும்பமாய்ச் சேர்ந்து விஷம் குடிச்சிட்டுச் சாகலாம். மானம் இழந்து வாழறதை விடச் செத்துப் போகலாம்" சுவாதியை முன்னிறுத்தியதும் அவள் பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்படப் பரிதாபமாக முழித்தாள்.

“என்ன பேசாம நிக்கிற? சரின்னு சொல்லு இப்பவே போய் விஷம் வாங்கிட்டு வர்றேன்”

“அப்பா...இந்தக் காலத்துல யாரும் எதுவும் பண்ண முடியாது? நீங்க பயப்படற மாதிரி ஒண்ணும் நடக்காதுப்பா. மனித உரிமை கமிஷன், மகளிர் அமைப்பு எல்லாம் இருக்கு...”

“ஓஹோ...மனித உரிமை கமிஷன் பத்தியெல்லாம் பெரிய மனுசி பேச ஆரம்பிச்சுட்டியா? ரொம்ப... நல்லது. ஆனால் நீ பாதிக்கப்பட்டப்போ இவங்க எல்லாம் எங்கே போயிருந்தாங்க? எல்லாம் நடந்து முடிந்ததுக்கு அப்புறம் அவங்க வந்து என்ன பிரயோஜனம்? எனக்கு ரெண்டுல ஒரு முடிவு தெரியணும். ஒண்ணு கேசை வாபஸ் வாங்கு இல்லை வீட்டை விட்டு வெளியேறு. சுவாதி மட்டும் தான் எங்க பொண்ணுன்னு நாங்க நினைச்சுக்கிறோம்”

“அப்பா உங்களை விட்டா எனக்கு யார் இருக்கா?” தன் காலைப் பிடித்துக் கொண்டு கதறியவளை ஸ்ரீனிவாசன் காலால் எட்டி உதைக்க, தள்ளிப் போய் விழுந்தவள் சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

“ஏன் இல்லை...? எங்களைக் கேட்டா கோர்ட்க்கு போன? யார் மூலமா இவ்வளவு தைரியமா கோர்ட் படியேறினாயோ அவங்ககிட்டேயே போ” தந்தையின் வார்த்தையில் கண்களின் கண்ணீர் ஆறாய்ப் பெருக செய்வதறியாது நின்றவளை ஒரு முறை முறைத்து விட்டு உள்ளே சென்ற ஸ்ரீனிவாசன் திரும்பி வரும் போது கையில் பையுடன் வந்தார்.

“நீ பேச மாட்ட... இதுக்கு மேலேயும் நான் பொறுமையா இருந்தா...” என்றவர் அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று வெளியில் அழைத்து வந்து, பையோடு அவளையும் சேர்த்து வெளியில் தள்ளியவர், “இனிமே எனக்கு இருக்கிறது ஒரு பொண்ணு மட்டும்தான். என் மூத்த பொண்ணு செத்துப் போயிட்டான்னு கேட்கிறவங்களுக்கு நான் பதில் சொல்லிக்கிறேன். பெத்த பாவத்துக்குக் கொஞ்சம் பணம் வச்சிருக்கேன். இனி எந்தக் காரணம் கொண்டும் நீ எங்களைப் பார்க்க வராதே”

“எல்லாரும் வேடிக்கைப் பார்க்கிறாங்க, முதல்ல அவளை உள்ளே கூப்பிடுங்க” ஆண்டாள் கணவனின் செய்கையில் பதற, “அதான் பேப்பரில் கிழிகிழின்னு கிழிச்சுட்டானே இனியும் என்ன மூடி மறைக்க வேண்டியிருக்கு? நீ முதல்ல உள்ளே போ. இல்லைன்னா உன் பொண்ணு கூடவே நீயும் வெளியில் போயிரு” ஆண்டாள் மூத்த மகளின் நிலைக் கண்டு மனம் பதைத்தாலும் அவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. கண்களால் மகளிடம் மன்னிப்பை அவர் யாசித்த அதே வேளையில் பட்டென்று கதவு அறைந்து சாத்தப்பட்டது.

திகைத்துப் போய் நின்றிருந்தவள் அக்கம் பக்கத்தவரின் பேச்சுக் குரலில் தன்னை மீட்டெடுத்தவள் என்ன செய்வது என்றறியாமல் ஒரு கணம் முழித்து, பின் குனிந்து பையை எடுத்தாள். அவர்களின் பார்வையைச் சந்திக்க வெட்கி திரும்பிப் பாராமல் நடந்தவள் தெருமுனைக்கு வந்ததும் தான், எங்கே செல்வது என்று தெரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தவள் கண்ணில் கோவில் பட, அங்கே சென்றாள். அங்கிருந்த சுற்றுப் பிரகாரத்தில் அமர்ந்தவள், தன்னிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தாள். அங்கிருந்த சிலர் அவளைப் பரிதாபத்துடன் பார்த்துச் செல்ல, தன் கண்ணீரை துடைத்தவள் கைப்பையிலிருந்து அலைப்பேசியை எடுத்து லீலாவுக்கு அழைத்தாள்.

“ஹாய் மதி...எப்படி இருக்க?” லீலாவின் குரல் உற்சாகத்துடன் ஒலித்தது.

“அக்கா...” அதற்கு நேர்மாறாய் மதியின் குரல் உடைந்தது.

“என்னாச்சு...மதி...சொல்லிட்டு அழு” அவள் அழுகையினூடே அன்று நடந்தவற்றை லீலாவிடம் சொல்ல, அதைக் கேட்ட லீலா கொஞ்சம் அதிர்ந்து தான் போனாள்.

“என்ன மதி சொல்ற?”

“அக்கா எங்கே போறதுன்னு தெரியாம வீட்டுக்குப் பக்கத்திலிருக்கிற கோவிலில் உட்கார்ந்திருக்கிறேன்” கேவலுடன் சொன்னவளைக் கண்டு லீலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்த நேரம் பார்த்து

அவளும் நேற்று இரவு தான் கிளம்பி தன் ஊருக்கு வந்திருந்தாள்.

“மதி நான் இங்கே ஊருக்கு வந்திருக்கேன். இப்ப என்னாலேயும் ஹெல் பண்ண முடியாது...” லீலா முடிக்கும் முன், “பரவாயில்லை அக்கா...” என்று கூறி மதி அலைப்பேசியை அணைத்தாள். என்ன சொல்கிறோம் என்பதைக் கூடக் கேட்க முடியாமல் அப்படியென்ன அவசரம்? மதியை மனதுக்குள் வைதவள் அவசரமாக விஷ்ணுவுக்கு அழைத்தாள்.

ஷன்மதிக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. அவள் லீலாவைத் தான் பெரிதும் நம்பியிருந்தாள். அவள் தான் இவள் நலனில் அக்கறை உள்ளவள். அவளும் ஊரிலில்லாததால் எங்கே செல்ல? என்று யோசித்தவளுக்கு ஏதோ செய்தது. ஏற்கெனவே உடல்நலம் சரியில்லாதவள் இதில் காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாததால் தலைசுற்ற, அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்று தெரியாமல் அந்த எண்ணமே மனதை அழுத்த மொத்தத்தில் அவளின் எதிர்காலம் இருட்டாய் தெரிய கொஞ்சம் கொஞ்சமாய் மயங்கியவளை,

“மதி...மதி... என்னைப் பாரம்மா” என்ற விஷ்ணுவின் குரல் நம்பிக்கை ஒலி(ளி)யாய் அவள் காதில் விழ, லீலா விஷ்ணுவை பற்றிச் சொன்னதெல்லாம் காதில் ரீங்காரமிட, அவன் மட்டுமே தனக்கு இருந்த ஒரே பற்றுகோல் என்ற நம்பிக்கை இமயமாய் மனதில் எழ, “எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு சார்...” என்று சொல்லியவள் அவளையும் அறியாமல் அவன் கையை இறுகப் பற்றியபடி தன் சுயநினைவை முற்றிலும் இழந்தாள்.

அத்தியாயம் : 5

“இங்கே ஏன் சார் கூட்டிக்கிட்டு வந்திங்க? என்னால மேடத்துக்கும் வீண் தொந்திரவு...! ஏதாவது ஆசிரமத்தில் சேர்த்து விடுங்களேன்” கண்களில் நீருடன் சொன்ன ஷன்மதியைக் கண்டு விஷ்ணுவின் மனம் பரிதவித்தது. இந்தச் சின்னப் பெண்ணிற்கு இந்த வயதில் இவ்வளவு பெரிய வேதனையை அந்தக் கடவுள் கொடுக்க வேண்டுமா?

கோவிலில் மயங்கி சரிந்தவளைக் கண்டு அவன் மூச்சே நின்றுவிட்டது போலிருந்தது. அதை விட அவள் உடம்பில் இருந்த வரி வரியான ரத்தம் கட்டிய காயங்களைக் கண்டதும் அவள் தந்தை மேல் கோபம் வந்தது. அந்தக் கயவர்களால் ஏற்பட்ட உடல் காயமே அவளுக்கு இன்னமும் ஆறாத நிலையில் அவர் இப்படி அடித்திருப்பது கண்டு அவர் மேல் ஆத்திரம் வந்தது. உடனடியாகத் தண்ணீர் தெளித்து அவள் மயக்கத்தைப் போக்கியவன், அவள் மயக்கத்திற்கான காரணம் பசி என்பதை உணர்ந்து உணவு வாங்கிக் கொடுத்து அவளை உண்ணச் செய்து, அருகிலிருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காயத்திற்கு மருந்திட்டு, அதன் பின்னரே காவ்யபாரதியின் வீட்டிற்கு அழைத்து வந்தான்.

“முதலில் உள்ளே வா... மேடம் என்ன சொல்றாங்களோ அதன்படி செய்யலாம்” அதற்கு மேல் கேள்வி கேட்பதில் அர்த்தமில்லை என்றெண்ணி பேசாமல் அவனுடன் உள்ளே சென்றாள். அவரைப் பார்த்து விவரம் கூறியதும் அவருக்குமே அவளின் நிலைப் பரிதாபமாக இருந்தது.

“பேசாமல் என் கூடவே இருக்கிறாயா? கணவர் இறந்த பின் தனி மனுசியாய் என் பெண்ணை வளர்த்து போன வருடம் தான் திருமணம் செய்து வைத்தேன். இப்பொழுது நான் மட்டும் தான் தனியாக உள்ளேன். சில சமயம் தனிமை மிகவும் கடினமாகத் தான் இருக்கிறது. என்ன செய்ய? இருந்து தானே ஆக வேண்டும். இப்பொழுது நீ வந்தது எனக்கு மிகவும் சந்தோசம்”

“மேடம்...உங்களுக்கு எதுக்குத் தொந்திரவு? ஏதேனும் ஆசிரமத்தில்...”

“வழக்குக்கு வருகிற எல்லோரையும் இப்படித் தங்க வைக்க முடியுமா? ஏனோ உன்னைப் பார்த்தால் என் மகள் நினைவு தான் வருகிறது. என் மகளுக்கு நான் செய்வதில் என்ன தொந்திரவு எனக்கு...? நான் சாப்பிடுவதில் உனக்குக் கொஞ்சம் கொடுக்கப் போகிறேன். இவ்வளவு பெரிய வீட்டில் நீ தங்குவதற்கா இடமில்லை?”

“மேடம்...” அவளின் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. அதற்குப் பதிலாகக் கண்கள் கண்ணீரை கொட்டித் தன் நன்றியைத் தெரிவித்தது. தடாலென்று அவர் காலில் விழுந்து, “ரொம்ப நன்றி மேடம்...” என்றவளைப் பார்த்து, “மதி என்ன செய்கிறாய்?” பதறிப் போய் அவளைத் தூக்கியவர், “நான் செய்தது சின்ன உதவி தான் இதற்குப் போய் இப்படிக் காலில் விழலாமா?” என்று அவளைக் கடிந்தவர், பின் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டார். அதுவரை விஷ்ணுவின் மனதை அரித்துக் கொண்டிருந்த மதியைப் பற்றிய கவலை சட்டென்று நீங்க இருவரையும் நிம்மதியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மறுநாளே தங்கள் குடும்பத்திற்குக் குற்றவாளிகளின் நெருங்கியவர்கள் மூலம் ஆபத்து ஏற்படலாம் என்று வழக்கு ஒன்று காவ்யபாரதி உதவியுடன் மதி நீதிமன்றத்தில் தொடுக்க, அந்த ரௌடிகளால் அவளையோ அவள் குடும்பத்தையோ ஒன்றும் செய்ய முடியாமல் போனது. அவர்களால் தன் தங்கைக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று அறிந்த பின்புதான் அவளால் நிம்மதியாக இருக்க முடிந்தது.

மெல்ல மெல்ல அந்த வீட்டின் பழக்க வழக்கங்கள் அவளுக்குப் பிடிபட ஆரம்பித்தது. வீட்டு வேலை முதல் அலுவலக வேலை வரை எல்லாவற்றிலும் காவ்யபாரதிக்கு உதவியாக இருந்தாள். அலுவலகம் வீட்டின் முன் பக்கம் இருந்ததால் அவளுக்கு மிகவும் எளிதாக இருந்தது. இதற்கிடையில் லீலாவும் ஊரிலிருந்து வந்து விட, நேரம் வெகுவாக ஓடியது. இடையிடையில் பெற்றோர், தங்கை

நியாபகம் வரும் அந்தச் சமயம் மற்றவர்கள் அவளின் கவனத்தைத் திசை திருப்பிவிடுவர். மொத்தத்தில் பெற்றோர் அருகிலில்லாத குறையைத் தவிர அவளுக்கு வேறு எந்தக் குறையுமில்லை.

அன்றும் வழக்கு முடிந்து நீதிமன்றத்திலிருந்து வெளியில் வந்தவளை நோக்கி ஒரு தம்பதியர் ஓடி வந்தனர். யார் என்று தெரியாமல் அவள் லீலாவை பார்க்க, லீலாவுக்கும் யார் என்று தெரியவில்லை.

“என்ன கண்ணு நல்லாயிருக்கியாம்மா? நியூஸ்பேப்பர் பார்த்து தான் உன்னைத் தெரிஞ்சிக்கிட்டோம். உன்னைப் பத்தி விசாரிச்சா யாரும் சரியா பதிலே சொல்லல. அதான் இன்னைக்கு உனக்குக் கேஸ் இருக்குன்னு தெரிஞ்சு இங்கேயே வந்துட்டோம்” அவள் இன்னமும் யார்? என்று தெரியாமல் முழிக்க,

“என்னம்மா எங்களை அடையாளம் தெரியலையா? உனக்கு எங்கே தெரிந்திருக்கப் போவுது. அதான் அன்னைக்கு அரை மயக்கத்தில் இருந்தியே. நாங்க தான்ம்மா அன்னைக்கு உன்னை ஹாஸ்பிட்டல்ல சேர்த்தவங்க. என் பெயர் மங்களம். இது என் புருசன் ஆறுமுகம்” அவர் கூறியதும் மதி உணர்ச்சிப் பெருக்கில் அது நீதிமன்றவளாகம் என்ற நினைவு கூட இல்லாமல் அவர்கள் இருவரின் கால்களில் விழுந்தாள்.

பதறிப் போய் அவளைத் தூக்கியவர்கள், “என்னம்மா இது நீ போய் எங்க காலில் எல்லாம் விழுந்துட்டு...”

“நீங்க மட்டும் அன்றைக்கு என்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால்... என் நிலைமை?” கண்ணீர் விட்டவளை ஆறுதலுடன் அணைத்துக் கொண்டார் மங்களம்.

மங்களம் அவளின் கதையைக் கேட்டுப் பரிதாபப்பட்டவர், “அன்னைக்கு உன்னைப் பார்த்ததும் இப்படி ஏதாவது தான் நடந்திருக்கும் என்று நினைச்சேன். அதே மாதிரியில்ல நடந்திருக்கு. இங்கே பாரு மதிக் கண்ணு...உனக்காக நான் கோர்ட்டில் சாட்சி சொல்ல வர்றேன். நீ பயப்படாத...! என்ன கண்ணு...” அவராக அவளுக்கு உதவ முன் வந்தார்.

“ஏன் தம்பி என் சாட்சி கோர்ட்டில் எடுபடும்ல?” விஷ்ணுவிடம் கேட்க வேறு செய்தார். “உங்க சாட்சி தாங்க இதில் முக்கியச் சாட்சியே” என்று விஷ்ணு சொல்ல அதையே யுவனும் லீலாவும் ஆமோதித்தனர்.

“அக்கா இவங்களுக்கு என் மேல் உள்ள பாசம் கூட என் அப்பா அம்மாவுக்கு இல்லாமல் போச்சே” லீலாவின் தோளில் சாய்ந்து அழுதவளை எல்லோரும் சேர்ந்து சமாதானப்படுத்தினர். அதன் பின் மங்களமும் ஆறுமுகமும் அடிக்கடி அவளைப் பார்க்க வர, அவர்களுக்குள் அன்பு கூடி உறவு பலப்பட்டது. ********** “மதி... வாழ்த்துக்கள்...” லீலா அவளைக் கட்டிப் பிடித்து வாழ்த்து சொல்ல,

“கங்கிராட்ஸ்...” என்று காவ்யபாரதியும் தன் பங்கிற்கு வாழ்த்தினார். ஷன்மதி பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்று மாநிலயளவில் இரண்டாவதாக வந்திருந்தாள். அதைக் கேட்டதும் அனைவருக்கும் மகிழ்ச்சியாய் இருந்தது.

“வாழ்த்துக்கள்...” அப்பொழுது தான் அலுவலகம் வந்த விஷ்ணு அவளை வாழ்த்தியவன், அவனையும் அறியாமல் கையோடு கொண்டு வந்திருந்த இனிப்பை எடுத்து அவள் வாயில் வைத்தான்.

மதிக் கோபப்படுவாளோ என்று லீலா அவளைப் பார்க்க, எந்தப் பெண்ணிடமும் அதிக உரிமையை எடுக்காத விஷ்ணு இவளிடம் மட்டும் அதிக உரிமையை எடுக்கும் மர்மம் என்ன? என்று புரியாமல் குழம்பினான் யுவன். ஏனெனில் விஷ்ணு அவனின் தங்கை விலாசினியிடம் கூட அதிகம் பேசமாட்டான். அப்படியும் விலாசினி அவனிடம் வந்து வம்படியாய் பேசினாலும் இரண்டொரு வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு நகர்ந்து விடுவான். அப்படிப்பட்ட விஷ்ணு மதியிடம் இப்படி நடந்து கொள்கிறான் என்றால் ஏதோ இருக்கிறது என்று எண்ணினான். ஆனால் நண்பனிடம் கேட்கவில்லை. சொல்வதாக இருந்தால் அவனே சொல்வானே.

லீலா பயப்பட்டது போல் மதி அவனிடம் கோபப்படவில்லை. “தேங்க்ஸ் சார்...” என்று சிரித்தபடி அதை விழுங்கிக்

கொண்டாள். இவ்வளவு நாள் பழக்கத்தில் அவளுக்கு விஷ்ணு மேல் சிறிது நம்பிக்கை வந்திருந்தது. ஏதோ உலக அதிசயம் போல் வாயை அகலத் திறந்து கொண்டு, கண்களை அகல விரித்து அதைப் பார்த்த லீலாவை, “விஷ்ணு...முதல்ல லீலாவுக்குக் கொடு. எவ்வளவு நேரம் தான் வாயை திறந்து கொண்டிருப்பா” என்று யுவன் கிண்டலடிக்கவும், லீலா அவன் தலையில் ‘நங்’ என்று கொட்டினாள்.

“உன்கிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கப் போற அந்த அப்பாவி ஜீவனுக்கு என் ஆழந்த அனுதாபங்கள்” தன் தலையைத் தடவி கொண்டே யுவன் சொல்ல... அவனைப் பார்த்துப் பழிப்புக் காட்டினாள் லீலா. அதைப் பார்த்த மதி வாய்விட்டு சிரிக்க, அவளைக் கண்டு விஷ்ணுவுக்கும் புன்னகை விரிந்தது.

பள்ளிக்கு சென்று மதிப்பெண் சான்றிதழ் வாங்கச் சென்றவளை அங்கிருந்த ஆசிரியர்கள், மாணவர்களில் சிலர் அவளை அருவருப்பாகப் பார்த்த போதும், அவளின் வேதனையைத் தங்கள் வேதனையாக எண்ணி வருத்தம் தெரிவித்தவர்களும் இருக்கத் தான் செய்தார்கள். தலையாசிரியராக இருந்த அருட்சகோதரி ஆக்னஸ் அவளுக்கு வாழ்த்துக் கூறியவர், பள்ளியும் அவளுக்கு நீதி கிடைக்கப் போராடும் என்று கூற கண்கள் கலங்க அவரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள். அதன் பின் பத்திரிக்கைக்காகப் புகைப்படம் எடுக்கச் சொன்ன போது மறுத்தவளை வற்புறுத்தி சம்மதிக்க வைத்தனர் லீலாவும், விஷ்ணுவும்.

மறுநாள் பத்திரிகையின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் அவள் மதிப்பெண் எடுத்திருந்ததைப் பாராட்டி எழுதியவர்கள், அதன் பக்கத்திலேயே அவளுக்கு நேர்ந்த கொடுமையையும் எழுதி சமூகநல அமைப்புகள் இதற்காகப் போராடாமல் என்ன செய்து கொண்டிருக்கிறது என்று குற்றம் சாட்ட, பல்வேறு அமைப்புகள் அவளுக்காகப் போராட்டத்தில் குதித்தது. இத்தனை அமைப்புகள் அவளுக்காகப் போராட்டத்தில் இறங்கும் என்று அவளே எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் புரிந்து கொண்ட மாதிரி

தன் பெற்றோர் தன்னைப் புரிந்து கொள்ளாமல் போனார்களே என்று மனதின் ஓரத்தில் வலி எழத்தான் செய்தது.

“நீங்க என் பொண்ணுக்குச் சப்போர்ட் பண்ணலைன்னா என்ன? இதோ பாருங்க உலகமே அவள் பின்னால் நிக்குது. அன்னைக்கே நானும் அவள் கூடப் போயிருப்பேன். இதோ இவளுக்காகத் தான் போகாம இருந்தேன்” ஆண்டாள் சுவாதியை சுட்டிக் காண்பித்தவர், கணவர் முகம் கறுப்பதை ஒருவித திருப்தியுடன் பார்த்தவர் கழுத்தை நொடித்துக் கொண்டு சமையல் கட்டுக்கு சென்றார்.

அரசாங்கம் அவளுக்காக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரியில் இடம் ஒதுக்கியது. ஆனால் அதை எல்லாம் அவள் மறுத்தாள். “பணத்துக்காக யோசிக்காதே. நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம்?” காவ்யபாரதி சொல்ல, அதை விஷ்ணு, யுவன், லீலா எல்லோரும் ஆமோதித்தனர்.

“இல்லை மேடம்...எனக்கு டாக்டர் ஆகணும்ன்னோ எஞ்சினியர் ஆகணும்ன்னோ ஆசையில்லை. மேடம்... உங்களை மாதிரி லாயர் ஆகணும். பாதிக்கப்பட்டவங்களுக்கு என்னாலான உதவி செய்யணும். அதிலும் என்னை மாதிரி பாதிக்கப்பட்ட பெண்களுக்கு...” என்று முடிக்க முடியாமல் கதறியவளை ஆறுதலுடன் அணைத்துக் கொண்டார் அவர்.

“தாராளமா நீ ‘லா’க்கு படி. உன்கூட நான் இருக்கேன். உன்னை நினைச்சா பெருமையா இருக்கு” பெருமிதத்துடன் கூறியவரின் தோளில் சலுகையாய் சாய்ந்து கொண்டு புன்னகைத்தாள்.

ஷன்மதி அவள் விருப்பப்படி சட்டக் கல்லூரியில் சேர்ந்தாள். முதலில் உடன் பயிலும் மாணவிகள் அவளுடன் பழகத் தயங்கினர். பின்பு போகப் போக ஒவ்வொருவராக அவளிடம் நட்பு கொண்டாட எல்லோரும் நண்பர்களாயினர். கல்லூரி வாழ்க்கை ஓரளவு பழகிப் போனது. இப்பொழுது எல்லாம் ஷன்மதி அருவருப்பான உதாசீனப் பார்வைகளை ஒதுக்கித் தள்ளி விட்டு நிமிர்ந்து நிற்கப் பழகிக்

கொண்டாள். அதே போல் வெளிஉலகத்தை அவள் தனியாகச் சந்திக்கச் சந்திக்க அவள் மனதைரியமும் தானாகவே வளர ஆரம்பித்தது.

அடுத்து வந்த நாட்களில் வழக்கு விசாரணை தள்ளி வைக்கப்பட்டு வைக்கப்பட்டு இறுதியில் தீர்ப்பு வழங்கும் நாளும் வந்தது. நான்கு மாதங்களுக்கு மேல் நடந்த வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. நிறைய ஆதாரங்கள் அவளுக்குச் சாதகமாக அமைந்தது. அதிலும் அவளைக் கடத்திச் சென்று அடைத்து வைத்திருந்த பங்களாவின் காவலாளி முக்கியச் சாட்சியாக அவளுக்குச் சாதகமாக நீதிமன்றத்தில் வந்து சாட்சி கூறினான். மூன்று பெண் குழந்தைக்குத் தந்தையான அவனுக்கு மனசாட்சி உறுத்த வேலைப் போனாலும் பரவாயில்லை என்று சாட்சி சொல்ல வந்தான். அதன் பின் மங்களம், ஆறுமுகம் சாட்சி சொல்ல எல்லாமே மதிக்குச் சாதகமாக அமைந்தது.

குற்றவாளிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட கன்னித்தன்மை சான்றிதழ் பொய்யென்று அவளின் தற்போதைய மருத்துவச் சான்றிதழ் நிரூபித்தது. அதன் பின் அவர்கள் வழக்கை திசை மாற்றினர். அதாவது மதி விரும்பியே அவர்களுடன் சென்றதாகக் கூற, பின் எதற்காகக் கன்னித்தன்மையை நிரூபிக்கும் சான்றிதழை கொடுத்தீர்கள் என நீதிபதி, அவர்களை முன்னுக்குப்பின் பேசுவதாகக் கூறி நீதிமன்றத்தை அவமதித்ததாகத் தன் கண்டனத்தைத் தெரிவித்தார்.

குற்றவாளிகளுக்குத் தூக்குத்தண்டனை விதித்த நீதிமன்றம், அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட அந்தப் பெண் காவலதிகாரி மற்றும் அந்த மருத்துவர் இருவரையும் பணிநீக்கம் செய்யச் சொல்லி உத்தரவிட்டது. பிள்ளைகளைப் பொறுப்பின்றி வளர்க்கும் பெற்றோர்களுக்குத் தன் குட்டை வைக்கவும் நீதிமன்றம் தயங்கவில்லை. தீர்ப்பைக் கேட்டு ஷன்மதி அந்த இடத்திலேயே மடங்கி அமர்ந்து வாய்விட்டு அழுதாள். மூன்று குற்றவாளிகளும் அவளின் முகம் பார்க்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டு வேனில் ஏறினர்.

“எங்கே கேஸ் இப்படியே இழுத்துட்டு போகுமோன்னு சந்தேகமாயிருந்தது. இப்ப தான் மதி சந்தோசமா இருக்கு...” வீட்டிற்கு வந்ததும் காவ்யபாரதி பெருத்த நிம்மதியுடன் சொல்ல, “இல்லை மேடம்... அவங்களுக்குத் தூக்குத் தண்டனைக்குப் பதிலா ஆயுள் தண்டனை கிடைச்சு இருக்கணும்” முகம் இறுக கூறியவளை எல்லோரும் புரியாமல் பார்க்க, “மரணம் அந்த நிமிட வேதனைதான் மேடம். ஆனால் அவங்க உயிரோட இருந்து ஒவ்வொரு நிமிடமும் ஏண்டா வாழணும்ன்னு நினைக்கணும். இதுக்கு நமக்கு மரணதண்டனை கொடுத்து இருக்கலாம் என்று அவங்க தினமும் கதறணும். என்னை அனுபவிக்கும் பொழுது எவ்வளவு சந்தோசப்பட்டாங்க தெரியுமா? அந்தச் சந்தோசமே அவங்களை இந்த நிலைக்கு ஆளாக்கி இருக்குன்னு நொந்து போகணும். அப்படிப் பண்ணி இருக்கக் கூடாதுன்னு தினமும் கடவுள் கிட்ட அவங்க பாவமன்னிப்பு கேட்கணும்” கண்கள் பளபளக்க கூறியவளைக் எல்லோரும் சமாதானப்படுத்தினர்.

“மதி ரொம்ப யோசிக்காதே... சரி முதல்ல கிளம்பு இன்னைக்கு வெற்றியை கொண்டாட நாம் லஞ்சுக்கு வெளியில் போகலாம்” விஷ்ணு கூற லீலாவும், யுவனும் மதியின் மனதை மாற்ற எண்ணி, போகலாம் என்று ஒருமித்த குரலில் கூறினர். காவ்யபாரதி வரவில்லை என்றதும் மற்றவர்கள் கிளம்பினர். உணவு விடுதிக்குச் சென்றதும் மதிக்கு பிடித்ததைக் கேட்டு கேட்டு ஆர்டர் கொடுத்த விஷ்ணுவை ஒரு மாதிரி பார்த்தபடி யுவன் அமர்ந்திருக்க, லீலாவோ அதைப் புரிந்தவளாய் கண்டு கொள்ளாமல் மெனுக்கார்டை பார்த்துக் கொண்டிருந்தாள். உணவு வந்ததும் அதை எடுத்து ஒருவாய் வைத்த மதிக்கு உமட்டிக் கொண்டு வர வாயைப் பொத்தியவள் அப்படியே எழுந்து கைக் கழுவும் இடத்திற்கு ஓட, அவளைப் பார்த்து அதிர்ந்த லீலா அவள் பின்னே ஓடினாள். ஒன்றும் புரியாமல் ஆண்கள் இருவரும் திகைத்துப் போய் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

அத்தியாயம் : 6

“டாக்டர்...எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம். இது பாவப்பட்டது. எனக்கு வேண்டாம்...” என்று மதி தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு கதற, லீலா அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

உணவுவிடுதியில் மதிக்கு உமட்டிக் கொண்டு தலைசுற்றுவது போலிருக்கவும் அவளை மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். அவளைப் பரிசோதித்த மருத்துவர் சந்தேகம் தோன்ற கர்ப்பம் உறுதி செய்யும் பரிசோதனையைச் செய்யச் சொன்னார். அவரின் சந்தேகத்தை உறுதிப்படுத்தியது அந்தப் பரிசோதனையின் முடிவு. மதியிடம் நாள் கணக்கு கேட்டவருக்கு, கருவின் வயது நான்கு மாதத்திற்கு மேலாகிவிட்டது என்பது புரிந்தது. அதைச் சொன்னவுடன் தான் மதி அவ்வாறு அலறியது.

“வேண்டாமென்றால் முதலிலேயே ஏதும் செய்திருக்க வேண்டும். இவ்வளவு நாள் கழித்து அழிப்பது என்பது உன் உயிருக்கும் சேர்த்து ஆபத்தாய் முடியும். நன்றாக யோசித்து முடிவு செய்யம்மா”

“எனக்கு இருக்கிற அவமானத்துடன் இந்த அவமானமும் சேர வேண்டாம். அதுக்கு என் உயிர் போனாலும் பரவாயில்லை டாக்டர்” கதறியவளுக்கு நண்பர்கள் மூவராலும் ஆறுதல் அளிக்க முடியவில்லை. எப்படியோ சமாதானம் செய்து காவ்யபாரதியிடம் அழைத்து வந்தனர். செய்திக் கேட்டதும் எதற்கும் கலங்காத அவரின் கண்கள் கூடக் கலங்கிவிட்டது.

“இப்போழுதான் கொஞ்சம் சந்தோசமா இருந்தா...அது கூட அந்தக் கடவுளுக்குப் பொறுக்கவில்லையா? மதி நான் சொல்வதைக் கேட்பதானே. உன் உயிருக்கு ஆபத்தா முடியறதை நீ ஏன் செய்ய நினைக்கிற? பேசாம இந்தக் குழந்தையைப் பெத்துக்கோ”

“பெத்து... அப்புறம்... அதுவும் என் கூடச் சேர்ந்து சீரழியவா? நாளைக்கு இது வளர்ந்து அப்பா யார்ன்னு கேட்டா நான் என்ன சொல்வேன்...யாரைக் கையைக் காண்பிப்பேன்?

ஒருத்தனையா...இல்லை மூணு பேரையுமா? வேண்டாம் அதுக்கு நாங்க ரெண்டு பெரும் சேர்ந்து செத்துப் போறோம். நாங்க உயிரோடு இருந்து என்ன செய்யப் போறோம்?" அழுகையை அடக்கிக் கொண்டு கூறியவளை தன்னோடு ஆறுதலாக அணைத்த அவர், "நீ சாவதற்குப் பிறக்கவில்லை மதி...சாதிக்கப் பிறந்திருக்க... . நீ சாதிப்ப... எனக்கு நம்பிக்கையிருக்கு. அதுக்கு இந்தக் குழந்தை தடையாக இருக்காது"

நம்பிக்கையில்லாமல் அவரைப் பார்த்தவளை, "என் மேல் உனக்கு நம்பிக்கை இருக்குல்ல" 'ஆம்' என்பது போல் தலையாட்டியவளை, "அப்போ நான் சொல்றதைக் கேளு. இப்போ அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வர வேண்டாம். நிதானமா யோசித்து நல்ல முடிவா சொல்லு" அவர் சொல்வதைக் கேட்டு அரைகுறையாய் தலையாட்டியவளை ஓய்வு எடுக்கச் சொல்லி விட்டு, மற்றவர்கள் அவரவர் வீட்டிற்குக் கிளம்பினர்.

"யுவன் மதியைப் பார்க்கவே பாவமா இருக்குடா... அவளுக்கு என்னால எந்த ஹெல்ப்பும் பண்ண முடியல. அதுவே எனக்கு வேதனையா இருக்கு. இந்த விசயத்தில் ஒப்பினியன் சொல்ல கூட முடியாமல்... ம்ப்ச்...! என்ன சொல்றதுன்னே தெரியலைடா?" புலம்பிய விஷ்ணுவை ஒரு மாதிரியாகப் பார்த்த யுவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. விஷ்ணு தன் மனதை இன்னமும் உணரவில்லை என்று. அவனே அதை உணராத போது தான் ஏன் தேவையில்லாமல் பேசிக் குழப்ப வேண்டும் என்று எண்ணியவன் மௌனமாய் ஆமோதிப்பது போல் தலையாட்டினான்.

****

தன்னறைக்கு வந்தவள் எப்படி இவ்வளவு நாள் கவனிக்காமல் இருந்தேன்? அதுவும் கரு வளர்ந்து வருவது கூடத் தெரியாமல்? யோசிக்க... யோசிக்க... பைத்தியம் பிடிப்பது போலிருந்தது அவளுக்கு. நான்கு மாதம் என்ற போதும் வயிறு உப்பி...பார்க்கக் கூடிய அளவு உருவத்தில் பெரிதாக வித்தியாசமில்லை. அவ்வளவு ஏன் இன்று போல்

ஒருநாளும் அவளுக்குத் தலைசுற்றி வாந்தி வந்தது கிடையாது. அப்படி வந்திருந்தால் கூட முதலிலேயே கண்டு பிடித்து இருக்கலாம். அதிலும் அவளுக்கு இருந்த மனக் குழப்பத்தில், அழுத்தத்தில் மாதாந்தோறும் வரும் மாதாந்திர பிரச்சினையைக் கூடக் கருத்தில் கொள்ளாமல் இருந்திருக்கிறாள். இதில் அவளின் மடமை தான் அதிகம். குழந்தை என்ற ஒன்றை அவள் எதிர்ப்பார்க்கவே இல்லை. அப்படி யோசிக்குமளவுக்கு அவளுக்கு வயதோ பக்குவமோ இல்லை. தன்னிரக்கம் தோன்ற வெகுநேரம் அழுதவள் அப்படியே உறங்கிப் போனாள்.

இரவு தூக்கத்தில் பயங்கரக் கனவுகள் வந்து அவளைப் பயமுறுத்த அந்த ஏசிக் குளுமையை மீறி அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. குழந்தைக்கு மூன்று தலைகள் இருப்பது போலவும், அதிலொன்று சிபியின் முகமும் மற்ற ரெண்டு முகமும் அவளுக்குச் சரியாகத் தெரியவில்லை. அந்த மூவரும் அவளைப் பார்த்துக் கைக் கொட்டி சிரிக்கும் சத்தம் தொடர் இடிச் சத்தம் போல் அவள் காதில் விழ தூக்கத்திலேயே அலறி, படுக்கை விரிப்பை இறுகப் பற்றினாள்.

அதன் பின் சிறுக்குழந்தை ஒன்று அவள் காலைப் பிடித்துக் கொண்டு, ‘அம்மா...என்னைக் கொன்னுடாதே. என்னைப் பார்த்தா பாவமாயில்லையா? எனக்கு இந்த உலகத்தைப் பார்க்கணும் ஆசையா இருக்கு. என்னை ஒண்ணும் பண்ணிடாதே...’ என்று கெஞ்சியது, அதன் பின் கூக்குரலிட்டு அது அழ திடுக்கிட்டுப் போய் எழுந்தமர்ந்தவள், தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்துவிட்டாள்.

மனதுக்குள் எதோ இனம் புரியாத அவஸ்தை ஒன்று பாரமாய் அழுத்த, நெடுநேரம் யோசித்தவள் மனதில் இயல்பாய் தாய்மை உணர்வு தலை தூக்க, பின் மனதை திடப்படுத்தியவளாய், “இல்லை...இல்லை கண்ணா...உன்னை நான் அழிக்க மாட்டேன். நீ அந்தக் கயவர்கள் குழந்தை இல்லை. நீ என் குழந்தை...என் குழந்தை...” உறுதியுடன் கூறியவள், அடுத்தநாள் காலையில் மருத்துவரை சந்திக்கச் சென்றாள்.

குழந்தையைப் பெற்றுக் கொள்ளவது என்று தீர்மானித்ததும் அதற்கென்று உள்ள மகப்பேறு மருத்துவரிடம் பரிசோதனை செய்ய வந்திருந்தாள் மதி. அவளுடன் துணைக்கு லீலா வந்திருந்தாள். “குழந்தை நார்மலாக ஆரோக்கியமாக இருக்கிறது. ஆனால் உனக்கு... பதினேழு வயது தானாகிறது... அதற்குள் இப்படி ஒரு...” மருத்துவர் முடிக்கவில்லை, “டாக்டர் குழந்தை பிறக்கும் பொழுது எனக்குப் பதினெட்டு வயதாகி விடும். அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை” அவசரமாகப் பதிலளித்த ஷன்மதியை ஆச்சிரியமாகப் பார்த்தாள் லீலா.

நேற்று குழந்தை வேண்டாமென்று அழுததென்ன இன்று இப்படிப் பேசுவதென்ன? லீலாவைப் பார்த்து புன்னகைத்த மதி, “அக்கா...இது என் குழந்தை தானே? அவங்களோடதில்லையே...?” ஆம் என்று தலையசைத்த லீலாவைப் பார்த்து, “அதான் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன்” என்றவளின் கையை ஆறுதலுடன் பிடித்துக் கொண்டாள் லீலா.

மருத்துவரிடம் கர்ப்பக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் மற்றும் மருந்துகள் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருவரும் வீடு வந்து சேர்ந்தனர். அவர்களுக்காக ஆர்வத்துடன் காத்துக் கொண்டிருந்த விஷ்ணுவிடம் மருத்துவர் சொன்னதைக் கூறியதும் அவனுக்கும் நிம்மதி உண்டானது.

“அக்கா...நாளைக்கு ஏதும் முக்கியமான வேலை இருக்கா?” லீலா கிளம்பும் போது மதி அவளைப் பார்த்து கேட்டாள்.

“முக்கியமான வேலை ஒண்ணுமில்லை. என்ன விசயம் சொல்லு?”

“நாளைக்கு என் கூட வர முடியுமா?”

“ம்...கட்டாயம்...ஆனால் எங்கே?”

“அது சஸ்பென்ஸ்..." கண்ணைச் சிமிட்டியவளின் உற்சாகம் லீலாவையும் தொற்றிக் கொண்டது. "ஒகே நாளைக்குப் பார்க்கலாம்...” லீலா விடைப்பெற்றுச் சென்ற பின் மதியின் மனதில் என்றுமில்லாத தீவிரம் எழுந்தது.

****

அலுவலகத்திற்குள் நுழையும் போதே விஷ்ணுவின் கண்கள் ஷன்மதியைத் தேடியது. வாரக் கடைசியில் கிடைத்த விடுமுறையில் பெற்றோரைப் பார்த்துவிட்டுக் காலையில் அலுவலகம் வந்தவன், உடனே வழக்குக்காக நீதிமன்றம் சென்றுவிட்டு மாலையில் இப்பொழுது தான் உள்ளே நுழைகிறான். மூன்று நாட்கள் ஆகிவிட்டது அவளைப் பார்த்து... அவளைப் பார்க்க தான் ஏன் இவ்வளவு ஆவலாக இருக்கிறோமென்று அவனுக்கே புரியவில்லை. கண்களைச் சுழற்றியவன் பார்வையில் அங்கே கணினியின் முன் அமர்ந்து வேலைப் பார்த்துக் கொண்டிருந்த மதி விழுந்தாள்.

அவளைப் பார்த்ததும் இதழ்களில் தானாகப் புன்னகை வந்து ஒட்டிக் கொள்ள, அவளை நோக்கி ஆர்வத்துடன் சென்றவன் அவளிடம் ஏதோ வித்தியாசம் தோன்றக் கூர்ந்து அவளைப் பார்த்தான். பார்த்தவன் விழிகள் இரண்டும் வெளியில் தெறித்து விழும்படி அப்படியே நின்றிருந்தான். அவன் பார்வையில் அதிர்ச்சியா... திகைப்பா.. .பிரமிப்பா... இல்லை மூன்றும் சேர்ந்த கலவையான உணர்ச்சியா எது என்று பிரித்தறிய முடியவில்லை. எப்படி இவளால் இப்படி ஒரு செயல் செய்ய முடிந்தது? தனக்குள்ளேயே கேள்வி கேட்டவன் இன்னமும் திகைப்பு அகலாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

விஷ்ணுவின் திகைப்புக்குக் காரணம் மதி தன் நீண்டக் கூந்தலை மொட்டையடித்து இருந்தாள். இடுப்பைத் தாண்டிய நீண்டக் கூந்தல் அவள் நடக்கும் போது அங்குமிங்கும் அசைந்து அவளுக்குத் தனி அழகை கொடுக்கும். அதைப் போய் இழந்திருக்கிறாள் என்றால் ஏன்? என்ற கேள்வியே அவனுக்குள் எழுந்தது. அவனையுமறியாமல் அவளை நோக்கி அவன் கால்கள் நகர்ந்தது. அவனின் வரவு உணர்ந்தோ என்னமோ அவள் நிமிர்ந்து பார்த்தவள், எப்பொழுதும் போல் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“மதி...நீ...ஏன்...? இப்படி...?” வார்த்தைக் குழறியது அவனுக்கு.

“ஓஹ்...இதுவா சார்...” தன் தலையைக் காட்டிக் கேட்டவளிடம் ஆமென்று அவன் தலையாட்ட, “இந்தக் கேசில் ஜெயிச்சா மொட்டைப் போடுறதா வேண்டியிருந்தேன் சார். கடவுள் அருளில் நாம் ஜெயித்து விட்டோம். அதான் வேண்டுதலை நிறைவேத்தி விட்டு வந்தேன். அதுமட்டுமல்ல இனி யார் கண்ணுக்கும் என் அழகு உறுத்தாதில்ல...சார்” சொன்னவள் மீண்டும் கணினியில் பார்வையைப் பதித்தாள்.

விஷ்ணுவின் பார்வையில் இப்பொழுது திகைப்புப் போய்ப் பிரமிப்பு வந்தது. ஆனால் அவளின் அழகே அவளுக்கு எதிரியாய் மாறிப் போனதாய் நினைக்கும் அவளின் எண்ணம் அவனுக்கு வேதனையை அளித்தது. அவளின் வேதனையை இந்த நிமிடமே களைய வேண்டும் என்ற எண்ணம் அவனை ஆட்டுவிக்க, முதன் முறையாக அவளை உற்றுக் கவனித்தான்.

பால்வடியும் முகம் என்று சொல்வார்களே அதுபோல் எந்தக் கள்ளமும் கபடமும் இல்லாத முகம், அந்தக் கயவர்கள் உண்டு பண்ணிய காயங்கள் ஆறிப் போயிருந்தாலும் அதன் தழும்பு ஆங்காங்கே இருக்கத் தான் செய்தது. முடியிழந்த அந்த நிலையிலும் கம்பீரத்துடன் அழகாக இருந்தவள் முகம் அந்த நொடி அவன் மனதில் பளிச்செனப் பதிந்தது. அந்தக் கணம் அவளைத் தான் நேசிப்பதை உணர்ந்தான்.

‘இத்தனை நாளாய் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் இன்று மட்டும் ஏன் இவ்வாறு தோன்றுகிறது? இல்லை முதலில் இருந்தே இந்த எண்ணம் இருந்திருக்க வேண்டும்... நான் தான் உணராமல் போனேனோ? எப்பொழுது அவள் மேல் எனக்குக் காதல் வந்தது... ஆங்... அவளைச் சந்தித்த முதல் நாளே அவளின் வேதனைக் குரல் என்னை வாட்டியதே அப்பொழுதா? அவளுக்காக எல்லா இடங்களுக்கும் அவள் கூடவே அலைந்தேனே அப்பொழுதா? அன்று அவள் உயிரை

விட்டுவிடலாம் போலுள்ளது என்று கூறிய போது நானும் வேதனையில் அழுதேனே அப்பொழுதோ? கோவிலில் என் கையைப் பிடித்துக் கொண்டு மயங்கி விழுந்தாளே அப்பொழுதா? அவளை அடித்த அவள் தந்தையின் மீது ஆத்திரம் வந்ததே அப்பொழுதா? எப்பொழுது...???' அவனாலும் எப்பொழுது என்று உறுதியாய்க் கூற முடியவில்லை.

அவன் மனதில் அவள் இருக்கிறாள் அதை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். அவளுக்காக அவன் பாடுப்பட்டதன் பின்னணியில் அவளின் மீதான நேசம் மட்டுமே காரணமாக இருந்தது என்பது இப்பொழுது அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்கியது. அவளின் மனவேதனைகளை எல்லாம் களைந்து தன் தோளில் சாய்த்து 'உனக்கு நான் இருக்கிறேன்...' என்று சொல்ல வேண்டும் போல் மனம் விரும்பியதை அவன் உணர்ந்தான்.

விஷ்ணு இன்னமும் போகாமல் அங்கேயே நின்றுக் கொண்டிருப்பதைக் கண்ட மதி, 'என்ன...?' என்பது போல் ஒற்றைப் புருவத்தைத் தூக்கி விழியால் வினவ, அந்த விழி வீச்சில் அப்படியே சுருண்டான் விஷ்ணு. காதல் வந்தால் இப்படித் தான் இருக்குமோ என்று எண்ணியவன் அவள் தன் பதிலை எதிர்ப்பார்த்துக் காத்திருப்பதைக் கண்டு, 'ஒன்றுமில்லை...' என்பது போல் தலையசைத்தவன், அதற்கு மேல் அங்கேயே நின்று அவளிடம் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் வெளியில் வந்து, அங்கிருந்த மரத்தடியில் கண்மூடி அமர்ந்தான். முகமெல்லாம் புன்னகையில் விகசிக்க, மதியின் முகத்தை மனக்கண்ணில் கொண்டு வந்து அதை ரசித்துக் கொண்டு இருந்தான்.

"என்னடா...தலைக்குப் பின்னே பெரிய ஒளிவட்டம் தெரியுது?" யுவனின் கிண்டல் குரலில் கண் திறந்த விஷ்ணு, அவனுக்குப் புன்னகையையே பதிலாகத் தந்தான்.

“கண்டுபிடிச்சேன்...கண்டுபிடிச்சேன் காதல் நோயைக் கண்டு பிடிச்சேன்” லீலா வேறு பாட்டு பாடி அவன் மானத்தை வாங்க, விஷ்ணுவின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

“டேய்...இங்கே பாருடா அதிசயத்தை...முதன்முறையாக ஆண்மகன் ஒருவன் வெட்கப்பட்டு முகம் சிவக்கிறான்...!” யுவன் விளம்பரபாணியில் கிண்டலடிக்க,

“டேய்...சும்மா இருடா...” விஷ்ணு அவனை அடக்க,

“அவனை ஏன் அடக்கற விஷ்ணு? நாங்க கேட்டக் கேள்விக்கு முதல்ல நீ உண்மையைச் சொல்லு?” லீலா அதிலேயே நிற்க,

“மதி மேடம் ஓகே சொல்லிட்டாங்களா?” யுவன் கண்சிமிட்டி கேட்கவும் தான் விஷ்ணுவுக்கு உறைத்தது.

“உங்க ரெண்டு பேருக்கும்...?” குழப்பமாய் இருவரையும் அவன் பார்க்க,

“நீ அவள் அழுத போது அழுதாயே அப்பவே எனக்குத் தெரியும் இப்படித்தான் வந்து நிற்கப் போறன்னு” லீலா சொல்ல...

யுவனும் அதையே ஆமோதித்தான், “எந்தப் பெண்ணிடமும் நீ பேசிப் பார்த்தது இல்லை. ஆனால் மதிக்காக நீ பார்த்துப் பார்த்துச் செய்றது, கவனிக்கிறது எல்லாம் பார்க்கும் போதே நினைச்சேன், நீ அவளைக் காதலிப்பேன்னு. நீயே அதை உணரல அப்படியிருக்கும் போது நான் எதுக்குத் தேவையில்லாமல் உன்னைக் குழப்பணும்ன்னு தான் கேட்கல”

“அந்த அளவுக்கா வெளிப்படையா என் மனதைக் காட்டியிருக்கேன்” என்ற விஷ்ணு தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தான்.

“இதில் தப்பென்ன இருக்கு. எல்லாம் நல்ல விசயம் தானே?” யுவன் லீலா இருவரும் ஒரே குரலில் கேட்க,

“நான் உணர்ந்த மாதிரி மதியும் உணரனும் இல்லையா? அவள் இருக்கும் மனநிலையில் அது இப்போதைக்குச்

சாத்தியமில்லை. இந்த மாதிரி நேரத்தில் நான் இப்படி நடந்து அவள் என்னை வெறுத்தால்... . அதைத் தாங்கும் சக்தி எனக்குக் கிடையாது. அதனால் அவளை நான் எந்தவிதத்திலும் தொந்திரவு செய்யப் போறதில்லை. அதே போல் நீங்களும் இந்த விசயம் தெரிந்தது போல் காட்டிக் கொள்ள வேண்டாம்”

“விஷ்ணு மதியை நினைத்து நான் வருந்தாத நாளில்லை. ஆனால் நீ சொல்வதைக் கேட்கும் போது எனக்குச் சந்தோசமாக இருக்கு. என் சின்னத் தங்கைக்கு என் நண்பனே வாழ்க்கைக் கொடுக்கப் போகிறான் என்பது சந்தோசம் தான் என்றாலும்... உன் அன்பை அவளிடம் சொல்லாமல் உன்னால் எப்படி...?” லீலா தன் சந்தேகத்தைக் கேட்க,

யுவனும், “காதலை சொல்லாமல் பூட்டி வைக்கக் கூடாது விஷ்ணு. அதிலும் மதி... கடைசி வரை அவள் உன்னைப் புரிந்து கொள்ளவில்லை என்றால்... ம்ப்ச்... உன் நிலையை நினைத்துப் பார்”

“நீங்கள் சொல்வது ஓரளவு உண்மை தான் என்றாலும்... உங்கள் கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. ஒருவர் நம்மைப் பார்க்கும் பொழுது நம்மையும் அறியாமல் நம் உள்ளுணர்வு உந்த அவரைத் திரும்பி பார்ப்போமே... அது போல் ஒருநாள் இல்லை ஒருநாள் என் அன்பு அவள் மனக்கதவைத் தட்டி என்னைத் திரும்பிப் பார்க்க வைக்கும்... காதலிக்க வைக்கும். அதுவரை நான் காத்திருப்பேன்” உறுதியான குரலில் கூறிய விஷ்ணுவை பிரமிப்புடன் யுவனும் லீலாவும் பார்த்தனர்.

அத்தியாயம் : 7

“என்னப்பு நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீ கண்ணைத் தொறந்துட்டுக் கனாக் காணுற” யோகேந்திரன் குரல் சற்று அழுத்தி ஒலிக்க, கயிற்றுக் கட்டிலில் மல்லாக்கப் படுத்துக் கொண்டிருந்த விஷ்ணு, ஒருக்களித்துப் படுத்தவாறு தந்தையைப் பார்த்து, “என்னப்பா...கேட்டிங்க?” என்றவன் சுற்றும் முற்றும் பார்வையை ஓட்டினான்.

அடர்ந்து படர்ந்திருந்த அந்தத் திராட்சைத் தோட்டத்தின் கீழே போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் விஷ்ணு படுத்திருக்க, யோகேந்திரன் அவன் அருகில் அமர்ந்திருந்தார். மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதி என்பதால் குளுமையான காற்று மேனியைத் தழுவ, அந்த ஏகாந்த சூழ்நிலையை அனுபவித்தவன் மனதில் ஷன்மதியே நிறைந்திருந்தாள். அவனையுமறியாமல் அவன் முகம் மலர்ந்தது.

“ராசு...என்னவே...முகம் பளிச்சுன்னு மின்னுது. நீயா சிரிக்கிற என்ன விசயம்?”

“அதெல்லாம் ஒண்ணுமிலைப்பா...”

“அப்ப ஏதோ விசயம் இருக்கு... என்னடா...போன வாரம் போன பய...சுருக்கா திரும்பி வரவும் எதோ இருக்குன்னு அப்பவே நினைச்சேன். என்னவே விசயம் சொல்லுவே?”

“அப்பா...நான் ஒரு பொண்ணை...”

“விரும்புகிறிகளோ...?”

“அப்பா...” அதிர்ந்து தந்தையை நோக்கியவனை,

“அப்பு நானும் உன் வயசைத் தாண்டித் தான் வந்திருக்கேன். எனக்குத் தெரியாதா எம் மவனப் பத்தி...” என்றவர், “உன் மனசுக்கு பிடிச்ச பொண்ணு யாருன்னு நான் சொல்லவா?” அவன் அதிர்ச்சி மாறாமல் தலையசைக்க, “நீ அன்னைக்குச் சொன்னியே அந்த மதிப் பொண்ணு தானே...!”

“அப்பா...” கூவியவன் அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். “எப்படிப்பா...இப்படி... செமையாப் போட்டுத்

தாக்குறிங்க”

“ம்க்கும்...மொசப் புடிக்கிற மூஞ்சை பார்த்தா தெரியாதாக்கும்...”

“ம்...கலக்கிறிங்க...மிஸ்டர்.யோகேந்திரன்...” தன் மனதைக் கண்டு கொண்டாரே என்ற மகிழ்ச்சியில் அவரின் நரைத்த மீசையைப் பிடித்து ஆட்டினான்.

பிறகு தந்தையிடம் ஷன்மதியைப் பற்றி எல்லா விவரங்களையும் சொன்னான். அவள் குழந்தை உண்டாகி இருப்பது உட்பட. அதைக் கேட்டதும் யோகேந்திரன் திகைத்துப் போய் அதிர்ச்சியுடன் மகனைப் பார்த்தார். ஆனால் அதற்கு நேர்மாறாக அவனோ இயல்பாகத் தான் இருந்தான். அவனின் இயல்பான நிலையே அவனின் மனதை எடுத்துரைக்க... இருந்தாலும் அவர் மனதில் சிறு சஞ்சலம் வரத் தான் செய்தது. அது அவர் மகனின் வாழ்க்கைக் குறித்த பயம் மட்டுமல்ல, அந்த அப்பாவிப் பெண்ணின் வாழ்க்கைப் பற்றிய பயமும் கூட.

“எல்லாம் சரி தானப்பு... அந்தப் பொண்ணு இப்ப புள்ளத்தாச்சியா வேற இருக்கா. இதெல்லாம் சரி வருமா? அந்தக் குழந்தையை உன் குழந்தையா ஏத்துக்கிற மனப்பக்குவம் உனக்கு இருக்கா? இன்னைக்கு இளமை வேகத்துல அவசரமா முடிவெடுத்துட்டு பின்னே சாவகசமா உட்கார்ந்து அழக் கூடாது. இதுக்கு எல்லாம் மேலே அந்தப் பொண்ணு மனசு மாறி உன்னை ஏத்துக்கணும். இந்த மாதிரி ஒரு சூழலிலிருந்து வெளியில வாரவே ரொம்ப நாளாகுமேப்பா. அவ்வளவு நாள் காத்துகிட்டிருக்கிற பொறுமை உனக்கு இருக்கா? நல்லா யோசிச்சுச் சொல்லப்பு”

“அப்பா...நான் உங்க புள்ளைப்பா. அப்படியெல்லாம் தவறா முடிவு எடுப்பேனா? நல்லா யோசித்துத் தான் முடிவெடுத்தேன்”

“அப்பு...இது பரிதாபத்துல வந்த காதல் இல்லியே?”

“அப்படிப் பார்த்தா அவளைப் பார்த்த முதல் நாளே வந்திருக்கணுமே. அப்போ பாவமாத் தான் இருந்தது...

இல்லைன்னு சொல்லல. அவளுக்காக ஏதாவது செய்யணும்ன்னு நினைப்பேன். ஆனால் என்னன்னு தான் தெரியாது? அதனாலேயே அவள் எங்கே போனாலும் கூடவே போவேன். ஏன் போறேன்? எதுக்குப் போறேன்னு எனக்கே தெரியாது. அன்னைக்கு அவள் முடியை இழந்து மொட்டைப் போட்டு வந்திருந்தா...”

“என்னது மொட்டையா?” அதிர்ந்து போயிருந்தது யோகேந்திரன் குரல்.

“ஆமாம்ப்பா...ஏதோ வேண்டுதல் அப்படின்னு சொன்னாள். ஆனால் அதுக்கு அப்புறம் அவள் சொன்னக் காரணம்... அவள் அழகே அவளுக்கு எதிரியாய் மாறிப் போனதாம். பாவம்ப்பா இந்தச் சின்ன வயதில் இவ்வளவு பெரிய கொடுமை அவளுக்கு வேண்டாம். அந்த நொடி அவளைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதி எடுத்தேன். அந்த உறுதிக்கு, உணர்வுக்குப் பெயர் காதல் இல்லாமல் வேறு என்னப்பா? எனக்கு என் காதல் மேல் நம்பிக்கை இருக்கு. நிச்சயம் என்னைப் புரிந்து கொண்டு என்னிடம் வருவாள்”

“அதுக்காக ரொம்ப நாள் காத்துக்கிட்டு உன் இளமையை இழந்திராதே. அப்புறம் என்னைய மாதிரி கிழவனானதுக்கு அப்புறம் தான் பிள்ளையைப் பெத்துக்க முடியும்” தன் தாயின் சம்மதத்திற்காக அவர் காத்துக் கொண்டிருந்ததைத் தான் அவ்வாறு கூறுகிறார் என்பதை அவனும் உணர்ந்து கொண்டான்.

“யூ ஆர் ரியலி கிரேட்ப்பா. சோ ஸ்வீட்...” அவரைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டவன், “உங்களை மாதிரியெல்லாம் நான் கிடையாதாக்கும். எனக்குத் தான் இன்னும் ஐந்து மாசத்தில் பையனோ இல்லை பொண்ணோ பிறக்கப் போகுதே” முகமெல்லாம் சிரிப்பாகக் கூறியவனின் இந்தப் பக்குவப் பேச்சே அவனின் மனதைத் தெளிவாக எடுத்துரைக்க அவருக்கு அப்பொழுது தான் நிம்மதியாயிருந்தது.

“ஆனாலும் ராசு நீ ரொம்ப நாள் இல்லை இல்லை ரொம்ப வருடம் காத்திருக்கணும். எந்த நேரத்திலும் உன்

பொறுமையை மட்டும் கை விட்டுடாதே...என்ன நான் சொல்றது புரியுதா?”

“ம்...நல்லாப் புரியுதுப்பா. அவளுக்கு இப்பொழுது பதினேழு வயது. எனக்கும் இருபத்திநான்கு தானாகிறது. இன்னமும் வயசு இருக்குப்பா. அந்தக் குழந்தைக்கு விவரம் புரிவதற்குள் ஒரு நல்ல முடிவெடுப்பேன். ஆனால் எனக்கும் அவளுக்கும் இடையில் ஏழு வருட வித்தியாசம். அது தான் கொஞ்சம் நெருடலா இருக்கு”

“அடக் கிறுக்குப் பய மவனே...”

“அப்பா...அது நீங்க தான்ப்பா...” மகனின் கிண்டலைப் பொருட்படுத்தாமல், “உன் அம்மாவுக்கும் எனக்கும் பன்னிரண்டு வயசு வித்தியாசம். பார்த்தா அப்படியாத் தெரியுது?” ‘ம்ஹூம்...’ தலையையாட்டி மறுத்த மகனிடம்,

“ஏழு வருஷ வித்தியாசம் எல்லாம் பெரிய விசயமே இல்லை. அவள் மனசுல நீ வந்துட்டாப் போதும் இந்த வயசு, கருப்பு, குட்டை, அழகு எல்லாம் காணாமல் போயிரும். சரி மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. உன் அம்மா கிட்ட விசயத்தைச் சொல்வோம். திடீர்ன்னு சொன்னா புலம்பித் தள்ளிடுவா” இருவரும் அன்னையை நாடிச் செல்ல, சம்மதம் சொல்வார் என்று நம்பிக்கையுடன் அவரிடம் லேசாக மதியைப் பத்தி சொல்ல ஆரம்பிக்க, அதற்குள் அவரோ பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தார்.

“உம்மப் பரம்பரைக்கே எச்சிலை மருமகள் தான் வரணும்ன்னு தலையில் எழுதியிருக்கா என்ன? போன தலைமுறைக்கு நான்...இந்த தலைமுறைக்கு அவளா? அதுலயும் இனாமா வவுத்துப் புள்ளையோட. நல்லாயிருக்கு அப்பனும் மகனும் பேசறது...” கணவரிடம் ஒப்பாரி வைத்த யசோதா, மகனிடம், “இந்தக் காதலும் வேண்டாம் கருமாதியும் வேண்டாம். பேசாம நான் பார்க்குற பொண்ணைக் கட்டு. இல்லை நடக்குறதே வேற”

“ஏண்டி இவளே...இப்படி ஒப்பாரி வைக்கிற... அவன் மனசுக்கு பிடிச்சவளை அவனுக்குக் கட்டி வைக்காம வேற என்ன பண்ணப் போற? சும்மா சீரியல் வில்லி மாதிரி பேசாதே”

“உங்க தலையெழுத்து தான் இப்படி ஆகிப் போச்சு...உங்க மகன் தலையெழுத்தும் இப்படியாகணுமா?”

“என் தலையெழுத்துக்கு என்னடிக் குறைஞ்சுப் போச்சு. கிளி மாதிரிப் பொண்டாட்டி, முத்து மாதிரி இரண்டு புள்ளைங்க...”

“கிளி மாதிரிப் பொண்டாட்டியாம்...ஆமாம் நொண்டிக் கிளி” என்றவரின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“ஏய் இன்னொரு வாட்டி இப்படிப் பேசினே நான் பொல்லாதவனாயிடுவேன். யாருடி நொண்டிக் கிளி நீ என் பச்சைக் கிளி... ஆசைக் கிளி...” மனைவியின் நாடிப் பிடித்துக் கொஞ்சியவரை, “அப்பா...நான் இங்கே தான் இருக்கேன்” விஷ்ணுவின் குரல் தடுத்தது.

“அடப் போடா மவனே அவளே என்னைக்கோ ஒரு நாள் தான் கொஞ்ச விடுறா. இதில் நீ வேற...”

“அப்பாவும் மகனும் என்ன சொன்னாலும் சரி என்னால் இதுக்கு ஒத்துக்க முடியாது” யசோதா தன் நிலையில் பிடிவாதமாக நிற்க,

“ஏன் யாசோ... நீ பேசுறது உனக்கே நல்லாயிருக்கா...? பாவம்டி அவன்...” யோகேந்திரன் மகனுக்காக மனைவியிடம் கெஞ்ச,

“உங்களையே நான் வேறக் கல்யாணம் பண்ணச் சொல்லிக்கிட்டு இருக்கேன். இதில் இவன் வேற...”

“யாருடி இவளே... நல்லா வந்திரும் வாயில...பேரன், பேத்தி எடுக்கிற வயசுல கல்யாணமாம்...”

“ஏன் உங்களுக்கென்ன? ராசாவாட்டம் இருக்கீங்க...”

“இந்த ராசாவுக்கேத்த ராணி நீதான்டி...” அவரின் வார்த்தையில் யசோதா அந்த வயதிலும் அழகாக வெட்கப்பட்டார். அவரின் மனம் காதல் கணவனின் அன்பில் நெகிழ்ந்திருந்தது. அதையே நல்ல அறிகுறியாக எண்ணி யோகேந்திரன் மேலே பேசத் தொடங்கினார். ஷன்மதியைப் பற்றிச் சொல்ல சொல்ல யசோதாவின் முகம் தெளிந்தது.

“அய்யோ பாவமே இம்புட்டுக் கஷ்டம் பட்டு இருக்கா அந்தப் புள்ள. ராசா... பாவம்ய்யா அந்தப் புள்ள இனி நீயாவது அதைக் கண் கலங்காம பார்த்துக்கோ” என்று அவரின் சம்மதத்தை மறைமுகமாகச் சொல்ல விஷ்ணுவின் முகம் மலர்ந்தது.

“சரி போய்ச் சாப்பாட்டை எடுத்து வை. புள்ள பசியோட இருக்குல”

“அடடா... வா ராசா... சாப்பாடு எடுத்து வைக்கிறேன்” யசோதா உள்ளே செல்ல, யோகேந்திரன் மகனிடம், “பார்த்தியா இத்தனை வருசம் வாழ்ந்தும்...பேரப்பிள்ளைகள் எடுக்கிற வயசாகியும் உன் அம்மாவுக்கு அந்தக் குற்ற உணர்ச்சி தாழ்வு மனப்பான்மை இன்னமும் அவளை விட்டுப் போகல. அவளைச் சொல்லியும் குத்தமில்லை. அவள் நிலைமை அப்படி. எந்த நிலையிலும் நாம அதை மறக்கக் கூடாது. நான் சமாளிக்கிற மாதிரி உனக்குப் பொறுமை இருக்கா. இல்லைன்னா... இப்பவும் கெட்டுப் போகல...அவளை மறந்துட்டு உன் வாழ்க்கையை நீ பாரு. ஒருவேளை அந்தப் பொண்ணு சம்மதிச்சு உங்க கல்யாணம் நடந்து பின்னாடி இந்த மாதிரி பிரச்சினை வந்தா கஷ்டம். அதுக்கு அந்தப் பொண்ணு அப்படியே இருக்கிறது நல்லது ராசு” யோகேந்திரன் அவன் கண்களுக்குக் கடவுளாகத் தெரிந்தார்.

“அப்பா...” அவர் கைகளைப் பிடித்துக் கண்ணீர் சிந்தியவன், “உங்களை நினைச்சாப் பெருமையா இருக்கு. நீங்க சொன்ன மாதிரி பொறுமையா இருப்பேன்ப்பா. ஏன்னா உங்க ரத்தம் தானே என் உடம்பில் ஓடுது” மகனைப் பெருமையுடன் பார்த்தவர், மனைவி கூப்பிட்டதும் உள்ளே செல்ல விஷ்ணு வானத்தை நிமிர்ந்து பார்த்தான். அதில் ஷன்மதியின் முகம் தெரிய, எப்படியும் அவளைக் கைப்பிடிப்பேன் என்ற நம்பிக்கை அவன் மனதில் அந்த வானளவு உயர்ந்து நின்றது.

****

“என்ன சார்...இது?” மதி கண்களை அகல விரித்து விஷ்ணு கொண்டு வந்த பொருட்களை ஆச்சிரியமாகப் பார்க்க, அவனோ என்ன சொல்லி சமாளிப்பது என்று தெரியாமல் முழித்தான்.

விஷ்ணு சென்னைக்குக் கிளம்பும் முதல் நாள் யசோதா தனக்குத் தெரிந்த பலகாரங்கள், விதவிதமான ஊறுகாய் என்று தன் மருமகளுக்காக ஆசை ஆசையாய்ச் செய்து அடுக்கி விட்டார். அவனுக்கு இது தெரிந்திருந்தால் அவர் செய்யும் முன்பே தடுத்திருப்பான். இவ்வளவு செய்த பின்பு அவரைத் திட்டவும் முடியவில்லை.

“அம்மா என்னமோ எங்களுக்குத் திருமணமாகி உங்க மருமகளுக்குக் கொடுத்தனுப்புவது போல் இப்படி அனுப்புறிங்களே அவள்கிட்ட இதையெல்லாம் என்னன்னு சொல்லி நான் கொடுப்பேன்” தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

“ராசா...இந்த மாதிரி நேரத்தில் விதவிதமா சாப்பிடணும்ன்னு நாக்கு கேட்கும். அதோட ஆத்தா அது கூட இல்லன்னு சொல்ற. உங்க மேடத்துக்குக் கச்சேரிக்கு போய் வாதாடவே நேரம் சரியாயிருக்கும். மருமவ யார்க்கிட்டே போய் இதையெல்லாம் செய்யச் சொல்லிக் கேட்கும். மனசுக்குள்ளேயே தன் ஆசையைப் புதைச்சு வச்சுக்கும். பாவம் ராசா... கர்ப்பிணி பொண்ணு மனசு ஏங்கக் கூடாது”

‘இப்படி வேறு இருக்கிறதா...!’ என்று நினைத்தவன் மதிக்காக எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டான். கொண்டு வந்த பின் அவளின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் முழித்தவன், நல்லவேளை காவ்யபாரதி அங்கே வர நிம்மதி பெருமூச்சு விட்டான்.

“விஷ்ணு என்ன இதெல்லாம்?”

“மேடம்...அம்மா எப்பொழுதும் கொடுத்து விடுவது தானே...!” அவர் புரியாமல் அவனைப் பார்க்க, ‘என்னைக் காப்பாத்துங்களேன்’ என்று விஷ்ணு இறைஞ்சும் பார்வை ஒன்றை அவரை நோக்கி செலுத்தினான். அவனின் பார்வையைப் புரிந்து கொண்டவர், இருவரையும் மாறி

மாறி பார்த்தார். அவருக்கு எதோ புரிவது போலிருக்க அவனோடு ஒத்துப் பேசினார்.

“நீ ஊருக்குப் போனதையே மறந்தே போயிட்டேன் விஷ்ணு. அம்மா, அப்பா நல்லாயிருக்காங்களா?”

“நல்லாயிருக்காங்க மேடம்” அவருக்குப் பதில் சொன்னவன், “மதி உனக்கும் அம்மா கொடுத்து விட்டிருக்காங்க” தனியாகக் கட்டியிருந்த ஊறுகாய் பாட்டில்களை அவளிடம் கொடுத்தான்.

“தேங்க்ஸ் சார்...” அவள் சொன்ன ‘சார்’ வார்த்தையை முதன்முறையாக வெறுத்தான். காதல் கொண்ட மனம் அவள் தன்னைச் செல்லமாக அழைக்க வேண்டும் என்று எண்ணியது. ஆனால் அதற்கான நேரம் இன்னமும் வரவில்லை என்று உணர்ந்தவன் வாய் புன்னகையைச் சிந்த, அவனின் மனமோ தன்னவளை எப்படிச் செல்லமாகக் கூப்பிடுவது என்று வேகமாகச் சிந்தித்தது.

‘மதி எல்லோரும் கூப்பிடுவது...ம்ஹூம்...அது வேண்டாம். வேறு எப்படி ஷன்மு...ம்ஹூம் இது நல்லாயில்லை. ம்...ஷம்மு...எஸ்...இது இதுதான் நல்லாயிருக்கு’ என்று மனதுக்குள் குதுகலித்தவன் ‘ஷம்மு...’ மனதுக்குள் அவளின் பெயரைச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். தேனை உண்ட தித்திப்பு சுவை அவன் நாவில்....அதில் மனம் மயங்கி நின்றான்.

மதி உள்ளே சென்றதும் காவ்யபாரதி, “விஷ்ணு நீ...”, அவரின் குரலில் தன் மயக்கத்திலிருந்து விடுபட்டவன் அவரைப் பார்க்க,

அதற்குள் உள்ளே சென்ற மதி திரும்பி வந்து கையிலிருந்த பாட்டிலைக் காண்பித்து, “சார்...எனக்கு நெல்லிக்காய் ஊறுகாய் பிடிக்கும்ன்னு உங்க அம்மாவுக்கு எப்படித் தெரியும்? உங்க அம்மாவுக்கு என் ஸ்பெசல் தேங்க்ஸை சொல்லிடுங்க” குதூகலத்துடன் சொன்னவள், அதிலிருந்த ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டு, “அப்படியே என் அம்மா செய்தது போலிருக்கு” என்றவளின் கண்கள் அன்னையின் நியாபகத்தில் கண்ணீர் சிந்தியது.

அதைப் பார்த்து அவன் உள்ளம் துடிக்க, அவளின் கண்ணீரை துடைக்கும் வகையறியாமல் தன் கைகளைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டுத் தன்னைக் கட்டுப்படுத்தியவன், இயலாமையுடன் வேதனையுடன் அவள் முகம் பார்த்து நின்றான்.

காவ்யபாரதி அவளைக் கடிந்தவர், “மதி...இந்த மாதிரி நேரத்தில் அழக் கூடாது. கூடிய சீக்கிரம் உங்க வீட்டில் உன்னை ஏத்துக்கத் தான் போறாங்க கவலைப்படாதே” அவரின் சமாதான வார்த்தையில் மனம் தேறியவள் தன்னறைக்குச் சென்றாள்.

“விஷ்ணு...” மதிப் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவன் காவ்யபாரதியின் அழுத்தமான குரலில் அவரைப் பார்த்தான்.

“நீ...மதியை...”

“ஆமாம் மேடம்...நான் மதியைக் காதலிக்கிறேன். என் உயிர் இருக்கும் வரை அவளைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்வேன்” எந்தவித மேல்ப்பூச்சும் இல்லாமல் கூறியவனைக் கண்டு அவர் பெருமிதப்பட்டார்.

அதுவும் அவன் தன் ஜூனியர் என்பதில் இன்னமும் பெருமையாக இருந்தது. மதி மாதிரிப் பெண்களை ஏதோ வியாதி போல் ஒதுக்கும் சமுதாயத்தில் அவன் அவளை விரும்புவதாகச் சொல்லியது அவருக்குச் சந்தோசமாக இருந்தது. அந்தச் சிறு பெண்ணின் வாழ்க்கையைப் பற்றிய கவலை அந்த நிமிடம் அவருக்கு விலகியது.

“விஷ்ணு...உன் விருப்பம் சரி...உன் பெற்றோர்...”

“என் அப்பா அம்மாவுக்கு இது தெரியும் மேடம். என் அம்மா அவங்க மருமகளுக்காகத் தான் இவ்வளவையும் செய்து கொடுத்தனுப்பியிருக்காங்க”

“அதான் ஊரையே பொட்டலம் கட்டிக் கொண்டு வந்திருக்கியா...! ம்... நடத்து... நடத்து...” என்றவர் வாய் விட்டு சிரித்தார்.

“மேடம்...மதிக்கு இன்னமும் விசயம் தெரியாது. அதனால்...நீங்க...”

“நான் சொல்ல மாட்டேன். நீ கவலைப்படாதே. ஆனால் காலம் தாழ்த்தாமல் அவளிடம் உன் மனதைச் சொல்லிவிடு” அவரிடம் சரியென்று சொன்னவன் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்தான்.

அவனின் மனம் முழுவதும் மதியே நிறைந்திருந்தாள். காதலிக்கும் அவளைத் தவிர எல்லோருக்கும் தன் காதல் தெரிந்திருப்பதை எண்ணி மனதுக்குள் சிரித்துக் கொண்டான். ஆனாலும் மனதின் ஓரத்தில் அவள் தன் காதலை ஏற்றுக் கொள்வாளா? என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்தது. .

அத்தியாயம் : 8

“அக்கா...எனக்கு இது புரியவே மாட்டேங்குது? கொஞ்சம் சொல்லித் தர்றிங்களா?” பாடத்தில் தோன்றிய சந்தேகத்தை ஷன்மதி லீலாவிடம் கேட்க, அவளோ, “மதி நான் படிக்கும் போதே ஆவரேஜ் ஸ்டூடண்ட் தான். என் கிட்டப் போய்க் கேட்கிறியே? ம்...” என்று யோசித்தவள், “நம்ம விஷ்ணு தான் நல்லாப் படிக்கிறவன். அவன்கிட்டப் போய்க் கேளேன்”

“அவங்கக்கிட்டேயா...?” மதியின் பார்வை விஷ்ணுவின் மேல் நிலைத்தது. அவனோ தன் கையிலிருந்த ஃபைலில் ஆழ்ந்திருந்தான். “அவங்க வேலையா இருக்காங்க. இப்பப் போய்...”

“நீ போய்க் கேட்டுப் பாரு. உனக்குன்னா ஒண்ணும் சொல்ல மாட்டான்” ‘ஏன்’ என்பது போல் பார்த்த மதியைக் கண்டு தன் தவறு உணர்ந்து நாக்கைக் கடித்த லீலா, “நான் தான் உன்னிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கேனே...எந்த ஒரு ஹெல்ப்ன்னாலும் விஷ்ணு செய்வான் என்று. உனக்குத் தேவைன்னா நீதான் கேட்கணும்” சரி என்பது போல் தலையசைத்தவள், நேரே விஷ்ணுவிடம் சென்றாள்.

தன் முன் நிழலாடுவது கண்டு விழியுயர்த்தியவன் அங்கு மதி நிற்பதைக் கண்டு ஆச்சரியத்தில் விழி விரித்தவன், “என்ன மதி? என்ன வேணும்?”

“எனக்கு இந்தப் பாடத்தில் ஒரு சந்தேகம் லீலாக்கா உங்க கிட்ட கேட்கச் சொன்னாங்க” மதி சொல்லவும் தலையைச் சாய்த்து அவன் லீலாவைப் பார்த்தான். அவளோ அவனைப் பார்த்து கட்டைவிரலை உயர்த்திக் காண்பித்து நமட்டுச் சிரிப்பு சிரிக்க, அவளின் நோக்கம் புரிந்து அவனும் அவளைப் பார்த்து சிரித்தவன் மதியின் புறம் திரும்பினான்.

“எதில் சந்தேகம் மதி...?” அவன் கேட்க அவள் அருகிலுள்ள நாற்காலியில் இயல்பாக அமர்ந்தவள், புத்தகத்தின் பக்கத்தைத் திருப்ப, விஷ்ணுவிற்கோ அவளின் அருகாமை, அவளிடத்திலிருந்து வந்த பிரத்யேக நறுமணம் எல்லாம்

சேர்த்து அவன் மனதை மயக்க, அவளின் முகத்தையே பருகி விடுவது போல் பார்த்துக் கொண்டிருக்க,

“சார்...இது தான் புரியவே மாட்டேங்குது” மதியின் அழைப்பில் தன்னை உணர்ந்தவன், கொஞ்ச நேரத்தில் மதி மயங்கிய தன்னைத் தானே மனதுக்குள் கடிந்து கொண்டு, தறிக் கெட்டு ஓடிய மனக் குதிரையைக் கடிவாளம் போட்டு அடக்கி, அவளுக்கு நல்ல ஆசானாய் மாறி பாடத்தின் சந்தேகத்தை நிவர்த்திச் செய்தான்.

****

“மதி இந்தா உனக்கும் சேர்த்து தான் அழைப்பிதழ்...ஏதாவது சாக்குப் போக்கு சொல்லி வராமல் இருக்கக் கூடாது என்ன...!” லீலா இப்படித் திடீரென்று திருமணப் பத்திரிக்கையை நீட்டுவாள் என்று மதிக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு இருந்த ஒரே தோழி...ஒரே உறவு...அவள் மட்டும் தான். தன் மனதில் இருக்கும் எண்ணங்களை அவளிடம் மட்டுமே இவள் மனம் திறந்து கூறுவாள். காவ்யபாரதியிடம் எப்பொழுது பயம் கலந்த மரியாதையே இருக்கும். அவரிடம் மனம் விட்டுப் பேச தயங்குவாள்.

“அக்கா...நீங்களும் இல்லைன்னா நான் எப்படி...?” தன்னை அணைத்துக் கொண்டு அழுத மதியை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்த லீலா, “ரொம்ப நாளா திருமணம் பேசிட்டு இருந்தாங்க. அதான் திடீர்ன்னு முடிவாகிருச்சு. நீ எப்ப வேணும்ன்னாலும் எனக்கு ஃபோன் பண்ணு. நான் உனக்கு வேண்டிய ஹெல்ப்பை செய்றேன். அதுக்காக இப்படி அழக் கூடாது என்ன?” மதியை ஓரளவு சமாதானம் செய்த லீலா, விஷ்ணுவை தனியே அழைத்து, “விஷ்ணு...இது தான் உனக்கு நல்ல சந்தர்ப்பம். அவளுக்கு உதவும் சாக்கிட்டு உன் நேசத்தை அவளுக்கு உணர்த்தி, அவள் மனதில் எப்படியாவது நுழைந்து விடு”

“லீலா...எந்த நேரத்திலும் அவளுக்கு உதவ நான் தயார் தான். ஆனால் உதவி வேறு... நேசம் வேறு...இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. இன்று இல்லா விட்டாலும் என்றாவது ஒருநாள் அவள் நிச்சயம் என் மனதைப் புரிந்து

கொள்ளத் தான் போகிறாள். அப்பொழுது நீயும் எங்கள் திருமணத்திற்கு வந்து வாழ்த்தி விட்டுத்தான் போகப் போகிறாய்”

“கட்டாயம் நான் இல்லாமலா? நீ சொன்னவுடன் ஒரு மாதத்திற்கு முன்னரே நான் வந்துவிடுவேன். நீ என்னை அடித்து விரட்டாமல் இருந்தால் சரி”

“உன்னை நான் அடித்தால்...ஷம்மு என்னை வீட்டை விட்டு விரட்டிடுவாள். எனக்கு எதற்கு வீண் வம்பு”

“ஷம்மு...” புருவம் சுருக்கி யோசித்தவள், “ஓஹ்...மதியை சொல்கிறாயா?” என்று கலகலத்து சிரிக்க அவளின் சிரிப்பு அவனையும் தொற்றிக் கொண்டது.

லீலா இல்லாதது மதிக்கு ஒருவித சோர்வைத் தர தனக்குள் அவள் சுருங்கிக் கொண்டாள். விஷ்ணுவும் தன்னால் முடிந்தளவு அவளின் தனிமையைப் போக்க முயன்றான். ஆனால் அவள் அவனிடம் ஒருவிதக் கட்டுப்பாடுடன் எல்லையை வகுத்து பழகவே அவனாலும் அவளை நெருங்க முடியவில்லை. அவளின் வேதனையைத் துடைக்கும் வகையறியாமல் வெறுமனே பார்வையாளனாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“விஷ்ணு...கொஞ்சம் பொறுமையா இரு. அவளின் நிலை தான் உனக்குத் தெரியுமே” யுவன் தான் அவனைச் சமாதானப்படுத்தினான். இந்நிலையில் லீலாவின் திருமணம் நாளும் வர ஷன்மதி அங்கு வருவதற்கு மறுத்து விட்டாள்.

“அக்கா...உங்க வீட்டில் எல்லோரும் முற்போக்குச் சிந்தனை உள்ளவங்களா இருக்கலாம். ஆனால் மாப்பிள்ளை வீட்டில் என்னைப் பற்றித் தவறாக எண்ணி, அது உங்கள் வாழ்க்கையைப் பாதித்தால்...தயவுசெய்து நான் சொல்வதைப் புரிந்து கொள்ளுங்கள்” மதி தன்னிலையை லீலாவிடம் எடுத்துரைக்க, லீலாவிற்குச் சற்றுக் கோபம் வந்தது உண்மை தான். ஆனாலும் மதி சொன்னக் காரணம் ஏற்றுக் கொள்வதாக இருந்ததால் ஒன்றும் பேசவில்லை.

****

“மேடம்...ஷம்மு எப்படி இருக்கிறாள்?”

“என்ன சொல்ல விஷ்ணு...காலையில் பேப்பரைப் பார்த்து விசயம் தெரிந்து கொண்டவள் ஒரே அழுகை... அதன் பின் அவள் அறையிலிருந்து வெளியில் வரவே இல்லை” காவ்யபாரதி மிகுந்த வருத்தத்துடன் சொல்ல, விஷ்ணு, “நான் அவளைச் சென்று பார்க்கவா?”

“இதற்கு ஏன் இவ்வளவு தயக்கம் விஷ்ணு? போ...போய்ப் பாரு” அவர் அனுமதிக் கொடுத்ததும் வேகமாக அவளின் அறைக்குச் சென்றான். அவனுடன் வந்த யுவன் அவரிடம் வழக்குச் சம்பந்தமாகப் பேசிக் கொண்டு அங்கே அமர்ந்துவிட்டான்.

ஷன்மதியின் வழக்கில் குற்றவாளிகளாகக் கருதப்பட்ட மூன்று பேரும் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தனர். விஷ்ணுவுக்கு இந்தச் செய்தி நேற்றே தெரியும். யாரும் மதியிடம் இதைப் பற்றி மூச்சு விடவில்லை. ஏனெனில் இந்த மாதிரி நேரத்தில் வீணாக அவளின் மனதை ஏன் கலங்கச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணம் தான். ஆனால் பத்திரிகை வாயிலாக அவளுக்கு விசயம் தெரிந்து விடும் என்பதை ஏனோ அந்தச் சமயம் மறந்து தான் போயிற்று.

கட்டிலின் மேல் முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அமர்ந்திருந்தவளின் தோள்கள் குலுங்குவதில் இருந்து அவள் இன்னமும் அழுது கொண்டிருப்பது புரிய, “மதி...” அவன் கூப்பிட்டும் அவள் நிமிராததால், “மதி இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படி அழற. மேல்முறையீடு பண்ணினா என்ன...அங்கேயும் அவங்க தப்பு செய்தது நிரூபிக்கப்பட்டால் தண்டனை நிச்சயம் உண்டு. ஹைகோர்ட் என்ன சுப்ரீம் கோர்ட் போனாலும் அவங்க தவறு செய்தவர்கள் என்பதற்கான ஆதாரம் இருந்தால் இதே மரணத்தண்டனை அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். என்ன ஒண்ணு அதை நிறைவேற்ற தான் ஆண்டுக் கணக்கில் ஆகும்”

அவன் சொன்னதும் தான் தாமதம் விலுக்கென்று அவனை நிமிர்ந்து பார்த்தவள், “அப்போ அவங்க

தண்டனையிலிருந்து தப்ப முடியாதே. தண்டனை நிச்சயம் தானே" கண்களில் நம்பிக்கையைத் தேக்கி வைத்து ஒருவித எதிர்ப்பார்ப்புடன் கேட்டவளை அப்படியே அள்ளி அணைத்து ஆறுதல் அளிக்க வேண்டுமென்று அவன் கைகள் பரபரத்தது. அதற்கான நேரம் வரவில்லை என்ற எண்ணமே அவனைக் கட்டுப்படுத்த,

"தண்டனை நிச்சயம் உண்டு. அதேசமயம் நீ நினைத்தது போல் அவர்களுக்கு ஜெயில் வாழ்கையும் ஆண்டுக் கணக்கில் அனுபவிக்க நேரிடும். மொத்தத்தில் இது அவர்களுக்கு இரட்டைத் தண்டனை" அவன் சொல்லில் நம்பிக்கையுற்று தன் அழுத விழிகளை அழுந்த துடைத்தவள், அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"போகலாமா...மேடம் உன்னை நினைத்து ரொம்பக் கவலையா இருக்காங்க!" விஷ்ணு சொன்னதும் தான் தாமதம் உடனே கட்டிலிலிருந்து இறங்கியவள், "வாங்க சார்..." என்றபடி முன்னே நடக்க, அவன் புன்னகையுடன் அவளைப் பின் தொடர்ந்தான். காவ்யபாரதியிடம் மதி சிறிதுநேரம் பேசிக் கொண்டிருக்க... விஷ்ணு, "மேடம் மதியின் மனமாற்றத்திற்காக வெளியில் அழைத்துக் கொண்டு போகவா?"

"தாராளமா அழைத்துக் கொண்டு போ விஷ்ணு" அவர் அனுமதி வழங்க...மதி யோசனையுடன் அவனைப் பார்த்தாள். "நா...நான் எங்கேயும் வரல"

"மதி நான் சொல்றேன்ல இன்னமும் என்ன தயக்கம். வீட்டிலேயே இருந்தால் மனதுக்கு ஒரு மாதிரியாகத் தான் இருக்கும்" காவ்யபாரதி சொல்ல, விஷ்ணு, "மதி...நாம் போகுமிடம் உனக்கு நிச்சயம் பிடிக்கும். வந்து தான் பாரேன்", யுவனும் வற்புறுத்த வேறுவழியில்லாமல் அவர்களுடன் கிளம்பியவள் அந்த இடத்தைப் பார்த்ததும் மனதில் இருந்த கலக்கம் நீங்கி நன்றியுடன் விஷ்ணுவைப் பார்த்தாள்.

அது ஒரு ஆதரவற்றவர்களுக்கான இல்லம். அங்கிருந்த சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏதோ ஒருவிதத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள். அந்த

நிலையிலும் அவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்த மதி தன் மனவேதனைகளைத் தள்ளி வைத்து விட்டு அவர்களுடன் ஐக்கியமானாள். சிறுவர்களுடன் சிறுவராக விளையாடியவள் தன் வயிற்றுச் சுமையைக் கூட மறந்தாள்.

அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணுவை பார்த்த யுவன், "பாவம்டா மதி...இத்தனை நாள் இந்தச் சிரிப்பை மகிழ்ச்சியை எங்கே வைத்திருந்தாள்? இப்படி அவளைப் பார்க்கும் பொழுது மிகவும் சந்தோசமா இருக்கு. இப்படியே அவளைச் சந்தோசமா வச்சுக்கோ விஷ்ணு"

"நிச்சயமா...யுவன்" நண்பனிடம் கூறுவது போல் தன் மனதுக்கும் கூறிக் கொண்டான்.

அந்தச் சமயம் பார்த்து மதி கால் தடுக்கி கீழே விழப் போக விஷ்ணு சென்று அவளைத் தூக்கும் முன் யுவன் அவள் கைப்பிடித்துத் தூக்கிவிட்டான். முகம் சுருங்கி அவனின் கையைப் பதற்றமாக விடுவித்த மதியைக் கண்டு யுவனுக்குச் சொல்ல முடியாத வேதனை ஏற்பட்டது. "மதி...சாரி...நான்...தப்பாக ஏதும் நினைக்கவில்லை. உன்னை என் தங்கை விலாசினி போல் இன்னொரு தங்கையாகத் தான் நினைக்கிறேன். உனக்கு உதவும் நோக்கில் தான் இப்படி..." அவனின் தங்கை என்ற சொல்லில் மனம் தெளிந்த மதி, "தேங்க்ஸ் அண்ணா..." என்று கூறி கள்ளமின்றிச் சிரிக்க, யுவனும் அவளுடன் சேர்ந்து சிரித்தான்.

அப்பொழுது அங்கே வந்த விஷ்ணுவைப் பார்த்து மதி, "சார்...உங்களையும் நான் 'அண்ணா' என்று அழைக்கவா?" அவள் கூறியது கேட்டு என்ன சொல்வதென்று தெரியாமல் திருதிருவென முழித்தான் விஷ்ணு.

எந்த ஒரு பதிலையும் சொல்லாமல் இருந்தவனைக் குழப்பத்துடன் பார்த்த மதியை அதற்கு மேல் யோசிக்க விடாமல் அங்கே இருந்த வாண்டுகள் இழுத்துக் கொண்டு போக, 'அப்பாடா' என்று பெருமூச்சை இழுத்து விட்டுத் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான் விஷ்ணு.

“விஷ்ணு...கூடிய சீக்கிரம் உன் மனதை அவளிடம் சொல்லிவிடு. இல்லையென்றால் வயிற்றுப்பிள்ளை பிறந்ததும் உன் மடியில் வைத்து மொட்டைப் போட்டு காது குத்தி நீதான் அவள் உடன்பிறப்பு என்று சொல்லாமல் சொல்லிவிடுவாள். பார்த்து ஜாக்கிரதைடா...” என்ற யுவனை முறைத்த விஷ்ணு,

“எல்லாம் உன்னால் தான்டா. உன்னை யாரு அவளைத் தங்கை என்று சொல்லச் சொன்னது. சொல்றது எல்லாம் சொல்லிட்டு அட்வைசைப் பார்...” யுவன் வயிற்றில் பொய்யாகக் குத்தினான்.

“எப்படியோ என்னால் உன் காதலை அவளிடம் சீக்கிரம் சொல்லப் போற...அதுவே பெரிய விசயம் இல்லையா? அதுக்கு அய்யாவுக்கு மாலைப் போட்டு நீ வணங்கணும்”

“டேய்...என்கிட்ட அடிவாங்காம போக மாட்டே” விஷ்ணு அவனை அடிக்கத் துரத்த, யுவன் அவன் கையில் அகப்படாமல் ஓடினான்.

****

“ஹாய் புதுப்பொண்ணு எப்படி இருக்க? என்ன இந்த நேரத்தில் ஃபோன்?”

“விஷ்ணு நான் நல்லாயிருக்கேன். நான் ஃபோன் பண்ணியது மதி விசயமா... அவளுக்கு ஏழாம் மாதம் எடுக்கப்படும் ஸ்கேன் டெஸ்ட் நாளைக்கு இருக்கு. கொஞ்சம் அவள் கூடத் துணைக்குப் போயிட்டு வா. அவள் நிச்சயம் மேடத்தைக் கூப்பிட மாட்டா. நான் இருந்தா அவள் கூடப் போயிருப்பேன். அவளைப் பத்தி தான் உனக்குத் தெரியுமே...எந்த டெஸ்ட் என்றாலும் ரொம்பப் பயப்படுவா...ப்ளீஸ் விஷ்ணு அவள் கூடப் போ”

“லீலா உன் வேலைகளுக்கிடையிலும் அவளை நியாபகம் வைத்து சொல்கிறாயே அதுக்கு உனக்குத் தான் நான் தேங்க்ஸ் சொல்லணும். கட்டாயம் நாளைக்கு அவள் கூடப் போகிறேன். இதை விட எனக்கு வேறு வேலை இல்லை போதுமா?” என்றவன் எத்தனை மணிக்கு என்று எல்லா

விவரங்களையும் அவளிடம் கேட்டப் பிறகே அலைப்பேசியை அணைத்தான்.

மறுநாள் மாலையில் பேருந்து நிலையத்தில் ஒருவித பயத்துடன் நின்றிருந்த மதியின் அருகில் விஷ்ணு சென்றான். “என்ன மதி இங்கே நின்னுக்கிட்டு இருக்க?” திடீரென்று ஒலித்த குரலில் தூக்கிவாரிப் போட திரும்பியவள் அங்கே விஷ்ணு நிற்கவும் நிம்மதியடைந்து அவனைப் பார்த்து புன்னகைத்தாள். “செக்கப்புக்கு ஹாஸ்பிட்டல் போறேன் சார்...”

‘ஹையோ இந்தச் சாரை விடவே மாட்டாளா?’ என்று மனதுக்குள் சலித்தவன், “வேணுமென்றால் நான் உன் கூடத் துணைக்கு வரவா?” சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டான். அவளுக்குமே இன்று மருத்துவர் ஸ்கேன் எடுப்பதாகச் சொல்லியிருந்ததால் கொஞ்சம் பயத்துடன் தான் இருந்தாள். அதில் விஷ்ணு வேறு இவ்வாறு கேட்கவும், இத்தனை நாள் பழகியதில் விஷ்ணுவின் நல்ல குணங்களைக் கண்டிருந்ததால் அரைகுறையாய் தலையசைத்தாள். அவள் சம்மதித்ததும் அவளை ஆட்டோவிலேற்றி மருத்துவமனைக்கு அழைத்து வந்தான்.

மதியை ஸ்கேன் எடுக்க அழைக்க அவள் பயத்துடன் விழிப்பதை பார்த்து விஷ்ணுவிற்கு இரக்கம் தோன்ற, “பயப்படாதே தைரியமாகப் போ” என்க, அவன் கொடுத்த தைரியத்தில் உள்ளே சென்றாள்.

“என்னம்மா உன்னுடன் யாரும் வரவில்லையா?” மருத்துவர் சந்தேகத்துடன் அவளைப் பார்க்க, அவளோ கணினித் திரையில் தோன்றிய குழந்தையின் உருவத்தில் யாரையோ தேடிக் கொண்டிருந்தாள். அவளின் மௌனம் மருத்துவருக்குச் சந்தேகத்தை உண்டு பண்ண..., பரிசோதனை முடிந்ததும் செவிலிப்பெண்ணிடம், “இவங்க கூட யாராவது வந்திருந்தால் உள்ளே அனுப்புங்க” என்றதும் அவர் வெளியில் சென்று அங்கு இருந்த விஷ்ணுவை அழைத்து வந்தார்.

விஷ்ணுவைக் கண்டதும் அவளின் கணவன் என்று அந்த மருத்துவர் நினைத்தாரோ என்னமோ, “ஏன் சார் உங்கள் குழந்தையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இல்லையா? இப்படித்தான் மனைவியைத் தனியே விடுவிங்களா?”

ஏனென்றால் மதியின் பெயரை திருமதி.ஷன்மதி என்று தான் கொடுத்திருந்தாள் லீலா. மற்றவர்களின் கண்களுக்கு அவள் தவறாகத் தெரியக் கூடாது என்ற எண்ணமே இதற்குக் காரணம். அவரின் கேள்விகள் அனைத்தும் விஷ்ணுவுக்குப் பூமழைப் பொழிந்தது போலிருக்க, மதியோ உள்ளமும் உடலும் நடுங்க திடுக்கிட்டு போனவளாய் அதிர்ச்சியுடன் விஷ்ணுவையும் மருத்துவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அத்தியாயம் : 9

“மிஸ்டர்...” மருத்துவர் இழுக்க...

“விஷ்ணுபரத்...டாக்டர்...” தன் பெயரை அவரிடம் சொன்னவன், “சொல்லுங்க டாக்டர்...”

“உங்கள் குழந்தையைப் பார்க்கும் எண்ணம் உங்களுக்கு இல்லையா?” மருத்துவர் கூறியது அவன் மனதுக்குள் ஏதோ ஒருவித உணர்வு தாக்க, மொழி தெரியாத உலகில் இருப்பது போல் அமர்ந்திருந்தான்.

“குழந்தை ஹார்ட்பீட், வளர்ச்சி எல்லாம் நன்றாக இருக்கிறது...” என்று மருத்துவர் குழந்தையின் செயல்பாடுகளைப் பற்றிக் கூறியதும் தான் வானத்தில் மிதந்து கொண்டிருந்த அவனுக்கு மதியின் நினைவு வந்தது.

மதியின் நிலையோ சொல்லவே வேண்டாம்...விஷ்ணுவை அவள் கணவன் என்று கூறியதும் இல்லாமல் குழந்தையின் செயல்பாடுகளை வேறு அவனிடம் விளக்கிக் கொண்டிருந்த மருத்துவர் மேல் கோபமாக வந்தது. விஷ்ணுவின் முகம் பார்க்க சங்கடப்பட்டு அவள் அவன் புறம் திரும்பவேயில்லை. அவளுக்கிருந்த மனநிலையில் வாயைத் திறக்க கூடப் பயந்தாள். விஷ்ணுவும் தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன், மறந்தும் அவள் பக்கம் பார்க்கவில்லை.

“விஷ்ணு...இவ்வளவு சிறிய வயதில் ஏன் திருமணம் செய்து கொண்டீங்க? காதல் திருமணமோ...? பரவாயில்லை...இருந்தாலும் குழந்தைப் பிறப்பைத் தள்ளிப் போட்டிருக்கலாம்” அவர் பாட்டுக்கு பேசிக் கொண்டு போக, மதியின் முகம் அவமானத்தில் சிவந்து, அந்த நிலையிலும் தன்னால் விஷ்ணுவுக்கும் அவமானம் என்றெண்ணி மனம் குறுகி வெட்கி தலைக் குனிந்தாள்.

விஷ்ணுவோ, மதியைப் பற்றி இவருக்கு ஏதும் தெரியாதோ? என்று யோசித்தவன், ‘ஆமாம்...பேப்பரில் வரும் நியூசை எல்லோருமா நியாபகம் வைத்திருப்பாங்க’ என்று தானாக ஒரு முடிவுக்கு வந்தான். ஏனோ அவரிடம்

தான் அவளுக்குக் கணவனில்லை என்ற உண்மையைச் சொல்ல அவனுக்கு வாய் வரவில்லை. அந்தப் பொய்யே அவனுக்குச் சுகமாக இருந்தது.

“ரொம்பச் சின்ன வயசு...அதனால...” மருத்துவர் நிறுத்தவும் விஷ்ணு தன் யோசனையைச் சற்று ஒதுக்கி வைத்தவன், “டாக்டர் ஏதும் பிரச்சினையா?” அவனின் பதற்றம் கண்டு சிரித்தவர், “பயப்படும்படி ஒன்றுமில்லை. ஆனால் மதியின் ஹெல்த் கொஞ்சம் வீக்கா இருக்கு. நல்ல சத்தான உணவுகளைச் சாப்பிடச் சொல்லுங்க. முடிந்தளவு காய்கறி, பழங்கள் தினமும் உணவில் சேர்த்துக்கணும். ரொம்ப ஸ்ட்ரைன் பண்ணாம பார்த்துக்கோங்க” அவர் கூறியதும் மேலும் சில விவரங்களைக் அவரிடம் கேட்டுக் கொண்ட விஷ்ணு அவரிடம் விடை பெற்று மதியை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான். மதி அவமான உணர்வில் உழன்று கொண்டிருந்ததால் எதையும் கேட்கும் நிலையில் அவளில்லை.

“இங்கே உட்காரு மதி...நான் போய் மருந்துகளை வாங்கிட்டு வர்றேன்” அவளின் பதிலை எதிர்பாராமல் நகர்ந்தவனைக் கண்டு என்ன சொல்வது என்று தெரியாமல் அங்கே இருந்த இருக்கையில் கண்மூடி சாய்ந்தாள்.

கண் மூடி அமர்ந்தவளை, “ம்...ரொம்ப நல்லாயிருக்கு. அதுவும் வயித்துல குழந்தையோடு பார்க்க உன்னைப் பெத்த நான் என்ன தவம் செய்திருக்கணும். அடடா...பெத்தவங்களுக்கு எப்படிப்பட்ட பேரு வாங்கிக் கொடுத்திருக்க...” தந்தையின் அகங்காரக் குரலில் கண் திறந்தவள் செய்வதறியாது அதிர்ந்துப் போய் அப்படியே எழுந்து நின்றாள்.

அவளின் மேடிட்ட வயிறை உற்றுப் பார்த்தவர், “ஏண்டி...சனியனே இன்னமும் சாகாமல் உயிரோடு இருந்து எங்க உயிரை வாங்கற. எங்கேயாவது குளம் குட்டைன்னு பார்த்து விழ வேண்டியது தானே...” மேலும் என்ன சொல்லியிருப்பாரோ, அதற்குள் விஷ்ணு வந்து, “மதி...என்ன சத்தம்?”

ஸ்ரீனிவாசன் அவனை மேலும் கீழும் பார்த்தவர் மகளிடம் திரும்பி, “உன்னைய என்னமோ நினைச்சேன்...பலே கைக்காரி தான். அதுக்குள்ள ஒருத்தனைப் பிடிச்சிட்டியே கெட்டிக்காரிடி...பொழைச்சுக்குவே” காறி உமிழாத குறையாக அவளைப் பேசிவிட்டு செல்ல, மதி நிற்க முடியாமல் கால்கள் தடுமாற அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

“மதி இதைப் பிடி. நான் கொஞ்ச நேரத்தில் வர்றேன்” என்றவன் வேகமாக ஸ்ரீனிவாசன் சென்ற திசையை நோக்கி சென்றான்.

“சார் கொஞ்சம் நில்லுங்க” ஏறக்குறைய தன் வழியை மறைத்துக் கொண்டு நின்ற விஷ்ணுவை அருவருப்புடன் பார்த்த ஸ்ரீநிவாசன், “என்ன கலாட்டா பண்ண வந்திருக்கியா? அவள் என் பொண்ணு... நான் என்ன வேணாப் பேசுவேன்” அவனின் தோற்றத்தைக் கண்டு பயந்தவராய்...ஆனால் அந்தப் பயத்தை மறைத்துக் கொண்டு பேசினார்.

“உங்க பொண்ணா இருந்தா தாராளமாப் பேசலாம். ஆனால் இப்போ அவள் உங்க பொண்ணு இல்லை. என்னைக்கு அவளை வீட்டை விட்டுத் துரத்தி விட்டுங்களோ அப்பவே உங்களுக்கும் அவளுக்கும் உள்ள உறவு முடிஞ்சு போச்சு”

“நானே அவளைத் தலைமுழுகிட்டேன். நீ என்னடா...அவளுக்குச் சப்போர்ட் பண்ண...முதல்ல அவளுக்கு நீ யாரடா? கெட்டு சீரழிஞ்சவள் தானே என்று கூடச் சேர்த்துக்கிட்டியா?” அவரின் வார்த்தைகள் அவனின் இதயத்தைக் குத்தீட்டியாய் குத்தி ரணப்படுத்த கண்களை மூடி மனதை சமன்படுத்தியவன் ஒருவித நிமிர்வோடு அவரைப் பார்த்தான்.

“முதல்ல வார்த்தைகளை அளந்துப் பேசுங்க...”

“நீ யாரடா என்னைச் சொல்வதற்கு?”

“இப்பக் கேட்டீங்களே இது கேள்வி...நான் யாரா...இப்ப சொல்றேன் நல்லாக் கேட்டுக்கோங்க...நான் உங்க

மகளைக் கட்டிக்கப் போகிறவன்...அதாவது உங்க வருங்கால மருமகன். இந்த மாதிரி நேரத்தில் அவளுக்கு மாரல் சப்போர்ட்டா இருக்க வேண்டிய நீங்க அவளை அடிச்சு வீட்டை விட்டுத் துரத்தியிருக்கீங்க. நீங்கெல்லாம் மனுசனே கிடையாது. நீங்க செய்யாததை நான் அவளுக்காகச் செய்யப் போறேன். என் குறிக்கோளே...அவளை நாலு பேர் புகழும்படி முன்னுக்குக் கொண்டு வருவது தான். இப்ப வெறுத்து ஒத்துக்கிற நீங்களே ஒருநாள் இல்லை ஒருநாள் அவளை என் பொண்ணுன்னு சொல்லிப் பெருமைப்படத் தான் போறீங்க. அந்த நாள் ரொம்பத் தூரம் இல்லை" நிமிர்வுடன் கூறியவன் அவரை அலட்சியமாய்ப் பார்த்தவாறு அங்கிருந்து நகர்ந்தான். ஸ்ரீனிவாசன் அதிர்ச்சியுடன் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

****

"மதி போகலாமா?" விஷ்ணு கேட்டதும் ஏதோ கனவிலிருந்து எழுந்தவள் போல் மலங்க மலங்க விழித்தாள். கண்களில் கண்ணீர் வழிந்து அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. மீண்டும் ஒரு முறை விஷ்ணு அழுத்திச் சொன்னதும் தன்னுணர்வுப் பெற்றவள் அவனுடன் சேர்ந்து நடந்தாள்.

ஏதோ நினைவில் நடந்தவள் அங்கிருந்த படிகளில் இறங்கும் போது தடுமாறி விழப் போக, அதற்குள் விஷ்ணு அவளைத் தாங்கிப் பிடித்து நேரே நிறுத்தினான். அவன் கைகள் தன் உடலில் பட்டதும் உடலெல்லாம் கூச சட்டென்று அவனிடம் இருந்து விலகி ஒதுங்கியவள், "தேங்க்ஸ் சார்...ஏதோ நினைவில்..." அழுததினால் அவள் குரல் நடுங்கி ஒலித்தது.

அவள் விலகவும் தான் அவனுக்கு அவளைத் தாங்கிப் பிடித்தது நியாபகம் வந்தது. அது அவன் அவளுக்கு உதவும் நோக்கில் தன்னையுமறியாமல் செய்த சிறு செயல், காதலோ காமமோ வேறு எந்த உணர்ச்சியோ அதில் இல்லை. அதிலும் அவள் சட்டென்று விலகியது அவன்

மனதைக் காயப்படுத்திய போதும் ஏனோ அவள் மேல் கோபம் வரவில்லை.

“நீ என்றில்லை... வேறு யாராக இருந்தாலும் நான் இதைத்தான் செய்திருப்பேன்” ஒன்றும் பேசாமல் நடந்தவளை பார்த்தவன் அங்கிருந்த மரத்தடியில் போடப்பட்டிருந்த கல்மேடையில் அவளை உட்கார வைத்து விட்டுப் போனவன், திரும்பி வரும் போது அவன் கைகளில் ஆரஞ்சுப் பழச்சாறு இருந்தது.

“இந்தாக் குடி...” அவள் புறம் நீட்டியவன் தானும் ஒன்றை எடுத்துப் பருகினான். அவள் இன்னமும் குடிக்காமல் இருப்பதைக் கண்டு, “மதி உன்னைத் தான் சொல்கிறேன் குடி. அப்பொழுது தான் உடலுக்குத் தெம்பாக இருக்கும்” அவன் கூறியதும் அவளின் அழுகை அதிகமாகியது.

“ச்சு...என்ன மதி? சிறுபிள்ளை போல்... ஏன் இந்த அழுகை?”

“அப்பா...என்னை...என்னை...ஒரு வேசிக்குச் சமமாகப் பேசிவிட்டு போயிட்டார்”

“இப்போ நிறுத்துகிறாயா இல்லையா?” விஷ்ணுவின் குரலில் இருந்த ஆத்திரம் கண்டு பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

“அவர் தான் அறிவில்லாமல் பேசிவிட்டுப் போகிறார் என்றால் நீயும் அதை நினைத்துக் கொண்டு தேவையில்லாமல் அழுகிறாய். உன் சம்மதம் இல்லாமல் நடந்த ஒன்றுக்கு நீ எப்படிப் பொறுப்பாவாய்? அவர் உன் அப்பா ஏதோ ஆதங்கத்தில் பேசியதைப் போய்ப் பெரிதாக எடுத்துக் கொள்கிறாயே? இதை விட மோசமான சூழ்நிலையைக் கூட அழகாகக் கையாண்டவள் நீ. இந்தச் சின்ன விசயத்துக்குப் போய்க் கலங்கலாமா? இவர்களெல்லாம் உன்னை நிமிர்ந்துப் பார்க்கும் உயரத்திற்கு வளர வேண்டாமா? அப்படி ஒருநாள் வரும் போது உன்னை இப்படிப் பேசிய உன் அப்பாவே எல்லோரிடமும் என் பொண்ணு என்று உன்னைப் பத்தி பெருமையாகப் பேசத்தான் போகிறார் பார்”

விஷ்ணு எப்பொழுதும் இப்படித்தான் நேர்மறைக் கருத்துக்களையே பேசுவான். அவனின் பேச்சில் இருந்த உண்மை, நம்பிக்கை, உற்சாகம் அவளையும் தொற்ற அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டே, “அப்பா என்னை ஏற்றுக் கொள்வாரா சார்...”

“நிச்சயமாக...இந்த நம்பிக்கையுடன் நீ நன்றாகப் படித்து முன்னேறு. மற்ற விசயங்கள் தானாகவே நடக்கும். இது போல் அழுவது வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு நல்லதில்லை”

குழந்தை என்றதும் மருத்துவர் விஷ்ணுவைப் பார்த்துக் கூறியது நியாபகம் வர, தன்னால் அவனுக்கும் அல்லவா அவமானம் என்று கழிவிரக்கம் தோன்ற அவளின் முகம் கன்றிச் சிவந்தது. “சாரி சார்...டாக்டர் ஏதோ தவறா புரிந்துக் கொண்டு...” எப்படிச் சொல்வதென்று தெரியாமல் மதி நிறுத்த...

விஷ்ணுவிற்கு மருத்துவர் கூறியது நியாபகம் வர, ‘ச்சே...இதை எப்படி மறந்தேன்? அவர் தான் அறிவில்லாமல் சொன்னால் நானாவது அதை மறுத்திருக்க வேண்டாமா? இப்பொழுது இவளிடம் எதைச் சொல்லி சமாளிக்க...’ அவனின் காதல் கொண்ட மனது மருத்துவர் கூறியதை இயல்பாக எடுத்துக் கொண்டது. ஆனால் மதியால் அதை இயல்பாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

“அதை விடு மதி...உன் கூட வந்ததால் அப்படி நினைத்திருக்கலாம். எல்லோரிடமும் விளக்கம் சொல்லிக் கொண்டு இருந்தோம் என்றால் நம் ஆயுள் நமக்குப் போதாது. இந்தச் சிட்டி லைபில் உன்னையும் என்னையும் நியாபகம் வைத்து மறுபடியும் யாரும் உன் கணவனா என்று என்னையோ, இல்லை என் மனைவியா என்று உன்னையோ கேட்கப் போவதில்லை. அதனால் இத்துடன் இதை மறந்துவிடு” என்று அவளிடம் கூறியவன், 'மறக்காதே ஷம்மு...என்றாவது ஒருநாள் நான் என் காதலைச் சொல்லும் போது இதையும் உன் நியாபகத்தில் வைத்துக் கொள்' மனதுக்குள் புலம்பத்தான் செய்தான்.

அவன் சொன்னதைக் கேட்டு மறுத்துப் பேசாமல் சரியென்று தலையாட்டியவளைக் கண்டு, ‘விஷ்ணு...நீ என்ன சொன்னாலும் நம்புறாளே இவள் ரொம்ப நல்லவளோ... . ம்ஹூம்...எது எப்படியோ உன் மண வாழ்க்கையில் சண்டை என்ற அத்தியாயமே கிடையாது...ஜாலிடா...’ குதூகலித்த மனசாட்சியை முயன்று அடக்கினான்.

****

“ஆண்டாள்...ஆண்டாள்...” வீட்டிற்குள் நுழையும் போதே கோபத்தில் கத்திக் கொண்டே நுழைந்தார் ஸ்ரீனிவாசன். அவரின் குரல் கேட்டுப் பதறியடித்துக் கொண்டு வந்த ஆண்டாள் அவரின் கோபமுகம் கண்டு, ‘என்ன இவர்...பிபி செக் பண்ணத் தானே ஹாஸ்பிட்டல் போனார். பார்த்தா...பிபி வாங்கிட்டு வந்த மாதிரியில்ல தெரியுது. இன்னைக்கு என்ன கோபமோ தெரியலியே? பெருமாளே...நீதான் காப்பாத்தணும்’ மனதில் வேண்டிக் கொண்டே கணவரை பார்த்தார்.

“அந்தக் கேடுகெட்டவளை இன்னைக்குப் பார்த்தேன். வயத்தைத் தள்ளிக்கிட்டு கொஞ்சமும் வெட்கம் இல்லாமல் உயிரோடு இருக்காப் பாரு”

“யாரைச் சொல்றிங்க நம்ம மதியையா?” கண்களில் இருந்து நீர் வழியக் கேட்ட மனைவியை ஆத்திரத்துடன் பார்த்தவர்,

“என்னடி நம்ம மதி...அவ தான் என் பொண்ணு இல்லைன்னு சொல்றேன்ல. நம்ம மதியாம்...நம்ம மதி. கூடவே ஒருத்தனை கூட்டிக்கிட்டு அலையறா. அவளை எப்படியெல்லாம் வளர்த்தோம்...ஏன் தான் அவள் புத்தி இப்படிப் புல் மேயப் போச்சோ தெரியல. அவளைப் பேசினா அவன் என்கிட்டேயே எகிர்றான். அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறானாம். அதுவும் நம் மருமகனாம்... அவன் சொல்லிட்டா ஆச்சா...நான் ஏத்துக்க வேண்டாம். ரோட்டில் போறவன் எல்லாம் என் மருமகனாம்... அவளை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவானாம். அதைப் பார்த்து நான் என் பொண்ணுன்னு சொல்வேனாம்...

என்கிட்டேயே சவால் விடுறான். எல்லாம் நீ பெத்தியே அதால வர்ற வினை”

“நான் கும்பிடற பெருமாள் என்னைக் கைவிடல. மதியை நல்லவன் கையில் தான் ஒப்படைச்சு இருக்கார். அவள் எங்கே இருந்தாலும் நல்லாயிருக்கணும்”

“ம்... விட்டா நீயே அவங்க கல்யாணத்தை நடத்தி வைப்ப போலிருக்கு”

“ஏன் நடத்தி வச்சா என்ன தப்பு?”

“ஆண்டாள்...” கோபத்துடன் ஒலித்த கணவரின் குரலை அசட்டையாய் அலட்சியம் செய்த ஆண்டாள்,

“சும்மா கத்தாதீங்க. வயசுக்கு வந்த பொண்ணை வீட்டை விட்டு வெளியில் அனுப்பிய போதே உங்க மேலிருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் எனக்குப் போயிருச்சு. சுவாதிக்காகத் தான் இங்கே இருக்கேன். மதி எங்கே இருக்காளோ? என்ன பண்றாளோன்னு நான் தவிச்ச தவிப்பு எனக்குத் தான் தெரியும். அவள் அந்த வக்கீல் காவ்யபாரதி கூட இருக்கிறது தெரிஞ்சதும் தான் நிம்மதியாச்சு. அவள் என்ன தப்பு பண்ணினான்னு இப்படிக் கரிச்சுக் கொட்டுறீங்க? தப்புப் பண்ணியதெல்லாம் உங்க ஆண் வர்க்கம் தான். அவளை இந்தக் கதிக்கு ஆளாக்கிய அந்தப் பாவிகளாலேயும், அவளை வீட்டை விட்டுத் துரத்திய உங்களாலேயும் எனக்கு ஆண்கள் மேலேயே வெறுப்பா இருந்தது. ஆனால் மதியின் நிலையை அறிந்தும் அவளை மணக்கத் துடிக்கும் என் மருமகனைக் கண்டு எனக்குப் பெருமையா இருக்கு”

“என்ன பார்க்கிறீங்க...நீங்க ஒத்துகிட்டாலும் ஒத்துக்கலன்னாலும் அவர் தான் என் மருமகன். அவளைக் கல்யாணம் மட்டும் பண்ணாமல் அவளை முன்னுக்குக் கொண்டு வரணும்ன்னு நினைக்கிறாரே அவர் மனுசன்...அவர் ஆண்பிள்ளை. உலகத்தில் நல்ல ஆண்களும் இருக்கிறார்கள் என்று அவரைப் பார்த்து தெரிந்து கொண்டேன். இப்பத்தான் ஆண்கள் மேல் மரியாதை, நம்பிக்கை வந்திருக்கு. ஆனால்...ஒண்ணு மட்டும் சொல்றேன்...எந்த சமுதாயத்துக்குப் பயந்து என்

பொண்ணை வீட்டை விட்டுத் துரத்தினீங்களோ அந்த ஒட்டு மொத்தச் சமுதாயமும் என் மகள் பக்கம் தான் நின்றிருக்கிறது. இப்பத் தனிச்சுக் குற்றவாளியாய் நிற்கிறது நீங்க மட்டும் தான். அதான் தாலிக் கட்டிய பாவத்திற்கு நான் உங்க கூட இருக்கேன். நீங்க மனம் திருந்தி அவளைப் பார்க்க வர்ற வரைக்கும் நானும் அங்கே போக மாட்டேன். ஏன்னா நான் உங்க சொல்லுக்குக் கட்டுப்பட்டவ. அதுக்காக எப்பவும் ஒரே மாதிரி இருப்பேன்னு நினைக்க வேண்டாம்”

ஆண்டாள் அத்தனை நாள் தன் மனதுக்குள் பூட்டி வைத்திருந்த ஆத்திரத்தை, துயரத்தை வார்த்தைகளால் கொட்டியவர், கணவரின் முகம் பார்க்க வெறுத்து அவரை நிமிர்ந்தும் பாராமல் உள்ளே சென்றார். ஸ்ரீனிவாசன் என்ன பேசுவது என்று தெரியாமல் அப்படியே திகைத்துப் போய் நின்றிருந்தார்.

அத்தியாயம் : 10

“மதி...வேலையெல்லாம் முடிந்ததா?”

“ம்...முடிந்தது சார்...” விஷ்ணுவிற்குப் பதில் சொல்லியவாறே, கணினியை அணைத்து விட்டு நாற்காலியில் இருந்து எழுந்த மதியின் வயிறு நன்றாக மேடிட்டிருந்தது, எட்டு மாதங்கள் ஆகிறது அல்லவா. தாய்மையின் பூரிப்பையும் மீறி களைப்பு அவள் முகத்தில் தெரிந்தது.

“வாக்கிங் போகலாம் வா...”

“வேண்டாம் சார்...கொஞ்சம் மூச்சு வாங்குவது போலிருக்கு. நாளைக்குப் போகலாமே” சிறுக்குழந்தை ஒன்று பள்ளிக்குச் செல்ல மறுத்து சாக்குப் போக்கு சொல்வது போல், நடைப்பயிற்சிக்குப் பயந்து ஏதோ ஒரு காரணத்தைக் கூறி மறுத்த மதியைக் கண்டிப்புடன் பார்த்தான் விஷ்ணு.

“மதி...டாக்டர் என்ன சொன்னார் என்று நியாபகம் இருக்கிறதா? நன்றாக வேலை செய்ய வேண்டும், நடக்க வேண்டும் அப்பொழுது தான் பிரசவம் எளிதாக இருக்குமென்று சொல்லியிருக்கிறார் அல்லவா. இப்பொழுது வாக்கிங் போகவில்லை என்றால் அன்று போல் கால் வலியில் நீ தான் கஷ்டப்பட வேண்டியிருக்கும். அப்புறம் உன் இஷ்டம்...” தோளை அசால்ட்டாகக் குலுக்கிக் கொண்டு அவன் முன்னே நடக்க, அவன் பின்னேயே வந்தவளைக் கண்டு கொள்ளாமல் மேலே நடந்தவனைத் தடுத்து,

“சார்...நானும் வருகிறேன்” என்று தன் சம்மதத்தைக் கூறியவளைப் பார்த்து புன்னகைத்தவன், அவளை அருகிலிருந்த பூங்காவிற்கு அழைத்துச் சென்றான்.

விஷ்ணு அவளிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே வர, அவள் மௌனமாய் அதைக் கேட்டுக் கொண்டு வந்தாள். சிலசமயம் அவனுக்குப் பதில் சொல்லவும் செய்தாள். அரசியல் முதல் சினிமாக் கிசுகிசு வரை பேசியவனுக்கு மனதுக்குள் ஏதோ இனம் புரியாத இதம் வந்து

தாலாட்டியது. அவளுடன் அப்படியே பேசிக் கொண்டே எங்கேனும் சென்றுவிட மாட்டோமா? என்று உள்ளம் ஏங்கியது.

அதற்கான நேரம் வர வெகுகாலம் காத்திருக்க வேண்டுமென்று அவனுக்குப் புரிய, பொறுமை பொறுமை என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டான். சிறு பார்வையிலோ இல்லை நடத்தையிலோ அவன் காதலைக் காட்டாமல் இருக்க மிகவும் சிரமப்படத்தான் செய்தான். ஓரளவு அதில் வெற்றியடையவும் செய்தான்.

யாரிடமும் எதையும் பகிர்ந்து கொள்ளாத மதி முக்கியமாக ஆண்களிடத்தில் தள்ளி விலகி நிற்கும் அவள் ஏனோ விஷ்ணுவிடத்தில் மட்டும் இயல்பாகப் பழகினாள். அவள் கேட்காமலேயே அவளுக்கு என்ன தேவை என்பதை அவன் பார்த்து பார்த்து செய்ததாலோ இல்லை அவன் கண்ணியமான நடத்தையினாலோ ஏதோ ஒன்று அவனிடம் சகஜமாகப் பழகினாள். வேறு எந்தவிதமான எண்ணங்களும் அவள் மனதில் இல்லை. அவளைப் பொருத்த வரை விஷ்ணு நல்ல நண்பன். அதைத் தாண்டி அவள் யோசிக்கவில்லை. ஏனெனில் அவள் அனுபவித்த கொடுமையின் ரணம் அப்படிப்பட்டது. அது அவ்வளவு சீக்கிரம் ஆறவும் ஆறாது.

****

“என்னம்மா திடீர்ன்னு போன் பண்ணியிருக்கிங்க?”

“ஏன் ராசா நாங்கெல்லாம் போன் பண்ணக் கூடாதாக்கும்? சரி அதை விடு...எம் மருமக எப்படி இருக்கா? வயத்துப் புள்ள நல்லாயிருக்கா?”

“ம்...நல்லாயிருக்கா...குழந்தையும் நல்லாயிருக்கு. ஏன்ம்மா நீங்க பெத்த புள்ள என்னைப் பத்திக் கேட்க மாட்டேங்கிறிங்க...கல்யாணமே ஆகல அதுக்குள்ள மருமக பேரக் குழந்தை எப்படி இருக்காங்கன்னு கேட்கிறிங்க ம்ஹூம்...” போலியாய் அலுத்துக் கொண்டான் விஷ்ணு.

“டேய் அவ இரு உசிரா இருக்கா...நீ அப்படியா என்ன?”

“அவளாவது இரு உசிரா இருக்கா...நான் மூணு உசிரா இல்ல இருக்கேன். அதான் உங்க மருமகளையும் பேரக் குழந்தையும் என் மனசுக்குள்ள சுமந்துகிட்டு இருக்கேனே”

“ராசா...விஷ்ணு...” நா தழுதழுக்க யசோதாவின் குரல் உடைந்தது.

“அம்மா...என்ன இது சின்னப் புள்ள மாதிரி?”

“ராசா...உன்னை நினைச்சு எனக்குப் பெருமையா இருக்கு. நீ உங்க அப்பாரு மாதிரியே உருவத்துல மட்டுமல்ல ராசா...குணத்துலயும் அவரே தான்”

“அம்மா...காதல் வந்துட்டா...குறைகள் கண்ணுக்குத் தெரியாது. நிறைகள் தான் கண்ணுக்குத் தெரியும். எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு. அவளோட மத்த விசயங்கள் குறைகளா எனக்குத் தெரியல”

“ம்...நீ சொல்றதும் சரி தான்ய்யா. நான் பேச வந்த விசயத்தை விட்டுட்டு ஏதேதோ பேசிக்கிட்டு இருக்கேன். மதிக்கு இன்னும் பத்து நாளுல ஒன்பதாம் மாசம் பிறந்திடும். வளக்காப்பு செய்யணும் உங்க மேடம் இதைப் பத்தி ஏதும் பேசினாங்களா?”

“வளைக்காப்பா...” ஆச்சிரியப்பட்டவன், அது குறித்துத் தான் யோசிக்கக் கூடச் செய்யாததை நினைத்து மனதுக்குள் வெட்கியவனாய், “அம்மா இதையெல்லாம் யாரும் சொல்லல. அதான் யோசிக்கக் கூடச் செய்யல. மேடமுக்கு அவங்க வேலையே சரியா இருக்கும். இதில் இதைப் பத்தி எங்கே யோசிக்க? நீங்க சொல்லுங்க என்ன செய்யணும்ன்னு?”

“நான் சொல்ல என்ன இருக்கு. இந்த மாதிரி சமயத்துல வளக்காப்பு செஞ்சா நல்லது. இருந்தாலும் மதி மனசுல என்ன இருக்குன்னு நீ கேட்டு சொல்லுப்பா”

“நானா...” என்று யோசித்தவன், “சரிம்மா...கேட்டுச் சொல்றேன்” என்று பதிலளித்தவன், அடுத்த நொடி லீலாவை அழைத்தான். யசோதா கூறியதைச் சொல்லியவன், “மதிக் கிட்ட பேச எனக்குத் தயக்கமா இருக்கு. நீ அவக்கிட்ட பேசறியா?”

“விஷ்ணு...நான் பேசினாலும் அவள் வேண்டாம்ன்னு தான் சொல்வாள். பேசாம நாமளே இதை நடத்தினா என்ன? ஹேய்...விஷ்ணு...வெய்ட் வெய்ட்...இன்னும் ட்வென்ட்டி டேஸ்ல மதிக்கு பேர்த்டே வருது. அதையும் இதையும் சேர்த்து கொண்டாடினா என்ன...!”

“ஹுர்ரே...லீலா உன் மூளை என்னமா வேலை செய்யுது. சூப்பர்...நீ சொன்ன மாதிரியே செய்திடலாம். மதிக்கிட்டே சொல்ல வேண்டாம். சர்ப்ரைசா இருக்கட்டும் என்ன?”

“நான் சொல்ல மாட்டேன்...நீ அவளிடம் உளறாமல் இருந்தால் சரி” அவனை வாரியவள் மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு அலைப்பேசியை வைத்தாள்.

மீண்டும் யசோதாவிற்கு அழைத்துப் பேசியவன் தகவலைச் சொன்னதும் அவர், “நம்ம ஷர்மிக்கு இப்போ லீவ்தான். நாங்க இப்போவே சென்னைக்கு வர்றோம். அப்படியே வளக்காப்புக்கு இருந்துட்டு வர்றோம். அப்ப தான் மருமவளுக்குச் சந்தேகம் வராது. எனக்கும் மதியைப் பார்க்கணும்ன்னு ஆசையா இருக்கு ராசா” வருங்கால மருமகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அவர் குரலில் தெரிய, வேறுவழியின்றி விஷ்ணுவும் சம்மதித்தான். சகுந்தலாவிடமும் விசயத்தைச் சொல்ல அவரும் சரியென்று சந்தோசத்துடன் சம்மதித்தார்.

சென்னைக்கு வந்த நாள் முதல் யசோதா மதியைப் பார்க்க வேண்டும் என்று நச்சரிக்க, விடுமுறை நாளாய்ப் பார்த்து விஷ்ணு தாயையும் தங்கையையும் கூட்டிச் சென்றான். யோகேந்திரன் நேரே வளைகாப்புக்கு வருவதாகச் சொல்லி ஊரிலேயே இருந்து விட்டார்.

“வாங்க ஆன்ட்டி...வாங்க” யசோதாவையும் ஷர்மிளாவையும் வரவேற்ற மதி, “நீங்க வெய்ட் பண்ணுங்க. நான் மேடத்தை அழைத்து வருகிறேன்” என்று உள்ளே செல்ல எத்தனிக்க, “மதி நீ பேசிக்கிட்டு இரு. நான் போய் மேடத்தைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்” விஷ்ணு உள்ளே சென்றான்.

“ஆன்ட்டி...”

“மதிக்கண்ணு...அழகா அத்தைன்னு சொல்லு அது என்ன ஆண்டின்னு சொல்ற கேட்க நல்லாவே இல்ல” ஷர்மிளா தன்னைத் தடுத்ததையும் மீறி யசோதா தன் உள்ளத்தை மறையாமல் தெரிவிக்க, மதியோ அவரின் பேச்சில் கவரப்பட்டு, “ஹய்யோ...ஆன்...சாரி...அத்தை நீங்களும் என்னை மாதிரியே சொல்றிங்க. நானும் இதைத்தான் நினைப்பேன். ஆனால் அப்பா, அம்மா பட்டிக்காடு போலிருக்கிறது... அக்கம்பக்கம் உள்ளவர்கள் சிரிப்பார்கள் என்று ‘ஆன்ட்டி’ன்னு சொல்ல சொல்லி பழக்கிவிட்டுட்டாங்க. எனக்கும் அத்தையே பிடித்துத் தான் இருக்கிறது. அப்புறம் சொல்ல மறந்துட்டேன் நீங்க கொடுத்தனுப்பிய நெல்லிக்காய் ஊறுகாய் நல்லாயிருந்தது”

“என்ன கண்ணு...நெல்லிக்காய் ஊறுகாய் மட்டும் தான் நல்லாயிருந்ததா மத்த ஊறுகாயை நீ சாப்பிட்டுப் பார்க்கலையா?” குறைப்பட்டுக் கொண்டார் யசோதா.

“அச்சச்சோ அப்படியெல்லாம் இல்லை அத்தை...எல்லாமே சூப்பரா இருந்தது” அவசரமாய் மறுத்த மதி அவரிடம் சகஜமாகப் பேச துவங்க, ஷர்மிளாவும் அதில் கலந்து கொண்டாள். மதியின் அழகைக் கண்டு முதல் பார்வையிலேயே பிடித்துப் போன யசோதா...அவளின் பேச்சில் இன்னமும் கவரப்பட்டார். காவ்யபாரதியுடன் அங்கே வந்த விஷ்ணு, அன்னையும் மதியும் பேசிக் கொண்டிருக்கும் அழகுக் கண்டு அப்படியே அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். யசோதாவைக் கண்டு சிறிது பொறாமைக் கூட வந்தது அவனுக்கு.

“எம் மருமவ எம்புட்டு அழகு தெரியுமா? நீங்க பார்க்கலியே...எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அழகு மட்டுமா குணமும் சொக்கத் தங்கம்...அட ஆமாங்கிறேன்...நீங்க நேர்ல பார்த்தா நான் சொன்னதைத் தான் சொல்விங்க” தந்தையிடம் அலைப்பேசியில் கூறிக் கொண்டிருந்த அன்னையின் பேச்சை நெகிழ்ந்த மனதுடன் கேட்டுக் கொண்டிருந்தான் விஷ்ணு. அவன் மனம் நிறைந்திருந்தது.

அடுத்து வந்த நாட்கள் வளைகாப்பிற்கு வேண்டிய பொருட்கள் வாங்க, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய என நாட்கள் வேகமாகப் பறந்தது. மதிக்கு வேண்டிய பட்டுச்சேலை வளையல்கள் எல்லாம் விஷ்ணு அவன் சேமிப்பு பணத்திலிருந்தே வாங்க யசோதாவிற்குக் கூடச் சற்று மனவருத்தம் தான். அந்த மனவருத்தத்தை மதிக்கு தங்க வளையல் வாங்கி ஆற்றிக் கொண்டார் அவர்.

முதல் நாளிரவே லீலா சென்னை வந்து விஷ்ணுவின் வீட்டில் தங்கிக் கொண்டாள். அவளுமே விஷ்ணு மதிக்காக வாங்கியிருந்ததைப் பார்த்துப் பிரமித்துத் தான் போனாள். அதை வைத்து தன் கணவனிடம், “நீங்களும் தான் இருக்கிங்களே...கல்யாணமாகி இத்தனை நாளாகுது ஒரு நாளாவது இப்படி வாங்கிக் கொடுத்திருப்பிங்களா? விஷ்ணுவைப் பாருங்க...கல்யாணத்துக்கு முன்னாடியே இப்படின்னா... கல்யாணத்துக்கு அப்புறம்...ம்...மதி கொடுத்து வைத்தவள்” என்று பெருமூச்சு விட்டவளைப் பரிதாபமாகப் பார்த்த அவள் கணவன் டேவிட், “என்னைப் பழிவாங்கணும்ன்னு எத்தனை நாளா ப்ளான் பண்ணின விஷ்ணு” விஷ்ணு காதைக் கடிக்க, அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

காலையிலிருந்தே விஷ்ணு மதியைப் பார்க்கப் போக முடியவில்லை. ஏனோ வேலைகள் சரியாக இருந்தது. மணியைப் பார்த்தான் இரவு மணி எட்டு தான் ஆகியிருந்தது. ஊரிலிருந்து வந்த தந்தையையும் அழைத்து வந்தாயிற்று. இப்போதைக்கு வேலைகள் இல்லை அப்படியே ஏதும் இருந்தால் தந்தை பார்த்துக் கொள்வார் என்றெண்ணி அவரிடம் சொல்லிவிட்டு மதியைத் தேடிச் சென்றான். காவ்யபாரதியின் வீட்டை அடைந்தவன் வெளிக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். அழைப்புமணியை அழுத்த போனவன், அங்கே மரத்தடியில் அமர்ந்திருந்த மதியைக் கண்டு அவளை நோக்கிச் சென்றான்.

தெருவிளக்கு ஒளியில் வரிவடிவமாய்த் தெரிந்தவள் அழகை ரசித்துக் கொண்டே சென்றவன், வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மதியின் முகத்தில் எல்லையற்ற

சோகத்துடன் கண்களில் கண்ணீர் வழிந்துக் கொண்டிருந்ததைக் கண்டு பதறிப் போனவனாய், “மதி ஏன் அழுற?” திடீரென்று ஒலித்த விஷ்ணுவின் குரலில் திடுக்கிட்டுப் போய் எழுந்தாள். “ஹேய்...மதி ரிலாக்ஸ்...ரிலாக்ஸ்...நான்தான்”

“ஓஹ்...நீங்களா?” கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்ட மதி அவனைப் பார்த்து புன்னகைக்க முயன்றாள். “அழுதியா மதி...” அவன் குரல் நலிந்து ஒலித்தது. ‘அருகில் நானிருக்க நீ ஏன் அழுகிறாய் பெண்ணே?’ அவன் மனதுக்குள் கேட்டுக் கொண்டது அவள் காதில் விழுந்தால் தானே?

“இல்ல சார்...”

“என்னிடமே பொய்யா மதி...” அவனின் கேள்வியில் உதட்டைக் கடித்துக் கொண்டு சிறிது நேரம் அமைதி காத்தவள், “ஆமாம்...அப்பா, அம்மா, சுவாதி நியாபகம் வந்திடுச்சு”

“ஓஹ்...” என்றவன் வேறு ஏதோ நகைச்சுவையாய் பேசி அவள் மனதை மாற்றித் தூங்க அனுப்பி வைத்தவன், நேரே சென்ற இடம் ஷன்மதியின் வீடு.

அழைப்புமணி விடாமல் அலற சமையலறையில் வேலையாய் இருந்த ஆண்டாள் சலித்துக் கொண்டே, “இந்த மனுஷன் காலாகாலத்துல வீடு வந்து சேர வேண்டாமா? நேரங்கெட்ட நேரத்துல வந்து மணியை அடிச்சிகிட்டு. இருங்க வர்றேன்...” சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தவர், அங்கே கணவர் அல்லாமல் ஒரு இளைஞன் நின்றிருப்பதைக் கண்டு குழம்பிப் போனவராய்,

“தம்பி...யார் நீங்க? என்ன வேணும்?”

“நான்...உங்கள் பெண் மதிக்கு வேண்டியவன்” சொன்னவனைப் புரியாமல் பார்த்தவரை நேருக்குநேர் தீர்க்கமாய்ப் பார்த்த விஷ்ணு, “நான் உங்கள் பெண் மதியைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவன். அதாவது...உங்கள் வருங்கால மருமகன்” கம்பீரமாய்ச்

சொன்னவனைக் கண்டு திகைத்துப் போய் அப்படியே பார்த்தபடி சிலையாய் நின்றிருந்தார் ஆண்டாள்.

அத்தியாயம் : 11

“மதிக்குட்டி...பிறந்தநாள் வாழ்த்துக்கள்” அம்மாவின் குரல் கனவில் ஒலிப்பது போல் கேட்க, “தேங்க்ஸ்ம்மா” எப்பொழுதும் போல் கூறியவள் கைகளால் அவரின் மடியைத் தேடி, மூடிய கண்களைத் திறவாமல் அவரின் மெத்தென்ற மடியில் படுத்தவள் மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தாள். சிறிதுநேரம் சென்று அவளின் முகத்தில் நீர்த்திவளைகள் விழுவது கண்டு பதறி எழுந்தவள், அன்னை வாழ்த்துச் சொன்னது கனவோ என்று கண்களை அவசரமாகத் திறக்க, அங்கே அன்னையைக் கண்டதும் கண்களை அழுந்த மூடித் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு...அடுத்த நொடி, “அம்மா...” என்று கூவியவாறு அவரை இறுக அணைத்தாள். அவள் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.

“மதி என் கண்ணே...இத்தனை நாள் உன்னைப் பார்க்க வராமல் இருந்ததுக்கு என்னை மன்னித்து விடு” அவரும் அழுது கொண்டே அவளை அணைத்துக் கொண்டார். சுவாதியும் அவள் பங்கிற்கு வாழ்த்த, மூவரும் உணர்ச்சியின் பிடியில் நேரம் போவது தெரியாமல் அழ, அந்நேரம் அங்கே வந்த காவ்யபாரதி, “நல்ல நாள் அதுவுமா என்ன இது அழுதுகிட்டு... மதி ஹாப்பிப் பர்த்டே...” என்று அவளை வாழ்த்தியவர், “மதி போய்க் குளித்துவிட்டு வா...” அவள் சென்றதும், “முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும். வாங்க நாமப் போய் மத்த வேலைகளைப் பார்க்கலாம். சுவாதி நீ மதி கூட இரு” ஆண்டாளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தார். அதற்குள் மற்றவர்களும் வந்துவிட விழா களைக்கட்ட ஆரம்பித்தது.

அங்கே விஷ்ணுவைப் பார்த்த ஆண்டாள் அவனின் கையைப் பிடித்துக் கொண்டு, “மாப்பிள்ளை...நீங்க மட்டும் வராமல் இருந்தால்...அவரை எதிர்க்கும் தைரியம் எனக்கு வந்திருக்காது. என் பொண்ணை எப்போ பார்த்திருப்பேனோ தெரியல”

“அத்தை தயவுசெய்து மாப்பிள்ளைன்னு சொல்லாதிங்க. இன்னமும் உங்க பெண்கிட்ட நான் விசயத்தைச் சொல்லல.

அவள் காதில் விழுந்தா என்ன நினைப்பாளோ? ப்ளீஸ்...விஷ்ணுன்னே கூப்பிடுங்க” அவனிடம் ஆமோதிப்பாய் தலையையாட்டியவர்,

யசோதாவிடம் சென்று... “உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை? என் மகளின் நிலை அறிந்தும் உங்கள் மருமகள் என்று நீங்கள் கொண்டாடுவது...” பேச முடியாமல் கண்ணீர் விட, யசோதா அவரின் கையை ஆறுதலாக பற்றி, “மதிக்கு என்ன குறைச்சல்...விஷ்ணுவுக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமானவள் தான். அவளைப் போல் தான் நானும்...”

“யசோ...” யோகேந்திரன் குரல் ஓங்கி ஒலிக்க, யசோதா தன் பேச்சை நிறுத்திவிட்டு கணவரைப் பார்த்தார். ‘இதையெல்லாம் கூடவா எல்லோரிடமும் கூறுவாய்?’ என்ற கண்டிப்பை கணவரின் கண்களில் காண, பயந்து போனவராய் அவரைப் பார்த்தார்.

மனைவியின் பயந்த பார்வை அவர் மனதை அசைக்க, தன் பார்வையில் கனிவை கொண்டு வந்தவர், “பயபுள்ள இப்பவே இந்தப் பயம் பயப்புடுதே...ஏனப்பு நீ இந்தப் பயம் பயந்தா...நம்ம வீரப் பரம்பரைப் பெருமை என்னத்துக்காகிறது” பேச்சை மாற்றி மகனை கிண்டலடிக்க அங்கே சிரிப்பொலி கிளம்பியது.

“வாங்கம்மா...” என்று மங்களத்தை வரவேற்ற மதி, “லீலாக்கா...” என்று லீலாவைக் கட்டிக் கொண்டு தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த, லீலாவும் மங்களமும் தங்கள் பங்கிற்கு அவளை வாழ்த்தினார்கள். லீலா மதியிடம்... “சீக்கிரம் வா...நானும் ஷர்மியும் உனக்கு அலங்காரம் பண்ணப் போறோம்”

“அலங்காரமா....எதுக்குக்கா....?” புரியாமல் பார்த்த மதியிடம், மங்களம் “இன்னைக்கு உனக்குப் பர்த்டே பங்கசன் மட்டுமில்ல...வளைக்காப்பு பங்கசனும் கூட...”

“வளைக்காப்பா...” ஆச்சிரியத்தில் வாயைப் பிளந்த மதியின் வாயை மூடிய லீலா,

“ஆம்...எல்லோரும் வந்தாச்சு. சீக்கிரம் வா...ஜல்தி...ஜல்தி...” அதற்கு மேல் யோசிக்க மதியை விடவில்லை. இருவரும் சேர்ந்து மதியை அலங்கரித்து வரவேற்பறைக்கு அழைத்து வந்தனர்.

பச்சைப்பட்டுடுத்தி மணப்பெண் போல் அலங்காரம் செய்து கொண்டு வந்தவளை கண்ணிமைக்காமல் பார்த்தான் விஷ்ணு. இதைப் போல் நன்றாக அவள் உடுத்தி அவன் பார்த்ததில்லை. சும்மாவே அவளிடம் மயங்குபவன், இத்தனை அலங்காரத்தில் அவளைக் கண்டதும் சொக்கித்தான் போனான். கொஞ்சமாக வளர்ந்திருந்த முடியை கிளிப்பில் அடக்கி அதில் பூ வைத்திருந்தவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. எப்படியிருந்தாலும் அழகாக இருந்தவளைக் கண்ணுக்குள் நிறைத்துக் கொண்டிருந்தவனை யுவனின் குரல் கலைத்தது.

“விஷ்ணு...நான் யாரென்று தெரிகிறதா?” அதுவரை மதியை ரசித்துக் கொண்டிருந்தவன் யுவனின் பேச்சில் புரியாமல் அவனைப் பார்த்தான்.

“அய்யகோ...உண்மையிலேயே என் நண்பனுக்கு என்னை அடையாளம் தெரியவில்லையே? இந்தக் கொடுமையை நான் எங்கே போய்ச் சொல்வேன்?” அந்தக் காலக் கதாநாயகன் மாதிரி நெற்றியில் கை வைத்து வசனம் பேசிய யுவன் முதுகில் ஓங்கி அடித்தவன், “எதுக்குடா...லூசு மாதிரிப் பேசிட்டு இருக்க...”

“நானா...லூசு...நீ தான்டா சுத்திலும் என்ன நடக்குதுன்னு தெரியாம மதி சிஸ்டரை சைட் அடிச்சிக்கிட்டு இருக்க. இதுல நான் லூசா...எல்லாம் என் நேரம்” போலியாக அலுத்துக் கொண்டவனைக் கண்டு சிரிப்பு வந்தது, அதை அடக்கிக் கொண்டவன்... மதியை விட்டு விலக மறுத்த கண்களை அவசரமாக வேறுபுறம் திருப்பினான். மதி அவனின் மனதை இனம் கண்டு கொண்டுவிட்டால்...என்ற பயமே அதற்குக் காரணம். அப்படியே அவள் தன் மனதைக் கண்டு கொண்டாலும் நல்லதே என்று கூட நினைத்தான். அப்பவாவது இந்தத் தவிப்பு நீங்குமல்லவா?

விஷ்ணுவின் தவிப்பை உணராத மதி கண்களைச் சுழற்றி அங்கே வருகை தந்தவர்களைப் பார்த்தாள். தன்னைப் போல் ஒருத்திக்காக இவ்வளவு பேர் வந்திருக்கிறார்களே என்று நினைத்தவள் கண்கள் கண்ணீரில் பளபளத்தது. எல்லோர் பார்வையும் தன் மீது இருப்பதைக் கண்டு அவளுக்குக் கண்ணீரையும் மீறி வெட்கம் வர, சங்கோஜமாக நெளிந்தாள்.

“அக்கா...எனக்கு வெட்கமா இருக்கு” லீலாவின் காதில் கிசுகிசுக்க, “நாங்க தானே இருக்கோம்...என்ன வெட்கம்... பேசாமல் வா...” லீலா செல்லமாக அதட்டியவள் அவளை அங்கிருந்த நாற்காலியில் உட்கார வைத்தாள்.

முதலில் யசோதா வந்து நலுங்கு வைத்து வளையல்கள் போட, இனிதாகச் சடங்கு ஆரம்பித்தது. அடுத்து ஆண்டாள், காவ்யபாரதி, மங்களம், லீலா என ஒவ்வொருவராக வந்து அவளை வாழ்த்தி வளையல்கள் போட, கடைசியில் விஷ்ணு அவளிடம் வந்தான். தன் கையிலிருந்த பரிசுப் பொருளை அவளிடம் நீட்டியவன், “ஹாப்பிப் பேர்த்டே மதி” அதிலிருந்த வளையலை எடுத்து மென்மையான அவள் கையில் அணிவிக்க அவனுக்கும் ஆசை தான். மலையளவு ஆசையிருந்து என்ன செய்ய...ம்...என்று பெருமூச்சு தான் அவனால் விட முடிந்தது.

“தேங்க்ஸ் சார்...” மதி வெள்ளந்தி சிரிப்புடன் வாங்கிக் கொள்ள அவனையும் அறியாமல் அவனுக்குள் குற்ற உணர்வு எழுந்தது. ‘என் மனதை தெரிந்து கொண்டால் என்ன செய்வாள்? இந்தச் சிரிப்புடன் என்னை ஏற்றுக் கொள்வாளா?’ மனதில் கேள்வி ஏழ மௌனமாய்ப் புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்தான்.

விழா முடிந்ததும் லீலாக் கிளம்ப மதியின் கண்கள் கலங்கியது. அதைக் கண்டு “மதி...அடுத்து குழந்தைப் பிறந்தா வரப் போறேன். அதுக்கு அப்புறமும் அடிக்கடி வந்து பார்த்துட்டுப் போறேன் என்ன...! எங்கே சிரி பார்ப்போம்” லீலாவின் பேச்சில் மதிக்குச் சிரிப்பு வர லேசாகச் சிரித்தாள். லீலா விடைப்பெற்றுச் செல்ல, மகளின் மேல்

அனைவரும் வைத்திருக்கும் பாசம் கண்டு மனம் நெகிழ்ந்தார் ஆண்டாள்.

“சரி...விஷ்ணு நானும் கிளம்பறேன்” யுவன் விடைபெற, “கொஞ்சம் இருடா...எங்க பேமிலி மெம்பர்சை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்” என்றபடி விஷ்ணு வீட்டுனுள் சென்றான்.

யுவன் வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அங்கே தோட்டத்தில் ஒரு இளம்பெண் சுற்றும் முற்றும் பார்த்தபடி எதையோ தேட இவனும் கண்களில் சுவாரசியம் தோன்ற அவளின் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான். நகர்ப்புறம் வாடை இல்லாத, அதற்காக முற்றிலும் கிராமம் என்று சொல்லவும் முடியாத தோற்றத்தில் அவள் இருந்தாள். முகத்தில் அறிவுக்களைச் சொட்டியது. அழகாகவும் அதே சமயம் கம்பீரமாகவும் இருந்தவள் அவன் அனுமதியில்லாமல் அவனின் மனக்கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். அதை அவனும் ஆரவாரத்துடன் வரவேற்கவே செய்தான்.

அவள் அருகில் கிடந்த இரும்புக் கம்பியைக் கொண்டு பள்ளம் தோண்டி அதில் அங்கே வேரோடு பிடுங்கிக் கிடந்த செடியை நட்டு வைத்தவள், அதற்கு நீர் ஊற்றி அதன் இலைகளை வாத்சல்யத்துடன் தடவிக் கொடுத்தாள். அவள் முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சி, நிம்மதி கண்டு யுவனுக்கு ஆச்சிரியமாக இருந்தது. செடியையே இவ்வளவு கண்ணும் கருத்துமாகப் பார்ப்பவள் நிச்சயம் குடும்பத்தையும் நன்றாகப் பார்த்துக் கொள்வாள் என்று எண்ணியவன், அந்தச் செடியாகத் தான் மாற எண்ணினான். நகரத்தின் நாகரீகத்தில் பிறந்து வளர்ந்த அவனுக்கு ஏனோ மண்வாசம் மாறாமல் பெண்மையின் இலக்கணமாய் இருந்தவளை நொடியில் பிடித்துப் போயிற்று.

“யுவன்...” விஷ்ணுவின் அழைப்பில் திரும்பியவன், அங்கே அவனின் பெற்றோர் இருப்பதைக் கண்டு மரியாதையுடன் வணக்கம் தெரிவித்தான். யுவன் விஷ்ணுவின் பெற்றோர்களை அவ்வளவாகப் பார்த்ததில்லை. அவர்கள் சென்னைக்கு வருவது அரிது. அப்படியே வந்தாலும்

இரண்டொரு நாளில் ஊருக்குப் போய்விடுவர். அதனால் அவ்வளவு பரிச்சயமில்லை. “அப்பா, அம்மா...இவன் தான் யுவன்...நான் அடிக்கடி சொல்வேனே?”

“ரொம்பச் சந்தோசம்...வீட்ல எல்லாரும் சௌக்கியமா? உங்க கூடப் பிறந்தவக எத்தனை பேரு?” யோகேந்திரன் யுவனிடம் விசாரிக்க, விஷ்ணு தங்கையைத் தேடி சுற்றும் முற்றும் கண்களை அலைய விட்டான். அங்கே செடியின் பக்கத்தில் நின்றிருந்த ஷர்மிளாவைக் கண்டதும், “ஷர்மி...” என்று அவளை அழைக்க, அவள் ‘என்ன...’ என்ற பார்வையுடன் அவனை நோக்கி வந்தாள். “இவள் என் தங்கை ஷர்மிளா...” விஷ்ணு அவளை அறிமுகப்படுத்த, யுவன் அவளைப் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தான். அவன் மனம் கவர்ந்தவள் தன் நண்பனின் தங்கையா? அதான் அவனின் நல்ல குணம் அவளிடமும் இருக்கிறது என்று பெருமையாக நினைத்தவன் ஷர்மிளா தான் தன் மனைவி என்று அந்தக் கணம் முடிவு செய்தான்.

யுவனைப் பார்த்து வணக்கம் சொன்ன ஷர்மிளா அவன் கண்ணில் தெரிந்த மின்னலைக் கண்டு கொஞ்சம் தடுமாறித் தான் போனாள். வீடு கல்லூரி என்று குறுகிய வட்டத்தில் வாழும் அவளுக்கு ஒரு ஆண்மகனின் ஆர்வப் பார்வை பற்றித் தெரியாது. முதன்முறையாக யுவனின் வெறிக்கும் பார்வையில் முகம் சிவந்தவள் அவனைப் பார்க்க வெட்கப்பட்டு நிலம் நோக்கினாள். அவளின் வெட்கம், முகச் சிவப்பு எல்லாம் யுவனுக்குப் புதிதாக இருக்க அப்படியே பார்த்துக் கொண்டிருக்க, விஷ்ணு அவனிடம் ஏதோ பேச வர தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் அவர்களிடம் விடைப் பெற்றான். ஷர்மிளாவிடம் கண்களால் விடைப் பெறத் தவறவில்லை. அவனின் துணிச்சல் கண்டு மனதுக்குள் ஆச்சிரியப்பட்டவள் பதிலுக்குக் கண்களால் விடை கொடுக்கவும் அவள் தயங்கவில்லை.

“அம்மா...அப்பா என்னை மன்னிக்கவே மாட்டாராம்மா?” கண்களில் ஏக்கத்துடன் கேட்ட மகளை நெஞ்சோடு அணைத்துக் கொண்ட ஆண்டாள், “நீ என்ன தப்பு செஞ்ச...அவர் மன்னிக்க...அவருக்கு என்னமோ ஆகிருச்சு

அதான் மதம் பிடிச்ச யானை மாதிரி வெறிக் கொண்டு ஆடுறார். அந்த மதம் குறைந்ததும் அவரே உன்னை வந்து பார்ப்பார் பாரு. எனக்குத் தான் இந்த மாதிரி நிலையில் உன்னை என் கூட வைத்துக் கொள்ள முடியவில்லையேன்னு ஆதங்கமா இருக்கு”

“அம்மா இங்கே நான் நல்லாயிருக்கேன். என்னை நல்லாக் கவனிச்சுக்கிறாங்க. நீங்க கவலைப்படாதிங்க” என்று அன்னையைத் தேற்றியவள், “ஆமாம் இன்னைக்கு வளைக்காப்புன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்? இல்லை பர்த்டேக்கு விஷ் பண்ணத்தான் வந்திங்களா?” அவளுக்கு அன்னையை இங்கே கண்டது ஆச்சிரியமாக இருந்தது.

“அதுவா...நேத்து மா... இல்ல...நம்ம விஷ்ணு தம்பி தான் நம்ம வீட்டுக்கு வந்து இன்னைக்கு உனக்கு வளைக்காப்பு...கட்டாயம் வரணும்ன்னு சொன்னாரு. அவருக்கே அவ்வளவு அக்கறை இருக்கும் போது பெத்தவ என் மனசு கேட்கல. தடுத்த உங்க அப்பாவை மீறித் தான் இங்கே வந்திருக்கேன். அவர் மனசும் சீக்கிரம் மாறும் மதி”

அன்னையின் வரவுக்கு விஷ்ணு தான் காரணமாக இருந்திருக்கிறானா? மதியின் மனம் நன்றியால் நிரம்பியிருந்தது. “சார்...ரொம்ப நல்லவங்க இல்ல” மகள் யாரைச் சொல்கிறாள் என்று யோசித்த ஆண்டாள் பின் அது விஷ்ணு என்று தெளிந்து, “ஆமாம் மதி...ரொம்ப நல்ல தம்பி தான்” அதற்குள் அங்கே யசோதா வர, “அத்தை எதுக்குத் தங்க வளையல் எல்லாம்? நீங்க பங்க்சனுக்கு வந்து என்னை ஆசிர்வதித்ததே பெரிசு”

“அட என்ன மதி நீ...உனக்கு செய்யாம வேறு யாருக்குச் செய்யப் போறேன்” யசோதாவின் பேச்சில் குழம்பியவளை விஷ்ணுவின் குரல் கலைத்தது.

“அம்மா...போகலாமா?” என்றபடி வந்தவன் அங்கே மதி இருப்பதைக் கண்டு பேசாமல் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

மதி அவன் அருகில் வந்து இருகரம் கூப்பிக் கண்களில் நீர் நிறைய, “என்னோட அம்மாவை கூட்டிக்கிட்டு வந்ததுக்கு ரொம்பத் தேங்க்ஸ் சார்” அவளின் கண்ணீர் அவனைப்

பதறத்தான் செய்தது. இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டு தன் உணர்வுகளை அடக்கியவன், புன்னகையுடன் அவளை நிமிர்ந்து பார்த்து,

“நீ அன்னைக்கு அழுதது பார்க்க சகிக்கல. அதான் உங்க அம்மாவை கூட்டிக்கிட்டு வந்தேன்” அவன் நகைச்சுவையில் சிரிப்பு வந்த போதும் அதை அடக்கியவள்,

“நீங்க எனக்குச் செய்வதற்கு எல்லாம் எப்படிக் கைம்மாறு செய்யப் போறேனோ தெரியல?”

“உனக்கு என்ன...எனக்கு ஏதாவது செய்யணும் அவ்வளவு தானே? நேரம் வரும் போது நானே உன்னிடம் கேட்பேன் அப்போ நீ கட்டாயம் செய்வியா?”

“கட்டாயம் செய்வேன்” என்றவள் மனதில் நிறைந்த மகிழ்ச்சியாலோ நன்றியாலோ அவன் கையை அவளாக எடுத்து அதன் மேல் தன் கையை வைத்து, “பிராமிஸ்...! இப்பொழுதாவது நம்புகிறீர்களா?” தலையைச் சாய்த்து புன்னகையுடன் வினவியவளின் புன்னகையில் தன்னை மறந்தவன், அவளின் செய்கையில் முற்றிலும் தன்னைத் தொலைத்தவனாய் நின்றிருந்தான்.

அத்தியாயம் : 12

“விஷ்ணு...என் கணவரோட அண்ணன் இறந்து விட்டதா ஃபோன் வந்தது. நான் இப்பவே ஊருக்குக் கிளம்பணும்” காவ்யபாரதி பதற்றத்துடன் விஷ்ணுவிடம் சொல்ல, “அதுக்கென்ன மேடம் நீங்க தாராளமா போயிட்டு வாங்க. ரெண்டு நாளைக்குக் கேஸ் ஒண்ணுமில்லை”

“அதுக்கில்லை விஷ்ணு...நான் கிளம்பிப் போயிட்டா...மதி தனியாக இருக்கணுமே...அதுவும் இந்த மாதிரி நேரத்தில் எப்படி...?”

“நான் அவளோட அம்மா கிட்டப் பேசி இங்கே வரச் சொல்றேன். நானும் கூட இருந்து பார்த்துக்கிறேன். நீங்க கவலைப்படாதிங்க”

“தேங்க்ஸ் விஷ்ணு...” அவர் அவசரமாகப் புறப்பட்டுச் செல்ல, விஷ்ணு ஆண்டாளிடம் விசயத்தை எடுத்துக் கூறி அவரை மதிக்குத் துணையாக இங்கே வந்திருக்குமாறு அழைத்தான். அதைக் கேள்விப்பட்ட ஸ்ரீனிவாசன் கண்டிப்புடன் மனைவி போவதைத் தடுக்க...ஆண்டாளோ அதை அலட்சியப்படுத்தியவராய் மகளின் துணைக்குச் சென்றார். முதல்முறை மீறும் போதுதான் பயம் வரும். இது இரண்டாம் முறை என்பதால் இன்னமும் தைரியம் வரப் பெற்றவராய் துணிவுடன் சென்றார்.

“அம்மா இந்த வளையல்கள் நல்லாயிருக்கு இல்ல” மதி, லீலா பரிசளித்த வளைக்காப்பிற்கென்றே பிரேத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஐம்பொன்னாலான வளையல்களைக் கையில் போட்டுக் கொண்டே ஆண்டாளைப் பார்த்து வினவ, “உனக்கு எது போட்டாலும் அழகு தான் கண்ணே...” மகளுக்குத் தாய்மைக் கொடுத்த அழகைக் கண்டு பூரித்தபடி ஆண்டாள் சொல்ல... “ம்...காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு...” கண்சிமிட்டி சிரித்த மதியின் புன்னகை முகத்தைப் பார்த்து மனம் நிறைந்தவராய் நின்றிருந்தார் ஆண்டாள்.

“அம்மா...” மதியின் உரத்தக் குரலில் அவளைப் பார்த்தவர் ‘என்ன?’ என்பது போல் கண்ணால் வினவ... “இது...” கைகளை உயர்த்திக் காண்பித்தாள். விஷ்ணு வாங்கிக்

கொடுத்த தங்கவளையல்கள் தான் அவை. “இவ்வளவு பவுனில்...விலையில்...ஏன்ம்மா வாங்கிக் கொடுத்திருக்காங்க? ரொம்ப அதிகமில்லையா?”

முத்தும் மரகதமும் பதித்து அழகாக இருந்த வளையல்கள் ஒவ்வொன்றும் சுமார் ஒன்றரைப் பவுன் இருக்கும். அதில் மொத்தம் நான்கு வளையல்கள் இருந்தது. விஷ்ணு அதை எடுக்கும் போதே ஆண்டாள் தடுக்கத் தான் செய்தார். ஆனால் அவன் கேட்டால் தானே.

“எனக்கென்று தனிப்பட்ட செலவுகள் கிடையாது. என் வருமானமெல்லாம் சேமிப்பில் தான் இருக்கிறது. அதும் போக அப்பா கொடுக்கும் பணமும் சேமிப்பில் தான் முடங்குகிறது. முதல் முறையாக என்னவளுக்கு வாங்குவதில் எதற்கு அத்தை சிக்கனம்? அவளுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்று என் மனதில் ஆசைகள் இருக்கிறது தெரியுமா? அதை நினைக்கும் போது இதெல்லாம் ஒண்ணுமில்லாதது. உங்கள் கவலை என்னவென்று புரியுது...மதி கேட்டால் என்ன சொல்லி சமாளிப்பது என்பது தானே...அதை என்னிடம் விட்டு விடுங்கள் நான் பார்த்துக்கிறேன்”

விஷ்ணு கூறிய போது இப்படி ஒருவன் கிடைக்கத் தன் மகள் புண்ணியம் செய்திருக்க வேண்டுமென்று நினைத்தார். அதை இப்பொழுது மகளிடம் எவ்வாறு கூறுவது? என்று முழித்துக் கொண்டிருக்கும் போதே விஷ்ணு அங்கே வர... “இதோ அவரே வந்து விட்டார்...அவரிடமே கேட்டுக் கொள்” ஆண்டாள் நைசாக நழுவி கொண்டார்.

“என்ன...என்னிடம் கேட்கணும் மதி?” உல்லாசப் புன்னகையுடன் வினவியவனின் புன்னகை... மதியின் பதிலில் அப்படியே உறைந்து போயிற்று.

“சார்...எதற்காக இத்தனை விலையில்...காஸ்ட்லியா...அதுவும் தங்க வளையல்கள் தேவையா?”

“அது வந்து...வந்து...ஆங்...என் அம்மா மட்டும் தங்க வளையல் போட்டாங்களே அதை மட்டும் நீ ஏத்துகிட்ட. அது

போல் தான் இதுவும்” ஏதோ பதில் சொல்ல வேண்டுமென்று கூறியவன்...தப்பித்த நினைவில் ‘ஊப்...’ என்று மூச்சை ஆழ்ந்து இழுத்து விட்டான்.

“அவங்க...அத்தை...வந்து...” விஷ்ணு சொன்னதை ஆட்சேபிக்கும் பொருட்டுப் பேச எண்ணியவள் மனக்கண்ணில் யசோதாவின் அன்பு நிறைந்த முகம் வர என்ன பேசுவது சொல்வது என்று தெரியாமல் அப்படியே அவன் முகம் பார்த்து நின்றிருந்தாள்.

“அத்தை போட்டதை ஏத்துக்கிட்டதைப் போல்...அத்தை மகன் போட்டதையும் ஏத்துக்க என்ன தடை...ம்...?” குறும்பாக வினவியவனிடம் மறுத்துப் பேச எண்ணி வாய் திறந்தவள் அவன் அலைப்பேசி ஒலிக்க...ஒன்றும் பேசாமல் அவனையே பார்த்தாள்.

விஷ்ணு அலைப்பேசியைக் காதில் வைத்தவாறே, “ரொம்ப யோசிக்காதே மதி...போய் நிம்மதியாகத் தூங்கு என்ன...? ஏதும் அவசரமென்றால் என்னைக் கூப்பிடு” என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் நடந்தான். அவளுக்கு உதவுவதற்கென்று அவன் இங்கே அலுவலகத்திலுள்ள அறையில் தான் தங்கியிருந்தான்.

விஷ்ணு சொன்னதைக் கேட்டு மனதுக்குள் குழம்பிக் கொண்டிருந்தவளை மேலும் யோசிக்க விடாமல் வயிற்றில் சுளீரென்ற வலி மின்னல் போலத் தோன்ற, அவளின் கவனம் அதில் சென்றது. என்ன வலி இது? என்று அவள் யோசிக்கும் போதே அது நின்று விட...மேற்கொண்டு யோசிக்காமல் உறங்க சென்றாள். நடுஇரவில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவள் மீண்டும் வயிற்றில் சுண்டி இழுத்தார் போன்று வலி ஏற்படவும் திடுக்கிட்டு முழித்தாள். ‘என்ன இது இப்படி வலிக்குது?’ மனதுக்குள் எண்ணியவள் அம்மாவை எழுப்பினாள்.

“அம்மா வயிற்றில் வலி விட்டு விட்டு வருவது போலிருக்கும்மா?”

“டெலிவரிக்கு இன்னமும் நாளிருக்கே...அதற்குள் என்ன வலி...கொஞ்சம் இரு...நான் போய்க் கசாயம் போட்டு எடுத்துட்டு வர்றேன். சூட்டு வலியாயிருந்தா மட்டுப்படும்.

இல்லைன்னா ஹாஸ்பிட்டல் போகலாம். நீ கவலைப்படாதே?" மகளிடம் அனுசரணையாகப் பேசினாலும் மகளின் வாடிய முகம் கண்டு அவருக்கும் மனதுக்குள் ஏதோ பிசைவது போலிருந்தது. ஐந்தே நிமிடங்களில் கசாயம் கொண்டு வந்தவர் மகளைக் குடிக்கச் செய்து, "இப்போ எப்படியிருக்கு மதி?"

"ம்...பரவாயில்லை...நீங்க போய்ப் படுங்கம்மா..." என்றவாறு படுக்கப் போனவளை தடுத்து தன் மடியில் அவளைப் படுக்க வைத்தவர், "நீ தூங்குடா..." என்று அவள் தலையை மென்மையாக வருடிக் கொடுத்தார். அவரின் அனுபவம் வாய்ந்த மனம் இன்று அவளுக்குக் குழந்தைப் பிறந்து விடும் என்று எண்ணியது. ஒரு புறம் குழந்தை பிறப்பது மகிழ்ச்சி என்றாலும், மறுபுறம் மகளின் எதிர்காலம் அவரைப் பயமுறுத்தியது. என்ன தான் விஷ்ணு பார்த்துக் கொள்வான் என்று நம்பிக்கை இருந்தாலும் அதற்கு மதியின் ஒத்துழைப்பும் வேணுமே என்ற எண்ணமே அவரைப் பயமுறுத்தியது. ஏதேதோ எண்ணங்களில் சிக்குண்டவர் காதில் மீண்டும் மதி வலியால் முனங்குவது விழ அவசரமாகப் பார்வையை அவள் மேல் பதித்தார்.

"அம்மா...ரொம்ப முடியலம்மா...ஹாஸ்பிட்டல் போயிர்றலாம்" ஆண்டாள் உடனடியாக விஷ்ணுவை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்.

"அய்யோ...என்னால் தாங்க முடியல. என்னைக் கொன்னுடுங்களேன்...குழந்தையோட நானும் செத்துப் போறேன். நானெல்லாம் உயிரோடு இருந்து என்ன பண்ணப் போறேன்" வலி தாங்க முடியாமல் ஏதேதோ பிதற்றியவள் இறுதியில் தன் அவல வாழ்வின் மேலுள்ள விரக்தியில் உயிரை விடக் கூடத் தயாராக இருந்தாள்.

"இங்கே பாருங்க சார்...கர்ப்பவாய் திறந்து விட்ட போதிலும் உங்க மனைவிக்கு வலியைத் தாங்கிக் கொண்டு பிள்ளையைப் பெறும் சக்தியில்லை அதனால ஆபரேசன் பண்ணலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கோம். நீங்க என்ன சொல்றிங்க?" மருத்துவர் விஷ்ணு தான் கணவன்

என்றெண்ணி அவனிடம் கேட்ட போது பதிலேதும் கூற இயலாதவனாய் அமைதியாய்த் தலையையாட்டினான்.

மதியின் வலிக் கண்டு அவன் அரண்டு போயிருந்தான். பிள்ளைப் பெறுவது என்பது இத்தனை துன்பம் தரக் கூடியதா? இவ்வளவு வலி வேதனைப் பொறுத்து தான் அன்னை என்பவள் தன் மகவை பூவுலகத்தில் பிரசவிக்கிறாளா? தன்னைப் பெற்ற அன்னையின் மேல் அந்த நிமிடம் எல்லையில்லாப் பாசம் பொங்கியது. அதைவிட இதோ தன் மகவுக்காகப் போராடுகிறாளே அந்தத் தாயின் மேல் காதலுக்கும் மேல் ஏதோ ஒரு அன்பு பெருகியது.

“மதி உனக்கு ஒண்ணுமில்லை...நல்லபடியாகப் பிள்ளைப் பெத்து வருவ...” ஆண்டாளின் குரல் விஷ்ணுவின் எண்ணவோட்டத்தைத் தடை செய்தது. அவர் குரல் வந்த திசையில் பார்த்தவன், ஒரு கணம் ஆடித்தான் போனான்.

அங்கே ஸ்டெச்சரில் சத்திரச் சிகிச்சைக்கான உடையில் வாடிய மலர் போல் படுத்திருந்த மதியைக் கண்டதும் அவனுள்ளும் பயப்பயந்து உருண்டது. அதிலும் அவள் கதறிய கதறல்...அவளின் கண்ணீர் எல்லாம் அவன் மனத்தடையை அகற்ற நேரே அவளை நோக்கிப் போனவன், அவள் கையைப் பிடித்துத் தன் கைகளுக்குள் பொத்தி தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்து வைத்தவன், அவளின் கண் பார்த்து,

“ஷம்மு...எனக்குப் பயமாயிருக்கிறது. என்னை விட்டுப் போய்விடாதே. எனக்கு நீ வேணும். நீயென்றால் நீயும் குழந்தையும்...நீ இல்லையென்றால்...அப்படி ஒரு வாழ்வை என்னால் நினைச்சுப் பார்க்க முடியவில்லை. அப்படி ஏதேனும் உனக்கு நேர்ந்தால் அந்த நொடி நானும் உன்னோடு வந்துருவேன். ப்ளீஸ் ஷம்மு... எனக்காக நீ நல்லபடியாகக் குழந்தை பெத்து வருவியா? உனக்காக நான் காத்துக்கிட்டுயிருப்பேன் என்பதை நியாபகத்தில் வைச்சுருப்பியா? நீ என் உயிர்...ஆம் ஷம்மு...நான் உன்னைக் காதலிக்கிறேன். உன்னோடு வாழ ஆசைப்படுகிறேன். காலம் முழுவதும் உன் கைப்பிடித்து

நடக்க ஆசைப்படுகிறேன். வருவாயா கண்மணி...உன் வரவுக்காக நான் காத்திருப்பேன். என்னை ஏமாற்றிவிடாதே கண்மணி...”

அவளை இழந்து விடுவோமோ என்ற எண்ணமே அவன் மனதை வியாபித்து இருக்க...அவனையும் அறியாமல் தன் மனதில் உள்ளவற்றை அவளிடம் கொட்டினான். இறுதியில் அழுகையில் உடைந்தவன் அவள் முகத்தோடு தன் முகத்தை வைத்து அழுத்தி, அவள் நெற்றியில் முத்தமிட்டு, “வந்துவிடு கண்மணி... உனக்காக ஒரு உயிர் துடித்துக் கொண்டிருப்பதை மறந்து விடாதே. ப்ளீஸ் எனக்காக ...”

அவனின் கண்ணீர் அவள் கன்னத்தில் வழிந்து அவள் கழுத்தை நனைத்தது. அவள் தன் வலியைக் கூட மறந்து...இமைக்கவும் மறந்தவளாய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனின் கண்ணீர்...அவன் பேசிய வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல அவன் மனதில் உள்ள உணர்வுகள்...அவனின் செல்ல அழைப்பான ஷம்மு... எல்லாம் சேர்ந்து அவளுள் ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வை உண்டாக்கியது.

ஆண்களைக் கண்டால் வெறுக்கும் அவள் மனம்...அவளுக்காகக் கண்ணீர் விட்டு அழும் இந்த ஆண்மகனைக் கண்டு கலங்கியது. அந்தக் கலக்கத்திலும் ஏதோ ஒரு நிம்மதி அவள் மனதை ஆட்கொள்ள, கண்களை அழுந்த மூடிக் கொண்டாள். விடாமல் அவள் முகத்தில் விழுந்த அவன் கண்ணீர் அவள் யோசனையைத் தடை செய்ய, அவனை ஆறுதல் படுத்த வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவள் மனதை ஆக்கிரமிக்க அவளையும் அறியாமல் அவளது வலது கை மெல்ல எழும்பி அவன் பின்னந்தலையின் முடியைப் பற்றி இழுத்து அவன் முகத்தை நிமிர்த்தி...அவன் கண்களை நேருக்குநேராய் சந்தித்து, “நான் பிழைத்து வருவேன். கவலைப்பட வேண்டாம்...” திக்கித்திணறி வலியைப் பொறுத்துக் கொண்டு கூறியவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

“நிச்சயமாய்ப் பிழைத்து வருவாய்...” அவளின் புன்னகையில், வார்த்தையில் நிம்மதியடைந்தவனாய் கூறியவன் தானும் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

“சார்...அவங்களைச் சீக்கிரம் ஆபரேசன் தியேட்டர் கூட்டிக்கிட்டு போகணும். நீங்க வழியை விடுங்க” செவிலிப்பெண் அவனைப் பார்த்துக் கூறவும் புன்னகை மறந்தவனாய் அவளின் கையைப் பற்றிக் கொண்டே ஆபரேசன் தியேட்டர் வாயில் வரை விட்டவன், அவளின் பயந்த முகம் கண்டு, “தைரியமாய் இருக்கணும்... உனக்காக நானிருக்கிறேன்...எந்த நேரத்திலும்...எப்பொழுதும்...” மீண்டும் அவள் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு அனுப்பி வைத்தவன் அவள் முகம் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுள் புதிதாய் ஒரு கலக்கம் வந்து குடிபுக தன் ஆற்றல் எல்லாம் வடிந்தார் போல் தோன்ற அங்கே இருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்தான். ‘என் ஷம்முக்கு எதுவும் ஆகாது...ஆகக் கூடாது...கடவுளே எதற்காகவும் உன்னை அழைக்காதவன் இன்று என் ஷம்முக்காக உன்னை அழைக்கிறேன்... வேண்டுகிறேன்... எனக்கு வேறு எதுவும் வேண்டாம். அவள் மட்டும் போதும்...கருணைக் காட்டப்பா...’ கண்களை மூடிக் கொண்டு மனதில் ஆண்டவனைப் பிரார்த்தித்தான்.

“மாப்பிள்ளை...” ஆண்டாளின் குரலில் கண்களைத் திறந்து அவரைப் பார்த்தவன் அவரின் விளிப்பில் திடுக்கிட்டான். “அத்தே...தம்பின்னே சொல்லுங்க”

“அதான் மதிக்கிட்டே எல்லாம் சொல்லிட்டிங்களே இனியும் ஏன் தம்பின்னு சொல்லணும்?” ஆண்டாளின் கேலிக் குரலில் தான் விஷ்ணு தன்னிலை உணர்ந்தான். தான் அவளிடம் உளறிக் கொட்டியதையும் உணர்ந்தான். அதை இப்பொழுது நினைக்கும் பொழுது...அவளின் எண்ணம்...மனம்...பற்றிய அச்சம் விருட்சமாக அவன் மனதில் எழுந்தது.

“அது ஏதோ உணர்ச்சி வேகத்தில் பேசிவிட்டேன். அவள் என்னைத் தவறாக நினைப்பாளோ? என்னை

வெறுத்துடுவாளோ?” மனமும் கண்களும் கலங்க கேட்டவனைப் பார்த்து ஆண்டாளுக்குப் பாவமாக இருந்தது.

“எப்படியும் ஒரு நாள் மதிக்கும் தெரிந்து தானே ஆக வேண்டும்...அது இன்றுன்னு நினைச்சுக்கோங்க. உங்களைப் போல் ஒருவரை அவள் வெறுப்பாளா...? வெறுக்கத்தான் மனசு வருமா? கூடிய சீக்கிரம் அவள் உங்கள் மனதைப் புரிந்து கொள்ளத்தான் போகிறாள். ஆனால் ஒண்ணு...அவகிட்ட பயந்துட்டு இனியும் உங்கள் மனதை மறைக்காதீங்க...இனி உங்க ஒவ்வொரு செயலிலும் அவ மேல நீங்க வச்சிருக்கிற காதலை அவளுக்கு உணர்த்துங்க. கல்லும் கரையும்...கனியாத மனமும் கனியும்...அவளின் மனமும் மாறும் பாருங்க” என்று அவனைச் சமாதானப்படுத்தியவர், “நீங்க கவலைப்படுவது போல்... பயப்படுவது போல் மதிக்கு ஒண்ணுமாகாது. இன்றைய காலக்கட்டத்தில் ஆபரேசன் என்பது சாதாரணம் விசயம். நீங்க அவளிடம் மனம் விட்டுப் பேசிக்கிட்டு இருந்ததால நான் இடையில் தலையிடல. தைரியமாக இருங்க” அவனுக்குத் தைரியமூட்டினார்.

அந்நேரம் அங்கே செவிலிப்பெண் வர பேச்சு நின்றது. செவிலிப்பெண் காட்டிய காகிதத்தில் கணவன் என்ற இடங்களில் எல்லாம் விஷ்ணு கையெழுத்திட்டான். அந்த ஒற்றைக் கையெழுத்து அவனுக்கும் அவளுக்குமான பந்தத்தை இன்னும் பலப்படுத்த போவது தெரியாமல்...அறியாமல் கையெழுத்திட்டான் அவன்.

அத்தியாயம் : 13

“என்னங்க...மதிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு...” மனைவியின் உற்சாகக் குரலைக் கேட்டதும் ஸ்ரீனிவாசன் ஒருநிமிடம் அப்படியே சிலையாய் நின்றிருந்தார். “என்னங்க நான் சொல்றது காதில் விழுதா?” ஆண்டாள் கத்தியதும் தான் சுதாரித்தவராய் “ம்...விழுது சொல்லு...” எரிச்சலுடன் வார்த்தைகள் வெளியில் வந்தன.

“குழந்தை அப்படியே நம்ம மதி பிறந்தப்போ இருந்த மாதிரியே இருக்கான். சிரிக்கும் போது அச்சு அசல் மதியே தான். உங்களுக்கு நியாபகம் இருக்கா...அவள் பிறந்தப்போ ஹாஸ்பிட்டல்ல எல்லாருக்கும் இனிப்புக் கொடுத்து நீங்க கொண்டாடினீங்களே... மகாலக்ஷ்மியே பிறந்திட்டான்னா எப்படிச் சந்தோசப்பட்டிங்க...” பழைய நினைவில் ஆண்டாளின் கண்களில் நீர் கோர்க்க...தன்னை சமாளித்துக் கொண்டு, “அப்படி அவளைக் கொண்டாடிய நீங்க இப்படிப் பாராமுகமா இருக்கிறது எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு” ஆண்டாள் அவரின் பழைய நியாபகக் கங்குகளை விசிறி விட அது தீயாய் பற்றி அவர் மனதை எரிக்கத் தொடங்கியது. ஒன்றும் பேசாமல் தொலைப்பேசியை வைத்தவர் பழைய நியாபகத்தில் அப்படியே நாற்காலியில் அமர்ந்தார். அவர் மனதுக்குள் போட்டு வைத்திருந்த இரும்புத்திரை அந்த நிமிடம் உடைவது போல் அவருக்குத் தோன்றியது. மூத்த மகவு மீது பாசம் பொங்கி வழிய அவளைப் பற்றிச் சிந்தித்தவாறு அமந்திருந்தார்.

முதன்முதலில் ரோஜாப்பூ குவியல் போல் மெத்தென்று இருந்த மகளைக் கையில் வாங்கிய பொழுது மனதில் ஏற்பட்ட உவகைக்கு அளவேயில்லை. எதையோ சாதித்த... வென்று விட்ட உணர்வு அவரை ஆட்கொள்ள மகளை முத்தமிட்டது இன்றும் இனிய நிகழ்ச்சியாய் அவர் மனதுள் பொக்கிசமாய்ப் புதைந்திருந்தது. மகளின் பட்டு போன்ற ஸ்பரிசம் இன்னமும் அவர் நியாபக அடுக்கிலிருக்க, அந்த ஸ்பரிசத்தை இப்பொழுதும் அவர் உணர்ந்தார். செல்ல மகளைக் கீழே விடாமல் எப்படியெல்லாம் தாங்கினார். எளிய வருமானத்திலும் மகாராணி போல் மகளை வாழ

வைத்த தான் ஏன் தன் செல்ல மகளிடம் இப்படிக் காட்டுமிராண்டித்தனமாய் நடந்து கொண்டேன்? என்று சுய அலசலில் ஈடுபட்டார்.

‘யாருக்காக மகளை ஒதுக்கினேன்? யாருக்கு பயந்து அப்படி நடந்து கொண்டேன்? இந்தச் சமுதாயத்துக்குப் பயந்து மகளை ஒதுக்கியிருந்தால்... நாளைக்கு எனக்கு ஏதேனும் ஒன்றென்றால் இந்தச் சமுதாயமா என்னைப் பார்க்கப் போகிறது. தள்ளி நின்று தூற்றத் தான் செய்யும்...கேலி பேசத் தான் செய்யும். இதே இது...என் ரத்தம்...என் செல்ல மகள் என்னை அப்படி விட்டுவிடுவாளா? தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்? நான் மட்டும் ஏன் அவ்வாறு பயந்து நடந்து கொள்ள வேண்டும்? வேண்டாம் யாருக்காவும் பயப்பட வேண்டாம்... எனக்கு என் செல்ல மகள் வேண்டும்... நெஞ்சிலும் தோளிலும் சுமந்த என் செல்ல மகள் வேண்டும்... என்னை விடச் சிறியவன்...அவன் பேர் என்ன...ஆங்...விஷ்ணு...அவனுக்கு உள்ள தைரியம் கூட எனக்கில்லையா என்ன? என்ன பெரிய சமுதாயம்...கேள்விக் கேட்டால்... என் மகள் பரிசுத்தமானவள் என்று தலை நிமிர்ந்து சொன்னால்...அடுத்த கணம் எங்களை மறந்து விட்டு வேறு ஒருவரைப் பற்றிப் பேசப் போய்விடும். குனிய குனியத் தான் குட்டும். நிமிர்ந்து நின்றால் அது பயந்து விலகிப் போய்விடும். கண்ணே...மதிக்குட்டி...அப்பா உன்னைப் பார்க்க வருகிறேன்ம்மா’ மனதுக்குள் முடிவு எடுத்தவர் அடுத்தக் கணம் சுவாதியுடன் மருத்துவமனைக்குக் கிளம்பிவிட்டார்.

மதிக்குக் குழந்தைப் பிறந்த விவரத்தை எல்லோருக்கும் சொல்ல... அவர்கள் எல்லோரும் மதிக்குத் தங்கள் வாழ்த்தைத் தெரிவித்தனர். அந்த வாழ்த்துக்களை அமைதியாய் ஏற்றுக் கொண்ட மதி தன்னருகில் உறங்கிக் கொண்டிருந்த மகனை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். புருவங்கள் முடிச்சிட அவள் இருந்த விதம் அவள் ஏதோ தீவிர யோசனையில் இருப்பதை உணர்ந்தியது.

“மதி என்னடா யோசனை?” ஆண்டாள் மகளிடம் அன்பாய் வினவ, “அம்மா...குழந்தை யார் சாயலில் இருக்குது...அந்த சிபியின் சாயலிலா? இல்லை மத்த இரண்டு பேர் சாயலிலா? இல்லை மூவரின் சாயலும் கலந்தா? எல்லோரும் என்னைக் கேலி செய்வாங்களா? எனக்குப் பயமா இருக்குதும்மா...” குரல் நடுங்கக் கேட்டவளை தேற்றும் வகை அறியாமல் ஆண்டாள் திகைத்து நிற்க, எங்கிருந்து தான் வந்தானோ விஷ்ணு...வந்தவன் குழந்தையைத் தன் கையில் வாகாய் ஏந்திக் கொண்டு,

“இன்னொரு முறை இப்படிப் பேசினேன்னு வை...ஆபரேசன் பண்ணிய உடம்புன்னு கூடப் பார்க்காமல் அப்படியே அறைஞ்சிடுவேன்... அறைஞ்சு. இவன் என் பிள்ளை...நம் பிள்ளை... என்ன நான் சொல்ல வர்றது புரிஞ்சிச்சா? இவன்கிட்ட என் சாயலைத் தேடு... உன் சாயலைத் தேடு... அதை விட்டு விட்டு எவன் எவன் சாயலையோ தேடுற முட்டாள். இதோ இவன் சிரிப்பை பார்த்தால்...உன்னைப் போலில்லை...இதோ இவன் பார்வை என்னைப் போலில்லை... நம் குழந்தையை நம் குழந்தையாய் பார்” விஷ்ணுவின் வார்த்தையில் திகைத்துப் போய்ப் பார்த்தவள்...மறுநொடி அவன் பேச்சின் அர்த்தம் புரிந்து மனம் நெகிழ அவனைப் பார்த்தாள்.

‘பார்க்கிறதைப் பார்...முட்டைக்கண்ணை உருட்டிக்கிட்டு...இப்படி அப்பாவியாய் பார்த்துப் பார்த்து என்னை உயிரோடு கொல்லாதடி’ அவளின் பார்வையை உணர்ந்தவனாய் மனதுக்குள் செல்லமாக அவளை வைதான்.

வெளியில் நின்றிருந்த ஸ்ரீனிவாசன் விஷ்ணுவின் பேச்சில் மனம் குன்றி வெட்கியவர்... ஒரு நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு உள்ளே நுழைந்தவர் நேரே மகளிடம் தான் சென்றார். அவளின் கால் பக்கம் அமர்ந்தவர் அவள் கால்களைப் பிடித்துக் கொண்டு, “மதிக்குட்டி....இந்தப் பாவி அப்பாவை மன்னித்து விடம்மா...உனக்கு நான் செய்த துரோகத்திற்கு இந்த ஜென்மத்தில் எனக்கு மன்னிப்பே கிடையாது” கண்ணீர் விட்டவரை எப்படிச் சமாதானம் செய்வதென்று தெரியாமல் மதி அவரைப் பார்த்துப் பதறி

எழ முயல, ஆபரேசன் பண்ணிய உடல் சட்டென்று எழுந்து உட்கார ஒத்துழைக்கவில்லை. ஸ்ரீனிவாசனோ காலால் எட்டி உதைத்து வீட்டை விட்டு வெளியில் தள்ளி விட்ட செல்ல மகளிடம் அவளின் காலைப் பிடித்துக் கொண்டு மன்னிப்பை யாசித்துக் கொண்டிருந்தார்.

“அப்பா...நீங்க போய் என்னிடம் மன்னிப்பெல்லாம்...வேண்டாம். உங்களை மன்னிக்கும் அளவுக்கு எனக்கு வயதில்லை. இருக்கிற பாவம் போதாதா? நீங்கள் வேறு என் காலைப் பிடித்துக் கொண்டு...ம்ப்ச் விடுங்கப்பா”

“இல்லை மதி என்னை மன்னிச்சுடும்மா. உன்னை அலைக்கழித்த பாவி நானம்மா. இனி நீ எங்கேயும் போகத் தேவையில்லை. டிஸ்சார்ஜ் ஆனதும் நம் வீட்டிக்குப் போயிறலாம்” ஸ்ரீனிவாசன் பேசியதை நம்ப முடியாமல் ஆண்டாள் பார்த்துக் கொண்டிருக்க, “என்ன ஆண்டாள் நான் சொல்வது சரிதானே?”

“அப்பா...” மதி அவரின் கையைப் பிடித்துக் கொண்டு கலங்க, விஷ்ணுவோ அவரின் மனமாற்றத்தை ஆச்சிரியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். அதை விட மதியின் மலர்ந்த முகம் கண்டு அவன் மனமும் நிறைந்திருந்தது.

“ம்...இப்போத்தான் வாழ்க்கையில் முதல்முறையாக சரியாச் சொல்லியிருக்கிங்க” கணவனுக்குப் பாராட்டை அள்ளி வழங்கினார் ஆண்டாள்.

“இங்கே பாருடா இத்தனை வருடத்தில் இன்று தான் முதன்முறையாகப் பொண்டாட்டி இடத்திலிருந்து வரும் முதல் காம்பிளிமென்ட்...” மனைவியைக் கிண்டலடித்துச் சூழ்நிலையை மாற்றியவர்....விஷ்ணுவின் கையில் இருந்த பேரனின் மேல் தன் பார்வையைப் பதித்தார்.

“தம்பி... என்னை மன்னிச்சுடுங்க...” அவனிடம் மன்னிப்பை வேண்டியவர், “என் பேரனை என்னிடம் கொடுங்க” என்று குழந்தையைக் கேட்டு வாங்கி, குட்டிப்பயலை கொஞ்ச ஆரம்பித்தார். தன் பேரனைத் தவிர வேறு எதுவும் அவர்

கண்ணில் படவில்லை. எல்லோரும் அதை மனநெகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தந்தை வந்த சந்தோசத்தில் விஷ்ணு பத்தின யோசனை மதிக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டது. அவனின் வார்த்தைக் கேட்டுக் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தவளையும் தந்தையின் வரவு முற்றிலும் மாற்றி விட்டது. விஷ்ணுவைப் பற்றிய அவளின் நிலை என்ன? என்று மீண்டும் அவளை யோசிக்கச் செய்யவென விலாசினியின் வருகை அமைந்தது.

“அடேடே குட்டிப்பயல் என்ன சொல்கிறான் மதிம்மா...” அட்டகாசமாகக் கேட்டுக் கொண்டே வந்த யுவனைத் தொடர்ந்து மதியின் ஒத்த வயதுடைய பெண்ணொருத்தியும் உடன் வந்தாள். நவநாகரீக யுவதியாகக் காணப்பட்ட அவள் அழகில் அந்தத் தேவலோக மங்கையரை விட அழகாய் இருந்தாள்.

“வாங்கண்ணா...” மதி அவனை வரவேற்க...

“வாடா எப்போ ஃபோன் பண்ணினேன்...நீ எப்போ வர்ற?” யுவனை வரவேற்ற விஷ்ணு அவனுடன் வந்த யுவதியுடம், “வாங்க விலாசினி...” என்று வரவேற்றதோடு முடித்துக் கொண்டான்.

“யுவன் உனக்குக் குழந்தையைத் தூக்கிப் பழக்கமிருக்கா?” கேட்டுக் கொண்டே குட்டிப்பையனை யுவனின் கையில் விஷ்ணு வைக்க... “தெரியலன்னா என்ன பழகிக்கிட்டாப் போச்சு” சொல்லியவாறு யுவன் சின்னவனைக் கையில் வாங்கிக் கொண்டான்.

“வினி...குட்டிப்பயல் என்ன அழகாகயிருக்கிறான்... இங்கே பாரேன்” யுவனின் கேள்வியில் மதி திரும்பி அந்த விலாசினியைப் பார்த்தாள். அந்த விலாசினியோ அண்ணனின் கேள்விக்கு, “ம்...ம்...” என்று பதிலளித்தவள், தன் பார்வை முழுவதும் விஷ்ணுவின் மேலேயே பதித்திருந்தாள். மறந்தும் அவள் வேறு எவரையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. அவளின் பருகி விடும் பார்வையில் இருந்த காதல், தாபம் மதிக்கு புரிய முதன்முறையாகத் திடுக்கிட்டாள். ஒருவேளை விலாசினிக்கு விஷ்ணு மேல்

காதலோ...நினைக்கும் போதே மதிக்கு குப்பென்று வியர்த்தது.

அந்தக் கணம் அவளின் மனம் அவளுக்குத் துல்லியமாகப் புரிந்தது. அவளின் மனம் விஷ்ணுவின் பால் சரிந்திருப்பதை அந்த நொடி உணர்ந்தாள். எப்பொழுது அவன் தன் மனதில் நுழைந்தான் என்பது அவளுக்கே தெரியவில்லை. அவன் அவளுக்குப் பார்த்து பார்த்து செய்த செயல்களினாலா இல்லை ஆபரேசன் தியேட்டருக்குள் அவளைக் கொண்டு செல்லும் போது அவன் உதிர்த்த வார்த்தை மற்றும் கண்ணீராலா எதனால் என்று அவளுக்கும் உறுதியாய் கூற முடியவில்லை.

அவள் மனம் அவனை விரும்புகிறது அவனை நேசிக்கிறது நினைக்கும் போதே... அந்த நினைவே... அவளுக்குத் தித்திப்பாய் இருந்தது. உடலால் அவள் கறை படிந்திருக்கலாம் கற்பை இழந்திருக்கலாம் ஆனால் மனதால் அவள் கற்புக்கரசியே... அதில் விஷ்ணுவுக்கு மட்டுமே இடம் உண்டு. முகம் மலர விஷ்ணுவை பார்த்தவள் பார்வையில் மீண்டும் விலாசினி விழுந்தாள். அவளைக் கண்டது நத்தைக் ஓட்டுக்குள் சுருங்குவது போல் அவள் மனமும் சுருங்கியது.

‘இல்லை...இல்லை...இந்தக் கறைப்பட்டவள் விஷ்ணுவிற்கு வேண்டாம். அவருக்கு இந்த விலாசினி தான் மிகவும் பொருத்தம். ஒரு குழந்தையுடன் நிர்கதியாய் நிற்கும் நான் அவருக்குச் சிறிதும் பொருத்தமில்லை. அவர் தான் உளறுகிறார் என்றால் நானும் பைத்தியம் போல் ஏதேதோ நினைத்துக் கொண்டு...அவரின் பெற்றோர் என்னைப் போன்றவளை விரும்புவார்களா? அவர்களுக்கு விலாசினி போன்ற பெண்ணைத் தான் பிடிக்கும். அவளைப் போன்றவளைத் தான் மகனுக்கு மணம் முடிக்க விரும்புவார்கள். என் நேசம் என்னுடன் மடிந்து போகட்டும். நான் வேண்டாம் அவருக்கு’ மனதில் ஏதேதோ நினைத்தவள் வியர்வைப் பெருக மூச்சு விடச் சிரமப்பட்டவளாய் திணறினாள்.

அவளின் நிலையை முதலில் கண்டு கொண்டது விஷ்ணு தான், “ஷம்மு...என்ன செய்யுதும்மா?” ஓடி வந்தவன் அவளைத் தன் மடியில் தாங்கினான்.

“தண்ணீர்...தண்ணீர்...” என்றவளுக்கு ஆண்டாள் அவசரமாக நீரைக் கொண்டு வந்து விஷ்ணுவிடம் கொடுக்க, அதைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புகட்டியவன் கண்களில் கண்ணீர்ப் பெருகி அவன் கன்னங்களில் வழிந்தது. அதைப் பார்த்த மதியின் கண்களிலும் கண்ணீர் பெருகியது. இதையெல்லாம் யுவன் ஆச்சிரியமாகப் பார்க்க, விலாசினியோ அருவருப்பாய் பார்த்தாள்.

“போதும் வினு...இந்த மாதிரிக் கேடு கெட்டவளை ஏன் மடியில் வைத்துக் கொஞ்சுறீங்க? சீச்சீ...இதைக் கொஞ்சமும் நான் எதிர்ப்பார்க்கல” அருவருப்புடன் அதேசமயம் எள்ளலுடன் கூறிய விலாசினியை கோபமாய்ப் பார்த்தான் விஷ்ணு.

“விலாசினி...வார்த்தையை அளந்து பேசுங்க. அவள் என் காதலி...என் மனைவியாகப் போகிறவள். அவளை மடியில் வைத்துக் கொஞ்சாமல் உங்களையா கொஞ்ச முடியும்?” நக்கலாய் அவளைப் பார்த்துக் கேட்டவன், “யுவன்...என்னை மன்னித்து விடு. தயவுசெய்து உன் தங்கையைக் கூட்டிக்கிட்டுப் போய்டு. நான் ஏதாவது பேசிடப் போறேன்”

“வினி...எத்தனை தடவை சொன்னாலும் உனக்கு வாயடக்கம் வருவதாயில்லை. வந்த இடத்தில சும்மாயிருக்காமல்...நீ சொல்லப் போய்த்தானே இங்கே நான் உன்னைக் கூட்டிக்கிட்டு வந்தேன். வா...கிளம்பலாம்” யுவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியேற நினைக்க, அவளோ அசையவில்லை...

“நான் என்ன பொய்யாச் சொன்னேன். உண்மையைத் தானே சொன்னேன். அதான் டிவி பேப்பர் என்று அவளின் பேர் நாறியது எனக்கு மட்டுமல்ல ஊருக்கே தெரியுமே...இதில் என்னை அடக்கினால் எப்படி? இப்படிப்பட்டவளை தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கும் உன் பிரண்ட்டைக் கண்டித்து வை...அதை

விட்டு விட்டு என்னை ஏன் கண்டிக்கிற?” அண்ணனிடம் எகிறியவள்,

விஷ்ணுவிடம் திரும்பி, “வினு...உங்களைப் பார்க்க ஆவலுடன் வந்த என்னை நல்லா அவமானப்படுத்திட்டிங்க. என்னைச் சாதாரணமாக நினைக்காதீங்க. என்னை அவமானப்படுத்திய உங்களை நான் சும்மா விட மாட்டேன். இந்தக் கேடுக்கெட்டவளுக்காக என்னை இப்படிப் பேசியதற்காக ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் நீங்கள் வருத்தப்படத் தான் போகிறீங்க” காரமாய்ப் பேசியவள் அங்கிருந்து வேகமாய் வெளியேறினாள். விஷ்ணுவும் சரி... யுவனும் சரி... தங்களுக்கு இருந்த பதற்றத்தில் விலாசினியின் பேச்சை ஆழ்ந்து கவனிக்கத் தவறிவிட்டனர்.

“சாரிடா...விஷ்ணு...அவள் ஏதோ லூசுத்தனமாய் உளறுறா. எனக்காக அவளை மன்னித்து விடுடா. பிறகு நிதானமாக வந்து பேசுறேன்” யுவன் விஷ்ணுவிடம் மன்னிப்பைக் கேட்டவன் தங்கையைச் சென்ற திசையை நோக்கி ஓடினான்.

விலாசினியின் பேச்சைக் கேட்டு மதியின் ரத்தம் அழுத்தம் அதிகமாகி கொஞ்சம் கொஞ்சமாய் அவள் மயங்கிக் கொண்டிருந்தாள். அவள் தலை ஒருப்பக்கமாய்த் தொங்கவும் தான் விஷ்ணு அவளைப் பார்த்தான். “ஷம்மு...” அவனின் அலறல் அந்த மருத்துவமனையையே கிடுகிடுக்க வைத்தது.

அத்தியாயம் : 14

“ஷம்மு...இந்தா...உனக்கு வேண்டிய நோட்ஸ் எல்லாம் நானே காப்பிப் பண்ணிவிட்டேன். அப்புறம் இதெல்லாம் நான் படிக்கும் காலத்தில் எடுத்த நோட்ஸ்... இதுவும் உனக்கு யூசாகும். வேறேதும் சந்தேகமிருந்தால் என்னிடம் தயங்காமல் கேளு” விஷ்ணு மதியிடம் கூறியவன், அவள் அருகிலிருந்த குழந்தையைக் கையில் எடுத்துக் கொஞ்ச ஆரம்பித்தான்.

மதி அவளின் வீட்டிற்கு வந்து விட்டாள். கல்லூரிக்குத் தான் அவளால் செல்ல முடியவில்லை. அதான் விஷ்ணு அவளுக்கு வேண்டிய பாடக் குறிப்புகளைக் கொண்டு வந்து தந்தான். குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருக்கும் அவனைப் பார்த்தவள், எவ்வளவு இயல்பாகக் குழந்தையைக் கொஞ்சுகிறான்? இவனுக்கும் இந்தக் குழந்தைக்கும் என்ன சம்பந்தம்? சிறிதும் அருவருப்பு இல்லாமல் இவனால் மட்டும் எப்படி இப்படி நடந்து கொள்ள முடியுது? வழக்கம் போல் கேள்விகள் மனதில் படையெடுக்க அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

நல்ல உயரத்துடன் சற்றுக் கருமை தான் இருந்தாலும் அவன் கண்ணும் உதடும் பூக்கும் புன்னகையில் பேரழகனாகத் தான் தெரிந்தான். அவளின் சிறுமையைக் கண்டு பொங்கினானே அந்த ஆண்மை அழகு அல்லவா...! புறஅழகை காட்டிலும் அக அழகுக் கொட்டிக் கிடக்கும் அவன் அவள் கண்ணுக்கு உலக அழகனாகத் தெரிந்தான். முதன்முறையாக அவன் அழகு, அவன் உருவம் அவள் ஆழ்மனதில் அழுத்தமாய்ப் பதிந்தது. அன்று அவள் மயங்கி விழுந்த போது அவன் துடித்த துடிப்பை அவள் அன்னை கூறக் கேட்டவளுக்கு அவளின் அவன் மீதான நேசம் பல்கிப் பெருகியதை சொல்லத் தேவையில்லை.

ஆனாலும் அவனிடம் தன் நேசத்தைச் சொல்லி அவனோடு ஒன்றிவிட ஏனோ ஒன்று அவளைத் தடுத்தது. அது எதுவென்றும் அவளுக்குத் தெரியும். பெண்கள் உயிரை விடப் பொக்கிசமாய் மதிக்கும் கற்பு அவளிடத்தில் இல்லையே. இப்படிப்பட்ட அவள் அவனுக்கு வேண்டுமா?

வேண்டாம்...தன்னால் நல்ல மனைவியாய் அவனுடன் மனம் ஒன்றி குடும்பம் நடத்த முடியுமா? முடியாது... முடியவே முடியாது... அன்று பார்த்தோமே விலாசினி... அவள் தான் இவனுக்கு மிகவும் பொருத்தம்!!!

“என்ன ஷம்மு நான் பார்ப்பதற்கு அவ்வளவு அழகாவா இருக்கேன்?” விஷ்ணுவின் குரலில் தன்னினைவைக் கலைந்தவள் அவனைப் பார்த்து விழித்தாள்.

ஒற்றைப் புருவத்தைத் தூக்கி கண்சிமிட்டியபடிக் கேட்டவனைக் கண்டு மனம் உருகி நெகிழத் தொடங்கியது. முயன்று அதைக் கட்டுக்குள் கொண்டு வந்து ஒன்றும் பேசாமல் எழுந்து உள்ளறைக்குச் சென்றவள், சென்ற வேகத்தில் திரும்பியும் வந்தாள். வந்தவள் கையில் நகைப்பெட்டி இருந்தது. அதைப் பார்க்கும் போதே விஷ்ணுவுக்குப் புரிந்து போனது அது அவன் வாங்கிக் கொடுத்த வளையல்கள் என்று. மனம் சுருங்க, முகம் கறுக்க அவளைப் பார்த்தான்.

“இந்தாங்க...”

“நான் வளையல்கள் போடுவதில்லை...இது உனக்காக நான் கொடுத்த அன்பளிப்புன்னு உனக்கு நியாபகம் இருக்குமுன்னு நினைக்கிறேன்” கொஞ்சம் கடுமையுடன் அவனின் வார்த்தைகள் வெளிவந்தது.

“இதற்கு நான் தகுதியானவள் இல்லை...வேண்டாம்...”

“ஓஹோ...வளையல்கள் போடுவதற்கு என்ன என்ன தகுதிகள் வேண்டும்மம்மா...” நக்கலாக ஒலித்தது விஷ்ணுவின் குரல்.

“அது உங்களுக்கே தெரியும்...உங்களுக்கு நான் சற்றும் பொருத்தமானவள் இல்லை. அந்த விலாசினி தான் பொருத்தமானவள்” என்றவளைக் கூர்ந்து ஒரு கணம் பார்த்தவன், “ம்...அப்புறம்...”

“இங்கே நான் என்ன கதையாச் சொல்லிக்கிட்டிருக்கேன்? “ம்” போட்டு கேட்கிறீங்க?”

“பின்னே நீ பேசுவது கதையில்லாமல் வேறென்ன? எனக்கு யார் பொருத்தம்... பொருத்தமில்லை... என்பதை நான் தான்

சொல்ல வேண்டும். நீ அதைச் சொல்லக் கூடாது? இப்போ என்ன உனக்கு இந்த வளையல்கள் வேண்டாம் அவ்வளவு தானே. சரி அதை இப்படிக் கொடு...” என்று அவள் கையிலிருந்து நகைப்பெட்டியை பிடுங்கியவன், “சுவாதி...சுவாதி...”

“இப்போ அவளை எதுக்குக் கூப்பிடுறிங்க?” கடுகடுப்புடன் மதி கேட்கும் போதே, “என்ன மாமா கூப்பிட்டிங்களா?” என்றபடி வந்து நின்றாள் சுவாதி.

“மாமாவா...?” வாயைப் பிளந்தாள் மதி. “ஆமாம் மாமா தான்... உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவர் எனக்கு மாமா தானே. அக்கா உனக்கு வர வர மதி வேலையே செய்ய மாட்டேங்குது. பேரில் மட்டும் தான் மதி இருக்கு. மாமா நல்லா யோசிச்சுக்கோங்க... இவள் உங்களுக்குத் தேவையான்னு? வேறு நல்ல பெண்ணாய்ப் பாருங்கள் மாமா. ம்ஹூம்... வேறு பெண் எதற்கு? இன்னும் நான்கு, ஐந்து வருடங்களில் நான் பெரியப்பெண் ஆகிவிடுவேன். நான் உங்களுக்கு மேட்ச் ஆவேன்னு நினைக்கிறேன்” படபடப் பாட்டாசாகப் பொரிந்த தங்கையை, “லூசுத்தனமாய் உளறாமலிரு” கடிந்தாள் மதி.

“அவள் சொன்னதுல என்ன தப்பு இருக்கு... எனக்குக் கூட இந்த யோசனை நல்லாயிருக்கும்ன்னு தோணுது. நாம் விரும்புறவங்களை விட நம்மை விரும்புறவங்களைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டா வாழ்க்கை நல்லாயிருக்கும். என்ன ஷம்மு நான் சொல்வது சரிதானே?” மதிக்கு மட்டும் கேட்கும் குரலில் கூறியவனை முறைத்துப் பார்த்தாள்.

“மாமா எதுக்குக் கூப்பிட்டிங்க சொல்லுங்க?” சுவாதி திரும்பக் கேட்கவும்தான் தான் அவளை அழைத்த காரணம் விஷ்ணுவுக்கு நியாபகம் வந்தது.

“இந்த வளையல்கள் உன் அக்காவிற்கு வேண்டாமாம். நீயே வைச்சுக்கோ. அதுக்குத்தான் கூப்பிட்டேன்”

“அய்...சூப்பர்...எனக்கே எனக்கா மாமா?” கண்கள் விரிய ஆர்வமாய்க் கேட்டவளைக் கண்டு ஆத்திரமாய் வந்தது மதிக்கு. நறுக்கென்று அவள் தலையில் குட்டியவள், “போடி போய்ப் படிக்கிற வேலை இருந்தால் பார். யார் எது

கொடுத்தாலும் வாங்கி விடுவாயா?” அவள் கையிலிருந்து நகைப்பெட்டியை வாங்கியவள் தங்கையை அங்கிருந்து துரத்திவிட்டாள். அதைக் கண்டு விஷ்ணுவிற்குச் சிரிப்பு வந்தது அடக்க மாட்டாமல் சிரித்தவனைக் கண்ணிமைக்க மறந்து அப்படியே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அவளின் பார்வையில் சிரிப்பை நிறுத்தியவன், குழந்தையைக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டு அவள் அருகில் வந்து அவள் முகத்தைத் தன் கைகளில் ஏந்தி, “ஷம்மு...இந்த ஜென்மத்தில் எனக்குப் பொருத்தமானவள்... மனைவி...எல்லாம் நீ தான். நீ மட்டும் தான். அது இந்த ஜென்மம் மட்டுமல்ல எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீ தான் என் மனைவி. இது வெறும் வாய் வார்த்தை அல்ல... என் மனதில் இருந்து வரும் ஆத்மார்த்தமான வார்த்தைகள் இது. இனியும் கண்டவளோடு என்னை இணைத்துப் பேசி என்னையும் தரம் தாழ்த்தி உன்னையும் தாழ்த்திக் கொள்ளாதே. வேண்டுமென்றால் உன்னுடன் என்னை இணைத்துப் பேசு...சந்தோசமாய்க் கேட்டுக்கிறேன்! உன்னை நேசிக்கும் என்னை வார்த்தைகளால் கொல்லாதே...! என் மனம் முழுவதும் நீ தான் நிரம்பியிருக்கிறாய். நான் சுவாசிக்கும் காற்றில் கூட நீ தான் நிரம்பி இருக்கிறாய். என் மனம் உனக்குப் புரியலயா? இல்லை என்னை ஏற்றுக் கொள்ள உனக்குத் தயக்கமாயிருக்கா?” அவள் கண்களை ஊடுருவிப் பார்த்துக் கேட்டவனிடம் அவளால் பொய் கூற இயலவில்லை,

“நான் உங்களுக்கு ஏற்றவளில்லை... என்னை மாதிரி ஒரு பெண்ணைப் போய் நீங்க...சேச்சே... வேண்டாம். என்னால் உங்களுக்கு எந்தவிதத்திலும் சுகம் கிடையாது. சொன்னால் புரிந்து கொள்ளுங்களேன். இதற்கு மேலும் புரிய வைக்க எனக்குத் தெரியல” கண்களில் நீர் வழிய உடல் நடுங்கக் கூறியவளைக் கண்டு ஒருபக்கம் பரிதாபம் வந்தது என்றால் மறுப்பக்கம் காதல் பெருக்கெடுத்தது அவனுக்கு.

“இப்பொழுதும் நீ உன்னைப் பத்தி யோசிக்கல. என்னை மட்டுமே... என் நலனை மட்டுமே யோசிக்கிற. இந்தப்

புரிதல்...இந்த அன்பு தான் வாழ்க்கைக்கு ஆதாரம். இது நம்மிடையே இருக்கும் போது வேறு எதைப் பற்றியும் கவலைப்படாதே" என்றவன், உடல் நடுங்க நின்றிருந்தவளின் கண்ணீரைத் துடைத்தவன், அவளை அருகில் இழுத்து முதன்முறையாக மென்மையாக அணைத்தான்.

அவனது அணைப்பில் குழைந்த மனதில் அன்றொரு நாள் அவளை வெறித்தனமாக வேட்டையாடிய அந்த நிகழ்ச்சி நியாபகம் வந்து அவள் மனதை அதிகமாக வலிக்கச் செய்ய... அவளையும் அறியாமல் அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. அவனை வலுக்கட்டாயமாகத் தன்னிடமிருந்து பிரித்தெடுத்து தள்ளிவிட்டவள்,

"வேண்டாம்...என்னால் முடியல...நீங்க போயிருங்க..." தரையில் மடங்கி அமர்ந்து அழுதவளின் அருகில் அமர்ந்தவன் மனது அடைந்த வேதனை சொல்லில் அடங்காதது. அவசரப்பட்டு விட்டோமோ என்ற குற்ற உணர்வு மனதில் எழ, "ப்ளீஸ்....ஷம்மு...அழாதே..."

"நீங்க என்னைத் தொடும் போது கூட அவங்க செஞ்ச கொடுமை தான் எனக்கு நியாபகம் வருது. அதை என்னால் மறக்கவே முடியாது. நான் சாகும் வரை என் மனதில் இந்தக் கொடுமை ஆறாத வடுவாக இருக்கும். இப்படிப்பட்ட நான் உங்களுக்குத் தேவையா?"

தன்னைப் பிடிக்காமல் அவள் தள்ளிவிடவில்லை என்பதே அவனுக்கு நிம்மதி தந்தாலும் அவளின் வார்த்தைகள் அவன் மனதில் வேதனையை அதிகரிக்கத் தான் செய்தது. "இப்பொழுது தான் இன்னமும் அதிகமாக நான் உன்னை நேசிக்கிறேன் ஷம்மு. மறக்க நினைத்தால் எதையும் மறக்கலாம். சரி உன்னால் முடியவில்லை என்றால்... நிச்சயம் என் அன்பு உன் மனதை மாற்றும். உன் காயத்தை ஆற்றி என்னிடம் சேர்க்கும்"

"நான் இவ்வளவு சொல்லியும் நீங்கள்..."

"ஷ்....வேறு பேச்சுப் பேசலாம் ஷம்மு...ப்ளீஸ்" என்றவனிடம் அவள் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவள் மனதில் அந்த நிமிடம் உறுதி எடுத்தாள். எந்தக்

காரணம் கொண்டும் தன் மனதை அவனுக்கு வெளிப்படுத்தக் கூடாது என்று. விஷ்ணுவின் காதலின் முன் அது எப்படிச் சாத்தியமாகும் என்று ஏனோ அவள் யோசிக்கத் தவறிவிட்டாள்?

****

“ராசா...எப்படிப்பா இருக்க? மருமவ, குட்டிப்பையன் நல்லாயிருக்காங்களா?” யசோதாவின் குரல் அன்பில் குழைத்து வந்தது.

“ம்...நல்லாயிருக்காங்க. இப்பத்தானே பார்த்துட்டுப் போனிங்க...அதுக்குள்ள நலம் விசாரிப்பா?” கேலிக் குரலில் மகன் கிண்டலடிக்க, “அடப்போடா...குட்டிக்கண்ணன் கண்ணுக்குள்ளேயே நிற்கிறான். சரி...பேர் வைக்கிற பங்கசன் வைக்கிறாங்களா இல்லையா? மதிப்பொண்ணு வேண்டாம்ன்னு சொல்லுமே?”

“எப்படிம்மா...அவள் கூட இருந்து கவனிச்ச மாதிரி சொல்லுறிங்க. நீங்க சொன்னது ஹண்ட்ரட் பெர்சண்டேஜ் கரெக்ட். வேண்டாம்ன்னு தான் சொன்னா...ஆனா அவள் பேச்சை யார் கேட்டா...நான் முடிவா வைக்கணும்ன்னு சொல்லிட்டேன். அதுக்குத் தான் உங்களைக் கூப்பிட்டேன். நீங்களும் அப்பாவும் வர்றிங்களா?”

“இல்ல ராசா...அப்பாருக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்ல. நாங்க வர முடியுமான்னு தெரியல”

“ஏன் என்னாச்சு? அப்பாக்கிட்ட ஃபோனைக் கொடுங்க” யோகேந்திரன் கைக்கு அலைப்பேசி மாறியதும், “அப்பா...உடம்புக்கு சொகமில்லைன்னு அம்மா சொல்றாங்க. என்ன செய்யுதுப்பா?”

“ஒண்ணுமில்லை அப்பு. வயசாகுதுல்ல அதான் உடல் படுத்துது...டாக்டர் கிட்ட காட்டி மருந்து எடுத்துட்டு இருக்கிறேன். கவலைப்படும்படியா ஒண்ணுமில்லை”

“சரிப்பா...உடம்பை பத்திரமா பார்த்துக்கோங்க. இந்த வீக் என்ட் நான் ஊருக்கு வர்றேன்”

“சரி வாப்பா... அப்புறம் மதி உன்னிடம் எப்படிப் பழகுது? உன்னோட காதலுக்கு ஏதாவது ரியாக்சன் அங்கே

தெரியுதா?”

“எங்கே தெரியுது?” என்று அலுத்தவன் அன்று தங்களுக்குள் நடந்த உரையாடலை அப்படியே அப்பாவிடம் தெரிவித்தான். அதைக் கேட்டு உரக்க சிரித்த தகப்பனைக் கண்டு, “அப்பா...நானே கவலையோட சொல்லிக்கிட்டு இருக்கேன். உங்களுக்குச் சிரிப்பா இருக்கா?” பல்லைக் கடித்தான்.

“அடேய்...கூறுகெட்டவனே...அது மனசுல நீ இருக்க. அதான் இப்படிப் பேசுது”

“உண்மையாவாப்பா....” குரலில் மகிழ்ச்சி கொப்பளிக்கக் கேட்ட மகனைக் கண்டு அவருக்கு இரக்கம் சுரந்தது. காதல் வந்தால் அறிவாளியான தன் மகன் கூட இப்படி அறியாமையுடன் இருக்கிறானே... “உண்மை தானப்பு... ஆனால் அது மனசுக்குள்ள உனக்கு அது பொருத்தமில்லை என்ற தாழ்வு மனப்பான்மை இருக்கு. அது விலகி எல்லாப் பெண்களைப் போல் தான் நீயும் என்று மதிக்கு நீ உணர்த்தினால் போதும். ஆனால் அதை உணர்த்த ரொம்பக் காலம் ஆகும். பொறுமையாய் இரு மகனே”

“காட்டாயம் பொறுமையாய் இருப்பேன். நீங்கள் சொல்றதுதான் சரின்னு எனக்கும் தோணுது. நிச்சயம் அவளை மாத்துவேன்” உறுதியாய் கூறியவன் இறுதியில், “சீனியர் சொன்னால் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்” தந்தையைக் கிண்டலடித்து மேலும் சில வார்த்தைகள் பேசி அலைப்பேசியை வைத்தான் விஷ்ணு.

சின்னக்கண்ணனுக்குப் பேர் வைக்கும் வைபவம் நன்றாக நடந்தது. காவ்யபாரதி, லீலா மங்களம், ஆறுமுகம் எல்லோரும் வந்து வாழ்த்திவிட்டுச் சென்றனர். விஷ்ணு கூறிய “ஷரத்” என்ற பெயரே குழந்தைக்குச் சூட்டப்பட்டது. மதிக்கு விஷ்ணு அந்தப் பெயரை வைத்ததின் அர்த்தம் தெரியும். தனது பெயரையும் அவனது பெயரையும் சேர்த்து வைத்திருப்பது புரிந்தும் ஏனோ அதை மறுத்துப் பேச வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. மாறாக மனதில் ஒரு நிம்மதி மகிழ்ச்சி தான் தோன்றியது. அவர்களிடையே இருக்கும் இடைவெளி அப்படியேத்தான்

இருந்தது. அப்படித்தான் மதி நினைத்துக் கொண்டிருந்தாள். விஷ்ணு எப்பொழுதும் போல் அவனின் காதலை ஒவ்வொரு செயலிலும் வார்த்தையிலும் காட்டிக் கொண்டு தான் இருந்தான். அவளிடத்தில் அதற்கு எந்தவொரு பிரதிபலிப்பு இல்லாது போனாலும் அதை அவன் கண்டு கொள்ளவில்லை.

****

அன்று வழக்கம் போல் குளித்துக் கொண்டு வரும் போது மதியின் முகம் கடுகடுவென இருந்தது. குளிக்கும் போது அவள் உடலிலிருந்த பல் தடங்களையும் காயங்களையும் பார்த்தவளுக்குத் தாங்க முடியாத துக்கம் ஏற்பட்டது. அந்தக் காயங்கள் ஆறிப் போயிருந்தாலும் அதன் தழும்புகள் இன்னமும் மாறவில்லை. ஜென்மத்துக்கும் அந்த நிகழ்ச்சியை அவள் மறக்கக் கூடாது என்பதற்காகவே அந்தத் தடம் இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. முன்பெல்லாம் அதைப் பார்க்கும் போது கண்ணீர் விட்டு அழுதவள் நாளாக நாளாக உணர்வுகள் மரத்து விடத் தன் மனதை தேற்றிக் கொண்டாள். என்று விஷ்ணுவின் மேல் அவளின் காதலை உணர்ந்தாளோ அன்றிலிருந்து அந்தப் பாவிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடியாத தன் இயலான்மையை எண்ணிக் கோபம் தான் வந்தது.

இன்று ஏனோ அந்தக் காயங்கள் பழைய நினைவுகளை விசிறிவிட, அன்று நடந்த பயங்கரம் அவள் கண்முன் வலம் வர, அன்று ஏற்பட்ட உடல்வலி, மனவலியை இன்றும் உணர்ந்தவள் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருக, பல்லால் உதட்டை இறுகக் கடித்துத் தன் வலியைக் கட்டுப்படுத்த நினைக்க, அது முடியாமல் போகவே இன்னும் அழுத்தமாக உதட்டைக் கடிக்க அதிலிருந்து வந்த ரத்தம் அவள் நாக்கில் பட்டு உப்புக் கரித்ததும் சட்டென்று தன் உணர்வுகளை அடக்கியவள் முகத்தைக் கழுவி கொண்டு வெளியில் வந்தாள்.

அவளின் மனநிலை அறியாமல், விஸ்ணு, “ஷம்மு... குட்மார்னிங்...இந்தா ஷரத்தின் பர்த் சர்டிபிகேட்” என்று

காகிதம் ஒன்றை நீட்ட, அதை வாங்கிப் பார்த்தவள் முகம் இன்னமும் கடுகடுவென மாறியது.

“இதற்கு என்ன அர்த்தம்...” காகிதத்தை அவன் கண் முன் காட்டியவாறு வினவியவளை, “என்ன...?” என்று பதிலுக்கு அவன் அவளைக் கேள்வி கேட்டான்.

“ஷரத்தின் அப்பா பேரின் முன் உங்க பேர் இருக்கு?”

“நான்தானே அவன் அப்பா... இதுல உனக்கு என்ன சந்தேகம்?” மனதளவில் ஷரத்தின் தந்தையாக வாழும் அவனுக்கு உண்மையில் அவள் கூற வந்தது புரியவில்லை.

“உண்மையிலேயே உங்களுக்குப் புரியலயா? இல்லை புரியாதது போல் நடிக்கிறீங்களா?”

“ஷம்மு...வார்த்தையைப் பார்த்து பேசு. நான் ஏன் நடிக்கணும்? அவன் என் மகன். அதில் எந்த மாற்றமுமில்லை. அவன் என்னை அப்பான்னு தான் கூப்பிடணும். அதைத் தடுக்க நீ முயன்றால்... அப்படிச் செய்யமாட்டன்னு நம்புறேன்” கோபக்குரலில் எச்சரித்தவன், “அதே போல் நீ என் மனைவி... அதிலும் மாற்றமுமில்லை. உனக்கு மாற்றுக் கருத்து இருந்தால்...முதலில் அதை மாற்றிக் கொள். இதில் கோபப்படும் அளவிற்கோ வருத்தப்படும் அளவிற்கோ ஒன்றுமில்லை”

“உங்கக்கிட்டப் பேசி பிரயோஜனமில்லை...உங்க அம்மாவிடமே நான் பேசிக்கிறேன்” என்றவள் யசோதாவின் அலைப்பேசிக்கு அழைத்தாள். அவனோ அவளைக் கண்டு கொள்ளாமல் ஷரத்தை தூக்கி வைத்துக் கொஞ்ச ஆரம்பித்தான்.

“அத்தே...நான்தான் மதி பேசுகிறேன்...” என்றவள் சுற்றி வளைக்காமல் நேரே விசயத்தைக் கூறினாள். அதிலும் விஷ்ணு ஷரத்தின் தந்தை எனப் பிறப்புச் சான்றிதழில் அவன் பேரைக் கொடுத்திருப்பதை முக்கியமாகக் கூறினாள்.

“மதிப்பொண்ணு...உனக்கு விசயம் தெரிஞ்சதில் இப்பத்தான் எங்களுக்கு நிம்மதியாயிருக்கு. எங்கே

அவனை ஏத்துக்காம இருந்துவிடுவாயோ என்று பயந்துகிட்டே இருந்தேன்" அவர் பேச பேச இவளுக்குத் தலை சுற்றியது. தான் என்ன கூற வந்தால்...இவர் என்ன சொல்கிறார்?

"விஷ்ணு தான் ஷரத்தோட அப்பா. அதுல எந்தச் சந்தேகமும் உனக்கு வேணாம். அவன் உன்னையும் குழந்தையையும் நல்லா பார்த்துக்குவான். கூடிய சீக்கிரம் திருமணத்திற்கு நாள் பார்த்து சொல்லுங்க என்ன? எப்போடா நீ இங்கே வருவேன்னு நான் எதிர்ப்பார்த்துகிட்டு இருக்கேன்" என்றவரிடம் எதுவும் பேசாமல் அலைப்பேசியை அணைத்தாள். அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே வெளியில் போனவன் சட்டென்று திரும்பி வந்தான்.

"இந்தா இதைக் குடி" குவளை நிறைய ஆரஞ்சு பழச்சாறை கொண்டு வந்து அவளிடம் நீட்டிய விஷ்ணுவை முறைத்தாள் அவள்.

"உங்க மனசுல நீங்க என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க? ஏன் இப்படிப் பண்றீங்க? உங்க அப்பா அம்மாவுக்கு எல்லாம் தெரியுமா?"

"ம்...என் மனசுல...உன்னைத் தான் நினைச்சுகிட்டு இருக்கேன் ஷம்மு... எங்க அப்பா அம்மாவுக்கு மட்டுமல்ல உன் அப்பா, அம்மா, மேடம், லீலா எல்லோருக்கும் தெரியும். அதாவது உன்னைத் தவிர நம்ம மேட்டர் எல்லோருக்கும் தெரியும். உனக்குத் தான் ரொம்ப லேட்டா தெரிஞ்சிருக்கு" அவன் கூறியதற்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் திகைத்து மலங்க மலங்க விழித்தவளின் பார்வையில் என்ன கண்டானோ அவள் அருகில் வந்தவன் அவளைத் தன்னோடு சேர்த்து ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

அவன் அணைப்பில் தன் மன உறுதிக் குறையத் தன்னையுமறியாமல் அவன் நெஞ்சில் சாயப் போனவள், மறுநொடி சற்று முன் பார்த்த உடலின் காயம் அவள் நியாபகத்தில் வந்து பழைய நிகழ்ச்சியை அவள் மறக்க நினைக்கும் கொடுமையைச் சுட்டிக் காட்ட அவள் உடல்

விரைத்தது. அவளையும் அறியாமல் கண்களில் கண்ணீர் வழிய...அதைக் கண்டு பதறி துடைத்து முத்தமிட்டு தன் நெஞ்சோடு அவளை அணைத்துக் கொண்டவனின் செயலில் முற்றிலும் உடைந்தவள் கதறித் தீர்த்துவிட்டாள். அவளின் கண்ணீரை நிறுத்தும் வகையறியாது இயலாமையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் விஷ்ணு.

அத்தியாயம் : 15

“ஹாய் ஷரத் குட்டி...ஹேப்பிப் பர்த்டே செல்லம்” விஷ்ணு, தன் காலை ஓடி வந்து கட்டிக் கொண்ட ஷரத்தை தூக்கிச் சுற்றி தன் வாழ்த்தைச் சொல்ல, “தேங்க்யூ டாடி” ஷரத் தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டு கிலுக்கிச் சிரித்தான். ஷரத் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறான். இந்த மூன்று வருடங்களில் எத்தனையோ மாற்றங்கள் விஷ்ணு, மதியின் வாழ்க்கையில் ஏற்பட்ட போதும் அவனின் அவள் மீதான அன்பு மட்டும் மாறவில்லை அப்படியே தானிருந்தது.

காவ்யபாரதி வெளிநாட்டில் இருக்கும் மகளுடன் வசிக்கப் போவதாய்ச் சொன்னவர், தான் நடத்தி வந்த சட்ட ஆலோசக நிறுவனத்தை விஷ்ணு மற்றும் யுவன் வசம் ஒப்படைத்துவிட்டு பறந்து விட்டார். இந்த மூன்று வருடத்தில் நண்பர்களது தொழில் வளர்ச்சி பிரமிக்கத்தக்கது. அந்த அளவிற்கு இருவரும் திறம்படச் செயல்பட்டனர்.

ஷன்மதியும் இப்பொழுது இறுதியாண்டு படிக்கிறாள். கல்லூரி நேரம் போக மீதி நேரம் இவர்களிடமே ஜூனியராகப் பணி புரிகிறாள். மற்ற ஆண்களிடத்தில் இரும்பின் உறுதியோடு வளைய வரும் அவள், விஷ்ணு விசயத்தில் மட்டும் என்ன முடிவு எடுப்பது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறாள்.

உயர்நீதிமன்றத்தில் சிபி தொடுத்த வழக்கில் இவளுக்குச் சார்ப்பாகத் தீர்ப்பு வர, சிபியின் தரப்பினர் விடாமல் உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்தனர். இந்த இரு வருடமாக அங்கே வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த முறை மதி கலங்கவில்லை. தைரியமாக வழக்கை எதிர்கொள்கிறாள். அவளுக்கு உறுதுணையாக விஷ்ணு அவளுடன் நிற்கிறானே...பின்னே அவளுக்கு ஏன் பயம்?

ஷர்மிளா யுவனின் நினைவில் திருமணம் வேண்டாம் என்று MCA படிக்கச் சென்றுவிட்டாள். அது தெரிந்து யுவன் கொஞ்சம் நிம்மதியடைந்தான். ஏனெனில் தன் காதலை அவன் வீட்டில் சொல்ல, இன்னமும் நேரம் வரவில்லை.

அதற்குக் காரணம் அவன் தங்கை விலாசினி தான். வரும் வரன்களை எல்லாம் வேண்டாம் வேண்டாம் என்று தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு ஆதரவாக அவனின் பெற்றோர் வேறு அவனால் வீட்டில் வாயைத் திறக்க முடியவில்லை. இந்நிலையில் அவன் காதலை எங்கே சொல்வது?

லீலாவின் கணவனுக்கு அரபு நாட்டில் வேலைக் கிடைக்க அவர்கள் அங்கே சென்று விட்டார்கள். இப்பொழுது இரண்டு வயதில் ஒரு பையன் இருக்கிறான். தொலைபேசி, மெயில், சாட் என்று அவளின் நட்பு இன்னமும் தொடர்கிறது.

“விஷ்ணு சார்...எப்படி இருக்கீங்க?” மதியின் பக்கத்து வீட்டுக்காரர் நீலகண்டன் அவனைப் பார்த்துக் கையாட்டினார். அவரைப் பார்த்ததும் ஷரத்தை தூக்கிக் கொண்டு அவரை நோக்கிச் சென்றான்.

“குட்டிப்பையனுக்குப் பிறந்தநாளா? பிறந்தநாள் வாழ்த்துக்கள் பையா”

“தேங்க்ஸ் தாத்தா” புன்னகைத்த சிறுவனின் தலையைச் செல்லமாகக் கலைத்து விட்டவர், “விஷ்ணு உங்கக்கிட்ட ஒரு சின்ன ஆலோசனை கேட்க வேண்டியிருக்கு? எப்போ உங்களுக்கு ப்ரீயோ அப்போ சொல்லுங்க நான் வந்து உங்களைப் பார்க்கிறேன்”

“இன்னைக்குப் புல் டே என் பையன் கூடத்தான். வேணும்ன்னா நாளைக்குக் காலையில் ஒரு எட்டு மணிக்கு ஆபிசுக்கு வாங்களேன்”

“சரி விஷ்ணு...ரொம்பத் தேங்க்ஸ்ப்பா...”

“இதற்கு எல்லாம் எதற்குத் தேங்க்ஸ் சார்...” புன்னகையுடன் அவரிடம் விடை பெற்றவன் தங்கள் வீட்டை நோக்கி நடந்தான்.

விஷ்ணுவின் குரல் கேட்டதும் வாயிலுக்கு வந்த ஷன்மதி அங்கே நடந்த உரையாடலை கேட்டுக் கொண்டு தான் இருந்தாள். விஷ்ணு இங்கே அவளைப் பார்க்க வருவதை முதலில் ஒரு மாதிரியாகப் பேசியது இந்த நீலகண்டன்

தான் அவரையே தன் கைக்குள் போட்டுக் கொண்டானே இவன் நிச்சயம் அந்த மாயக்கண்ணனே தான்.

முதலில் அவன் வரவை தவறாகப் பேசிய அவள் தெருவாசிகள் பின்னர் அவனின் நல்ல பண்பு, அவன் அவளை மணம் முடிக்க அவள் சம்மதத்திற்காகக் காத்திருப்பது எல்லாம் தெரிந்த பின் அவன் மீதான தவறான கண்ணோட்டத்தை மாற்றிக் கொண்டனர். அதிலும் எந்த ஒரு வீட்டிலும் சட்ட ரீதியான பிரச்சினை ஏற்பட்டால் விஷ்ணு தானாகச் சென்று அவர்களுக்கு உதவியது கூட அவர்களின் மனமாற்றத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

“என்னங்க அம்மணி...பார்வை எல்லாம் பலமாயிருக்கு” விஷ்ணுவின் கேலியில் பதிலேதும் பேசாமல் அவனை முறைத்துப் பார்த்தபடி உள்ளே சென்றாள் அவள். இப்பொழுது எல்லாம் அவனுடன் அவள் பேசுவது மிகவும் குறைவு. அதையெல்லாம் அவன் பொருட்படுத்தியதில்லை. எப்பொழுதும் போல் அவனே அவளிடம் வலிய சென்று பேசுவான்.

“ம்ஹூம்...ஆனானப்பட்ட பக்கத்து வீட்டு நீலகண்டனையே என் பக்கம் சாய்ச்சிட்டேன். ஆனால் உன் மம்மியை மட்டும் என்னால் மாத்தவே முடியல செல்லம்” மகனிடம் குறைபட்டுக் கொண்டான்.

சின்னவன் தந்தையின் காதில் குனிந்து ரகசியமாக, “மம்மிக்கு முத்தாக் குடுத்தா எல்லாம் சரியாப் போகும். மம்மி கோபமா இருந்தா நான் அப்படித்தான் செய்வேன். உடனே சிரிச்சுடுவாங்க”

“அடேடே குட்டிப்பையா இதை இவ்வளவு லேட்டா சொல்லிறியே? நீ சொன்னது போல் செஞ்சிடறேன்” மதியை ஒருமாதிரியாகப் பார்த்துக் கொண்டே கூறினான் விஷ்ணு. அப்படி என்ன தான் ஷரத் கூறி இருப்பான் என்று மதிக்கு மண்டைக் குடைந்தது.

“இதைத்தான் சொன்னான்” என்று கூறியவன், சட்டென்று அவள் கன்னத்தில் முத்தமிட்டு அதே வேகத்தில் அவளிடமிருந்து விலகினான். அவனின் செயலில் மூளை

மரத்துப் போய் நின்றிருந்தவளை ஆண்டாளின் குரல் கலைத்தது, “மாப்பிள்ளை வந்திருக்கிறார்...காபி போட்டாவது கொடுக்கலாம்ல...என்னப் பொண்ணோ தெரியல”

“அம்மா... உனக்கு எத்தனை தடவை சொல்றது. அவரை மாப்பிள்ளைன்னு சொல்லாதே. அவர் என்ன உன் மகளுக்குத் தாலிக் கட்டின மாப்பிள்ளையா? சும்மா சும்மா மாப்பிள்ளை மாப்பிள்ளைன்னு...”

“ஏன் தாலிக் கட்டினால் தான் மாப்பிள்ளையா? அதான் அவர் நெஞ்சில் உன்னைச் சுமக்கிறாரே அது போறாதா? சும்மா எதையாவது பேசணும்ன்னு பேசாதே. அவ்வளவு கோபப்படுபவள் பேசாமல் கல்யாணத்திற்குச் சம்மதம் சொல்லு. அதை விட்டுட்டு பேச வந்துட்டா பெருசா...” அம்மாவை இயலாமையுடன் பார்த்தவள் அந்தக் கோபத்தை எல்லாம் விஷ்ணு மேல் காட்டினாள். அருகில் கிடந்த செய்தித்தாளை எடுத்து அவனை நோக்கி விசிறியடித்தவள் அதே கோபத்துடன் அறைக்குச் சென்று கதவை தாளிட்டாள்.

“சாரி...மாப்பிள்ளை...அவள் ஏதோ தெரியாம...”

“நீங்க சங்கடப்பட வேண்டாம் அத்தை. இந்த அளவுக்குக் கோபத்தையாவது என் மேல் காண்பிக்கிறாளே அதுவே சந்தோசம். நீங்க அவளைப் போய்ச் சமாதானப்படுத்துங்க. நானும் ஷரத்தும் ஷாப்பிங் போயிட்டு வந்திடறோம். சுவாதி வருகிறாளான்னு கேளுங்க வந்தா.... அவளையும் கூட்டிக்கிட்டுப் போகிறேன்”

“மாமா நீங்க கூப்பிடவே வேண்டாம் நான் ரெடி” பதினோறாம் வகுப்பு படிக்கும் சுவாதி துள்ளிக் குதித்துக் கொண்டு அங்கே வந்தாள். மூவரும் வெளியில் செல்ல, அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த ஆண்டாள் மனம் நிறைய, அதேசமயம் மூத்த மகளை நினைத்து அவர் மனதில் கவலையும் மூண்டது.

****

“அம்மா ஆ... காட்டுங்க...” கேக்கை வெட்டிய ஷரத் ஒரு துண்டை எடுத்து அன்னையின் வாயில் வைக்க வந்தவன், அவள் அவனிடம் உணவு ஊட்டும் போது சொல்வது போல் சொல்ல... அவள் சிரித்தபடி மகன் ஊட்டுவதற்கு ஏதுவாக வாயைத் திறந்தாள். அவளுக்கு ஊட்டிய அதே துண்டை எடுத்து விஷ்ணுவுக்கு ஊட்ட, அவனோ அதைக் கோவில் பிரசாதம் போல் பயப்பக்தியுடன் வாங்கியதைக் கண்டவளுக்கு எரிச்சல் வந்தது. “அலையறதைப் பாரு...” என்றவளின் முணுமுணுப்புப் பாம்புச் செவியனான அவனின் காதை எட்டியது.

“ஆமாம்...உன்னை மாதிரி ஒருத்தியைக் காதலிச்சிட்டு வேற என்ன செய்ய முடியும். சின்னதா ஒரு கிஸ் ஒரு ஹக் ம்ஹூம்...விஷ்ணு உனக்கு எதுவுமே கொடுத்து வைக்கலடா” வேண்டுமென்றே அவள் காதருகில் குனிந்து சொன்னவன் விட்டப் பெருமூச்சு அவள் செவிமடலை தீண்டிச் செல்ல, அவளுக்குள் குறுகுறுப்பு ஏற்பட்டு ரோமக்கால்கள் சிலிர்த்தது.

“ச்சீ... என்ன இது? தள்ளி நில்லுங்க...” எரிச்சலுடன் மொழிந்தவள் நகர்ந்தாள். அவன் விட்டால் தானே அவள் பின்னேயே வந்தவன், “நான் என்னம்மா செய்தேன். ச்சீ... என்கிறாய்... பார்க்கிறங்க என்னைத் தப்பா நினைக்கப் போறாங்க. நான் ரொம்ப நல்ல பையனாக்கும்” ஒன்றும் தெரியாதவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னவனைக் கண்டு அவளுக்கும் சிரிப்பு வர... அதை அடக்கிக் கொண்டு வேகமாக அங்கிருந்து நகர்ந்தாள். அவள் செல்வதைப் பார்த்தவன் உதட்டில் புன்னகை நிறைந்திருந்தது.

“மாப்பிள்ளை...மதியை தப்பா நினைக்காதிங்க. அவள் மனதில் நீங்கதான் இருக்கீங்க. ஏனோ அதை வாய்விட்டுச் சொல்ல மாட்டேங்கிறா” ஸ்ரீனிவாசன் விஷ்ணு அருகில் வந்து சொல்ல... அவரைப் பார்த்து ஆறுதலுடன் புன்னகைத்தவன், “மாமா இதை நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா? என் ஷம்முவை பத்தி எனக்குத் தெரியாதா? அவள் மாறும்வரை வெய்ட் பண்ணுவேன்”

“உங்க பொறுமை பத்தி எனக்குத் தெரியாதா?” இவ்வளவு நாள் பழக்கத்தில் மகள் என்ன செய்தாலும்... அவள் முகம் திருப்பினாலும்... அதை எல்லாம் புன்னகையுடன் ஏற்கும் மருமகனை அவரும் புரிந்துதான் வைத்திருந்தார்.

“அதே பொறுமையுடன் நீங்களும் காத்திருங்க” புன்னகைத்தவன் விழா முடியும் வரை ஷரத்துடன் இருந்து அவனுடன் விளையாடி, அவனைத் தூங்கச் செய்து விட்டுக் கிளம்பினான்.

“மதி எங்கே அத்தை?”

“தோட்டத்தில் இருக்கிறா...” ஆண்டாளின் பதிலில் அங்கே சென்றான். துவைக்கும் கல்லில் குத்துக் காலிட்டு அமர்ந்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்தவள் முகத்திலிருந்த சோகம் அவன் மனதை தாக்க... மெதுவே அவள் அருகில் சென்று, “ஷம்மு...” என்றழைக்க... அவன் அழைப்பில் திடுக்கிட்டவள் அவனைக் கண்டதும் “என்ன?” என்பது போல் பார்த்தாள்.

அவள் முகத்தைப் பார்த்தவனுக்கு ஷரத்தின் முதல் பிறந்தநாளின் போது நடந்த சம்பவம் நியாபகம் வந்தது. பிறந்தநாளுக்கு இருநாட்களுக்குப் பின் உயர்நீதி மன்றத்தில் சிபியின் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு வழக்கப்படவிருந்தது. பிறந்தநாளை மகனுக்காகச் சிரித்த முகத்துடன் கொண்டாடியவள் நேரமாக ஆக... தாங்க முடியாமல் இங்கே தான் வந்தமர்ந்து அழுதுக் கொண்டிருந்தாள். அவளைத் தேடி வந்த விஷ்ணுவின் நெஞ்சில் தானாகவே துயரம் தாங்காமல் சாய்ந்தவள் அப்படியே கேவி கேவி அழ... அவன் மௌனமாய் அவளை ஆறுதல் படுத்தினான்.

அவளின் அழுகை அப்போதைக்கு நிற்பது போல் தெரியவில்லை... ஆனால் இப்படியே அழுதால் நிச்சயம் காய்ச்சல் வந்து படுத்து விடுவாள் என்று எண்ணியவன் முடிவாக அவளின் முகத்தை வலுகட்டாயமாகத் தன் நெஞ்சில் இருந்து பிரித்தெடுத்து, தன் இதழால் அவள் இதழை அழுந்த மூடினான். தனக்குள் கரைந்தவள் முதலில் அதைக் கொஞ்சமும் உணரவில்லை பின் உணர்ந்து

அவனைத் தவிர்க்க நினைத்தவளை அவனும் விடவில்லை. அவளுக்காக என்று ஆரம்பித்தவன் அதன் பின் அவனுக்காக என்று தொடர்ந்தவன் அதன் மயக்கத்தில் இருந்து விடப்பட நினைக்கவேயில்லை. முதன்முறையாக அவனுக்குள் அடங்கி நின்றவளைக் கண்டு அவன் மனம் பெருத்த அமைதியடையத் தானாகவே அவளை விடுவித்தான்.

அன்றைய நாள் நினைவில் அவன் முகத்தில் புன்னகை பெரிதாக விரிந்தது. அந்த நினைவு தந்த குதூகலத்துடன், “இன்னைக்கு என்ன சோகம்? அன்னைக்கு மாதிரி இன்னைக்கும் மருந்து தரவா? அந்த மருந்து ஒண்ணும் கசக்கலியே?” கேலிக் குரலில் கூறியவனை முறைத்துப் பார்த்தாலும் அவளையும் அறியாமல் அன்றைய நினைவில் அவள் முகம் சிவக்கத் தலையைக் குனிந்தாள். அவள் தலைக்குனிந்து நின்ற அழகே அவள் மனதை அவனுக்குத் தெளிவாகக் காட்ட மனதுக்குள் சிரித்துக் கொண்டவன், “ஷம்மு...நான் கிளம்புகிறேன். உன்னிடம் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். பை...” என்று ஒரு அடி முன்னே நடந்தவன், திடுமெனத் திரும்பி நேரே அவளிடம் வந்து ஒற்றை விரலால் அவள் முகத்தை நிமர்த்தி, அவள் கண்ணுக்குள் ஊடுருவிப் பார்த்தவன், எதிர்பாராவிதமாக அவள் முகம் நோக்கிக் குனிய, அவளோ அன்றைய நாள் நினைவின் தாக்கத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவளின் செயலில் வாய் விட்டு சிரித்தவன், “பயப்படாதே... குட்நைட் சொல்லத்தான் வந்தேன்” என்றவன், அவளின் முன்நெற்றியில் மென்மையாய் அதே சமயம் அழுத்தமாய்த் தன் இதழைப் பதித்தவன், “குட்நைட்...போ... போய் நிம்மதியாய் தூங்கு” என்றவன் அவள் பதிலை எதிர்பார்க்காமல் நடந்தான். அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்குக் கண்ணில் கண்ணீர் பெருகி வழிந்தது. அதைத் துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல் அப்படியே நின்றிருந்தாள்.

****

“யுவன்...நாளைக்கு நான் ஊருக்குப் போகிறேன். வர்றதுக்கு எப்படியும் நாலு நாளாகும்”

“என்ன விஷ்ணு எப்பொழுதும் வீக் என்ட் போய்ட்டு வந்துடுவ. இப்போ என்ன கூடுதலாய் ரெண்டு நாள்?”

“ஏன் யுவன் இரண்டு நாள் உன்னால் சமாளிக்க முடியாதா?”

“அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை...எப்பவும் இவ்வளவு நாள் தங்காதவன் இப்போ ஏன்னு தான்...”

“அதுவா...உன்னிடம் சொல்லக் கூடாது அப்படின்னு இல்லை. ஷர்மி திருமணத்திற்குச் சம்மதம் சொல்ல மாட்டேங்கிறா. முதலில் படிக்கணும்ன்னா நானும் அப்பாக்கிட்ட அவளுக்குச் சப்போர்ட் பண்ணிப் பேசி எம்சிஏ படிக்க அனுப்பி வைச்சேன். இப்போ படிப்பு முடியப் போகுது. இப்பவும் கல்யாணம் வேண்டாம்ன்னா என்ன அர்த்தம்? அதான் அம்மா என்னை அவளிடம் பேச சொல்றாங்க. போய்ப் பேசித்தான் பார்ப்போம்ன்னு நானும் கிளம்பிட்டேன்”

ஷர்மிளாவுக்குத் திருமணம் என்றதுமே பேயறைந்தது போலானது யுவனின் முகம். அவள் தனக்காகத் தான் அவ்வாறு செய்கிறாள் என்பதை உணர்ந்தே இருந்தான். ஆனால் அவன் வீட்டுப் பிரச்சினை முடியாமல் எப்படிப் பேச... அதேசமயம் இப்பொழுது நண்பனிடம் மனம் திறந்து பேசவில்லை என்றால் ஷர்மிளாவை அவன் நிரந்திரமாக மறக்க வேண்டியது தான். ஒருவழியாய் தன்னைச் சமாளித்துக் கொண்டு விஷ்ணுவைப் பார்த்து, “விஷ்ணு நான் உன்கிட்ட ஒண்ணு சொல்லணும். அதைக் கேட்டதும் என்னைத் தப்பா நினைக்காதே”

“யுவன் என்ன இது... உன்னைப் போய் நான் தப்பா நினைப்பேனா? என்னடா சொல்லு?”

“விஷ்ணு நான் உன் தங்கையைக் காதலிக்கிறேன். அவளைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு அவளைத் திருமணம் செய்து கொடுப்பாயா?” யுவனின் வார்த்தையில் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தான் விஷ்ணு.

அத்தியாயம் : 16

“யுவன் உண்மையாகத் தான் சொல்றியா?” நம்பமுடியாமல் கேட்ட விஷ்ணுவை பார்த்து, “உண்மையாத் தான்டா சொல்றேன். எதில் விளையாண்டாலும் இந்த மாதிரி விசயத்தில் நான் உன்னுடன் விளையாடுவேனா? எனக்கு உன் சம்மதம் வேண்டும்? உனக்கு ஓகேவா? இல்லையா?”

“ஷர்மியை நீ ஒரு நாளில்... ஒரு தடவைத்தான் பார்த்திருப்பாய்? அதில் எப்படி...?”

“காதல் வருவதற்கு ஒரு நாள் இல்லை ஒரு நொடிப் போதும். அவளைப் பார்த்தும் அவள் தான் என் மனைவியென்று முடிவு செய்துட்டேன். அதிலும் அவள் உன் தங்கையென்று தெரிந்ததும் என் முடிவு இரு மடங்கு உறுதியாகி விட்டது” என்ற யுவன் அன்று ஷர்மிளாவை முதன்முறையாகப் பார்த்த நாளை தன் நண்பனிடம் சொல்லலானான். தன் தங்கையென்று தெரிவதற்கு முன்னேரே அவளை விரும்பி இருக்கும் நண்பனை எண்ணி விஷ்ணுவுக்குள் இனம் புரியாத இதம் ஒன்று பரவியது.

“யுவன் நீ என் தங்கையை மணம் புரிவதில் எனக்குச் சந்தோசம் தான். என் நண்பனே எங்கள் வீட்டு மாப்பிள்ளை என்றால் எனக்கு டபுள் சந்தோசம் தான்” மகிழ்ச்சியுடன் கூறியவன் முகம் சட்டென்று சோர்ந்தது. “ஆனால் இதில் சின்னப் பிரச்சினை யுவன்... ஷர்மி ஏனோ திருமணத்திற்குச் சம்மதிக்க மாட்டேங்கிறாள். ஏன்? எதற்கு? என்று எங்களுக்கும் காரணம் தெரியல. ஒருவேளை அவள் யாரையாவது காதலிக்கிறாள் என்றால் உன் விருப்பம்...”

அவன் கூறியதைக் கேட்டு வாய்விட்டு சிரித்த யுவன், “மாப்பிள்ளை இந்த யுவன்னு சொல்லிப் பாரு... அதுக்கப்புறமும் அவள் சம்மதிக்காமல் இருக்கிறாளான்னு பார்ப்போம்” சிறு கர்வத்துடன் கூறியவனை இமைக்காமல் பார்த்த விஷ்ணு, “அப்படின்னா அவள் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்காமல் இருப்பதற்கு நீ தான் காரணமா? நீ விரும்புவது அவளுக்குத் தெரியுமாடா?”

“இல்லை விஷ்ணு...அவளுக்குத் தெரியாது. ஆனால் அவள் பார்வை எனக்குக் காதலை உணர்த்தியது போல் என் பார்வை அவளுக்கு என் காதலை உணர்த்தியிருக்கலாம். நான் உன்னிடம் சொல்லாமல்... உன் சம்மதமறியாமல் அதற்கு முன் அவளிடம் காதல் சொல்ல ஏனோ எனக்கு விருப்பமில்லை. எனக்கு என் காதலை விட உன் நட்பு தான் முக்கியம். எந்தவொரு காரணத்திற்காகவும் உன்னை... உன் நட்பை இழக்க நான் விரும்பலடா” நண்பனின் வார்த்தையில் மனம் நெகிழ்ந்த விஷ்ணு அவனை இறுகக் கட்டிக் கொண்டான். “நான் நாளைக்கே போய் எங்க வீட்டில் பேசி சம்மதம் வாங்கிடுறேன் என்ன?”

“உங்கள் வீட்டில் சம்மதிப்பாங்களா விஷ்ணு? ஜாதி மதம்ன்னு ஏதேனும் சொல்லி தடுப்பாங்களா?”

“ச்சே...ச்சே... எங்கள் வீட்டில் அப்படியொரு கட்டுப்பாடு எல்லாம் கிடையாது. மனுசனுக்குத் தான் மதிப்பு கொடுப்பாங்க. உனக்குப் பெண் கொடுப்பதில் அவங்களுக்கு என்ன கஷ்டம்? தாரளாமாய்ச் சந்தோசத்துடன் கொடுப்பாங்கள். நீ கவலைப்படாதே... விஷ்ணுவை நம்பியோர் கை விடப்படார்” விஷ்ணுவின் பேச்சில் நம்பிக்கை வரப் பெற்ற யுவன் சிரிக்க, அவனுடன் விஷ்ணுவும் இணைந்து சிரித்தான்.

“முதலில் உன் வீட்டில் சம்மதம் வாங்கு யுவன். அங்கே ஏதும் பிரச்சினை வரப் போகுது?”

“வினிக்கு கல்யாணத்துக்கு முன் சொல்ல வேண்டாம்ன்னு தான் பேசாமல் இருந்தேன். ஆனால் இப்பொழுது பேச வேண்டிய காட்டாயம் வந்திடுச்சு. சம்மதிப்பாங்க... சம்மதிக்காமல் இருக்க வேறு காரணங்கள் இல்லையே. அதை நான் பார்த்துக் கொள்கிறேன் நீ கவலைப்படாதே விஷ்ணு” யுவனை மனம் நெகிழ அணைத்துக் கொண்டான் விஷ்ணு.

அன்று மாலை அலுவல் வேலை முடிந்ததும் விஷ்ணு நேரே மதியின் வீட்டிற்குத் தான் சென்றான். இன்னமும் நான்கு நாட்கள் அவளையும் ஷரத்தையும் பார்க்க முடியாதல்லவா? அந்த ஏக்கத்தைப் போக்க அவர்களுடன் நேரத்தை

செலவழிக்க எண்ணி அங்கே சென்றான். இன்று என்றில்லை எப்பொழுது ஊருக்கு சென்றாலும் அவன் அப்படித்தான்.

“டாடி...” கூவி கொண்டே அவனிடம் ஓடி வந்த மகனை அள்ளி எடுத்துக் கொஞ்சியவன், “மம்மி... எங்கே?”

“மம்மி... கிளாஸ்க்கு போயிருக்காங்க” மதி காராத்தே வகுப்பு போயிருப்பதைத் தான் அவ்வாறு கூறினான் சின்னவன். விஷ்ணு தான் அவளை வற்புறுத்தி இந்த வகுப்பில் சேர்த்துவிட்டான். முதலில் போக மாட்டேன் என்று அடம்பிடித்தவளை அதட்டி உருட்டி அழைத்துச் சென்றான். இப்பொழுது அவளே போகப் பழகிக் கொண்டாள்.

“நாம போய் மம்மியை கூட்டிட்டு வரலாமா?” தகப்பன் கேட்டதும் தான் தாமதம், “அப்படியே பீச்சுக்குப் போகலாமாப்பா...அங்கே நிறையத் தண்ணி இருக்கும். மணல்ல ஜாலியா விளையாடலாம்”

“ம்... போலாமே... பீச் போயிட்டு, ஹோட்டல் போயிட்டு ஷரத்துக்குப் பிடிச்ச ஃபுட் சாப்பிடலாமா?” மகன் சந்தோசத்துடன் தலையாட்ட, அவனின் மகிழ்ச்சி விஷ்ணுவையும் தொற்றிக் கொள்ள, ஆண்டாளிடம் கூறிவிட்டு ஷரத்தை அழைத்துக் கொண்டு மதியை அழைப்பதற்காகக் கராத்தே வகுப்பிற்குத் தன் பைக்கில் பயணமானான்.

மதி வகுப்பை முடித்து விட்டு வெளியில் வந்தவள், அங்கே பைக்கில் சாய்ந்து நின்ற விஷ்ணுவைத் தான் முதலில் பார்த்தாள். வெண்ணிற டீசர்ட்டும், நீல நிற ஜீன்ஸ்யும் அணிந்து கம்பீரமாக இவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் அழகு அவள் மனதைத் தாக்கியது.

“மம்மி...” ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்டு தூக்கச் சொன்ன மகனின் செயலில் தன்னை உணர்ந்து அவசரமாக விஷ்ணுமிடமிருந்து பார்வையை விலக்கி மகனைத் தூக்கிக் கொண்டாள்.

விஷ்ணுவும் அவளையே தான் பார்த்துக் கொண்டிருந்தான். முடியை பாப் கட்டிங் செய்து சாதாரணக்

காட்டன் சுடிதார் அணிந்து இருந்தாலும் தேவதையை ஒத்த அழகுடன் இருந்தவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தவன், இன்னும் இரண்டு நாள் இந்தத் தேவதையைப் பார்க்காமல் இருக்க வேண்டுமே என்ற தவிப்பு வேறு சேர விழுங்கி விடுவது போல் அவளைப் பார்த்தான். அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் அவள்தான் தன் பார்வையைத் தழைக்க வேண்டியிருந்தது.

“ஷம்மு... போகலாமா?” கேட்டவாறே அவள் கையில் இருந்த சிறிய பையை வாங்கியவன், மகனை தூக்கி பைக்கின் முன் பகுதியில் அமர வைத்தான். பின் அவளிடம் திரும்பி, “ஷரத் பீச் போகணும்ன்னு ஆசைப்படறான். போகலாமா?”

“மம்மி... ப்ளீஸ்...” மலர் போன்ற இரு கரங்களையும் கும்பிடுவது போல் குவித்து, கண்ணில் இறைஞ்சலுடன் கேட்ட மகனின் அழகு மனதைக் கொள்ளைக் கொள்ள அவனின் தலைமுடியை செல்லமாகக் களைத்தவள், புன்னகையுடன் சம்மதமாய்த் தலையாட்டினாள். “ஹூர்ரே...” என்று கத்தியவாறு விஷ்ணுவும் ஷரத்தும் “ஹை-பை” கொடுத்துக் கொண்டனர்.

கடற்கரைக்குச் சென்று விளையாட்டில் அந்த மாலைப்பொழுது இனிமையாகக் கழிய, பிறகு ஹோட்டலில் உணவு உண்டு வீடு வந்து சேர்வதற்குள் இரவு ஆகி விட்டது. தன்னறைக்கு வந்து ஷரத்தை குளிக்கச் செய்து அவனை உறங்கச் செய்தவள் தானும் குளித்து விட்டு வந்தாள். அவள் வரவும் விஷ்ணு நுழையும் சரியாகயிருந்தது. அவனின் வரவே அவன் நாளைக்கு ஊருக்குப் போகிறான் என்பதை அவளுக்குச் சொல்லாமல் சொல்லியது, ஊருக்குச் செல்லும் நாளன்று மட்டுமே அவளின் அறைக்கு இரவில் வருவான். மற்ற நாள் எல்லாம் பகல் பொழுதில் மட்டுமே அறைக்குள் நுழைவான். அது அவனுக்கு அவனே விதித்திருக்கும் கட்டுப்பாடு என்பது அவளுக்குத் தெரியும்.

“ஷம்மு...” அவளை அழைத்தவாறே அவள் அருகில் அமர்ந்தவன், அவள் கையை எடுத்து விரித்து, உள்ளங்கையையே சிறிது நேரம் பார்த்துக்

கொண்டிருந்தவன், “நம் யுவன் ஷர்மியை விரும்புறான்...” அவன் கூறியதுமே, “உண்மையாவா...?” முகத்தில் மகிழ்ச்சி அப்பட்டமாய்த் தெரிய விழி விரித்துக் கேட்டவளைப் பார்த்து புன்னகைத்தவன்,

“ஆம்... இதில் ஷர்மிக்கும் விருப்பமிருக்கும் போலிருக்கு. நாளைக்குத்தான் அப்பா அம்மாவிடம் பேசணும். யுவனிடம் தைரியமாக அவங்க சம்மதிப்பாங்கன்னு சொல்லிட்டேன். ஆனால் உள்ளுக்குள் என்ன சொல்வாங்களோன்னு கொஞ்சம் உதறலாக இருக்கு” அவனின் கவலை அவளையும் வாட்டியதோ, “கவலைப்படாதீங்க எல்லாம் நல்லபடியாக முடியும்” அவன் கைகளைத் தன் கைகளால் அழுத்தி ஆறுதல்படுத்த, அதை அப்படியே இறுக பற்றிக் கொண்டவன், “நல்லபடியா முடியணும்...” நீண்ட பெருமூச்சு அவனிடமிருந்து வந்தது.

“உங்களுக்காக நான் வேண்டிக்கிறேன். நல்லதே நடக்கும்” அவளின் ஆறுதல் அவனுக்கும் தேவைப்பட்டதோ அவளின் கை மேல் தலை வைத்து சிறிது நேரம் கவிழ்ந்திருந்தவன், பின் எழுந்து அவள் விரலை அழுத்தி விட்டு, அருகில் படுத்திருந்த ஷரத்தின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு, “நான் வருகிறேன். செவ்வாய்க்கிழமை தான் வருவேன்னு நினைக்கிறேன். ஷரத்தை பத்திரமா பார்த்துக்கோ” அவன் சொன்னதற்கு மௌனமாய்த் தலையசைத்தாள்.

விஷ்ணு எழுந்து கதவு வரை சென்றவன், மீண்டும் அவள் அருகில் வந்து அவளைத் தன் வயிற்றோடு சேர்த்தணைத்து, “ஐ மிஸ் யூ ஷம்மு...” என்றவன் அவள் உச்சந்தலையில் அழுந்த முத்தமிட்டான். “ஓகே பை” என்றவன் குரல் மாறி ஒலிக்க, நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தவள்... அவன் விழிகள் கலங்கி இருப்பது போல் தெரிய திகைப்புடன் அவனைப் பார்த்தாள். அவளுக்காகச் சிரித்தவன் பின் திரும்பியும் பாராமல் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான்.

அவன் சென்ற பின்பும் அசையாமல் அப்படியே அமர்ந்திருந்தாள் மதி. அவனின் கலங்கிய கண்களே

அவள் மனக்கண்ணில் மீண்டும் மீண்டும் வர, கண்களை இறுக மூடிக் கொண்டாள். என்ன மாதிரியான அன்பு இது? இத்தகைய அன்பிற்குத் தான் ஏற்றவள் தானா? மனம் கேள்வி கேட்க பதில் தெரியாமல் அப்படியே படுக்கையில் சாய்ந்தாள்.

****

“ராசா... போ பேசு...” யசோதா மகனிடம் ஜாடைக் காட்ட, “நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க அமைதியாயிருங்க” என்றவன் நேரே தங்கையிடம் சென்றான்.

“ஷர்மி... வீட்டிலேயே இருந்து போர் அடிக்குது. தோட்டம் வரை போய்ட்டு வரலாமா?”

“சரி அண்ணா... போகலாம்” உற்சாகத்துடன் கூறியவள் அவனுடன் இணைந்து நடந்தாள். சிறிது தூரம் நடந்ததும், “ஷர்மி சுத்தி வளைச்சு பேச விரும்பல. நீ ஏன் கல்யாணத்திற்குச் சம்மதம் சொல்ல மாட்டேங்கிற. அம்மாவும் அப்பாவும் உன்னை நினைத்து ரொம்ப வருத்தப்படறாங்க”

“அண்ணா... அது வந்து...” அண்ணனிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் முழித்தாள் ஷர்மிளா.

“உன் மனதில் இருப்பதைச் சொன்னால் தான் நான் அப்பாவிடம் பேச முடியும். சொல்லு ஷர்மி... உன் மனதை உறுத்தும் விசயத்தை என்னிடம் சொல். நான் அண்ணன் மாதிரியா பழகி இருக்கேன். நல்ல பிரெண்ட்டா தானே பழகி இருக்கேன்”

ஷர்மிளா இன்னமும் அவனிடம் சொல்லத் தயங்கி நிற்க, விஷ்ணு மனம் பொறுக்காமல், “உன் மனதை உறுத்தும் விசயத்தை நான் சொல்லவா?” திகைத்துப் போய்ப் பார்த்த தங்கையைப் பார்த்து கண்சிமிட்டியவன், “யுவன்... ஐம் ஐ கரெக்ட்?”

“அண்ணா...உங்களுக்கு எப்படித் தெரியும்?” நம்பமுடியாமல் அவனைப் பார்த்தவளை, “அப்போ யுவன் தான் காரணமா? அவன் எல்லாத்தையும் என்னிடம் சொல்லிட்டான். எனக்கு முழுச் சம்மதம். அப்பாவிடம் பேசி மேலே ஆக வேண்டிய

காரியங்களைப் பார்க்க சொல்லவா?” என்று அவளிடம் சொன்னவன்,

“அது எப்படி ஷர்மி ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கண்ணாலேயே காதல் பேச முடியுது? அதிலும் அவன் பார்வையை உணர்ந்தே நீ காதலை புரிந்து கொண்டாயாமே யுவன் பெருமையோட சொன்னான். உண்மையில் உங்கள் காதல் கிரேட் தான்”

“போங்கண்ணா...” என்று வெட்கப்பட்டவளாய் வந்த வழியே திரும்பி ஓட, விஷ்ணுவின் சிரிப்பு அவளைத் துரத்தியது.

அதற்கு மேல் தாமதிக்காமல் விஷ்ணு தன் பெற்றோரிடம் யுவன் ஷர்மி காதல் விவகாரத்தைச் சொல்ல, யோகேந்திரன் கொஞ்சம் யோசித்தார். “யுவன் நல்ல பையன் தான். நீயே அவனைப் பத்தி சொல்லும் போது நாங்க அதைப் பத்தி பேசவோ விசாரிக்கவோ தேவையில்லை. ஆனால் அவனைப் பெத்தவங்க எப்படி அப்பு? அவங்க இதுக்குச் சம்மதிப்பாங்களா?”

“அதெல்லாம் யுவன் பார்த்துக்குவான்ப்பா. நீங்க கவலைப்படாதீங்க”

“அப்படின்னா சரிப்பா... யுவனிடம் பேசி... மேல்கொண்டு ஆக வேண்டியதை பார்க்க சொல்லுப்பா” யோகேந்திரன் அத்துடன் முடித்துக் கொண்டார்.

****

யுவன் தங்கள் வீட்டின் வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். பெற்றோரையும் தங்கையையும் இன்னமும் காணவில்லை. எரிச்சலுடன் கடிகாரத்தைப் பார்த்தான் அது இரவு பத்து மணி என்றது. எங்கேனும் பார்ட்டி என்று ஊரைச் சுற்றப் போயிருப்பர்... என்று எண்ணியவனுக்கு ஆயாசமாக இருந்தது. வீண் டாம்பீகம் போற்றும் பெற்றோர்... அதையே பின்பற்றும் தங்கை... இவர்கள் என்று தான் திருந்த போகிறார்களோ? அவன் இந்த வாழ்க்கை முறையை வெறுத்தான்.

பெற்றோர் மருத்துவம், பொறியியல் எடுத்துப் படிக்கச் சொன்னதுக்காகவே அவன் வேண்டுமென்றே சட்டத்துறையை எடுத்துப் படித்தான். அவர்கள் என்ன சொன்னாலும் ஏட்டிக்கு போட்டியாய் செய்தே தன் வெறுப்பை அவர்களுக்குக் காட்டினான். அப்படியாவது அவர்கள் தன் மனதை உணர மாட்டார்களா என்று எண்ணினான். ஆனால் அதை அவர்கள் உணரவும் இல்லை. அவன் விசயத்தில் தலையிடவும் இல்லை.

அதனால் தான் என்னவோ இயல்பாக எந்த வித அலட்டலும் இல்லாமல் இருந்த ஷர்மியை அவனுக்குப் பிடித்துப் போனதோ என்னமோ? அவள் தன் வாழ்வில் வந்தால் தன் வாழ்வு சிறக்கும் என்று முடிவு செய்தான். திருமண விசயத்தில் பெற்றோர் பேச்சை கேட்டால் அவர்களைப் போன்று ஒரு அலட்டல் டாம்பீகப் பேர்வழியைத் தான் மணம் முடித்து வைப்பர் என்று எண்ணி அவன் விருப்பத்தில் உறுதியாக இருந்தான். கார் வந்து நிற்கும் ஓசைக் கேட்டு தன்னினைவைக் கலைந்தவன், அவர்களின் வரவிற்காகக் காத்திருந்தான்.

“யுவன் என்ன இன்னமும் முழிச்சிட்டு இருக்க? தூங்கலயா?” அன்னையின் மேலோட்டமான அக்கறையைச் சிறு உதட்டுச் சுளிப்புடன் கேட்டவன், “நான் உங்களோட கொஞ்சம் பேசணும்”

“காலையில் பேசிக்கலாம் யுவன். ரொம்ப டயர்டா இருக்கு” என்ற தந்தையை நோக்கி, “இது என் வாழ்க்கைப் பிரச்சினை... இப்போதே பேசியாகணும்” அழுத்தமாகக் கூறினான். மகனின் குரலில் இருந்த அழுத்தம் அவர்களைச் சோபாவில் அமரச் செய்தது. விலாசினியும் அவர்களுடன் அமர்ந்தவள் அண்ணனின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள்.

“நான்... விஷ்ணுவின் சிஸ்டர் ஷர்மியை விரும்புறேன். அவளைத்தான் கல்யாணம் செய்யப் போறேன். வினியின் திருமணம் முடிஞ்சுதான் சொல்லணும்ன்னு நினைச்சிருந்தேன். ஆனால் இப்போ சொல்ல வேண்டிய கட்டாயம் வந்துடுச்சு. அவள் வீட்டில் அவளுக்கு

அலையன்ஸ் பார்க்கிறாங்க. இனியும் பேசாமலிருக்க முடியாதுன்னு தான் உங்கக்கிட்ட சொல்றேன்” யுவன் சொன்னதும் தான் தாமதம் விலாசினி துள்ளிக் குதிக்காத குறையாகக் குதித்தவள் மகிழ்ச்சியுடன் யுவனைக் கட்டிக் கொண்டாள்.

அத்தியாயம் : 17

“என்ன வினி நான் கல்யாணம் பண்றதுல உனக்கு ஏன் இவ்வளவு சந்தோசம்?” சந்தேகத்துடன் யுவன் ஒரு மாதிரிக் குரலில் கேட்க, விலாசினி தன்னைச் சுதாரித்துக் கொண்டவள், “இல்லையா பின்னே...? எனக்கு இருப்பது ஒரே ஒரு அண்ணன்... அவனுக்குக் கல்யாணம்ன்னா சந்தோசமா இருக்காதா? அப்போ தானே பட்டுப்புடவை, நகைன்னு விதவிதமாக ஷாப்பிங் போக முடியும்...?”

“ம்...இப்போ நீ சொல்ற காரணம் ஏதோ ஏத்துக்குற மாதிரி இருக்கு”

“நீ ஏத்துக்கிட்டாலும்... ஏத்துக்காவிட்டாலும் எனக்கு உண்மையில் சந்தோசம் தான். ஷாப்பிங் போறதுக்குப் பணம் நீ தான் கொடுக்கணும். இப்பவே அட்வான்சா புக் பண்ணிட்டேன். அந்த நேரம் பணம் இல்லைன்னு பஞ்சப் பாட்டு பாடாதே. அப்புறம் நான் பொல்லாதவளாய்டுவேன்”

“இப்போ மட்டும் என்ன வாழுதாம்...?” தங்கையைக் கேலி செய்தவன், “உனக்கு இல்லாததா வினி எவ்வளவு வேண்மோ கேள் தர்றேன். எனக்கு இருப்பது ஒரே ஒரு தங்கை... செல்லத் தங்கை எல்லாம் நீதான்”

“என்ன அண்ணனும் தங்கையும் உங்களுக்குள்ள நீங்களே பேசி ஒரு முடிவுக்கு வந்திடுவிங்க போலிருக்கே. யுவன் எங்களுக்குக் கொஞ்சம் யோசிக்க டைம் கொடு. எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு முடிவெடுக்க முடியாது” தந்தை கறாராகக் கூற, “அப்பா... நீங்க சம்மதம் சொன்னிங்கன்னா உங்க ஆசிர்வாதத்தோட கல்யாணம் நடக்கும். இல்லைன்னாலும் நடக்கும்... என்ன உங்க ஆசிர்வாதம் கிடைக்காது அவ்வளவு தான்” தன் முடிவை அழுத்தமாகக் கூறியவன் தனக்குச் சாதகமான முடிவை எடுக்கும்படி தந்தையிடம் மறைமுக எச்சரிக்கையை வைத்துவிட்டு தன்னறைக்குச் சென்றான்.

“இவன் என்ன நினைச்சிகிட்டு இருக்கிறான்? பெரியவங்கன்னு நாம எதுக்குக் குத்துக் கல்லாட்டம் இருக்கோம்? வர வர மரியாதைங்கிற வார்த்தைக்கு அர்த்தமே அவனுக்குத் தெரியல” எண்ணையில் போட்ட

அப்பளமாய் யுவனின் அப்பா பொரிய, “அப்பா... ஷ்...” என்று வாயில் விரலை வைத்து அவர்கள் அறைக்கு அழைத்துச் சென்றாள் விலாசினி.

“எதுக்குப்பா இப்படிக் கத்துறிங்க... அவன் சொன்னது போல் அந்த விஷ்ணுவோட சிஸ்டரைப் பேசி முடிங்க”

“என்னம்மா இது... அந்த விஷ்ணுவை பிடிக்காதுன்னு சொன்ன... அவங்க வீட்டில் போய் நாம ஏன் பெண் எடுக்கணும்? எனக்கு என்னமோ இது சரி வரும்ன்னு தோணல” யுவனின் தாயார் அலுத்துக் கொள்ள...

“எல்லாம் சரி வரும்மா... அந்த விஷ்ணுவை நான் எந்தளவுக்குக் காதலித்தேன் தெரியுமா? ஆனால் அவன்... அந்தக் கேடு கெட்டவளுக்காக என்னையே கேவலப்படுத்திப் பேசிட்டான். அதுக்கு நான் அவனுக்குச் சரியான பாடம் கத்து தர வேண்டாமா? இந்த ஷர்மியை என்ன நினைச்சிகிட்டு இருக்கான்? டேய் விஷ்ணு... உன்னை எப்படிப் பழிவாங்கணும்ன்னு எனக்குத் தெரியும்” கோபத்தில் கண்கள் பளபளக்க கூறியவள், “அதுக்கு முதல்ல நீங்கள் யுவனிடம் அவன் திருமணத்திற்குச் சம்மதம் சொல்லி, நிச்சயத்திற்கு நாள் குறிங்க. அதுக்குப் பிறகு நடக்க வேண்டியது தானாவே நடக்கும்” பெற்றோரிடத்தில் தன் திட்டத்தைக் கூறி அவர்களைத் தெளிவுப்படுத்தினாள். அவர்களும் செல்ல மகளின் ஆசையைக் குறிக்கோளை நிறைவேறுவதற்காகச் சரியென்று தலையாட்டினர்.

மறுநாள் அவர்கள் யுவனிடம் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து வரும் பதினைந்தாம் தேதி நிச்சயம் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்ல, அவன் அன்னையை மகிழ்ச்சியுடன் கட்டிப்பிடித்து, “தேங்க்யூம்மா... தேங்க்யூ வெரி மச்” அவரின் கன்னத்தில் முத்தமிட அந்தத் தாயுள்ளத்தில் சிறு சலனம். பல வருடங்கள் கழித்து மகனின் இந்த இயல்பான செய்கை அவரின் உள்ளத்தைத் தாக்கி அவர் செய்யப் போகும் தவறை சுட்டிக் காட்டி உறுத்தியது.

“வினி... யுவன் பாவம்... விட்டுவிடும்மா... விஷ்ணுவை பழிவாங்கன்னு நீ செய்யப் போகும் காரியம் என் மகனின் வாழ்க்கையையும் பாதிக்கும். கொஞ்சம் யோசித்துப் பாரம்மா...”

“நீங்கள் அவனை மட்டும் யோசிங்க... நான் உங்களுக்கு வேண்டாம் அவ்வளவு தானே...” போலியாகக் கண்ணீர் வடித்த மகளைக் கண்டு யுவனின் தந்தை உள்ளம் உருக, அவர் மனைவியைக் கண்டித்தார். “நீ இவளுக்காக இதைச் செய்துதான் ஆக வேண்டும். இது என் வேண்டுகோள் மட்டுமல்ல... கட்டளையும் கூட” உறுதியாய் சொன்னவரின் முன் அந்தத் தாயுள்ளத்தின் கதறல் எடுபடவில்லை.

“விஷ்ணு உங்க வீட்டில் என்ன சொன்னாங்க? திருமணத்திற்குச் சம்மதம் தானா?” அலுவலகம் வந்ததும் முதல் வேலையாக யுவன் விஷ்ணுவிடம் கேட்க... அவனோ கட்டை விரலை உயர்த்தி வெற்றி என்பது போல் காட்டியவன், “யுவன்... எங்க வீட்டில் சம்மதம் தான். நீ உங்க வீட்டில் பேசியதும் நல்ல நாள் பார்த்து நிச்சயம் வைத்துக் கொள்ளலாம்ன்னு அப்பா சொல்லிட்டார்”

“எங்க வீட்டிலும் சம்மதம்தான்... வரும் பதினைந்தாம் தேதி நிச்சயம் வைத்துக் கொள்ளலாம்ன்னு அப்பா சொல்லிட்டார். உன் அப்பாவிடம் இதைச் சொல்லிவிடு. என் அப்பாவை உங்க வீட்டிற்குப் பேசச் சொல்கிறேன்”

“ம்... எல்லாம் ஜெட் ஸ்பீட் தான் என்ன...” விஷ்ணு யுவனைக் கிண்டலடித்தான்.

“அப்புறம்... விஷ்ணு... ஷர்மி... என்ன சொன்னாள்?”

“என்ன சொல்வாள்? எப்பொழுது கல்யாணத்திற்கு நாள் பார்க்கப் போறீங்கன்னு தொலைச்சு எடுக்கிறா? அவ்விடத்திலும் அதே எண்ணம் தானா?” நண்பனைக் கேலி பண்ண யுவனோ முகம் சிவந்து, “போடா...”

“அடடே... என் நண்பனுக்கு வெட்கப்படத் தெரியுமா?”

“டேய் ரொம்பக் கிண்டல் பண்ணாதே... உனக்கு ஒரு காலம்ன்னா எனக்கும் ஒரு காலம் வரும்டா... அப்போ வச்சுக்கிறேன் என் கச்சேரியை...”

“ம்ஹூம்... அந்தக் காலம் எப்போன்னு தான் எனக்கும் தெரியல யுவன்” விஷ்ணு கண்களில் கனவோடு அப்படியே அமர்ந்திருக்க... அவன் முதுகில் ஒரு அடி போட்டவன், “முதல்ல ஷர்மி போன் நம்பரைக் கொடுடா அதுக்கு அப்புறம் நீ உன் ட்ரீமை கண்டினியூ பண்ணு” விடாப்பிடியாய் அவள் எண்ணை வாங்கிய பின் தான் சென்றான். யுவன் சென்றதும் விஷ்ணு தன் கல்யாணக் கனவில் ஆழ்ந்தான். அந்த நினைவே சுகமாகத் தான் இருந்தது.

****

“மம்மி... இப்பவே டாடியை வரச் சொல்லுங்க...” ஷரத்தின் குரல் உச்சஸ்தானியில் ஒலித்தது. ஷரத் மூன்று வயது முடிந்ததுமே அருகில் இருந்த ப்ளே ஸ்கூலில் அவனைச் சேர்த்திருந்தது. மீதமிருக்கும் மூன்று மாதங்கள் அவன் அங்கே போய்ப் பழகி வந்தால் பிறகு பள்ளிக்குச் செல்லும் போது அவனுக்கு எளிதாக இருக்குமென்று மதி தான் அவனை அங்கே சேர்த்திருந்தாள். முதல் இரு நாட்கள் ஒழுங்காகப் போனவன் ஏனோ இன்று அடம் பிடித்தான்.

“ஷரத்... காலையில் டாடிக்கு வேலை இருக்கும் இப்போ போய் அவரைத் தொந்திரவு செய்யலாமா? நீ சமத்து பையன் தானே? மம்மி சொன்னா கேட்கணும்”

“குட்டிக் கண்ணா... இன்னைக்குத் தாத்தா கூடச் சமத்தா வருவியாம். அப்போ தான் உனக்கு ஈவ்னிங் ஐஸ்க்ரீம், சாக்லேட் எல்லாம் வாங்கித் தருவேன்” ஸ்ரீனிவாசன் அவர் பங்கிற்குச் சமாதானப்படுத்த, “ஷரத்... இன்னைக்குச் சமத்தா ஸ்கூல் போனா உனக்குப் பிடிச்ச சீஸ் சோமாசி பண்ணித் தருவேன். குட்பாய் தானே கிளம்புக் கண்ணா” ஆண்டாளும் சமாதானத்தில் இறங்க சின்னவன் எதற்கும் அசையவில்லை.

“நீங்க ஒண்ணும் டாடியைக் கூப்பிட வேணாம்” என்று மதியின் பிடியிலிருந்து நழுவி ஓடியவன், அவளின் அலைப்பேசியிலிருந்து விஷ்ணுவை அழைத்தான்.

“டேய் ஷரத்... என்ன பண்ற?” அவனை அடிக்கக் கையை ஓங்கியவள் அழைப்பை துண்டிப்பதற்குள் அந்தப் பக்கம்

விஷ்ணு எடுத்திருந்தான். எடுத்தவன் காதில்... ஷரத்தின் அழுகைச் சத்தம் ஓங்கி ஒலிக்க, “ஷம்மு... ஷரத் ஏன் அழுறான்?” அவனின் குரல் படபடக்க, மதி ஷரத்தை முறைத்துப் பார்த்தவாறு, “அவனுக்கு வேறு வேலை என்ன? முளைத்து மூணு இலை விடல அதுக்குள்ள பிடிவாதம் மட்டும் அதிகமாகிட்டே போகுது?”

“முதல்ல ஃபோனை அவனிடம் கொடு”

“ம்... இந்தா டாடி பேசுறாங்க” மகனை முறைத்தவாறே அவன் கையில் அலைப்பேசியைத் திணித்தாள்.

“டாடி...” ஷரத்தின் குரல் தேம்பியது. அதைக் கேட்டு விஷ்ணு உள்ளம் உருக, “ஏன் கண்ணா அழற?”

“மம்மி என்னைப் பிளான்ட்ன்னு சொல்றாங்க... எனக்கு லீப் எல்லாமில்ல ஹண்ட்ஸ் தானிருக்கு” என்னவோ அன்னை அவனைச் செடி என்று சொன்னதற்காக அழுதது போல் தந்தையிடம் புகார் கூறினான். அவனின் வார்த்தைக் கேட்டு வீட்டில் இருந்தவர்களுக்குச் சிரிப்பு வந்ததென்றால், அலைபேசியில் கேட்டுக் கொண்டிருந்த விஷ்ணுவிற்கும் சிரிப்பு வந்தது.

“மம்மியை நான் வந்து கவனிச்சுக்கிறேன். நீ அழாதே” என்று அவனைச் சமாதானப்படுத்தியவன், “குட்டிக் கண்ணா... ஏன் இன்னும் ஸ்கூல் கிளம்பல? ஸ்கூல் போகும் நேரமாச்சே” தந்தை கேட்டதும்தான் தான் ஏன் பள்ளிக்குக் கிளம்பாமல் அடம்பிடித்துக் கொண்டிருந்தோம் என்பதே ஷரத்திற்கு நியாபகம் வர, “நான் அதுக்குத் தான் அழறேன். இன்னைக்கு நீங்க ஸ்கூல்ல கொண்டு விட்டாத்தான் போவேன்”

“செல்லம்... டாடிக்கு முக்கியமான வேலை இருக்கும்மா. நீ சமத்தா மம்மி கூடப் போ. ஈவ்னிங் டாடி வந்து உன்னை வெளியில் கூட்டிட்டுப் போறேன்”

“இல்லை மாட்டேன்... அந்த ராம் இல்ல அவன் என்னைக் கிண்டல் பண்றான். எனக்கு டாடி கிடையாதாம். அதான் டாடி ஸ்கூலுக்கு வர மாட்டேங்கிறாங்கன்னு சொல்றான். எனக்குத் தான் டாடி நீங்க இருக்கீங்கல்ல... வாங்க டாடி”

மகனின் வார்த்தை மதியின் மனதை வாள் கொண்டறுக்க, என்றாவது ஒரு நாள் இந்தக் கேள்வி வரும் என்று எதிர்ப்பார்த்து இருந்தாள் தான் ஆனால் அது இன்றே வந்தது தான் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ஷரத் சொன்னது விஷ்ணுவின் மனதை பிசைய, “ஷரத் நீ கிளம்பி ரெடியா இரு. நான் இப்பவே அங்கே வர்றேன்”

“தேங்க்ஸ் டாடி” அலைப்பேசியின் வாயிலாகத் தந்தைக்கு முத்தத்தை அனுப்பியவன், “ஹேய்... டாடி வர்றாங்க... ஷரத்தை ஸ்கூல்க்குக் கூட்டிட்டுப் போக டாடி வர்றாங்க” குதூகலத்துடன் உள்ளே ஓடினான்.

“மதி இப்பவாவது உன் மனதை மாத்திக்கோம்மா. உனக்குக் கணவன் வேணும்ங்கிறதை விட ... ஷரத்துக்கு அப்பா வேணும் அதை முதலில் யோசி. அந்தத் தம்பியும் எத்தனை நாள் தான் பொறுத்துட்டு இருக்கும்” ஆண்டாள் மகளிடம் சொல்லியவர் உள்ளே செல்ல, ஸ்ரீனிவாசனும் அதையே ஆமோதித்தார். “மதி ஷரத்துக்காக உன் பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்தக் கூடாதாம்மா” மதி தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

விஷ்ணு வந்து ஷரத்தை அழைத்ததும் மகிழ்ச்சியுடன் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனுடன் பள்ளிக்கு சென்ற மகனைப் பார்க்கும் பொழுது தந்தை என்பவன் எவ்வளவு முக்கியம் என்று மதிக்குப் புரியத்தான் செய்தது. ஆனால் அதற்காகத் தான் திருமணப் பந்தத்தில் சிக்கிக் கொள்ள முடியுமா? என்ற கேள்வியும் அவள் மனதில் எழத்தான் செய்தது.

மாலையில் வந்த விஷ்ணு ஷரத்துடன் நேரத்தை செலவிட, இனிமையாகக் கழிந்த பொழுது வேகமாகச் செல்ல இரவும் வந்தது. இரவில் அவன் கிளம்பும் போது... அதுவரை சமத்தாக இருந்த ஷரத் அழ ஆரம்பித்தான். “எல்லார் டாடியும் அவங்க கூட ஒரே வீட்லத் தானே இருக்காங்க. நீங்க மட்டும் ஏன் என்னை விட்டுட்டு போறீங்க? இனிமேல் நீங்க ஷரத் கூடத் தான் இருக்கணும்”

“என்னடா சும்மா சும்மா படுத்துகிறாய்? உன்னை என்ன...” மதி அவனை அடிக்கக் கையை ஓங்க, அவளை

லாவகமாகத் தடுத்த விஷ்ணு மகனை தன் கையில் ஏந்திக் கொண்டான். “இப்போ என்ன நான் உன் கூட இருக்கணும் அவ்வளவு தானே. சரி... நான் உன் கூட இருக்கிறேன்” அவனைச் சமாதானப்படுத்தியவன், “அத்தை... ஷரத்திற்குச் சாப்பாடு எடுத்துக் கொடுங்க. நான் ஊட்டி விடுறேன்” என்றவன் சொன்னதோடு இல்லாமல் அவனுக்கு ஊட்டி விட்டு மேலும் சிறிது நேரம் அவனுடன் விளையாடிவிட்டு அவனே ஷரத்தை உறங்கச் செய்தான். ஷரத் உறங்கியதும், போர்வையைப் போர்த்தியவன் மதியின் வரவை உணர்ந்து அவளை நோக்கித் திரும்பினான்.

“இதுக்குத் தான் தலைப்பாடாய் அடிச்சிகிட்டேன். தேவையில்லாமல் அவன் மனதில் தகப்பன் ஆசையை வளர்த்து விட்டு... இப்பொழுது மாட்டிக்கிட்டு முழிகிறது யாரு? எல்லாமே உங்களுக்கு விளையாட்டாப் போயிருச்சு?” படபடவெனப் பொரிந்தவளை பார்த்து அமைதியாய் புன்னகைத்தவனைக் கண்டு அவளின் ஆத்திரம் இன்னமும் அதிகமாகியது.

“என்னை ஏன் நிம்மதியாக இருக்கவிட மாட்டேங்கிறிங்க? இன்னைக்குச் சமாளிச்சாச்சு... நாளைக்கு ஷரத் கேட்டா நான் என்ன சொல்ல?”

“இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படிக் கோபப்படுற? நீ மனசு வைச்சா எல்லாம் நல்லபடியா நடக்கும் ஷரத்தின் ஆசையும் நிறைவேறும். அதுக்கு நீதான் மனசு வைக்க வேணும். இப்ப ‘ம்’ன்னு ஒரு வார்த்தை சொல்லு... நாளை காலையில் நம் திருமணத்தை வைச்சுக்கலாம்”

“உங்களை...” என்ன செய்வது என்று தெரியாமல் அருகில் இருந்த தலையணையைத் தூக்கி அவனை அடித்தாள்.

“ம்... நீ அடிப்பது கூடச் சுகமாத் தான் இருக்கு. ஆனா என் மனைவியாய் உரிமையோடு அடித்தால் இன்னமும் நல்லாயிருக்கும்” என்று கூறியவன், அவள் கையில் இருந்த தலையணையைப் பறித்துத் தூர எறிந்து விட்டு அவள் அருகில் நெருங்கி வந்தான். மதி அச்சத்தில்

கண்களை அகல விரித்துப் பார்த்தவள் பார்வையில் பயம் மட்டுமே இருந்தது.

“என்னை அடித்த இந்தக் கைகளை என்ன செய்யலாம்?” அவள் கைகளைப் பற்றி முகத்திற்கு நேரே தூக்கிப் பார்த்தவன் யோசனையுடன் கூற, அதைக் கேட்டு அவளின் இதயம் தாறுமாறாகத் துடிக்கத் துவங்க, அவனோ சாகவாசமாக அவளின் புறங்கையில் தன் இதழைப் பதித்தவன், “ம்... இது தான் இதுக்குச் சரியான தண்டனை. இப்போ சண்டை போட்ட கைக்கு இந்தத் தண்டனைக் கொடுத்திருக்கேன். இனியும் ஏதாவது பேசினால் சண்டை போடும் இந்த வாய்க்கும் தண்டனை நிச்சயம் உண்டு. எனக்குத் தண்டனை கொடுக்க ஆசையாத் தான் இருக்கு. உனக்கும் அதை வாங்க ஆசையா இருந்தால் சொல்...” அவளின் உதட்டை சுண்டியவாறு கூறியவனைத் திகைத்துப் போய்ப் பார்க்க, அவனோ அவள் தலையைச் செல்லமாகக் களைத்தவன் கண்சிமிட்டி புன்னகைத்தபடி அறையை விட்டு வெளியேறினான்.

அத்தியாயம் : 18

வீட்டின் அருகிலிருந்த பூங்காவில் ஷரத்துடன் விளையாடிக் கொண்டிருந்த விஷ்ணு, அவன் அங்கிருந்த சிறுவர்களுடன் விளையாடச் சென்றதும் கல்மேடையில் அமர்ந்திருந்த ஷன்மதியின் அருகில் வந்தமர்ந்தான். மகன் விளையாடும் அழகை ரசித்துப் பார்த்தவன், மதியின் புறம் தன் பார்வையைத் திருப்பினான். அவளோ அவன் வரவைக் கூட உணராமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“ஷம்மு... என்ன இவ்வளவு தீவிரமான யோசனை?”

“ம்ப்ச்...ஒண்ணுமில்லை”

“அப்படின்னா ஏதோ இருக்கு? இந்த அழகான பெண்ணுக்கு என்ன யோசனை?” அவன் பேச்சில் அவனை முறைத்துப் பார்த்தவளை, “ஐயோ பயமாயிருக்கே...” போலியாய் அலறியவனைக் கண்டு இன்னமும் எரிச்சல் வர, “நாளைக்கு ஷர்மியின் நிச்சயத்தை வைச்சுகிட்டு இங்கே ஷரத்தோட என்ன விளையாட்டு?” நாளை இங்கே விஷ்ணு குடியிருக்கும் வீட்டிலேயே யுவன் ஷர்மி நிச்சயம் நடைபெறவிருக்கிறது. யோகேந்திரன், யசோதா, ஷர்மிளா மூவரும் ஊரிலிருந்து ஐந்து நாட்கள் முன்பாகவே இங்கே வந்து விட்டனர்.

“அட இங்கே பாருடா... பொறுப்பான மருமகளா என் மனைவி பேசுறத...” அதற்கும் அவனை முறைத்தவளைப் பார்த்து சிரித்தவன், “எல்லா வேலையும் முடிந்தது. எனக்கே கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணனும்ன்னு தோணிச்சு... அதான் ஷரத்தைப் பார்க்க வந்தேன். சரி அதை விடு... நாளை பங்கசனுக்கு வர்ற தானே?”

“அப்பா, அம்மா, சுவாதி, ஷரத் வருவாங்க”

“அப்புறம் செடி கொடி அதையெல்லாம் விட்டு விட்டாயே?” அவனின் குரல் எரிச்சலுடன் ஒலித்தது. “நான் நீ வர்றியான்னு தான் கேட்டேன்?”

“இல்லை நான் வரல... நான் வந்தால் அனாவசியக் கேள்விகள் வரும்” அன்று விலாசினிப் பேசிய

வார்த்தைகளை மதி மறக்கவில்லை. அவளைப் போல் மற்றவர்கள் ஏதும் பேசிவிட்டால்... தன்னால் ஏன் ஷர்மியின் வாழ்வு கெட வேண்டும் என்ற எண்ணமே அவளை அங்கே போக விடாமல் தடை செய்தது.

“யார் என்ன சொல்லப் போறாங்க? நீயும் நானும் ஷரத்தோட அப்பா, அம்மான்னு எல்லோருக்கும் தெரியும். அவங்க எல்லோருமே நம் உறவை அங்கீகரிக்கத் தான் செய்றாங்க. நீ தான் இன்னமும் அதை அங்கீகரிக்க முடியாமல் இருக்க. ஊர் உலகத்துக்குத் தெரிய தாலின்னு ஒண்ணைத் தான் உன் கழுத்தில் நான் கட்டல. மத்தபடி நீயும் நானும் கணவன் மனைவி தான். அதனால இது போல் லூசுத்தனமா பேசாம நாளைக்குக் கட்டாயம் நிச்சயத்துக்கு வரும் வழியைப் பாரு. அம்மா உன்னை ரொம்ப எதிர்ப்பார்ப்பாங்க” பதில் பேசாமல் அமர்ந்திருந்தவளிடம், “நாளை மட்டும் நீ வரலன்னு வைச்சுக்கோ... நானே உன்னைக் குண்டுகட்டாகத் தூக்கிக்கிட்டு போய்டுவேன்” கேலிக் குரலில் சொன்னவனை முறைத்துப் பார்க்கத் தான் அவளால் முடிந்தது.

****

விஷ்ணு நிச்சயத்திற்கு வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தாலும் அவன் கண்கள் தன்னவளின் வருகைக்காகத் தான் காத்திருந்தது. வருவாளா? மாட்டாளா? என்று மனதுக்குள் அவன் தவித்துதான் போனான். அவனை ஏமாற்றாமல் அவன் தேவதை வந்திறங்கினாள். மெல்லிய சரிகையிட்டப் பட்டுப் புடவையில், ஆங்காங்கே சிலும்பிக் கொண்டிருந்த முடியை கிளிப்பில் அடக்கி பூ வைத்து, கொஞ்சமாய் நகை அணிந்து வந்தவளை கண்டு மயங்கித் தான் போனான். அன்று வளைக்காப்பில் அவளை அதிக அலங்காரத்தில் பார்த்தது, அதற்குப் பின் இன்று தான் இவ்வளவு அலங்காரத்தில் பார்க்கிறான்.

அன்று தாய்மையின் பூரிப்பில் இருந்தவளை காதலன் கண்ணோட்டத்தில் அவனால் பார்க்க இயலவில்லை.

ஆனால் இன்று கொடியிடையுடன் மெல்ல அசைந்து அசைந்து வந்தவளின் மொத்த அழகையும் அன்றே பருகி விடுவது போல் அவளை அணு அணுவாய் பார்த்து ரசித்தபடி, விழுங்கி விடுவது போல் பார்த்தவனைக் கண்டு மதியும் சங்கடத்தில் நெளிந்தாள்.

எப்பொழுதும் கண்ணியத்துடன் பார்க்கும் விஷ்ணுவையே பார்த்து பழகியவளுக்கு இந்த விஷ்ணு... அவன் பார்வை... எல்லாம் புதிதாக இருந்தது. அவளையுமறியாமல் முகம் சிவக்க அவனைப் பாராமல் வேறுபக்கம் தன் பார்வையைத் திருப்பினாள். அவளின் முக மாற்றம் கண்டு விஷ்ணுவுக்கு அப்படியே அந்த வானத்தை வசப்படுத்திய ஒரு உணர்வு.

“டாடி...” ஷரத்தின் குரலில் தான் விஷ்ணு மதியின் மயக்கத்திலிருந்து தெளிந்தான். கை நீட்டி அவனைத் தூக்கியவனைத் தடுத்த ஸ்ரீனிவாசன், “நான் இவனைப் பார்த்துக்கிறேன்... நீங்க மத்த வேலைகளைக் கவனிங்க” என்று சொல்ல சிரித்தபடி ஷரத்தை முத்தமிட்டவன் அவரிடம் அவனைக் கொடுத்தான்.

இதையெல்லாம் எரிச்சலுடன் பொறாமையுடன் விலாசினி பார்த்துக் கொண்டிருந்தாள். ‘என்ன ரொமான்ஸ் லூக்கா விட்டுட்டு இருக்க? இன்னும் கொஞ்ச நேரம் தான் விஷ்ணு... உன்னை நான் அழ வைக்கல என் பேர் விலாசினி இல்லை... அதுவரைக்கும் அந்தக் குரங்கை நல்லா ரசிச்சுக்கோ’ மனதில் கறுவியவள் ஏளனப் புன்னகையை உதிர்த்தாள்.

“டேய்... உன் ஆளை சைட் அடிச்சது போதும். எப்போ என் ஆளைக் கண்ணில் காட்டுவிங்க? சின்னப் பையன் ஏக்கத்தைப் புரிஞ்சிக்கவே மாட்டிங்களே” விஷ்ணுவுடன் கேட்ட யுவனின் குரலில் ஏகத்திற்கும் ஏக்கம் நிறைந்திருந்தது.

“இன்னும் கொஞ்ச நேரம் தான்டா மாப்பிள்ளை. அதுக்கு அப்புறம் அவள் கூடவே இரு. யார் வேண்டாம்ன்னு சொன்னது. வா உள்ளே போகலாம்” நண்பனை அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றான் விஷ்ணு.

நிச்சயத்திற்கான நேரம் இன்னமும் இருந்ததால் யுவனை அமர வைத்து விட்டு விஷ்ணு வேறு வேலைகளைக் கவனிக்கச் சென்றான். என்ன வேலை செய்தாலும் அவன் கண்கள் தன்னவளைத் தான் தேடியது. எங்கேயும் அவளைக் காணவில்லை. ஷர்மி கூட இருப்பாளோ என்று அங்கே செல்ல அங்கேயும் அவளில்லை. ஒவ்வொரு இடமாகத் தேடிக் கொண்டே வந்தவன் ஒதுக்குப்புறமாக இருந்த ஸ்டோர் ரூமில் ஜன்னல் ஓரத்தில் நின்று வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டு அவளருகே வந்தான்.

“ஷம்மு...” அவன் குரல் குழைந்து தழைந்து ஒலித்தது அவனுக்கே வித்தியாசமாக இருந்தது. மொத்தக் காதலையும் தேக்கி வைத்துக் கூப்பிட்டவனைத் திரும்பி பார்த்தவள் அப்படியே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

வேட்டி சட்டையில் அழகாக ஆண்மையின் கம்பீரத்துடன் இருந்தவனின் அழகு அவள் மனதுக்குள் புகுந்து அவளை ஏதேதோ செய்தது. அவளின் பார்வையைக் கவனித்தவன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அவளருகே வந்தவன், “இன்னைக்கு நீ ரொம்ப அழகாயிருக்க. இத்தனை நாள் இந்த அழகை எல்லாம் எங்கே ஒளிச்சு வச்சிருந்த?” அவளின் பதிலை எதிர்பாராமல் அவளின் முன்நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவனை, அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டே பதற்றத்துடன் தள்ளிவிட்டவள், “யாராவது பார்க்கப் போறாங்க? முதல்ல நீங்க இங்கே இருந்து போங்க”

“பார்த்தா என்ன... பார்த்துட்டு போகட்டும்?” உல்லாசமாகச் சிரித்தவனை உறுத்து விழித்தாள்.

“ஓகே ஓகே கூல்... நீ ஏன் இங்கே இருக்க? ஹாலில் போய் உட்காரு... இல்லை ஷர்மி கூடப் போய் இருக்க வேண்டியது தானே? இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க?”

“இல்லை வேண்டாம்... நான் இங்கேயே இருக்கிறேன்”

“நீ சொன்னால் கேட்க மாட்ட... வா என் கூட...” அவள் கையை உரிமையுடன் பிடித்தவன், வரவேற்பறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே சென்றும் அவள் கையை

அவன் விடவில்லை. நிச்சயத்திற்கு வந்திருந்த நெருங்கிய உறவினர்களுக்கு அவர்களின் உறவை பற்றித் தெரியுமாதலால் யாரும் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

“யசோ... ஷர்மியைக் கூட்டிட்டு வா...” யோகேந்திரன் சொல்லவும் ஷர்மிளாவை அழைத்து வந்தார் யசோதா. அழகுப் பதுமை போல் வந்தவளைப் பார்த்து யுவன் விட்ட ஜொள்ளில் அந்த வீடு மூழ்காமல் இருந்ததே பெரிய ஆச்சிரியம். அவள் வந்து சபையினரைப் பார்த்து வணக்கம் சொல்லி அமர,

“என்ன சம்பந்தி... தட்டை மாத்திக்கலாமா?” யுவனின் தந்தையிடம் யோகேந்திரன் கேட்க, “அதுக்கு முன்னாடி ஒரு விசயம் பேசணும்” அவரின் பேச்சில் எல்லோரும் குழப்பத்துடன் அவரைப் பார்க்க... யுவன் யோசனையுடன் தந்தையைப் பார்த்தான்.

“உங்க வீட்டுப் பெண்ணை என் மகனுக்குக் கட்டுவதில் எந்தக் குழப்பமும் இல்லை. அதில் எங்களுக்குப் பரிபூரணச் சம்மதம்” அவரின் பேச்சைக் கேட்டு எல்லோர் முகமும் தெளிய,

“அதே மாதிரி உங்க பையனுக்கு என் பெண்ணைக் கொடுக்கலாம்ன்னு விரும்புகிறேன். பெண் எடுத்துப் பெண் கொடுத்தால் நன்றாக இருக்கும்ன்னு நினைக்கிறேன். நீங்க சம்மதிச்சா இரண்டு திருமணமும் நடக்கும். இல்லைன்னா... யோசிச்சு நல்ல முடிவா சொல்லுங்க” அவர் சொன்னதைக் கேட்டு ஒவ்வொருத்தரின் மனநிலையும் ஒவ்வொரு விதத்தில் இருந்தது.

யோகேந்திரன் அவரின் பேச்சைக் கேட்டுக் கண்கள் சிவக்க கோபத்துடன் ஏதோ பேச வாய் திறக்க... யசோதா கண்களால் இறைஞ்ச அவர் அப்படியே அமைதியாய் அமர்ந்திருந்தார். ஆனால் மனதுக்குள் கோபம் கனன்று கொண்டிருந்தது.

அவர்களின் உறவினர்களும், “விஷ்ணுவிற்கு அந்த மதிப்பெண்ணைத் தானே பிடிச்சிருக்கு. அவளைத் தானே

கல்யாணம் செய்யப் போறான். இந்த நேரத்தில் இவர் ஏன் இப்படிக் குட்டையைக் குழப்புகிறார்?” வாய் விட்டு முணுமுணுக்கவே செய்தனர்.

யுவனோ கோபத்துடன் தந்தையைப் பார்த்தான். ஆனால் அவரோ அவனைப் பார்க்கவில்லை. விலாசினியைப் பார்த்து ‘எப்படி?’ என்று பெருமிதத்துடன் கண்ணால் கேட்டுக் கொண்டிருந்தார். விலாசினியோ வெற்றிப் பெருமிதத்தில் தந்தையைப் பார்த்துச் சிரித்தவள் அதே மமதையுடன் விஷ்ணுவைப் பார்த்தாள். யுவனின் தாயாரோ மகனின் கோபத்தின் அளவு அவருக்குத் தெரியுமாதலால் என்ன நடக்கப் போகிறதோ? என்று பயத்தில் அமர்ந்திருந்தார்.

மதியோ இந்தப் பேச்சைக் கேட்டு திகைத்துப் போனவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிய, விஷ்ணுவின் பிடியிலிருந்து கைகளை உருவி கொள்ள முயன்றாள். விஷ்ணுவும் யுவனின் தந்தை கூறியதைக் கேட்டு அதிர்ந்து போய்த்தான் நின்றிருந்தான். அந்நேரம் பார்த்து மதி அவனின் கைப்பிடியிலிருந்து கைகளை உருவி கொள்ள முயல, தன் மன அதிர்வை சட்டென்று ஒதுக்கி வைத்தவன், அவளை ஆறுதல் படுத்துவது தான் முக்கியம் எனக் கருதி, அவளின் முகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ஒரு கையை அவள் தோளைச் சுற்றி அணைவாய் போட்டு தன்னுடன் இறுக்கிக் கொண்டவன், மறுகையால் அவளின் கையை ஆதரவாக பற்றிக் கொண்டான்.

இக்கட்டான சூழ்நிலையிலும் தன்னை ஆறுதல் படுத்தும் அவனின் தன் மீதான காதல் கண்டு மனதுக்குள் கர்வப்பட்டாலும், அதை ஏற்க முடியாமல் இருக்கும் தன் நிலையை எண்ணி மனதுக்குள் ஊமையாக அழுதாள். ஷர்மிளாவுக்கோ என்ன செய்வது என்று தெரியாமல் சிலையாய் அப்படியே உட்கார்ந்திருந்தாள். ஆண்டாள் ஸ்ரீனிவாசன் பேச்சை மறந்தவர்களாய் அப்படியே திகைத்துப் போய் அமர்ந்திருந்தனர். இயல்பாய் இருந்தது ஷரத் மட்டுமே.

“என்ன நான் கேட்டதுக்கு இன்னமும் பதில் வரல?” யுவனின் தந்தை கேட்க, “இதுக்கு நாங்க சம்மதிக்கலன்னா...” யோகேந்திரன் குரல் கடுப்புடன் வந்தது.

“சம்மதிக்கலன்னா... உங்க பொண்ணை எங்க பையனுக்கு எடுப்பதில் எங்களுக்கு விருப்பமில்லைன்னு அர்த்தம். சரி... யுவன்... எழுந்திரு... போகலாம்”

இப்படி ஒரு கிடுக்கிப்பிடி போட யாராலும் எதுவும் செய்ய முடியாமல் போனது. யோகேந்திரன் மகளுக்காக யோசிக்கவா? இல்லை மகனுக்காக யோசிக்கவா? என்று தெரியாமல் குழப்பமாய் அமர்ந்திருந்தார். அப்பொழுது தான் யுவனின் கம்பீரக் குரல் ஒலித்தது.

“அப்பா... பேச வேண்டியது எல்லாம் பேசி முடிச்சிடிங்களா? இல்லை இன்னமும் ஏதாச்சும் பாக்கி இருக்குதா?” தந்தையிடம் கோபத்துடன் கேட்டவன், அதே கோபத்துடன் விலாசினிடம் திரும்பி, “விஷ்ணு மதியை விரும்புறான்னு உனக்கு நல்லாவே தெரியும். அப்படி இருந்தும் இப்படி அப்பாவை பேச விட்டு வேடிக்கை பார்ப்பது நியாயமா? மதியும் உன்னை மாதிரி ஒரு பெண் தானே? கொஞ்சம் யோசித்துப் பார்”

“நான் ஏன் யோசிக்கணும் யுவன்...? இந்த விஷ்ணுவை நான் எந்த அளவிற்குக் காதலித்தேன்னு தெரியுமா? என்னைப் பத்தி இவன் யோசித்தானா? அப்படி இருக்கும் போது நான் ஏன் கண்டவளைப் பத்தி யோசிக்கணும்? யாருக்கவோ யோசிக்கிறாயே உன் சொந்தத் தங்கை எனக்காக நீ ஏன் யோசிக்கக் கூடாது? உன் நண்பன் என்னை ஏமாத்திட்டானே அதைப் பத்தி நீ ஏன் யோசிக்க மாட்டேங்கிற?” முதன்முறையாக விலாசினியின் காதலை அதுவும் விஷ்ணு மேலிருந்த காதலை அறிந்த யுவன் திகைத்தான்.

ஆனால் அது கொஞ்ச நேரம் தான், விலாசினியின் பேச்சிலேயே பொறாமையும் பழிவாங்கும் குணமும் அவனுக்கு நன்கு புரிய, “ச்சீ... உன்னை என் தங்கை என்று சொல்லவே வெட்கமாய் இருக்கு. இவ்வளவு அழகாய்

திட்டம் போட்டுக் காரியத்தை நகர்த்தி இருக்குற. உன்னையும் நான் நம்பினேனே என்னைச் சொல்லணும். நீ எனக்குத் தங்கை தான் இல்லைன்னு சொல்லல. அதே போல் மதியும் எனக்கு இன்னொரு தங்கை தான். ஒரு தங்கை வாழ்வை அழித்துத் தான் மற்றொரு தங்கை வாழணும்ன்னு அவசியமில்லை. உன் காதல் ஒருதலைக் காதல். ஆனால் அதைக் காதல்ன்னு என்னால் ஒத்துக் கொள்ள முடியாது. நீ காதலித்ததை என்னைக்காவது என்னிடம் சொல்லியிருக்கியா? இல்லை விஷ்ணுவிடமாவாது அதைச் சொல்லியிருக்கியா? இதில் அவன் எங்கே உன்னை ஏமாத்தியிருக்கான்? காதல் என்பது ஆத்மார்த்தமான ஒன்று. அதற்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்பதும் எனக்குத் தெரியும். காதல் என்றால் என் நண்பன் விஷ்ணுவின் காதல் போல் இருக்கணும். கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக அவன் மதியைக் காதலிக்கிறான். அவளுக்காகவே வாழ்கிறான். அவன் காதலை சமாதியாக்க நான் எப்படித் துணிவேன்னு நீ நினைச்ச?" தங்கையைச் சாடியவன், யாரும் எதிர்பாராத நேரத்தில் நிச்சய மோதிரத்தை எடுத்து ஷர்மிளாவின் கையில் அணிவித்து, அவளின் புறங்கையில் மென்மையாய் முத்தமிட, அவனின் செயலில் முதலில் திகைத்த ஷர்மிளா பின்பு நன்றயுணர்வில் கண்களில் கண்ணீர் வழிய அவனையே காதலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா... நான் அன்னைக்குச் சொன்னதைத் தான் இன்னைக்கும் சொல்றேன். சம்மதித்தால் உங்க ஆசிர்வாதத்துடன் எங்க கல்யாணம் நடக்கும். இல்லைன்னா..." அதைக் கேட்க அவர் அங்கே நிற்கவில்லை, யுவனை முறைத்தபடி வேகமாக அங்கிருந்து வெளியேறினார்.

தன் எண்ணம் நிறைவேறாத ஆத்திரத்தில் விலாசினி கோபத்துடன் காலால் தரையை உதைத்தவள் தந்தையைப் பின்தொடர்ந்து சென்றாள். யுவனின் தாயார் தான் மனது கேட்காமல் திரும்பி பார்த்தவாறே சென்றார்.

விஷ்ணு ஓடி வந்து நண்பனைக் கட்டிக் கொண்டான். யோகேந்திரன் வருங்கால மருமகனின் வீரம் கண்டு பெருமைப் பட்டவராய் மனைவியைப் பார்த்து, ‘எப்புடி... என் மருமவன்?’ என்பது போல் பார்க்க, யசோதா... ‘சூப்பர்’ என்று கண்ணால் பதில் சொன்னார்.

அத்தியாயம் : 19

“யுவன் நீ செஞ்ச காரியம் ஒரு அண்ணனாய் என்னால சந்தோசப்பட முடியுது. ஆனால் ஒரு நண்பனாய்... மகனாய்... பார்க்கும் போது தப்பாத்தான் தோணுது. கொஞ்சம் யோசிச்சுப் பார்”

“இல்லை விஷ்ணு... இதில் யோசிக்க என்ன இருக்கு? அவங்க சம்மதிக்கலன்னா நான் என்ன தான் செய்றது? ஒருவேளை சொத்து ஏதும் கிடைக்காது... உன் தங்கை கஷ்டப்பட வேண்டி வருமோன்னு கவலைப்படுறியா? அப்படி ஏதும் எண்ணம் உனக்கு இருந்தால் நீ கவலைப்படாதே... அவளைக் கண் கலங்காமல் நான் பார்த்துக் கொள்வேன்” யுவன் தன் பெற்றோர் விருப்பமில்லாமல் ஷர்மிளாவைத் திருமணம் செய்யத் துணிந்து விட்டதன் பின்பு அதற்கான ஏற்பாட்டைப் பார்க்கச் சொல்லி விஷ்ணுவிடம் சொல்ல... அதை அவன் மறுத்து பேசும் போது தான் இருவருக்குமிடையில் இந்த வாக்குவாதம்.

“டேய்... நான் என்ன சொல்றேன்... நீ என்ன சொல்ற? நான் என்ன என் தங்கையை நினைத்தாக் கவலைப்படுறேன். அவளுக்குத் தான் நீ இருக்கிறாயே... எல்லாம் உன்னை நினைத்து தான் நான் கவலைப்படுறேன். இன்னைக்கு நீ அவசரத்தில் முடிவெடுத்துவிட்டு பின்னாடி வருத்தப்படக் கூடாதேன்னு அதுக்குத் தான் சொல்றேன்”

“ம்... அப்படின்னா ஒரே ஒரு வழி தான் இருக்கு. ஆனா அதுக்கு உன் உதவி வேணுமே?” யோசனையாய் நண்பனை யுவன் பார்க்க,

“உனக்கு இல்லாத உதவியா? என்ன செய்யணும் சொல்லு?” விஷ்ணு ஆர்வத்துடன் கேட்க,

“எங்க கல்யாணத்துக்கு முன் நீ மதியைத் திருமணம் செஞ்சுக்கணும்”

“ம்ப்ச்... வேறு எதையாவது சொல்லு யுவன். இது நடக்கிற காரியமா? அவள் என்னைக்குச் சம்மதித்து என்னைக்கு

எங்க கல்யாணம் முடிய...?” விஷ்ணுவிற்கே அதை நினைத்து சற்று ஆயாசமாகத் தான் இருந்தது.

“மதி கடைசி வரை சம்மதிக்கலன்னா இப்படியே பொறுமையாய் காலத்தை ஓட்டி விடலாம்ங்கிற நினைப்பா உனக்கு? பொறுமைக்கும் ஒரு அளவு தானிருக்கு விஷ்ணு... ஏதாவது செஞ்சு அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அதுக்கப்புறம் கணவனாய் அவள் பக்கத்திலேயே இருந்து உன் அன்பை அவளுக்குப் புரியவை. அதை விட்டுட்டு இப்படிப் புலம்புறதுல நோ யூஸ்”

“நீ சொல்றது எல்லாம் சரி தான்... அதுக்கும் நீ திருமணம் செய்றதுக்கும் என்னடா சம்பந்தம்?” புரியாமல் வினவியவனைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்ட யுவன், “நீயெல்லாம் எப்படித் தான் லாயரானாயோ தெரியல. நீ திருமணம் செய்து கொண்டால்... கொஞ்ச நாளில் என் அப்பா உன்னை மறந்து விட்டு வினிக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கிடுவார். அதன் பிறகு நான் பிடிவாதமாயிருந்து ஷர்மியைக் கல்யாணம் பண்ணிக்குவேன். எங்க திருமணத்தைக் காரணம் காட்டி உன் கல்யாணமும் நடக்கும், வினி தொந்திரவும் விட்டது, நானும் என் பெற்றோரை எதிர்த்துத் திருமணம் செஞ்சுக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே கல்லில் மூணு மாங்காய்”

“ம்... என்னென்னவோ சொல்கிறாய் எது நடக்குதுன்னு பார்ப்போம்?”

“சும்மா நூத்துக் கிழவன் போல் புலம்பாமல் முதலில் மதியிடம் திருமணத்திற்குச் சம்மதம் கேள். மற்ற விசயங்களை நான் பார்த்துக்கிறேன்” விஷ்ணுவை வலுக்கட்டாயமாக மதியைப் பார்க்க கிளப்பி விட்ட பின்தான் ஓய்ந்தான் யுவன்.

“போய்ப் பேசிப் பார்க்கிறேன். அவள் ஏதும் என்னை அடித்து... எனக்குக் காயமாகி... எதுக்கும் ஆம்புலன்சை ரெடியா வச்சுக்கோ யுவன்” நண்பனிடம் கேலியுடன் கூறினாலும், யுவன் சொன்னது போல் எவ்வளவு காலம் தான் அவள் மனம் மாறுவாள் என்று பொறுமையாய் இருப்பது என்று எண்ணியவன் மதியிடம் அதிரடியாய் பேசி

காரியத்தைச் சாதிக்க எண்ணி அவள் வீட்டிற்கு விரைந்தான். அங்கே அவனுக்கு என்ன காத்திருக்கிறது? என்றறியாமல் போனான்.

****

“ஏய்... கொஞ்சம் நில்லு...” கல்லூரியிலிருந்து வந்து கொண்டிருந்த ஷன்மதியின் வழியை மறைத்துக் கொண்டு நின்றாள் விலாசினி. மதி அவளை நிதானமாக ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் விலாசினியோ முகத்தில் கோபம் கொப்புளிக்க அவளை எரிச்சலுடன் பார்த்தாள்.

“ஏன் விஷ்ணுவைச் சுத்திச் சுத்தி வர்ற? நீ வந்ததால் தான் அவர் என்னைக் கண்டுக்க மாட்டேங்றார். நீ மட்டும் எங்க ரெண்டு பேருக்கிடையில் வாராமல் இருந்திருந்தால் எங்க கல்யாணம் நடந்திருக்கும். எல்லாம் உன்னால் வந்தது”

“இங்கே பாருங்க மரியாதையாப் பேசுங்க. நானா உங்க ரெண்டு பேருக்குக்கிடையில் நந்தி மாதிரி இருக்கிறேன்? நீங்க அவரை விரும்பினால்... அதை அவரிடமே சொல்லி சம்மதம் வாங்குங்க. அதை விட்டுட்டு என்னிடம் ஏன் வம்பிழுக்கிறீங்க?”

“ஓஹோ... விஷ்ணு சம்மதிக்க மாட்டார்... உன்னைத் தவிர யாரையும் காதலிக்க மாட்டார்ங்கிற தைரியத்தில் தானே இப்படியெல்லாம் பேசுற? அப்படி எதையடிக் காண்பித்து அவரை மயக்கினாய்?” மதியை மேலும் கீழும் பார்த்தவள்... “அப்படி ஒன்றும் என்னை விடப் பிரமாதமான அழகியும் நீயில்லை. அப்படி என்னத்தைத் தான் அவர் உன்னிடத்தில் கண்டாரோ? அதை நீ என்னிடம் சொன்னால் எனக்கும் யூஸ் ஃபுல்லா இருக்கும்ல” அவளின் பேச்சைக் கேட்டு முகத்தை அருவருப்புடன் சுளித்த மதி சற்றும் அவளைப் பொருட்படுத்தாமல் அங்கேயிருந்து நகர்ந்தாள்.

மதியின் இந்த அலட்சிய செயல் விலாசினியை உசுப்பேத்த, மீண்டும் அவளருகே போனவள், “என்னையவா அலட்சியப் படுத்துகிறாய்? உன்னை...”

“என்ன செஞ்சிருவ?” கிண்டலுடன் கேட்ட மதியை என்ன செய்வது என்று தெரியாமல் முழித்தவளிடம், “நான்

கராத்தே கத்துக்கிட்டது ஆண்களிடமிருந்து என்னைப் பாதுகாக்க மட்டுமல்ல... உன்னை மாதிரிப் பெண்ணிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ளத்தான்" மதி சொன்னதும், முகம் அவமானத்தால் கறுக்க அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் அவள் வழியிலிருந்து ஒதுங்கினாள் விலாசினி. ஏளனப் புன்னகையை அவள் மேல் வீசிவிட்டு நடந்த மதியைக் கண்டு உள்ளம் கொதிக்க நின்றிருந்தாள் அவள்.

விலாசினியின் பேச்சால் ஏற்பட்ட கோபத்தை முயன்று அடக்கியபடி வீட்டினுள் நுழைந்த மதியின் காதில் விஷ்ணுவும் ஷரத்தும் சேர்ந்து சிரிக்கும் சத்தம் விழ, அதுவரை அடக்கப்பட்டிருந்த கோபமெல்லாம் நீருற்று போல் பீறிட்டு வந்து விஷ்ணுவின் மேல் திரும்பியது. 'எல்லாம் இவனால் வந்தது? இவனால் தான் அவள் என்னைக் கண்டபடி பேசினாள்? இவன் ஒருவன் என் வாழ்வில் வரவில்லை என்றால் நான் நிம்மதியாக இருந்திருப்பேன். இவனால் என்றுமே எனக்குத் தொந்திரவு தான்' விலாசினி பேச்சால் வந்த கோபத்தை விட, அவன் காதலை ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கும் தன் நிலையை எண்ணி அவளுக்குள் எழுந்த கோபமே அதிகமாகயிருந்தது.

"ஹேய்... மம்மி வந்தாச்சு..." தந்தையின் முதுகில் யானை சவாரி செய்து கொண்டிருந்த ஷரத் மகிழ்ச்சியுடன் கூவ, மதியோ விஷ்ணு மேல் உள்ள கோபத்தில் விஷ்ணுவோடு சேர்த்து, மகிழ்ச்சியுடன் வரவேற்ற மகனையும் பார்த்து முறைத்தவள், அவர்களைக் கண்டு கொள்ளாமல் இருவரையும் தாண்டி உள்ளே சென்றாள்.

"டாடி... மம்மி ஏன் கோபமா போறாங்க?" மதியின் செயலில் விஷ்ணுவின் மனம் துணுக்குற்ற போதிலும் மகனிடம் அதைக் காட்டிக் கொள்ளாமல், "உங்க மம்மிக்குப் பொறாமைச் செல்லம். ஒரு முத்தாக் கொடுத்தா சரியாகிடுவா" என்று கூறியவன் சிறிது நேரம் அவனுடன் விளையாடிவிட்டு, அதன் பின் ஆண்டாளிடம் சென்று மதியிடம் கொஞ்சம் தனித்துப் பேச வேண்டுமென்று அவரிடம் அவனை விட்டான்.

“ஷரத் கண்ணா... நீ, நான், தாத்தா, சித்தி எல்லோரும் பார்க் போலாமா?” ஆண்டாள் கேட்டதும் தான் தாமதம் குஷியுடன் அவன் அவர்களோடு கிளம்பிவிட்டான்.

அவர்கள் சென்றதும் விஷ்ணு நேரே மதியின் அறைக் கதவைத் தட்டியவன், அவள் திறந்ததும், “உன்னிடம் கொஞ்சம் பேசணும். ஹாலுக்கு வா” அவள் பதிலை எதிர்பாராமல் சென்றான். அவன் முதுகையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது. இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

வரவேற்பறையில் யாரையும் காணாமல் சுற்றும் முற்றும் பார்த்தவளுக்கு, “எல்லோரும் ஷரத்தைக் கூட்டிட்டுப் பார்க்குக்குப் போயிருக்காங்க” விஷ்ணுவின் பதிலில் சற்று யோசனையுடன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

“ஷம்மு... உன்னிடம் எப்படிச் சொல்றதுன்னு தெரியல...” பீடிகையுடன் அவன் ஆரம்பிக்க, அவளோ என்ன வரப் போகிறதோ என்ற பயத்தில் திக்திகென்று இதயம் துடிக்க அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

“எத்தனை நாளைக்குத் தான் நாம இப்படியே இருப்பது. நம் திருமணம் பத்தி நீ என்ன முடிவு பண்ணியிருக்க?” அவள் பயந்தது போலவே கடைசியில் அவன் அவளிடம் கேட்டேவிட்டான். இத்தனை நாள் தப்பித்து வந்தது போல் இனி தப்பிக்க முடியாது.

“நம் திருமணமா...? நான் உங்களை... திருமணம் செஞ்சுக்கிறேன்னு எப்போ சொன்னேன்?” முதலில் திக்கித்திணறியவள், பின் நிதானமாக அவன் முகம் பார்த்துக் கேட்டாள்.

“ஓகே நீ சொல்றது போலவே இருக்கட்டும். நானா விரும்பித்தான் கேட்கிறேன். என்னைத் திருமணம் செய்ய உனக்கு விருப்பமா? எப்பொழுது நாம் திருமணம் செய்து கொள்ளலாம்?” அவனின் குரலில் மட்டுமல்ல அவன் முகத்திலும் குறும்பு கொப்பளித்தது. அடக்கப்பட்ட புன்னகையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“நீங்க விரும்பினா மட்டும் போதாது? நானும் விரும்பணும்? உங்களை எனக்குப் பிடிக்கல. போதுமா... ஆளை விடுங்க” இருகரத்தை தலைக்கு மேல் தூக்கி கும்பிடுவது போல் கூறியவள், அவன் கண்ணைச் சந்திக்க மறுத்து நிலம் நோக்கினாள். அவனைப் பார்த்தால் தன்னைக் கண்டு கொள்வானோ என்ற பயமாகக் கூட இருக்கலாம்.

“இது தான் உன் பதிலா?” தன்னினைவில் உழன்றுக் கொண்டிருந்தவள் அவன் குரல் அருகில் ஒலிக்கவும் நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு மிக நெருக்கமாக நின்றிருந்தவனின் அருகாமை அவளை ஏதோ செய்ய, அவன் பார்வையைச் சந்திக்க அஞ்சி மீண்டும் நிலம் நோக்கினாள்.

அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தவன், அவள் வலக்கையை எடுத்து தன் தலையின் மீது வைத்து, “என் மேல் சத்தியமாக உனக்கு என் மேல் காதலில்லை... விருப்பமில்லை. இல்லைன்னு சொல்லு பார்ப்போம்... அந்த நிமிடம் நான் உன்னை விட்டு விலகிப் போறேன்”, ‘அப்படிச் சொல்ல உன்னால் முடியுமா?’ என்ற நம்பிக்கைப் பார்வையை அவள் மேல் வீசினான்.

மதி அவசரமாகத் தன் கையை உருவ முயல, அவனோ விடாப்பிடியாய் அதை விடாமல் பற்றியிருந்தான். “ம்... பதில் சொல்லு... நான் விடுறேன்”

“அய்யோ... என்ன செய்றீங்க பரத்?” மீண்டும் அவள் கையை உருவ முயல, அவனோ கண்கள் மின்ன, முகம் மலர, “என்ன சொன்ன? திரும்பச் சொல்லு...”

‘என்ன சொன்னேன்?’ தனக்குள் அவள் யோசிக்க, சொன்ன வார்த்தைகள் மனதில் பளிச்சிட அப்படியே அயர்ந்து போய் நின்றாள்.

“உனக்கு என்னைப் பிடிச்சியிருக்கிறதுக்கு இதுக்கு மேலே ஏதேனும் சான்று வேண்டுமா கண்மணி?” கண்சிமிட்டியபடி குறும்பாய் அவளைப் பார்த்து வினவியவனைக் கண்டு என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அவளையும் அறியாமல் அவள் மனதில் அவன் ஆழப் பதிந்து இருப்பதற்கு இதை விட வேறு சாட்சி வேண்டுமா என்ன? எல்லோரும் அவனை விஷ்ணு என்றழைக்க, தனக்கு மட்டும் ஏன் அவன் 'பரத்'ஆகத் தெரிந்தான்? ஆசை கொண்ட மனம் அவனை அப்படியே அழைத்துப் பழகியிருக்க வேண்டும். அவள் ஆழ் மனதில் அடக்கி வைத்திருந்த அவன் மீதான காதல் பொங்கியெழ, கண்களில் கண்ணீர் ஆறாய் பெருகி ஓட அவனையே பார்த்த விழி பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

'ஹேய் என்ன இது ஷம்மு... உனக்கு விருப்பம் இல்லைன்னா நான் இந்த மாதிரி பேசல. உன்னை வருத்தும் எதுவும் நீ செய்ய வேண்டாம். எனக்கு இப்படி இருக்கறதுல எந்த வருத்தமுமில்லை. நாம இப்படியே இருப்போம்" சொன்னவனின் கண்களும் குரலும் கலங்கியிருந்ததோ?

"ஏன் என் மேல் இப்படிக் கண்மூடித்தனமான அன்பு வச்சிருக்கிங்க?" அவன் சட்டைக் காலரைப் பற்றி அவன் கண்ணுக்குள் தன் கண்ணைக் கலந்தவளாய் கதறியவள், நாற்காலியிலிருந்து நழுவித் தொய்ந்து போய்த் தரையில் அவனருகில் அமர்ந்து, அதற்கு மேல் அடக்கமாட்டாதவளாய் அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள். அவளின் செயலில் மனம் நெகிழ, அவனின் கைகள் அவள் தலையை ஆறுதலாய் வருடியது. வார்த்தைகளை விட ஒரு சின்னச் செய்கை அதிக ஆறுதலை அனுசரணையைத் தரும். அதைத் தான் அவனும் அவளுக்குத் தந்து கொண்டிருந்தான்.

"உங்க அன்புக்கு, காதலுக்குக் கொஞ்சமும் அருகதையில்லாதவ நான். என்னால் உங்களுக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுக்க முடியாது. நல்ல மனைவியாய், உங்க குழந்தைக்குத் தாயாய் என்னால் இருக்க முடியாது. என்னைப் பத்தி முழுசா தெரிஞ்சும் ஏன் என் பின்னால் சுத்தி வர்றிங்க? எத்தனை நாள் உங்களை வேதனைப்படுத்திட்டு நான் அழுதிருப்பேன் தெரியுமா? நா... நான் கெட்டு சீரழிந்தவள்... உங்களுக்கு நான் எந்தவிதத்திலும் பொருத்தமா இருக்க மாட்டேன். என்னைத்

திருமணம் செஞ்சா உங்களுக்கு அவமானம் தான் மிஞ்சும். என்னால் உங்களுக்கு ஒரு அவமானம் வர நான் காரணமா இருக்க மாட்டேன். ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்கோங்க. நீங்கள் வேறு நல்ல பெண்ணை...” அவள் சொல்லும் முன்னே அவள் வாயை தன் விரல்களால் மூடியவன்,

“வேண்டாம் ஷம்மு... உன் வாயால் அதைச் சொல்லாதே. எனக்கு மனைவியாய் வருவதற்கு உன்னை விடத் தகுதியானவள் யாருமில்லை. எனக்கு எந்த அவமானமுமில்லை. நீயாக எதையாவது நினைச்சிக்கிட்டு அபத்தமாகப் பேசாதே. இப்போ என்ன எனக்கு மனைவியாய், என் குழந்தைக்கு அம்மாவாய் உன்னால் இருக்க முடியாது அவ்வளவு தானே. ஓகே... வேண்டாம்... எனக்கு மகனாய் ஷரத் இருக்கான். அதனால் வேறு குழந்தை எனக்கு எதுக்கு? வேண்டவே... வேண்டாம். ஆனால் எனக்குக் காதலியாய் வருவதில் உனக்கு ஏதும் பிரச்சினை இல்லையே?”

மதி அவன் நெஞ்சிலிருந்து நிமிர்ந்துப் பார்த்தாள். அவன் கண்ணில் பொய்யில்லை. அப்படியென்றால் உண்மையாகத்தான் சொல்கிறானா? ஏன்? ஏன்? அவள் மனதிற்குள் கேள்வி வண்டாய் குடைய, அதற்கு அவள் மனம் சொன்ன ஒரே பதில், ‘அதற்குக் காரணம் உன் மேல் அவன் வைத்திருக்கும் காதலே. இது கூட உனக்குப் புரியவில்லை’ என்ன தான் காதலென்றாலும் அதற்காக இப்படியா? தவிப்பாய் அவன் முகம் பார்க்க,

“ரொம்ப யோசிக்காதே ஷம்மு... ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு ஃபீலிங். அதே மாதிரி தான் உன் மேல் நான் வைத்திருக்கும் காதல். அதுக்கெல்லாம் காரணக் காரியம் விளக்கிச் சொல்ல முடியாது” அவள் மனம் அறிந்தவனாய் அவள் தாடையில் இருகை வைத்து அவள் முகத்தைத் தாங்கி, அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தவாறு சொன்னவனின் பார்வையில்... வார்த்தையில்... அவள் உடைந்தாள்.

மீண்டும் அவன் சட்டைக் காலரை இறுக பற்றி, அவன் முகத்தை இன்னமும் தன்னருகில் கொண்டு வந்தவள்,

“ஏன் பரத்... எனக்கு மட்டும் ஏன்... இப்படி நடந்தது? எல்லாப் பெண்களைப் போல் ஏகப்பட்ட கனவுகளுடன் தானே இருந்தேன். ஆனால் அதை எல்லாவற்றையும் கானல் நீராக்கிவிட்டு போய்ட்டாங்க அந்தப் பாவிங்க. அவங்க பாவத்தை நீங்க ஏன் சுமக்கணும்? நீங்க என்னைச் சுத்தி சுத்தி வரும் போது என் மனமும் நெகிழத்தான் செய்கிறது. என் இதயம் ஒண்ணும் இரும்பால் செய்தது அல்லவே. அதுக்குள்ளும் காதல், கல்யாணம் பற்றிய கனவு இருந்தது. எப்போ அதுக்கு நான் தகுதியானவள் இல்லைன்னு தெரிஞ்சதோ அன்னைக்கே என் மனதுக்குள் எல்லாவற்றையும் புதைச்சு வைச்சுட்டேன். அதையெல்லாம் தட்டி எழுப்பிவிட்டது உங்களது ஒற்றைப் பார்வை. ஆம்... நான் உங்களைக் காதலிக்கிறேன். ஆனால்... ஆனாலும்... என்னால் உங்களைத் திருமணம் செய்து கொள்ள முடியாது. தயவுசெய்து புரிந்து கொள்ளுங்களேன் பரத். நீங்கள் என்னருகில் வரும் போதேல்லாம் உங்களை என்னால் உணர முடியவில்லை. அப்பொழுது... அப்பொழுது அந்தக் கயவர்களால் நான் பட்ட துன்பம் மட்டும் தான் எனக்கு நியாபகம் வருது. இந்த நிலைமையில் நான் எப்படி.. உங்களுடன்... தாம்பத்தியத்தில்... . என்னால் முடியாது. என் மனதில் ஏற்பட்ட காயங்கள் கூடக் காலப் போக்கில் ஆறிப் போனாலும்... உடலில் எனக்கு ஏற்பட்ட காயங்கள்... அதன் தளும்புங்கள்... நானே மறக்க நினைக்கும் நினைவை நினைக்க வைக்கிறது. இது இப்பொழுது மட்டுமல்ல என் வாழ்நாள் முழுவதும் என் கூடத்தான் வரும். இப்போ சொல்லுங்க நான் உங்களுக்கு வேண்டுமா? என் மனம் நிறைய நீங்க தான் இருக்கீங்க. நான் உங்களைத் தான் காதலிக்கிறேன். ஆனால் உங்களுக்கு மனைவியாக மட்டும் என்னால் முடியாது... முடியவே முடியாது... பரத். பாலைவனமாக இருந்த என் வாழ்வில் பூஞ்சோலையாக வந்தவர் நீங்க. காலம் முழுமைக்கும் உங்க நினைவு எனக்குப் போதும். உங்க நினைவுகள் மட்டுமே போதும்...” அவன் மார்பிலேயே முகம் புதைத்து அழுதவளை என்ன சமாதானம் சொல்லித் தேற்றுவது என்று தெரியாமல், ஒரு கணம் விழித்தவன்...

மறுகணம் அவளின் மனம் புரிய அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

வெகுநேரம் அழுகையில் கரைந்தவள் சுதாரித்து அவனிடமிருந்து விலகி அவன் முகம் பார்க்கத் திராணியற்று தலைகுனிந்து தன் கைவிரல்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் செய்கையில் முகம் மென்மையுற அருகே வந்து தலையை வருடியவன், “ஷம்மு... உன் வாய்மொழியாக நீ என்னைக் காதலிப்பதை சொல்லிய பிறகு வேறென்ன எனக்கு வேண்டும்? போதும் கண்ணம்மா... எனக்கு இது போதும். இனி எந்த விதத்திலும் நான் உன்னைத் திருமணம் செய்யச் சொல்லி தொந்திரவு செய்ய மாட்டேன். உன் நிம்மதி தான் எனக்கு முக்கியம். இனி இந்தப் பேச்சு நம்மிடையே வேண்டாம். முதலிலிருந்த மாதிரியே இருப்போம். சரியா? மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் ரெஸ்ட் எடு. நான் கிளம்புகிறேன்”, என்றவன் அவள் பதிலுக்காக அவள் முகம் பார்க்க, ஆனால் அவள் நிமிர்ந்து பார்க்காததால் வழக்கம் போல் பெருமூச்சு விட்டு எழுந்தவன், பின் திரும்பியும் பார்க்காமல் நடந்தான். அவன் செல்வதை உணர்ந்து நிமிர்ந்தவள் விழியில் அவன் முதுகுப்புறமே தெரிய அதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருக்கச் செய்வதறியாது அப்படியே அமர்ந்திருந்தாள்.

அத்தியாயம் : 20

அன்று ஞாயிறு என்பதால் சாவகாசமாக எழுந்த ஷன்மதி தோட்டப்பகுதியில் வந்தமர்ந்தாள். எப்பொழுதும் அதை ரசித்துப் பார்க்கும் அவளுக்கு இன்று ஏனோ ரசிக்கத் தோணவில்லை. அவள் மனதில் விஷ்ணுவின் எண்ணமே நிறைந்திருந்தது. அன்று தன் மனதை தான் அவ்வளவு எடுத்துச் சொல்லியும் எதுவும் பேசாமல் கிளம்பிப் போய்விட்டானே என்ற ஆதங்கமே அவளை வாட்டியது.

‘என்ன சொல்லியிருக்க வேண்டும்? நீ காதலிப்பது எனக்குத் தெரிந்து விட்டது. இனி வேறு பேச்சு வேண்டாம். நேரே நம் திருமணம் தான் என்று சொல்லியிருக்க வேண்டுமோ? அப்படியே அவன் சொல்லியிருந்தாலும் நீ ஓடிப் போய் அவன் கையால் தாலியை வாங்கிக் கொள்ளப் போவது போல் உனக்கு எதற்கு இந்தத் தேவையில்லாத யோசனை? அவன் உன்னை விட்டு விலகணும் என்றெண்ணித் தானே அப்படிக் கூறினாய்... அதே போல் அவன் விலகிவிட்டான். இப்போ நிம்மதியாய் இருக்க வேண்டியது தானே? அதை விட்டு விட்டுச் சும்மா புலம்பாதே’ மனசாட்சி அவளுடன் சண்டையிட்டது. அதற்குத் தானே தெரியும் அவளின் காதலின் ஆழம். அதன் கடுப்பு அதற்கு...

அவள் யோசனையைக் கலைத்தது அலைப்பேசியின் ஒலி. ஷர்மிளா தான் அழைக்கிறாள். அவள் எதற்குத் தன்னை அழைக்க வேண்டும் என்ற யோசனையுடன் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைக்க, “மதி...” பெயரை சொல்லுவதற்கு முன்னரே அவள் குரல் அழுகையில் உடைந்தது.

“சொல்லுங்க ஷர்மி... ஏன் அழுறிங்க?” அதற்கும் அவள் அழ, “ஷர்மி அழாமல் விசயத்தைச் சொல்லுங்க” விஷ்ணுவிற்குத் தான் ஏதும் ஆகி விட்டதோ என்று பயம் மனதைத் தாக்க ஷர்மிளாவின் பதிலுக்காகப் படபடப்புடன் காத்திருந்தாள்.

“மதி... அவருக்குக் கல்யாணத்திற்குப் பெண் பார்க்கறாங்களாம்” மேலே சொல்ல முடியாமல் அவள் அழ,

யாருக்கு என்று அபத்தமாக மதி கேட்கவில்லை.

“யுவன் அண்ணா... என்ன சொல்கிறார்?” பதற்றத்துடன் கேட்க,

“அவர் வீட்டை விட்டு வரச் சொல்றார். ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்ன்னு சொல்றாரு. எனக்கு என்ன செய்றதுன்னு தெரியல, ரொம்பப் பயமாயிருக்கு. எல்லாத்தையும் ஏமாத்திட்டு ஓடிப் போறதை விடப் பேசாமல் நான் செத்துப் போகலாம்”

“ஐயோ ஷர்மி... அவசரப்படாதிங்க... கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இதுக்கொரு வழி கிடைக்கும்”

“என்ன யோசிச்சும் ஒரு முடிவும் கிடைக்கல” அழுகையில் தேம்பியவள், “நீங்க மனசு வச்சா எல்லாம் நல்லபடியாக முடியும்”

“நானா...?”

“ம்... நீங்களே தான். நீங்க அண்ணாவைத் திருமணம் செஞ்சுக்கிட்டிங்கன்னா இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும். அண்ணா திருமணம் முடிந்தால் விலாசினிக்கு வேறு மாப்பிள்ளைப் பார்க்க ஆரம்பிச்சிருவாங்க. அவ கல்யாணம் முடிஞ்சதுன்னா அதுக்கப்புறம் யுவனும் கொஞ்சம் பிடிவாதமாயிருந்து எங்க திருமணத்தை நடத்தி விடுவார். ஆனா அண்ணா... திருமணத்திற்குப் பிடி கொடுக்க மாட்டேங்கிறார். அவர் மனதில் நீங்கள் தான் இருக்கீங்கன்னு தெரியும். உங்களைத் தவிர அவர் வேறு யாரையும் திருமணம் செய்ய மாட்டார். நீங்க சம்மதித்தால்... உங்க திருமணம் நடந்தால்... எங்க திருமணம் நடக்கும். ப்ளீஸ் எங்களுக்காகக் கொஞ்சம் யோசித்துப் பாருங்க மதி ப்ளீஸ்”

அந்த நிலையிலும் தன்னைத் தவிர வேறு யாரையும் விஷ்ணு திருமணம் செய்ய மாட்டான் என்று ஷர்மிளாக் கூறியது கேட்டு மதியின் உள்ளம் கும்மாளமிட்டது. அவளையும் அறியாமல் விஷ்ணுவின் மேல் காதல் பொங்கியது.

“அதுக்கு நான் என்ன செய்யணும்?”

“நீங்க அண்ணாவைத் திருமணம் செஞ்சுக்கணும். அது பத்தி நீங்க அண்ணாக்கிட்ட பேசுங்க”

“திருமணமா...? அதிலும் நானே உங்க அண்ணாவிடம் பேசணுமா?” கொஞ்சம் அதிரத்தான் செய்தது மதியின் உள்ளம்.

“ஆமாம் நீங்க தான்... நீங்களும் கைவிட்டுடிங்கன்னா எனக்கு உயிரை விடுவதை விட வேறுவழியில்லை” என்றவளின் அழுகை அதிகமாக, மதி அவசரமாக, “நீங்கள் அழாதீங்க ஷர்மி... நான் உங்க அண்ணாவிடம் பேசுகிறேன். நீங்க கவலைப்படாதீங்க”

“நீங்க சொன்னால் சரி தான் மதி” என்றவள் அலைப்பேசியை வைத்துவிட்டாள். ஷர்மிளா பேசி முடித்ததும் மதி யோசனையில் ஆழ்ந்தாள்.

‘ஷர்மியிடம் பெரிய இவள் மாதிரி உங்க அண்ணன் கிட்ட பேசுறேன்னு சொல்லிவிட்டேன். அவனிடத்தில் போய் என்ன பேசுவது? என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்றா? இல்லை நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்றா? என்ன சொல்லிக் கேட்பது? அப்படியே கேட்டாலும் என்ன நினைப்பான்? சரி... அப்படியே அவன் சம்மதித்தாலும் என்னால் திருமணம் செய்ய முடியுமா? அவனுக்கு நல்ல மனைவியாக நடந்து கொள்ள முடியுமா? இதையெல்லாம் விடப் பரத் வாழ்வைக் கேள்விக்குறியாக்க வேண்டுமா? இது தேவைதானா? பரத் திருமணத்தால் ஷர்மித் திருமணம் தடைபடுவதற்குக் காரணம் நான் தானே. என்னால் ஒரு உயிர் போக வேண்டுமா? அதிலும் என் உயிரான பரத்தின் தங்கை உயிர் போக நான் காரணமாயிருக்கலாமா? கடவுளே இப்பொழுது நான் என்ன செய்வது? பரத்க்காகப் பார்ப்பதா? இல்லை ஷர்மிக்காகப் பார்ப்பதா?’ யோசிக்க யோசிக்கக் குழப்பம் தான் மிஞ்சியது அவளுக்கு.

ரொம்ப நேரம் யோசித்தவளுக்கு இறுதியில் ஒரே ஒரு முடிவு தான் மனதில் பளிச்சிட்டது. அதுதான் ஒப்பந்தத் திருமணம். இப்பொழுது அது நடைமுறையில் நிறையச் சாத்தியமாகி இருக்கிறது. இவ்வளவு ஏன் இவர்கள்

அலுவலகத்திற்கு வந்து சட்டரீதியாக அதைப் பதிவு செய்து விட்டுத் திருமணம் செய்து கொள்பவர்களும் உண்டு. அதனால் அந்த முறையைத் தான் ஏன் தேர்ந்தெடுக்கக் கூடாது? என்று அதன் சாதகப் பாதங்களை நிறைய யோசித்துப் பார்த்தாள்.

விஷ்ணுவிடம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் திருமணத்திற்குச் சம்மதித்து விட்டு, ஷர்மிளாவின் திருமணம் முடிந்த பின் விஷ்ணுவிடமிருந்து விவாகரத்து வாங்கிக் கொள்ளலாம். அதன் பின் வேறு வாழ்க்கை அவனுக்கு அமைவதில் எந்தப் பிரச்சினையுமில்லை. எத்தனையோ விவாகரத்து வாங்கியவர்கள் மறுமணம் செய்து கொள்ளவில்லையா? அது போல் அவனும் மறுமணம் செய்து கொள்ளட்டும். இதனால் விஷ்ணுவின் வாழ்க்கைப் பாதிக்கப் போவதில்லை.

‘அவன் வாழ்க்கையில் பிரச்சினையில்லை. ஆனால் உனக்கு...?’ மனசாட்சிக் கேட்ட கேள்விக்கு அவளிடம் பதிலில்லை. விஷ்ணுவின் காதலை நெஞ்சில் சுமந்து, அவன் கட்டிய தாலியை கழுத்தில் சுமந்து அவள் ஆயுட்காலம் வரை அவனை நினைத்துக் கொண்டு வாழ்வது என்று முடிவெடுத்தவள், அதன் பின் ரொம்ப யோசிக்கவில்லை. விஷ்ணுவிற்கு அலைப்பேசியில் அழைத்தவள் அவனை மாலையில் கடற்கரைக்கு வரச் சொன்னாள்.

பரபரப்பாக இருந்த கடற்கரையில் சற்று ஆள் நடமாட்டம் குறைவானப் பகுதியில் வந்தமர்ந்தவள் முழங்காலைக் கைகளால் கட்டிக் கொண்டு, முகத்தை முட்டிக்காலில் பதித்துச் சுற்றும் முற்றும் வேடிக்கைப் பார்த்தாள். ஆங்காங்கே தென்பட்ட, முகங்களைத் துப்பாட்டாவில் மூடிக் கொண்டு காதல் செய்து கொண்டிருந்த ஜோடிகளைக் கண்டு முகம் சுளித்தாள். என்ன காதலோ... கர்மமோ? மனதுக்குள் எரிச்சல் மண்டியிட, தூரத்தில் தெரிந்தக் கடலை வெறித்தாள். கால்களைத் தழுவிய அலைகளைக் கண்டு ஆர்ப்பரித்துக் குதூகலித்த சிறார்களைக் கண்டு மனம் மகிழ, கூடவே ஷரத்தின் நியாபகம் அவளுக்கு

வந்தது. அவனும் இப்படித்தான் என்று மகன் நினைவில் அவள் உதடுப் புன்னகையைச் சிந்தியது.

“என்ன சிரிப்பெல்லாம் பலமாயிருக்கு?” கேட்டபடி அவளருகில் கண்ணியமான இடைவெளி விட்டு அமர்ந்தான் விஷ்ணு. அவன் குரல் கேட்டதும் மலர்ந்த மனம் இரண்டு நாட்களாய் அவன் அவளைக் காண வராததால் வந்த கோபத்தால் உடனே சுருங்கியது. அவனை நிமிர்ந்து பார்த்தவள் அதே வேகத்தில் வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“பேசணும்ன்னு வரச் சொல்லிட்டு இப்படி முகத்தைத் திருப்பினால் எப்படி?” அவனின் கேலிப் பேச்சில் திரும்பிப் பார்த்தவள், “ஏன் இரண்டு நாட்களாய் வீட்டிற்கு வரல?” அவள் வார்த்தையில் அடக்கப்பட்ட கோபம் இருப்பதை உணர்ந்தவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

“இல்லையே... வந்தேனே... வேணும்ன்னா ஷரத், அத்தையிடம் கேட்டுப்பார்” விஷ்ணுவிடமிருந்து ஒருவித தடுமாற்றத்துடன் பதில் வந்தது.

“லாயர் சார்க்கு பொய் சொல்லக் கத்துத் தரணுமா என்ன?” லேசாகக் கிண்டல் தொனித்தது அவள் வார்த்தையில்.

அவள் கிண்டலைக் கேட்டதும் தன் தடுமாற்றம் குறைந்து வாய்விட்டு சிரித்தவன், “அதை வருங்கால லாயரம்மா சொல்லக் கூடாது?” என்றவனை முறைத்துப் பார்த்தவள், மீண்டும் தான் விட்டதைத் தொடர்ந்தாள்.

“எப்படி... வந்தீங்க... காலையில் நான் காலேஜ் போற நேரத்திலும், மாலையில் நான் ஆபிசில் இருக்கும் நேரத்திலுமா?”

“இல்லை... அது வந்து...” என்ன பதில் சொல்வது என்று அவன் தடுமாறினான். அவள் நேசத்தை என்றுணர்ந்தானோ அன்றிலிருந்து அவளைச் சந்திப்பதைத் தவிர்த்து தான் வருகிறான். மேலும் மேலும் தன்னால் அவளுக்குத் துன்பம் தரக் கூடாது என்ற நல்ல எண்ணமே காரணம். அதை எப்படி அவளிடம் சொல்வது?

“அப்போ என்னைத் தவிர்க்கத் தான் இப்படிச் செய்தீங்களா?” கேட்டவளின் குரலிலிருந்த ஆதங்கம், கண்களில் இருந்த கலக்கம் எல்லாம் அவனை எதோ செய்ய, “இல்லை ஷம்மு... அப்படியெல்லாம் இல்லை. என்னால் உனக்கு எதற்கு வீண் துன்பம்ன்னு தான்...”

“துன்பமா... அதுவும் உங்களாலா? நிச்சயமாக இல்லை. இது போல் அபத்தமாக ஏதேதோ எண்ணிக் கொண்டு இப்படிச் செய்யாதீங்க” அவளின் வார்த்தையில் அவளின் காதலின் அளவு தெரிய அவன் மனம் மகிழ்ந்தது.

“ஓகே இது போல் இனி நடக்காது. சரி என்ன விசயமாக வரச் சொன்ன?”

“அது வந்து...” இப்பொழுது தடுமாறுவது அவள் முறையாயிற்று. ஷர்மிளாவிடம் சொன்ன வேகத்தில் அவசரமாக முடிவெடுத்து அவனை வரச் சொல்லிவிட்டு என்ன பேசுவது என்று தெரியாமல் முழித்தாள்.

“அதான் வந்தாயிற்றே... சொல்லு” குறும்புடன் வந்தது அவன் குரல்.

“நாம் திருமணம் செய்து கொள்ளலாமா?” அவளின் வார்த்தையைக் கேட்டவன் நம்ப முடியாத பார்வை ஒன்றை அவள் மேல் செலுத்தினான்.

“நான் சொல்வது உண்மை. நீங்கள் நம்பணும்?” அவன் பார்வையை உணர்ந்து அவள் அவசரமாகச் சொல்ல,

“நான் உன்னைப் பொய் சொல்கிறாய்ன்னு சொல்லலியே? திடீரென்று ஏன் இந்த முடிவுன்னு தான் யோசிக்கிறேன்? உனக்குப் பிடிக்காததை நீ எனக்காகச் செய்ய வேண்டாம் ஷம்மு...”

“இல்லை நான் நல்லா யோச்சிட்டேன். நம்மால் ஷர்மியின் வாழ்வு ஏன் கெடணும்? அவள் திருமணம் நடைபெறுவதில் நம்மால் ஒரு சிக்கல் உருவாகணுமா?”

“ஷர்மியின் வாழ்வுக்கும் நமக்கும் என்ன சம்மபந்தம்...?” இதைப் பற்றி இவளிடம் தான் பேசவே இல்லையே? எப்படி இதைப் பற்றிச் சொல்கிறாள்? என்ற எண்ணத்தில் அவன்

கேட்க, அவளோ ஷர்மிளாவின் பேரைச் சொல்ல முடியாமல் திணறினாள்.

பின் யோசித்து, “நீங்கள் தானே அன்னைக்குச் சொன்னிங்க?” அவளின் வார்த்தையில் அவனுக்குமே குழப்பம் வந்தது. அன்று யுவன், ஷர்மி திருமண விசயத்தைச் சொல்லி அதற்குத் தங்கள் திருமணம் எவ்வளவு அவசியம் என்று அவளிடம் பேசத்தான் வந்தான். ஆனால் அதைப் பற்றிப் பேசியது போல் அவனுக்கு நியாபகமில்லை. ஒருவேளை தன்னையுமறியாமல் சொல்லியிருக்கலாம் என்று அமைதியாக இருந்தான்.

“இது ஒரு ஒப்பந்தத் திருமணம் தான். ஷர்மியின் திருமணம் முடிந்ததும் நான் விலகிப் போய்டுவேன். அதன் பின் நீங்கள்...”

“ஷம்மு...” அவனின் கோபக் குரலில் அதிர்ந்து போனவளாய் அவனைப் பார்த்தாள்.

“என்னடா அதிசயமாய் நீ நல்லவிதமாகப் பேசுறியேன்னு நினைச்சேன். அதானே பார்த்தேன் நீயாவது மாறுவதாவது? உனக்கு வேணும்ன்னா இது ஒப்பந்தத் திருமணமாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நாம் திருமணம் செஞ்சுக்கிட்டா அது உண்மைத் திருமணம் தான். நம் ஆயுள் முழுமைக்கும் வரும் பந்தம் இந்தப் பந்தம். இதில் பிரிவென்றப் பேச்சுக்கே இடமில்லை. நான் சொன்னதை மனதில் வைத்து அதற்குச் சம்மதமென்றால் திருமணம் பற்றிப் பேசு. இல்லையென்றால் இதை மறந்துவிடு. என் தங்கைக்காக நீ ஒன்றும் விருப்பமில்லாமல் என்னைத் திருமணம் செய்ய வேண்டாம்”

அவனின் பேச்சில் மனம் தடுமாறித் தான் போனாள். இந்த முடிவு ஷர்மிக்காக மட்டுமா எடுத்தது? இல்லையே அவளுக்காகவும் தான். அவள் காதல் கொண்ட மனதுக்காகவும் தான். காலம் முழுவதும் அவன் கையால் கட்டிய தாலியை தன் கழுத்தில் சுமப்பதற்காகவும் தான். அதற்காக அவனின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்குவதா? இருமனதாய் ஊசலாடிக்

கொண்டிருந்தவள், என்ன செய்வது என்று யோசித்தாள். முதலில் ஷர்மிளாவின் திருமணம் முடியட்டும் அதன் பின் இவனிடம் பேசிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தவள், “சரி நான் பிரிவைப் பற்றிப் பேசவில்லை. ஆனால் ஷர்மிக்காகத் தான் இந்தத் திருமணம் அதில் எந்த மாத்தமுமில்லை. இப்போ சொல்லுங்க உங்களுக்கு ஓகேவா?”

அவளின் கூர்ந்து பார்த்தவனின் பார்வையைச் சந்திக்க முடியாமல் அவள் தலைக் கவிழ, ‘கண்மணி... நீ போடும் திட்டம் எனக்காத் தெரியாது? நீ எவ்வளவு தூரம் தான் செல்கிறாய் என்று நானும் பார்க்கிறேன். ஆனால் ஒன்று என் மனைவியான பின் நீ என்னைப் பிரிந்து செல்ல நான் விட மாட்டேன்’ மனதில் சொல்லிக் கொண்டவன், “ஷம்மு... இந்தத் திருமணம் நடைபெறக் காரணம் எதுவாக இருந்தாலும் நீ சம்மதித்ததே எனக்குப் போதும். எனக்கு முழுச் சம்மதம் போதுமா? நாளையே இரு வீட்டிலும் கலந்துப் பேசுறேன்?”

அவனின் வார்த்தையில் அவள் முகம் பூவாய் மலர, ஷர்மிளாவின் வாழ்க்கைக்குத் தடைக்கல்லாய் தான் இருக்கிறோமே என்ற பாரம் குறைய, அவன் கைகளைப் பற்றியவள், “தேங்க்ஸ் பரத்... தேங்க்ஸ்... நாளையே நீங்க பேசுங்க” அவளின் செய்கையில் மனம் குளிர்ந்தவன் அவளையும் அவள் கைக்குள் அடங்கியிருந்த தன் கையையும் மாறி மாறிப் பார்க்க அவனின் பார்வையில் தன் செயலை உணர்ந்தவள் முகம் செந்தாமரையாய்ச் சிவந்தது.

அவளின் வெட்கத்தை ரசித்தவன், “போகலாமா...?” என்று கேட்க, அவள் சரியென்பது போல் தலையாட்ட, எழுந்தவன் அவள் எழுவதற்கு ஏதுவாகத் தன் கையை நீட்டிய போது மறுப்பேதும் சொல்லாமல் தன் கையைக் கொடுத்தாள்.. அவள் எழுந்தும் விடாமல் கையைப் பற்றிக் கொண்டே நடந்தவன், பைக்கில் அவள் ஏறியதும் உரிமையோடு அவள் கையை எடுத்து தன் தோள் மீது வைத்துக் கொண்டான். அவளும் மனம் நெகிழ அவன் தோளோடு ஒன்றி அமர,

அவளின் செய்கையில் அவன் மனம் நிறைய, பைக் வீதியில் காற்றாகப் பறந்தது.

மதியை அவள் வீட்டில் இறக்கி விட்டுத் தன் வீட்டிற்கு வந்தவனின் அலைப்பேசி அழைக்க, அதில் ஷர்மிளா அழைக்கிறாள் என்று வந்ததும் அவசரமாக ஆன் செய்தான்.

“அண்ணா, அண்ணி கல்யாணத்திற்குச் சம்மதிச்சுட்டாங்களா?”

“ஏய் வாலு... உனக்கு எப்படித் தெரியும்? நானே இப்போத்தான் அவளிடம் பேசிட்டு வர்றேன்”

“நீ அண்ணியுடன் பேசப் போறன்னு தெரிஞ்சதுமே இதுவாகத்தான் இருக்கும்ன்னு நான் நினைச்சது சரி தான் போலிருக்கே”

மதியிடம் தான் பேசப் போவதை இவளிடம் சொல்லவே இல்லையே... இவளுக்கு எப்படித் தெரியும்? என்று நினைத்தவன் மனதில் யுவன் முகம் பளிச்சிட்டது. அவனிடம் சொல்லிக் கொண்டு தான் இவன் மதியைப் பார்க்கப் போனான்.

“ஓஹோ... உங்க ஆள் அதுக்குள் உனக்குப் போட்டுக் கொடுத்துட்டாரா?” என்று அவளைக் கிண்டல் செய்தவன், “எல்லாம் சரி... நாங்க திருமணம் விசயமாத் தான் பேசப் போறோம்ன்னு யுவனுக்குக் கூடத் தெரியாதே... அப்புறம் எப்படி உனக்கு...?” பேசிக் கொண்டே வந்தவன் பாதியில் நிறுத்தி, “எனக்கே தெரியாத விசயம் உனக்குத் தெரிஞ்சிருக்கிறதுன்னா... ஹேய்.... ஷர்மி... மதியின் திடீர் மனமாற்றத்திற்கு நீ தான் காரணமா?” உற்சாகமாகக் கூவினான்.

“ஹப்பாடா... நான் நினைச்ச அளவுக்கு என் அண்ணன் முட்டாளில்லை. நீ நினைச்சது சரியே. நான் தான் மதியிடம் உங்க திருமணம் நடந்தால் தான் என் திருமணம் நடக்கும்ன்னு அழுது புலம்பினேன். அதான் அவங்க நேரே உன்னைப் பார்க்க வந்துட்டாங்க”

“ஷர்மி... என்ன காரியம் பண்ணியிருக்கே? இதனால் அவள் மனம் என்ன பாடுபடும்ன்னு யோசிக்க மாட்டாயா? எதுக்காக இந்த நாடகம்?”

“அண்ணா... எனக்கு எதுவும் தெரியாது. நான் நடிப்பு மட்டும் தான். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எல்லாம் உன் நண்பர் யுவன் தான்” என்ற ஷர்மிளா கலகலத்துச் சிரித்தாள்.

அத்தியாயம் : 21

ஷன்மதி தன் கழுத்தில் கிடந்த தாலியை நம்ப முடியாமல் பார்த்தாள். அடுத்து வந்த ஐந்து நாட்களில் வெகு அழகாகத் திட்டமிட்டுத் திருமண வேலைகளைச் செய்து முடித்த விஷ்ணுவை எண்ணி மனதுக்குள் பிரமிப்பாக இருந்தது. பம்பரம் போல் சுழன்று அவன் செய்தக் காரியங்களை நினைத்தவளுக்குத் தன்னவனை எண்ணி பெருமிதமாக இருந்தது. கோவிலில் மிக எளிமையாக நடந்த திருமணத்தில் இருவரின் பெற்றோரும், நெருங்கிய நண்பர்களும் மட்டுமே இருந்தனர். இன்னும் சில நாட்கள் கழித்து ஊருக்கு வருவதாக விஷ்ணுக் கூறியதால் உறவினர்களை அழைக்கவில்லை.

“டாடி... மம்மி...” ஷரத்தின் குரலில் தன் நினைவைக் கலைந்தவள் மகனைப் பார்க்க, அவளுக்கு முன் விஷ்ணு அவனைத் தூக்கிக் கொண்டான். பாந்தமாகத் தகப்பன் தோள் சாய்ந்திருந்த மகனைக் கண்டு அவள் மனம் மகிழ்ந்தது. மிஞ்சிய மகிழ்ச்சியில் கண்ணோரம் நீர் துளிர்க்க, அதைப் பார்த்த விஷ்ணு அவள் கையை ஆறுதலாகப் பற்ற அவனின் செயலில் மனம் நெகிழ்ந்தவள் அவனையே பார்த்தபடியிருக்க, ஷர்மிளா தான் அவள் தோளைத் தட்டி, “அண்ணி... அண்ணாவைப் பிறகு சைட் அடிக்கலாம். முதலில் வீட்டிக்குப் போகலாம்” என்க, அவளின் பேச்சில் முகம் சிவந்த மதி அவசரமாகத் தலையைக் குனிந்தாள்.

காரில் வரும் போது ஷரத் விஷ்ணுவிடம் வெளிப்புறத்தைக் காட்டிப் பேசிக் கொண்டே வர, அதைக் கண்டும் காணாமல் பார்த்துக் கொண்டு வந்த மதியைக் கண்டு அவன் உள்ளம் கனிந்தது. வேண்டுமென்றே ஷரத்தை தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டவன், அவள் புறம் நெருங்கி அமர்ந்து தன் இடக்கையை அவளின் வலக்கையோடு கோர்த்துக் கொள்ள, அதில் அவள் அதிர்ந்து அவன் புறம் திரும்பிப் பார்க்க, அவனோ அதைக் கண்டும் காணாதது போல் வெகு தீவிரமாக ஷரத்துடன் பேசிக் கொண்டு வந்தான். தன் கையை மெல்ல உருவ நினைத்தவளின் கையை அழுந்த பற்றியவன், “என் மனைவி கையைத் தானே

பிடிச்சிருக்கேன். வேறு யாரோ கையையாப் பிடித்திருக்கேன்” கிண்டலுடன் கேட்டவனை அவள் முறைக்க, அதற்குள் அவன் அலைப்பேசி அழைத்தது. எடுத்துக் காதில் வைத்தவன்,

“ஹேய் லீலா... தேங்க்ஸ்ப்பா. மதியா... இதோ பக்கத்தில் தான் இருக்கா” அவளிடம் அலைப்பேசியை நீட்டினான். மதி லீலாவிடம் பேசும்போது அந்தப் புறம் லீலா என்ன சொன்னாளோ அவளின் முகம் அந்தி வானமாகச் சிவந்தது. லீலாவிடம் பேசிவிட்டு அலைப்பேசியை அவனிடம் தர எண்ணி அவன் புறம் திரும்பியவள் அவனின் விழுங்கி விடும் பார்வையில் அவசரமாக வெளிப்பக்கம் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

வீடு வந்ததும் ஆரத்தி எடுத்து மணமக்களை அழைத்துச் செல்ல, விஷ்ணுவின் வீட்டில் முதன்முறையாக வலதுகாலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்தாள் மதி. சிறிதுநேரத்தில் அலுவலக உடையணிந்து அவளிருந்த அறைக்கு வந்த விஷ்ணுவைக் கண்டு புரியாமல் விழித்தபடி அவள் எழுந்து நிற்க, “உட்கார் ஷம்மு...” என்று அவளைக் கட்டிலில் உட்கார வைத்தவன், “உன் வீட்டிலிருந்தது போல் இயல்பாக இரு. திருமணமானதால ஏதும் மாறல. இதோ இப்பொழுது என்னைக் கண்டதும் எழுந்தாயே அதையும் சேர்த்துதான் சொல்றேன். இந்த மரியாதையெல்லாம் நம்மிடையே வேண்டாம். என்னிடம் ஒரு நண்பனை போல் இயல்பாக இரு. எதற்காகவும் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. எதுவாகயிருந்தாலும் கேட்டுவிடு என்ன?” அவனின் வார்த்தைக்கு அவளின் தலை உருட்டலே பதிலாக வந்தது. அவளின் முகத்தையே பார்த்தவன் அவளின் நிலை நன்கு புரிய, அவள் இயல்பாகும் வரை அவளைச் சீண்டி விளையாடுவதைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

“இன்றைக்கு முக்கியக் கேஸ் இருக்கு. நான் போய்ட்டு ஈவ்னிங் நேரத்தோட வர்றேன்”

“ம்...” ஒற்றை வார்த்தையில் பதில் அளித்தவளைக் கண்டு பெருமூச்சு வர, “பை...” என்று அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு அவன் செல்ல, அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு உள்ளம் பொருமியது.

‘அதென்ன திருமணமான அன்றைக்கே கேஸ் என்று அலுவலகம் போவது. இன்றைக்கும் என்ன பெரிதாக வேலை வேண்டிக் கிடைக்கிறது. அப்படி முக்கிய வேலையிருந்தால் வேறொரு நாளில் திருமணத்தை வைக்க வேண்டியது தானே. கொஞ்சம் கூட அக்கறையில்லாமல் கல்யாணம் பண்ணியதும் கடமை முடிந்தது என்று ஓடுவதைப் பார்’ மனதுக்குள் அவனை வைதவளின் வார்த்தை, அவன் காதிற்குக் கேட்டாலாவது அவன் மகிழ்ந்திருப்பான்.

என்ன செய்வது? என்று தெரியாமல் யோசித்தவள் நேரே சமையலறைக்குச் சென்றாள். அங்கே ஆண்டாளும், யசோதாவும் சமையல் செய்து கொண்டிருக்க, “நான் ஏதாவது செய்யவா?” அவளின் குரலில் திரும்பிய யசோதா, “மதிக்கண்ணு நீ எதுவும் செய்ய வேண்டாம். நீ போய் விஷ்ணுக் கூடப் பேசிக்கிட்டிரு”

“அவர் ஆபிஸ் போய்ட்டார் அத்தை”

“இன்னைக்குமா வேலையிருக்கு. வரட்டும் அவனை நாலு திட்டுத் திட்டினாத்தான் சரி வருவான்” அவளின் வாடிய முகம் கண்டு அவராக அப்படிச் சொல்ல, ஆண்டாளும், “மதி நீ போ... நாங்க பார்த்துக்கிறோம்” என்க, வேறுவழியில்லாமல் வெளியில் வந்தாள்.

வரவேற்பறையில் யோகேந்திரனும், ஸ்ரீனிவாசனும் அரசியல் பேசிக் கொண்டிருக்க, அங்கிருந்த மற்றொரு அறைக்குச் சென்றாள். அங்கு ஷர்மிளா ஷரத்துடன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டவள் அவர்களிடம் சென்று அமர்ந்தாள்.

“மம்மி...” அவள் மடியில் தாவி அமர்ந்த மகனைக் கட்டிபிடித்துக் கொஞ்சியவளிடம் ஷர்மிளா பேச ஆரம்பிக்க, அன்றைய பொழுது இனிமையாகக் கழிய ஆரம்பித்தது.

****

“என்னடா புதுமாப்பிள்ளை... புதுப்பொண்டாட்டியை கொஞ்சுறதை விட்டுட்டு... இப்படி ஈ ஓட்டுற ஆபிஸ்க்கு இவ்வளவு அவசரமாக் கூட்டிக்கிட்டுப் போற. நீயும் சைட் அடிக்க மாட்ட... என்னையும் என் ஆளு கூடப் பேச விட மாட்டேங்கிற. உன் கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லையா? ச்சு... என்னவோ போடா...” அலுத்துக் கொண்டான் யுவன். அவன் கவலை அவனுக்கு. காரில் இருவரும் அலுவலகம் சென்று கொண்டிருந்தனர். திருமணம் செய்ய முடிவு செய்த உடனேயே கார் வாங்கிவிட்டான் விஷ்ணு.

“டேய் லூசு மாதிரிப் பேசாதே. நான் அங்கே இருந்தா ஷம்மு இயல்பாயிருக்க மாட்டா. அதான் முக்கியமான கேஸ் இருக்குன்னு வந்துட்டேன். வீட்டில் உள்ளவங்கக் கிட்ட அவள் சகஜமாப் பழகத் தான் விட்டுட்டு வந்திருக்கேன். ஷம்மு வாழ்க்கை முழுவதும் என் கூடத் தானே இருக்கப் போறா. மெதுவாப் பேசிக்கலாம். சரி அதை விடு... நீ மட்டும் ஷர்மியின் மூலமா பேசியிருக்கா விட்டால்... ஷம்மு இப்போதைக்குத் திருமணத்திற்குச் சரியென்று சொல்லியிருக்க மாட்டா. உனக்கும் ஷர்மிக்கும் தான் நான் தேங்க்ஸ் சொல்லணும்டா”

“நீ இப்படியே இருந்தா உன் ஆயுசுக்கும் கல்யாணம் நடக்காதுன்னு தான் அப்படிப் பண்ணினேன். பொறுமையாயிருக்க வேண்டியது தான் ஆனாலும் நீ அநியாயத்துக்கு ரொம்பப் பொறுமைடா”

“என்ன பண்ணச் சொல்ற யுவன்... என்னையுமறியாமல் அவள் மனதைக் காயப்படுத்தி விடுவேனோங்கிற பயம் தான் அதுக்குக் காரணம். என்னால் எந்தவிதத்திலும் அவள் மனவேதனை அடையக்கூடாது. அவள் மனசு மாறும். அதுவும் கூடிய சீக்கிரம்... எனக்கு நம்பிக்கையிருக்கு”

“நம்பிக்கையிருந்தால் சரி...”

“யுவன் உன் திருமணத்தைப் பற்றி வீட்டில் பேச்சை எடுத்தாயா?”

“ம்... உனக்குத் திருமணம்ன்னு சொல்லி வினிக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லிட்டேன். இதைக் கேட்டதும் வினி தான் முகத்தைத் தூக்கி வைச்சுகிட்டு இருக்கா. பார்ப்போம்... சரிவரலன்னா என் வழியை நான் பார்த்துக்க வேண்டியதுதான்”

“யுவன்... கொஞ்சம் பொறுமையாக யோசிச்சு முடிவு செய்” என்றவன், மிகுந்த தயக்கத்துடன், “யுவன் இதைப் பற்றி எப்படிப் பேசுவதுன்னு தெரியல. உன் தங்கையிடம் நான் தவறான எண்ணத்திலும் ஒருநாளும் பழகல. அப்படியிருந்தும் அவள் மனதில் எப்படி இப்படி ஒரு ஆசை வந்ததுன்னு தான் எனக்குப் புரியவில்லை”

“விஷ்ணு உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா என்ன? அதேசமயம் வினியைப் பத்தியும் எனக்குத் தெரியும். அவளது காதல் காதலே இல்லை. ஜஸ்ட் இன்பக்சுவேஷன் தான். உனக்குத் திருமணமாகி விட்டதுன்னு தெரிந்தால் மனம் மாறிடுவா. நீ அவளைப் பத்திக் கவலைபடாதே”

“தேங்க்ஸ் யுவன். என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு...” யுவனை நன்றியுடன் பார்த்தான் விஷ்ணு.

“நமக்குள் தேங்க்ஸ் எல்லாம் எதுக்கு? முதலில் நீ மதியின் மனதை மாத்துற வழியைப் பார்” என்று கூறிச் சிரித்தவன் நட்பில் மனம் நெகிழ்ந்தான் விஷ்ணு.

மாலையில் வீடு திரும்பிய விஷ்ணு ஷரத்துடன் விளையாடியே பொழுதைக் கழிக்க, மறந்தும் மதியின் பக்கம் வரவில்லை. காதலியாக இருந்த போது சீண்டியவன் மனைவியான பின் அவளைச் சீண்டப் பயந்தான். தன்னையுமறியாமல் அவளைக் காயப்படுத்திவிடுவோமோ என்ற எண்ணம் அவன் மனதில் எழ அமைதி காத்தான்.

இரவானதும் மதியின் பெற்றோர் கிளம்ப, ஆண்டாள் மகளைத் தனிமையில் சந்தித்து, “மதி மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் மாப்பிள்ளையிடம் சந்தோசமாக இரு. அவர் மனதைப் புரிஞ்சி நடந்துக்கோ” அறிவுரைகள் கூற, மதியோ தன் முகம் மாறாமல் காக்க மிகவும் சிரமப்பட்டாள்.

அவர்கள் சென்றதும் சமையலறைக்கு வந்து யசோதா கூடவே இருக்க, அவர் அவள் கையில் இரு பால் கோப்பையைக் கொடுத்து, “விஷ்ணுவுக்கும், ஷரத்துக்கும் கொடுத்துரும்மா” அவர் சொல்படி அதை எடுத்துக் கொண்டு வந்தவள், வரவேற்பறையில் விளையாடிக் கொண்டிருந்த விஷ்ணுவிடமும் மகனிடம் வந்தாள்.

“ஷரத் இங்கே வா... பாலைக் குடி” மகனை அழைத்தவள், விஷ்ணுவிடம் கோப்பையை நீட்டினாள். அவளை ஒரு பார்வை பார்த்தவன் ஒன்றும் பேசாமல் வாங்கிக் குடிக்க, மதியோ கடமை தவறாமல் ஷரத்துக்குப் பால் புகட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தவள், மறந்தும் அவனை நிமிர்ந்துப் பார்க்கவில்லை.

மீண்டும் சமையலறைக்கு வந்தவள் யசோதாவோடு சேர்ந்து வேலையில் ஈடுபட, எவ்வளவு நேரம் தான் வேலை செய்து கொண்டிருக்க முடியும்? அதுவும் முடிந்துவிட யசோதா, “இங்கே வேலை முடிஞ்சது. நான் தூங்கப் போறேன். நீயும் போய்ப் படு மதி. ஷரத்தை என்னுடன் தூங்க வைச்சுக்கிறேன். நீ அவனைப் பத்திக் கவலைப்படாதே” என்றவரின் வார்த்தையில் மனம் அதிர ஒன்றும் பேசாமல் இருந்தவள், அவர் சென்ற சிறிது நேரம் கழித்து விஷ்ணுவின் அறைக்குச் சென்றாள்.

கால்கள் பின்ன நடக்கவே மிகவும் சிரமமாய் இருந்தது அவளுக்கு. என்னதான் மிகவும் மெதுவாக நடந்தாலும் பதினைந்து அடி தூரத்தில் இருக்கும் அறை அருகில் வர, மனம் தயங்க, கைகள் நடுங்க, அறைக் கதவை திறந்தவள் அங்கே கண்டக் காட்சியில் திகைத்துப் போய் அதிர்ந்து நின்றாள்.

அத்தியாயம் : 22

“ஹேய் மம்மி வந்தாச்சு...” ஷரத் அவசரமாக விஷ்ணுவின் முதுகிலிருந்து இறங்கியவன் அன்னையிடம் ஓடி வந்தான். அவனைத் தூக்கிக் கொண்டவள் குழப்பமாய் விஷ்ணுவை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் வரும் போது ஷரத் விஷ்ணுவின் முதுகில் குதிரை சவாரி ஏறியிருந்தான். அதைப் பார்த்து தான் அவள் அதிர்ந்து போய் நின்றது. ஆனாலும் அது மனதுக்கு இதமாக நிம்மதியாக இருந்தது அவளுக்கு.

“ஷம்மு... உள்ளே வா என்ன தயக்கம்?”

“ஷரத்... அத்தை...”

“அம்மா ஷரத்தை அவங்க கூடக் கூப்பிட்டாங்க தான். நான் தான் அவன் இங்கே இருக்கட்டும்ன்னு சொல்லிட்டேன்” அவனின் வார்த்தைக் கேட்டு, அவள் நன்றியோடு அவனைப் பார்க்க,

விஷ்ணுவோ அவள் பார்வையைக் கண்டு கொள்ளாமல் அவளருகில் வந்து ஷரத்தை தூக்கிக் கொண்டவன், “ஷரத் கதை கேட்டாயே சொல்லவா?”

“ம்... சொல்லுங்க... சொல்லுங்க” என்று ஆர்வத்துடன் சின்னவன் தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவன் முகம் பார்க்க, விஷ்ணு அவனை அழைத்துக் கொண்டு கட்டிலுக்கு வந்தவன், மதியைப் பார்த்து, “எத்தனை நேரம் தான் நிற்பதாய் உசிதம். வா...” என்று அவளை அழைத்தவன், மகனிடம் திரும்பிக் கதைச் சொல்ல ஆரம்பிக்க, சிறிது நேரத்திலேயே சின்னவன் உறங்கிவிட்டான். அவனை நன்றாகப் படுக்க வைத்து போர்வையைப் போர்த்தி விட்ட விஷ்ணு, படுக்காமல் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மதியிடம் வந்தான்.

“என்ன ஷம்மு... தூக்கம் வரலயா?” அவளின் தலையை ஆறுதலுடன் வருடியவாறு கேட்க, அவன் வார்த்தையின் அர்த்தம் புரிந்துக் கண்களை அகல விரித்துப் பார்த்தவளை, “நம் காலம் நீண்டிருக்கு. மனதை அலட்டிக் கொள்ளாமல் படு” என்றவன் அவளைப் படுக்க வைத்து

போர்வையைப் போர்த்தி விட, அவனின் இயல்பான செய்கையில் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“ச்சு... எதுக்கு இந்தக் கண்ணீர்? கண்ணை மூடி நல்லாத் தூங்கு?” என்றவன் அவளை விட்டு அகல, அவளோ அவன் கையைப் பிடித்தாள்.

“என்னடா...” அவனின் குரலிலிருந்த அன்பில் காதலில் அவள் கரைந்தே போனாள்.

“உங்களுக்கு ஒண்ணும் வருத்தமில்லையே...”

அவள் சொல்ல வருவது புரிய, அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தவன், “ஒரு வருத்தமும் இல்லைம்மா” அவளின் கண்ணீரைத் துடைத்தான்.

அவளோ அவன் கையை எடுத்து தன் கன்னத்தோடு வைத்து, “நீங்க எனக்காகச் சொல்றிங்க. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் முதல் இரவு என்பது மறக்க முடியாத ஒன்று. ஆனால் என்னால் உங்களுக்கு... . இதுக்குத் தான் சொன்னேன்... வேறு பெண்ணைத் திருமணம் செஞ்சுக்கோங்கன்னு... கேட்டால் தானே. உங்களைப் பார்க்கும் போது எனக்குக் குற்றஉணர்வு தான் அதிகமாகிறது”

அவளின் செயலில் மனம் மகிழ்ந்தவன், அவளின் வார்த்தையில் வருத்தமுற்றான். அவளின் மனதை அவளே புரிந்துக் கொள்ளவில்லை. இந்த நிலையில் அவன் சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டாள் என்று தெளிவாகப் புரிய அவளே அதை உணரும் வரை பொறுமையாகக் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தவன், “ஷம்மு... உனக்குக் குற்ற உணர்வே வேண்டாம். நான் ரொம்பச் சந்தோசமா இருக்கேன். எனக்கு எந்த வருத்தமுமில்லை. என் மனைவியாக நீ வந்த பின் இன்னைக்குத் தான் நான் நிம்மதியாகத் தூங்கப் போறேன்” என்றவன் அவள் முன்நெற்றியில் தன் உதட்டை மென்மையாகப் பதித்தவன், “குட்நைட் கண்மணி...” எழுந்து ஷரத்தின் மறுபுறம் படுத்தவன் அடுத்த நொடித் தூங்கி விட்டான். மதி தான் உறக்கம் வராமல் எதை எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

****

“ஷரத் எழுந்திரு கண்ணா” மதி மகனை எழுப்ப, அந்தக் குரலில் விஷ்ணு எழுந்து கொள்ள அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். “குட்மார்னிங் ஷம்மு...”

“குட்...மார்னிங்” திக்கித்திணறியவள், மகனை எழுப்புவதற்கு முனைந்தாள்.

“ஷரத் கண்ணா எழுந்திரு” விஷ்ணு ஒரு குரல் கொடுத்ததும் சின்னவன் விலுக்கென்று எழுந்தமர்ந்தவன், “ஹய்... டாடி... குட்மார்னிங்” சந்தோசக் கூவலுடன் அவனைக் கட்டிக் கொள்ள, அவனும் மகனின் கன்னத்தில் முத்தமிட்டு, “குட்மார்னிங் ஷரத்”

“மம்மி... டாடி நம்ம கூடத் தான் இருப்பாங்களா?”

அவள் பதில் சொல்லும் முன் விஷ்ணு, “ஆமாம் கண்ணா இனிமேல் டாடி உன் கூடத்தான் இருப்பேன்” தகப்பனின் பதிலில் உற்சாகமடைந்த ஷரத் கட்டிலேயே குட்டிக்கரணம் அடித்துத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். அவனின் உற்சாகம் மதியையும் தொற்றிக் கொள்ள, அவள் விஷ்ணுவைப் பார்த்துப் புன்னகைக்க அவளின் பூ முகம் மலர்ந்ததில் விஷ்ணுவும் மனம் நெகிழ அங்கே சந்தோசமான குடும்பச் சூழ்நிலை நிலவியது.

அன்று மாலையே யோகேந்திரன், யசோதா, ஷர்மிளா ஊருக்குக் கிளம்ப, விஷ்ணு, “இந்த வார இறுதியில் நாங்க ஊருக்கு வர்றோம்ப்பா” என்று சொல்ல, சரி என்றவர்கள் மதியிடமும் ஊருக்கு வருமாறு அழைப்பு விடுவித்துவிட்டுக் கிளம்பினர். அவர்கள் கிளம்பியதும் வீடே வெறிச்சென்று இருப்பது போல் தோன்றியது அவளுக்கு. ஆனாலும் விஷ்ணு அவளைத் தனிமையில் விடவில்லை. மகனுடன் சேர்ந்து அவளுடனும் பேசி விளையாடினான். இரவு வந்ததும் மற்ற இருவரும் தூங்கிவிட, மதி மட்டும் யோசித்துக் கொண்டு உறங்காமல் விழித்திருந்தாள்.

காலையில் எழுந்தவள் மணியைப் பார்க்க, அது ஆறு என்று காட்ட, அவசரமாக எழுந்து தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டவள் நேரே சமையலறைக்கு வந்தாள். அங்கே

விஷ்ணு சின்க்கிலிருந்த பாத்திரங்களைக் கழுவி கொண்டிருந்தான். இவள் வரவை உணர்ந்து திரும்பியவன் புன்னகைத்தான்.

“ச்சு... என்ன இது? நீங்க போய் இதெல்லாம் செய்து கொண்டு? என்னை எழுப்பி இருக்கக் கூடாதா?” அவன் கையிலிருந்த பாத்திரத்தைப் பிடுங்க, அவளைத் தடுத்தவன், “இரவெல்லாம் நீ சரியாத் தூங்கல. அதான் உன்னை எழுப்பல. இன்னைக்கு நானே சமையலெல்லாம் முடிச்சிட்டேன். இதோ இந்தப் பாத்திரங்களைக் கழுவினால் எல்லா வேலையும் முடிஞ்சது”

அவன் சொல்லவும் தான் அருகிலிருந்த மேஜையைப் பார்த்தாள். உணவுப் பதார்த்தங்கள் அழகாக அடுக்கப்பட்டு மூடப்பட்டிருந்தது. அவனின் செயலில் ஆச்சிரியமடைந்தவள், “உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா?” விழியகலக் கேட்டவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

“நான் என்ன வேற்றுக்கிரகவாசியா? சமைக்கத் தெரியாமல் இருக்கிறதுக்கு” ஒற்றைப் புருவம் தூக்கி கிண்டலாகக் கேட்டவன் அவள் கையில் காப்பிக் கோப்பையைத் திணித்தான். எப்பொழுதுப் பாத்திரம் கழுவி முடித்தான்... எப்பொழுதுக் காபி போட்டான் என்று கூடத் தெரியாமல் இருந்ததற்காகத் தன்னையே கடிந்தவள், தன் தலையில் தானே குட்டிக் கொண்டாள்.

“சாரி... இதைக் கூடச் செய்யாமல் பேசிட்டே இருந்துட்டேன்”

“ஹேய் இதுக்கு எதுக்குச் சாரியெல்லாம். பெண் சமையல் செய்யணும் ஆண் டிவி பார்க்கணும்ன்னு எந்தச் சட்டமும் சொல்லவில்லை. இருவருக்குமே அலுவல் இருக்கும் போது இப்படி வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வதில் எந்தத் தப்புமில்லை” என்று கூறியவன் வரவேற்பறை நோக்கி நடக்க, அவனையே பிரமிப்பாய் பார்த்தபடி பின்தொடர்ந்தாள். அலுவலகம் செல்லக் காலையில் ஆர்ப்பாட்டம் செய்யும் தந்தையின் முகம் ஏனோ அந்நேரம் அவள் கண்முன் வந்து போனது.

விஷ்ணு செய்தித்தாளில் மூழ்கி விட, இவளுக்கும் செய்தித்தாள் பார்க்க வேண்டும் என்றிருக்க, அவன் வைத்திருந்ததை எட்டி எட்டிப் பார்த்தாள். அவளின் செயலில் நிமிர்ந்தவன், “படிக்க வேண்டுமா?” என்று கேட்டவன், அவள் பதிலை எதிர்பாராமல் அவள் அருகில் வந்து இருவருக்கும் பொதுவாகச் செய்தித்தாளை வைத்து இயல்பாகப் படிக்க, அவளுக்குத் தான் அவனின் அருகாமை அவஸ்தையைக் கொடுக்கச் சட்டென்று எழுந்துவிட்டாள்.

“என்னம்மா...” விஷ்ணு புரியாமல் அவளைப் பார்க்க, “ஷரத்தை எழுப்ப வேண்டும்” என்றபடி அவசரமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள். அவளின் முகச்சிவப்பும் தடுமாற்றமும் அவள் மனதைக் காட்டிக் கொடுக்க அவன் முகத்தில் புன்னகை பூத்தது.

“ஹைய்யா... எனக்குப் பிடிச்ச டொமேட்டோ ரைஸ், பொட்டடோ ஃபிரை” ஷரத் குதூகலிக்க, “உனக்குப் பிடிக்கும்ன்னு தான் செஞ்சேன் கண்ணா” விஷ்ணு அவனைத் தூக்கி முத்தமிட்ட, மதி அப்பொழுது தான் உணவுப் பதார்த்தங்களைப் பார்த்தாள். இட்லி, சட்னி என்று காலை உணவுக்கும், மதியத்திற்குத் தக்காளி சாதம், உருளை வறுவல் என்று செய்திருந்தான். இவ்வளவும் செய்ய எத்தனை மணிக்கு எழுந்தானோ தெரியாது... மனம் நெகிழ அவனைப் பார்க்க, அவனோ கர்மசிரத்தையாய் மகனுக்கு இட்லி ஊட்டிக் கொண்டிருந்தான்.

அதன்பின் மூவரும் கிளம்பி முதலில் ஷரத்தை பள்ளியில் விட்டு விட்டு, அப்படியே ஆண்டாளை அலைப்பேசியில் அழைத்து மதியம் அவனைக் கூட்டிக் கொள்ளச் சொல்லிவிட்டு, அவளைக் கல்லூரியில் இறக்கியவன், நேரே தன் அலுவலகத்திற்கு வந்தான். என்றுமில்லாத உற்சாகம் அவனை ஆட்கொள்ளச் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தான். மாலை வந்ததும் கல்லூரி சென்று மதியை அழைத்துக் கொண்டு அலுவலகம் வந்தவன், சிறிது நேரம் வேலைப் பார்த்து விட்டு அவளை அழைத்துக் கொண்டு மாமியார் வீடு செல்ல, அங்கே ஆண்டாள் இரவு உணவு முடித்துவிட்டுக் கிளம்பச் சொல்ல, அங்கே உணவு முடிந்து வீடு திரும்ப இரவாகிப் போனது. அதற்குப் பிறகு

வந்த நாட்கள் தொய்வில்லாமல் பரபரப்பாகச் செல்ல, மெதுவே விஷ்ணுவுடனானப் பந்தத்தை மனதளவில் ஏற்கத் தொடங்கியிருந்தாள் மதி. அதை அவனும் உணர்ந்து தான் இருந்தான்.

****

“மதிக்கண்ணு வலது காலை எடுத்து வைத்து வாம்மா...” யசோதா அன்போடு கூற, விஷ்ணுவின் சொந்த ஊரில் அவன் வீட்டில் குழுமியிருந்த உறவுனர்கள் கூட்டத்தின் ஆர்வப் பார்வையைத் தாங்க முடியாமல் மதி வெட்கத்தில் நெளிந்தவளாய் வீட்டினுள் நுழைந்தாள். வரவேற்பறையில் இருந்த ஆண்கள் பக்கம் விஷ்ணு தங்கிவிட, மதி தயங்கித் தயங்கி உள்ளே சென்றாள்.

“அண்ணி... வாங்க...” ஷர்மிளா அவள் கைப்பிடித்து அழைக்கவும், தெரிந்த முகமாய் அவளைக் கண்டதும் மகிழ்ந்து அவளுடன் ஒன்றியபடி நடந்தாள். உறவினர்களில் பலர் அவளிடம் சகஜமாக அவளின் குடும்பத்தைப் பற்றி விசாரித்துப் பேச அவளுக்கோ பெருத்த ஆச்சிரியம். இப்படியும் பெருந்தன்மையோடு மனிதர்கள் இருப்பார்களா என்று. நிச்சயம் தன்னைப் பற்றி அவர்களுக்குத் தெரியும், தெரிந்திருந்தும் ஒரு வார்த்தை பேசவில்லையே. அவளுக்கு யசோதாவின் கதை தெரியாததால் அப்படி யோசித்தாள்.

மாலையில் விஷ்ணுவோடு சேர்ந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்தவள் காதில், “என்ன அண்ணே இப்படிப் பண்ணிப் போட்ட. உம்ம வாழ்வு தான் இப்படியாகிப் போச்சுன்னா... எம்மருமவன் வாழ்க்கையையும் இப்படியாகிப் போச்சே. இந்தக் காரியத்துக்கு நீயும் துணைப் போயிருக்க. இது கொஞ்ச கூட நல்லாயில்லண்ணே” உரக்கப் பேசிய பெண்மணியின் குரல் கேட்டு, சிலையாய் சமைந்து போய் நின்றவளை ஆறுதலாய் அணைத்தது விஷ்ணுவின் கைகள்.

அந்தப் பெண்மணி வேறுயாருமில்லை யோகேந்திரனின் ஒன்றுவிட்ட தங்கை. அவர் மகளை விஷ்ணுவுக்கு முடிக்காத ஆத்திரத்தில் தாங்கமாட்டாமல் வார்த்தையை

அள்ளி வீசினார். அவரின் வார்த்தைக் கேட்டு யோகேந்திரனுக்குக் கோபம் வர, “இந்தாப் பாரு... தேவையில்லாமல் பேசாதே. வந்த வேலை என்னவோ அதைப் பார்த்துட்டு போவியா? அதை விட்டுவிட்டு...”

அதேசமயம் விஷ்ணுவும் அங்கே வந்தவன், “ஏனத்தை இப்படிப் பேசுறிங்க? உங்க மகளுக்கு இந்த மாதிரி நடந்திருந்தா இப்படித்தான் பேசுவிங்களோ? இவள் என் மனைவி. இவளைப் பற்றி ஒரு வார்த்தைப் பேசினால் நான் சும்மா இருக்க மாட்டேன். எங்க அய்யாவுக்கு அப்புறமும் நம்ம உறவு நீடிக்கணும்ன்னா தேவையில்லாமல் இப்படிப் பேசுறதை நிறுத்துங்க. இல்லைன்னா இங்கே வராதீங்க...” அவன் போட்டப் போட்டில் அந்த அத்தைப் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனார். ஊரில் பெரிய மனிதனான தன் அண்ணனை எதிர்த்து விட்டு அவரால் வாழ முடியுமா? அப்புறம் புல் பூண்டுக் கூட அவரை இளக்காரமாகப் பார்க்காதா? பேசாதா?

இரவு ஷரத் தூங்கும் வரை பொறுத்திருந்த மதி, விஷ்ணுவின் அருகில் வந்தமர்ந்து, “அவங்க ஏன் உங்க அம்மாவையும் அப்படிப் பேசினாங்க?” யசோதாவும் தன்னைப் போல் பாதிக்கப்பட்டு இருப்பாரென்று அவளுக்குச் சின்னச் சந்தேகம் கூட வரவில்லை.

விஷ்ணு அவளிடம் எப்படிச் சொல்வது என்று ஒரு நிமிடம் யோசித்தவன், சொல்லித்தானாக வேண்டும் என்றெண்ணி, அவன் யசோதா வாழ்வில் நடந்ததை அவளிடம் சொல்லலானான். அதைக் கேட்டு அவளின் உடல் நடுங்கியது, கண்களில் கண்ணீர் பெருகியது. தாய்மையும் அன்பும் போட்டிப் போடும் அழகு முகத்துடன் இருக்கும் அவருக்கா இந்த நிலைமை அவள் உள்ளம் அவருக்காக அழுதது.

“உன்னிடம் மறைக்கணும்ன்னு சொல்லாமலில்லை. அது நாங்களே மறந்து போய்விட்ட ஒண்ணு. இன்னைக்கு அத்தை தேவையில்லாமல் பழசையெல்லாம் பேசி...ச்சு...” அவன் முகம் வேதனையில் வாட, அவன் கையை ஆறுதலாகப் பிடித்தாள்.

“நீ அம்மாவிடம் இதைப் பற்றிக் கேட்க வேணாம். இப்பொழுது போய்த் தூங்கு காலையில் ஊருக்குக் கிளம்பச் சரியாயிருக்கும்” என்றவன் கால் நீட்டிப் படுத்தான்.

மதியோ அந்த இடத்தை விட்டு அசையாமல் அப்படியே அமர்ந்திருந்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருக்க, அது விஷ்ணுவின் காலில் விழுந்து வழிந்தது. அந்த உணர்வில் எழுந்தமர்ந்த அவன், மதி கண்ணீர் விட்டு அழுது கொண்டிருப்பதைக் கண்டு, “ஷம்மு...” என்றழைக்க,

“ஏன் பரத்... எத்தனையாண்டுகள் ஆனாலும் இந்த மாதிரி அயோக்கியங்கத் திருந்தவே மாட்டாங்களா? ஏன் இப்படிப் பண்றாங்க? இதில் அவங்களுக்கு என்ன சந்தோசம்? மாமா போல் உங்களைப் போல் நல்லவங்க இருக்கிறதால நானும் அத்தையும் தப்பித்தோம். இல்லைன்னா நினைக்கவே பயமாயிருக்கு. என்னைப் போல் எத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டுத் அவங்களோட மனவேதனையைக் கூட யாரிடமும் சொல்ல முடியாமல் அதற்கான தீர்வும் கிடைக்காமல் இருக்காங்க. அவங்களெல்லாம் பாவமில்லையா?” அவன் காலைப் பிடித்துக் கொண்டு கதறியவளை, அள்ளியெடுத்து ஆறுதலாய் அணைத்துக் கொண்டவன், மெல்ல ஆறுதல் மொழிப் பேசி அவளைச் சமாதானம் செய்ய, அவனின் ஆறுதலில் அவள் கொஞ்சம் கொஞ்சமாக அழுகையை நிறுத்தினாள்.

“இப்பயெல்லாம் ரொம்பக் கண்ணீர் விடற ஷம்மு... உன் தைரியம் எங்கே போனது?” அவள் அழுகையை நிறுத்தியதும் அவள் மனநிலையை மாற்றும் பொருட்டு அவன் கேலிப் பேச,

“நான் தைரியமான பொண்ணு தான். ஏனோ உங்க முன்னாடித் தான் என் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுகிறேன்” கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சிறிது வெட்கத்துடன் கூறியவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தவன், அவள் கூறியதிலிருந்த

அர்த்தம் அவனுக்குப் புரிய, ரகசியப் புன்னகை விரிந்தது அவன் உதட்டில்.

“ஏன் என்று நீயே யோசித்துப் பார்?” என்றவன் விழி மூடிப் படுக்க, அவன் பேச்சில் திகைத்து போய் அவன் முகம் பார்க்க அதில் தெரிந்த புன்னகை அவளைக் குழப்பியது.

அத்தியாயம் : 23

“பரத் இந்தச் செக்சனிலுள்ள பாய்ன்ட் இந்த வழக்கிற்குச் சரியாகயிருக்கும்” சொன்ன ஷன்மதியைக் கண்ணில் மெச்சுதலுடன் பார்த்தான் விஷ்ணு. மதிக்குக் கல்லூரியில் கடைசி வருடப் பரீட்சை முடிந்து விடுமுறை விட்டிருக்க, அவள் தேர்ச்சிக்காகக் காத்திருக்கிறாள். அவர்களுக்கும் திருமணம் முடிந்து மூன்று மாதங்களாகிவிட்டது. வாழ்க்கைத் தெளிந்த நீரோடைப் போல் தடையில்லாமல் ஓட, இயல்பாக அந்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டனர் இருவரும்.

“ஷம்மும்மா... என் ஜூனியர் என்று நிரூபிக்கிறாய். குருவை மிஞ்சிய சிஷ்யை” என்று அவன் அவளைப் பாராட்ட,

“ஹ... நீங்கள் எனக்குக் குருவா? நல்லாயிருக்கிறது கதை... என் குரு பாரதி மேடம் மட்டும் தான்” குறும்பாகச் சொன்ன மனைவியின் தலையில் வலிக்காமல் குட்டு வைத்தான் கணவன்.

“காலையிலேயே கணவனும் மனைவியும் ஆரம்பித்துவிட்டீர்களா? ஒரு சின்னப் பையன் மனது என்ன பாடுபடும்ன்னு யோசிக்கவே மாட்டீங்களா?” வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வந்தான் யுவன். விஷ்ணுவும், மதியும் இப்படிச் சந்தோசமாக இருப்பதைக் கண்டு அவன் உள்ளம் மகிழ்ந்தது.

“நீயெல்லாம் சின்னப்பையன்... காலக் கொடுமையடா!” விஷ்ணு அங்கலாய்க்க, மதி கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தாள்.

“விஷ்ணு... ஒரு குட்நியூஸ் கல்யாணத்துக்கு வீட்டில் சம்மதிச்சுட்டாங்க”

“ஹேய் யுவன் கங்கிராட்ஸ்” நண்பனை ஆரத்தழுவி கொண்டான் விஷ்ணு.

“கங்கிராட்ஸ் அண்ணா...” மதியும் தன் வாழ்த்தை தெரிவித்தாள்.

“எப்படி யுவன் இதைச் சாதித்தே?”

“உனக்குத் திருமணமாகி மூன்று மாதங்களுக்கு மேலாகுது. இன்னும் வினி திருமணத்திற்குச் சம்மதிக்காமல் இழுத்துக் கொண்டேயிருக்கா. அப்பா வேறு அதுக்கு ஒத்து ஊதிக்கிட்டு இருக்கிறார். எவ்வளவு நாள் தான் பொறுமையாக இருக்கிறதுன்னு நேத்து வாய் விட்டுக் கேட்டுட்டேன். அப்பா கொஞ்சம் கடுமையாத் தான் பேசினாங்க. ஆனால் அம்மா எனக்காகச் சப்போர்ட் பண்ணித் திருமணத்திற்குச் சம்மதம் சொல்லி, கையோடு நாளும் குறிச்சுக் கொடுத்துட்டாங்க. அவங்க எனக்குச் சப்போர்ட் பண்ணியதை என்னால் நம்பக் கூட முடியல. வரும் மாதம் இருபதாம் தேதி குறித்துக் கொடுத்திருக்காங்க. நீ மாமா, அத்தைக் கிட்ட சொல்லிடு. நான் என் டார்லிக்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்லிட்டு வர்றேன்” கண்சிமிட்டியபடி யுவன் எழுந்துச் செல்ல, விஷ்ணு நிம்மதியுடன் இருக்கையில் சாய்ந்தான்.

“ஷம்மு... இப்பத்தான் நிம்மதியாயிருக்கு” அவனின் சந்தோசம் அவளையும் தொற்றிக் கொண்டது.

அடுத்து வந்த நாட்கள் திருமண வேலைகளில் றெக்கைக் கட்டிப் பறக்க, விஷ்ணு யசோதாவையும், ஷர்மிளாவையும் சென்னைக்கே அழைத்து வந்துவிட்டான். ஏனெனில் திருமணம் சென்னையில் தான் நடைபெறவிருந்தது. யோகேந்திரன் பத்து நாட்களுக்கு முன்பாக வருவதாகச் சொல்லிவிட்டார். விஷ்ணு தங்கைக்குப் புடவை, நகை வாங்கும் பொழுதெல்லாம் ஷன்மதிக்கும் வாங்கிக் குவிக்க, அவளோ அதை மறுக்க, “தேவையானதைத் தானே வாங்குகிறேன் பேசாமலிரு” என்று அவளை அடக்கிவிட்டான்.

இதோ அதோ என்றிருந்த திருமண நாளும் வந்தது. நள்ளிரவு வரை மண்டபத்தில் வேலைச் செய்து கொண்டிருந்த மதியை வற்புறுத்தி ஓய்வெடுக்க அழைத்து வந்தான் விஷ்ணு. அதிகாலையில் எழுந்து அவசரமாகக் குளித்து விட்டு வந்தவள், விஷ்ணுவையும் ஷரத்தையும் எழுப்பிக் கிளம்பச் செய்தாள். இருவரும் கிளம்பிச் சென்றதும் திருமணத்திற்கு என்று விஷ்ணு எடுத்துக் கொடுத்திருந்த பட்டுப்புடவையை அழகாக உடுத்தி,

அதற்குப் பொருத்தமாக வாங்கியிருந்த நகைகளை அணிந்தவள், தோள்ப்பட்டை வரை வளர்ந்திருந்த முடியை இழுத்து ஒரு கிளிப்பில் அடக்கினாள்.

விஷ்ணு ஒருநாள் அவளின் நீண்டக் கூந்தல் அவனுக்குப் பிடிக்குமென்று பேச்சுவாக்கில் சொல்லக் கேட்டவள், அதன் பின் ஒரு நாளும் முடியை வெட்டவில்லை. அவன் சொன்னதற்காகவே வளர்க்க ஆரம்பித்திருந்தாள். பூவைத் தலையில் வைத்துத் தோள் பக்கமாக வழியவிட்டு, நெற்றியில் புடவைக்குப் பொருத்தமான அதே நிறப் பொட்டை வைத்து, வகிட்டில் குங்குமம் வைத்துவிட்டு நிமிர்ந்தவள், வெகுநாட்களுக்குப் பின் தன் அழகை கண்ணாடியில் ரசித்துப் பார்த்தாள். என்றுமில்லாத அழகுடன் தானிருப்பதை உணர்ந்தவள் முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது.

அந்நேரம் பார்த்து உள்ளே வந்த விஷ்ணு, அவள் முகம் பார்க்காமல், “ஷம்மு என் செல்போனை எங்கே வைச்சேன்னு தெரியல. கொஞ்சம் தேடிக் கொடு” என்றவன் மேஜையில் தேட, சுற்றும் முற்றும் பார்த்தவள் கண்ணில் ட்ரெசிங் டேபிளிலிருந்த அலைப்பேசி தென்பட, “இங்கேயிருக்கு” என்றவள் அதையெடுத்து அவனிடம் நீட்டினாள்.

அவளின் குரலில் அவன் புறம் திரும்பியவன் கண்ணிமைக்க மறந்தான். உற்சவச்சிலை போல் அலங்காரத்துடன் நின்றிருந்தவளைக் கண்டவன் அழுத்தமான காலடியுடன் அவளருகில் வர, அவன் பார்வையில் தெரிந்த வித்தியாசம் கண்டு மனம் தடதடக்க அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே அவள் கையிலிருந்த அலைப்பேசியை வாங்கிச் சட்டைப்பையில் போட்டவன், அவளருகே நெருங்கி நிற்க, அவன் அருகாமையில் தோன்றிய அவஸ்தையில் அவள் கண்மூடி நிற்க, அவனோ அவளிடமிருந்து வந்த பூவாசத்தோடு கூடிய அவளின் பிரத்யேக நறுமணத்தில் தன்னைத் தொலைத்தவனாய், அவளின் அழகு முகத்தை ரசித்துக் கொண்டிருக்க, அவனிடமிருந்து சத்தம் வராததால் மெதுவே கண்

திறந்தவள் அருகிலிருந்த அவன் முகத்தைப் பார்த்து முழித்தாள்.

அவனோ ஒன்றும் தெரியாதவன் போல், அவள் காதோரம் கொஞ்சம் முடியை எடுத்து சுருட்டிவிட்டவன், “இப்போ இன்னும் அழகாயிருக்கு...” அவள் கன்னம் தட்டிச் சொன்னவன், அவள் பதிலை எதிர்பாராமல் வெளியேறினான். அவனின் செய்கையில் ஏமாற்றமடைந்து கண்களில் கண்ணீர் மல்க அப்படியே நின்றிருந்தாள் மதி.

யுவன்-ஷர்மிளா திருமணம் இனிதே நடைபெற மதியின் கண்கள் தன்னவனைத் தேடியது. கையில் ஷரத்துடன் கம்பீரமாக அவன் அங்குமிங்கும் நடந்த கண்கொள்ளாக் காட்சியைக் கண்ணில் நிறைத்துக் கொண்டாள் அவள். அன்று இரவு ஆண்டாள் ஷரத்தைத் தன்னுடன் அழைத்துச் செல்ல, மதி ஷர்மிளாவை அலங்காரம் செய்யத் துவங்கினாள்.

“ஷர்மி உங்க அழகைப் பார்த்து அண்ணா இன்னைக்கு ப்ளாட் தான்” மதி ஷர்மியைக் கேலிச் செய்து அவளை யுவனின் அறைக்கு அழைத்துச் சென்று அங்கே அவளை விட்டு விட்டு, வீட்டிற்குக் கிளம்பலாம் என்றெண்ணிக் கணவனைத் தேடி வரவேற்பறைக்கு வந்தவள் அங்கு அவன் இல்லாததைக் கண்டு, முன்புறமிருந்த தோட்டப் பகுதிக்கு வந்தாள். விஷ்ணு அங்கே இருப்பதைக் கண்டு அவனருகில் செல்ல எத்தனிக்க, அங்கே கண்ட கட்சியைக் கண்டு கொஞ்சம் அதிர்ந்து தான் போனாள்.

விஷ்ணுவின் நெஞ்சில் விலாசினி சாய்ந்து நின்று கொண்டு, “விஷ்ணு... நான் உங்களை எவ்வளவு காதலிச்சேன் தெரியுமா? என்னை ஏன் ஏமாத்திட்டிங்க? என்னை ஏன் உங்களுக்குப் பிடிக்கல?” உளறிக் கொட்டிக் கொண்டிருக்க, விஷ்ணுவும் அவளின் செயலின் அதிர்ந்து என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றிருந்தான்.

திடீரென்று பட்டென்று சத்தம் கேட்டு மதி சுயநினைவுக்கு வர, அங்கே யுவனின் அன்னை தான் விலாசினியைக்

கன்னத்தில் அடித்துக் கொண்டிருந்தார். “ச்சீ... என் பெண்ணா நீ? கல்யாணமான ஒருவனிடம் எப்படிப் பேசணும் உனக்குத் தெரியாது. கல்யாணமானப் பெண்ணை ஒரு ஆண் சகோதரியாகப் பார்க்கணும் அப்படின்னா, அதேமாதிரி கல்யாணமான ஆணைப் பெண்ணும் சகோதரனாகத் தான் பார்க்க வேண்டும். நீ செய்தக் காரியத்திற்கு உன்னை...” என்று சொல்லிவிட்டு மீண்டும் அடிக்கத் தொடங்கினார்.

“உங்கள் மகளின் யோக்கியதையைப் பார்த்துட்டீங்கள்ல. இனியாவது அவளுக்குச் சீக்கிரம் கல்யாணம் பண்ணும் வழியைப் பாருங்க” அருகில் நின்றிருந்த கணவனிடம் சொல்ல அவர் தலையைக் குனிந்தார்.

“வினி இதை உன்னிடம் எதிர்பார்க்கவில்லை” மகளிடம் தந்தை விரக்தியாகக் கூற, விலாசினி தந்தையின் விரக்தி வார்த்தையில் கூனிக்குறுகியவள் அவரின் நெஞ்சில் சாய்ந்து, “சாரிப்பா... இது போல் நான் பண்ண மாட்டேன். பழிவாங்கும் எண்ணம் என் கண்ணை மறைத்து, பெண் என்கிற உணர்வையே மறைத்துவிட்டது. அம்மா சொன்னதும் தான் நான் செய்யவிருந்த கேவலம் புரிந்தது. என்னை மன்னித்துவிடுங்கள்” என்று அழுதவள், விஷ்ணுவிடமும், “என்னை மன்னித்துவிடுங்கள்” என்று கூற,

“கூடிய சீக்கிரம் வினிக்குத் திருமணம் முடியுங்கள் அங்கிள். இங்கு நடந்ததை யுவனிடம் சொல்ல வேண்டாம்” என்று யுவனின் தந்தையிடம் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தவன், அப்பொழுது தான் அங்கு நின்றிருந்த மதியைப் பார்த்தான். அவளிடம் பேச அவன் வாய் திறக்க முயல அவளோ, “போகலாமா?” என்றபடி முன்னே நடக்க, பெருமூச்சை இழுத்துவிட்டபடி அவளைப் பின் தொடர்ந்தான்.

வீடு வரும் வரை ஒன்றும் பேசவில்லை. குளித்து முடித்து அவள் படுக்கைக்கு வரும்வரை அவனும் ஒன்றும் பேசாமல் அவளுக்காகக் காத்திருந்தான். அவள் வந்ததும் அவளருகே அமர்ந்தவன், “ஷம்மு... எனக்கு ஒண்ணும் தெரியாது. நான் தோட்டத்தில் நடந்துட்டு இருக்கும் போது அங்கே வந்த

வினித் திடீரென்று அப்படி நடந்து கொண்டாள். எனக்கே இது சற்று அதிர்ச்சி தான். அவள் இப்படிச் செய்வான்னு நினைக்கவே இல்லை" அவளோ முகம் மாறாமல் அவன் சொல்வதைக் கேட்க, "நீ என்னைத் தவறாக..." அவன் வார்த்தையை முடிக்கவில்லை அவள் கரம் அவன் வாயை மூடியது.

"நான் ஒண்ணும் உங்களிடம் விளக்கம் ஏதும் கேட்கவில்லையே. அதிலும் உங்களைப் போய் நான் தவறாக நினைப்பேனா? நீங்கள் மாசுமருவில்லாதவர். உங்களை நான் அந்தத் தெய்வத்திற்குச் சமமாக வைத்திருக்கிறேன். உங்களை நான் சந்தேகப்படுவது என் அம்மாவை நான் சந்தேகப்படுவது போல" அவளின் வார்த்தையில் அவன் மனதில் காதல் பொங்க ஆவேசத்துடன் அவளை அணைத்தவன் அவள் முகமெங்கும் முத்தமிட்டு தன் அன்பை வெளிப்படுத்த, கண்மூடி அவனின் முத்தத்தை ஏற்றுக் கொண்டவள் உடல் அவன் ஆவேச ஆக்கிரமிப்பில் நடுங்கியது. அவளின் நடுக்கம் உணர்ந்தோ என்னவோ அவளை விடுவித்தவன், அவள் நடுக்கம் குறையும் வரை மென்மையாக அணைத்திருந்து, அது குறைந்ததும் அவளைப் படுக்க வைத்தவன் தானும் அவளருகில் படுத்து முதன்முறையாக அவளை அணைத்துக் கொண்டு உறங்க, அவள் தான் உறக்கமில்லாமல் தவித்தாள்.

உடல் நடுக்கம் நின்றதும் ஏதோ ஏமாற்றம் வந்து அவள் மனதைக் கனக்கச் செய்தது. திருமணத்திற்கு முன்பெல்லாம் அவளைச் சீண்டி கொண்டும், உரசிக் கொண்டும், சந்தர்ப்பம் கிடைத்தால் முத்தமிட்டுக் கொண்டும் இருப்பவன் இப்பொழுதெல்லாம் அவளிடம் நெருங்குவதே இல்லை. இதோ இன்று நெருங்கியவன் உடனே விலகிப் படுத்துவிட்டான். அதை நினைத்து நினைத்து அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. அந்த ஏமாற்றம் கொஞ்சம் கொஞ்சமாகக் கோபமாக மாறி ஆத்திரமாக உருமாறியது. அவளுக்கே அவனிடமிருந்து தான் என்ன எதிர்பார்க்கிறோம் என்று தெரியவில்லை.

ஆனால் அவனின் விலகல் தன் மனதை பாதிக்கிறது என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது.

அத்தியாயம் : 24

“ஷம்மு... அப்பாவிற்கு அடுத்த மாதம் அறுபது வயது முடிகிறது. அறுபதாம் கல்யாணம் செய்யலாம்ன்னு நினைக்கிறேன். நீ என்ன சொல்ற?” விஷ்ணு மதியிடம் கேட்க, ஷரத் விளையாடியப் பொருட்களை ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தவள், சந்தோசத்துடன் நிமிர்ந்துப் பார்த்து, “கட்டாயம் செய்யலாம்ங்க. ஷர்மிக்கிட்ட பேசினீங்களா?”

“இன்னுமில்லை... அவளும் என்ன மறுப்பா சொல்லப் போறா? சரின்னு தான் சொல்வா. விசேசத்திற்கு ஒருவாரம் முன்னாடிப் போய் எல்லா வேலைகளும் பார்க்கணும். உனக்கு ஒண்ணும் பிரச்சினையில்லையே” அன்று அவன் அத்தைப் பேசியதை மனதில் வைத்து அவன் கேட்க, “நீங்க இருக்கும் போது எனக்கென்ன பிரச்சினை...!” சொல்லிவிட்டு சிரித்தவளின் சிரிப்பு அவனைச் சுண்டி இழுத்தது. தலையைக் குலுக்கித் தன்னைச் சமன்படுத்தியவன், தன் நெஞ்சில் படுத்திருந்த மகனிடம் தன் கவனத்தைச் செலுத்தினான். ஷரத்துக்குத் தூக்கம் வந்ததோ என்னவோ, “குட்நைட் டாடி...” என்றவன் தகப்பன் நெஞ்சிலே தலைவைத்து தூங்க ஆரம்பித்தான்.

“குட்நைட் டா கண்ணா...” அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு நிமிர்ந்தவன் பார்வையில் மதியின் ஏக்கப் பார்வை விழ, ஷரத் தூங்கும் வரை பொறுமையுடன் காத்திருந்தவன், அவன் தூங்கியதும், அவனைப் படுக்க வைத்துவிட்டு, அவளருகில் வந்தான். சட்டென்று எதிர்பாராமல் அவள் முகம் நோக்கிக் குனிய, அவளோ அவனைப் பிரமிப்பாய் பார்க்க, அவளின் பார்வைக் கண்டு சிரித்தவன், “மகனுக்குக் கன்னத்தில்... மகனின் அம்மாவுக்கு...” விசமமாக அவளைப் பார்த்தவன், அவள் எதிர்பாராத தருணத்தில் மென்மையாக அவள் இதழ் தீண்டி, “குட்நைட் கண்மணி...” என்றவன் கன்னம் தட்டிவிட்டுச் செல்ல, அவள் இன்னமும் பிரமிப்பு அடங்காதவளாய் வெகுநாட்களுக்குப் பின் அவன் இதழ் தீண்டிய மகிழ்ச்சியில் படுக்கையில் சாய்ந்தாள்.

ஷர்மிளாவின் திருமணம் முடிந்ததும் அவனை விட்டுப் பிரிய வேண்டுமென்று அவள் முடிவு செய்திருந்ததை அவளே மறந்து விட்டாள். அவனின் அன்பில் அவள் மனம் மாறி இவன் என்னவன் என்ற உரிமை அவனிடத்தில் வர, வாழ்வின் இறுதிவரை அவனுடன் வாழ்ந்துப் பார்த்துவிடலாம் என்று அவள் மனம் முடிவுச் செய்ததை அவளே இன்னமும் அறியவில்லை. அந்த ஆழ்மனதின் ஏக்கம் தான் அவனின் அருகாமையை அவள் விரும்பியது.

****

மகனும், மகளும் ஏற்பாடு செய்திருந்த அறுபதாம் கல்யாண விழாவைக் கண்டு யோகேந்திரனுக்கும் யசோதாவிற்கும் பெருமைத் தாங்கவில்லை. இருமக்களும் தத்தம் துணையுடன் முன் நின்று அனைத்துக் காரியங்கள் செய்யும் போதும் அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மதி தன் கூடவே தன் பெற்றோரையும், தங்கையையும் அழைத்து வந்துவிட்டாள். கல்யாண வீடு களைக்கட்ட ஆரம்பித்தது.

ஷர்மியும் யுவனும் ஒருவரை ஒருவர் பார்வையில் சீண்டிக் கொண்டும், நேரம் கிடைக்கும் போது ஒட்டிக் கொண்டும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்த யசோதா, அதேசமயம் விஷ்ணுவையும், மதியையும் கவனித்து விட்டு வருந்தவும் செய்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காத போது பார்த்துக் கொள்வதும், பார்க்கும் போது யாரோ போல் விலகிச் செல்வதும் என்று அவர்களுக்குள் நடந்த கண்ணாமூச்சி ஆட்டம் அவர் கண்ணிலிருந்து தப்பவில்லை. அவரின் அனுபவம் வாய்ந்த அறிவு இதற்கெல்லாம் முடிவுக் கட்ட எண்ணியது. மனதில் எண்ணியதை செயலாக்க தங்கள் அறுபதாம் திருமணநாளை தேர்ந்தெடுத்தார்.

“என்னப்பு... இந்தக் கிழவிக்குத் தாலிக் கட்டத்தான் இந்தத் தடபுடலா” யோகேந்திரன் குரல் சலித்துக் கொண்டாலும், அவரின் பார்வை மனைவியைக் காதலுடன் வருடிச் சென்றது.

“உங்க அப்பாருக்கு வேற எந்தப் பொண்ணு வேணுமாம்...? கேட்டுச் சொல்லு ராசா. நானே முன்னேயிருந்து நடத்தி வைக்கிறேன்” யசோதா கிண்டலாகக் கூறினாலும் அதில் அடக்கப்பட்ட கோபம் தெரிய,

“என் பச்சைகிளிக்கு அதுக்குள்ள கோபம் வந்திடுச்சே... அது கொத்துவதற்குள் சீக்கிரம் தாலியை எடுத்துக் கொடுங்கப்பா” என்று யோகேந்திரன் பரபரக்க அதைக் கண்டு எல்லோரும் சிரிக்க, யசோதாவும் கணவன் செயலில் சிரிக்க, அதை மனநிறைவுடன் பார்த்துக் கொண்டே தாலிக் கட்டினார் யோகேந்திரன். யசோதாவின் கண்கள் லேசாகக் கலங்க, யோகேந்திரன் அவரின் கையை ஆறுதலாகப் பிடிக்க, அதை மேலும் அழுத்திப் பிடித்துக் கொண்டார் அந்த அன்பு மனைவி.

“அப்பா... நாங்கெல்லாம் இங்கே தான் இருக்கோம். உங்க ரொமான்சை ரூமில் போய் வச்சுக்கோங்க” விஷ்ணு கிண்டலடித்தான்.

“டேய் மவனே... அன்னையிலிருந்து இன்னைக்கு வரைக்கும் எனக்கு வில்லன் நீ தான்டா” என்று கூறி அவர் சிரிக்க, அவரின் சிரிப்பு அங்கேயிருந்த எல்லோரையும் தொற்றிக் கொள்ள, அந்த மகிழ்ச்சியான தருணத்தைப் புகைப்படக்கருவி அழகாக உள்வாங்கிக் கொண்டது.

“மதி இங்கே வாம்மா...” யசோதா அழைக்க, மதி அவரை நோக்கிப் போனாள்.

“இது தான் பிரியா... என் நாத்தனார் பொண்ணு. விஷ்ணுவுக்குப் பார்த்திருந்த முறைப்பெண்” என்று அருகிலிருந்த பெண்ணை அறிமுகப்படுத்த, இருபெண்களும் ஒருவருக்கொருவர் பார்வையால் அளவிட, யசோதா தன் திட்டம் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கையுடன் நிமிர்ந்தமர்ந்து வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினார்.

“என்ன காத்திருந்து என்ன பிரயோஜனம் அத்தை... காத்திருந்தவப் புருசனை நேத்து வந்தவத் தூக்கிட்டுப் போயிட்டாளே. மனசில ஆசையிருந்து என்னத்தச் செய்ய?”

அந்தப் பெண் விட்ட பெருமூச்சில் அந்த இடம் தீப்பிடிக்காதது ஒன்று தான் குறை.

“இப்பவும் ஆசையிருந்தா சொல்லு புள்ள... முருகனுக்கு ரெண்டு பக்கமும் தெய்வானை, வள்ளி இருக்கிற மாதிரி மாமன் பக்கத்தில் நீயும் இருந்துட்டுப் போ” சொன்னது வேறு யாருமில்லைங்க நம்ம விஷ்ணு தான். பயலுக்கு நாக்கில் சனி வந்து உட்கார்ந்ததோ என்னவோ. ஊர்ப் பழக்கத்தில் அவன் பிரியாவைக் கிண்டலடிக்க, அவனை முறைத்துப் பார்த்தாள் மதி. அவனோ அவளைப் பார்க்கவே இல்லை. அவன் பார்வை தான் அந்தப் பிரியா மீதல்லவா இருந்தது. மருமகளின் கோபத்தைக் கண்டு கொண்ட யசோதா நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டார்.

இரவு தங்களறைக்கு வந்த விஷ்ணு அங்கே ஷரத் இல்லாததைக் கண்டு, “ஷரத் எங்கே?”

‘எப்பொழுதும் ஷரத் பின்னாடியே ஒளிந்து கொண்டு தப்பிப்பது போல் இன்றும் தப்பிக்கவா? இன்னைக்கு உங்களுக்கு இருக்கு மிஸ்டர்.விஷ்ணுபரத்’ மனதில் கூறிக் கொணடவள், “அம்மாக்கிட்ட இருக்கான்” என்று பதிலளித்தாள்.

அதைத் தவறாக எண்ணவில்லை விஷ்ணு. ஆண்டாளைக் கண்டால் ஷரத் அவருடன் தான் ஒட்டிக் கொண்டிருப்பான் என்று அவனுக்கும் தெரியுமாதலால் ஒன்றும் பேசவில்லை. படுக்கையில் விழுந்தவன் மதி இன்னமும் படுக்காமல் இருப்பதைக் கண்டு, “ஷம்மு... என்ன தூங்கலியா?” அவள் கைப்பிடித்துப் படுக்க வைக்க முயல, அவள் அவன் கையை வெடுக்கென்று உதறினாள்.

“அந்தப் பிரியாவை உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமோ?” அவளின் கேள்வியில் ஆச்சிரியமாக அவளைப் பார்த்தான் விஷ்ணு. இது போலெல்லாம் ஒருநாளும் பேசாதவள் இன்று ஏன் இப்படிப் பேசுகிறாள்? என்று எண்ணியவன், காலையில் தான் பேசியது நினைவு வர, அவன் மனதில் மின்னலடித்தது. ‘ஆஹா... அதான் கோபமா இருக்காளா?’ என்று நினைத்தவன் கொஞ்ச நேரம் அவளைச் சீண்டிப் பார்க்க ஆசைப்பட்டு, அவளருகே புரண்டுப் படுத்தவன், தன்

முகத்தை இருகைகளால் தாங்கியவாறு, “பிடிக்கும் தான்...” கண்களில் சுவாரசியம் தோன்ற அவளைப் பார்த்துச் சொன்னவனை மதி முறைத்த முறைப்பில் அவளுக்கு மட்டும் நெற்றிக்கண் இருந்திருந்தால் அவன் எரிந்து சாம்பலாகியிருப்பான்.

“என்ன தைரியம் இருந்தால் என்கிட்டேயே இப்படிச் சொல்விங்க?” கோபத்துடன் கூறிவாறு எழுந்து அவன் முதுகில் பட்படென்று அடித்தவளை, “அடிக்காதடி ராட்சசி...” மல்லாக்கத் திரும்பிப் படுத்தவாறு விஷ்ணு அவள் கையைத் தடுக்க, அவளோ பற்றுவதற்கு ஒன்றுமில்லாததால் அவன் மீதே விழ, ஆனாலும் அதை உணராமல் அவனை அடிப்பதிலேயே அவள் குறியாயிருந்தாள்.

அவளின் செயலே அவள் மனதில் தான் கணவனாகப் புகுந்து விட்டதை உணர்ந்தவன், அதை அவளுக்கும் உணர்த்த எண்ணி அவள் இதழைச் சிறை செய்ய, முதலில் முரண்டுப் பிடித்தவள் மெதுவே அவன் கைகளுக்குள் அடங்கினாள். எவ்வளவு நேரம் சென்றதோ இருவருக்குமே தெரியாது. அவன் தான் அவளை விலக்கி அருகில் சரித்து அவள் முகத்தில் ஒட்டியிருந்த, முடிகளை ஒவ்வொன்றாக எடுத்துவிட, அவளோ மயக்கத்தில் கண்களை மூடி அவனின் செய்கையை ரசித்துக் கொண்டிருந்தாள்.

“ஷம்மு...” அவன் குரல் அவள் காதில் மென்மையாக ஒலிக்க, காதோடு உரசிய மீசையின் குறுகுறுப்பில் அவள் அவன் நெஞ்சோடு ஒன்ற, அதில் பிரமித்தவனாய், “சம்மதமா...” அவனின் ரகசியப் பேச்சில் அவள் இன்னமும் அவன் மார்பில் முகம் புதைக்க, அதற்குப் பின் அவளின் சம்மதத்தைக் கேட்க வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்படவேயில்லை. அவளின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து மென்மையாக இதமாக அவன் நடந்து கொள்ள, அவளோ அவனிற்காகத் தன் தயக்கத்தை விட்டொழிக்க, அங்கே இல்லறம் இனிமையாக நடந்தேறியது.

“ஷம்மு... உனக்கு ஒண்ணும் வருத்தமில்லையே” மென்மையாகத் தன்னவளை அணைத்துக் கொண்டு

அவன் கேட்க, அவளோ, “கொஞ்சம் வருத்தம் தான்”

அதிர்ந்துப் போய் அவள் முகம் பார்க்க, “பின்னே அந்தப் பிரியாவை வள்ளியாக்க நீங்க நினைச்சா எனக்கு வருத்தமா இருக்காதா?” உண்மையில் அவளின் குரலில் வருத்தமிருந்தது. கண்கள் கூடக் கலங்கியிருந்தது.

அவளின் வருத்தம் அவனைப் பாதிக்க அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டவன், “நான் அப்படிப்பட்டவனா ஷம்மு? உன்னைத் தவிர யாரையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன்னு உனக்குத் தெரியாதா என்ன?”

“தெரியும் தான்... ஆனாலும் நீங்க எப்படி அப்படிச் சொல்லலாம்?” முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பேசியவளின் செயல் அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. அவன் வாய்விட்டுச் சிரிக்க, “நான் பேசுறது உங்களுக்குச் சிரிப்பாயிருக்கா” என்று முறைக்க, அவள் நெற்றியில் தன் தலையால் முட்டியவன், “அதற்கு அவள் புருசன் சம்மதிக்கணுமே”

“பிரியாவுக்குக் கல்யாணமாயிருச்சா?”

“அதான் உச்சிவகிட்டில் ஒருரூபா அளவுக்குக் குங்குமம் வைத்திருந்தாளே நீ பார்க்கலியா?”

உதடு பிதுக்கி ‘இல்லை’ என்று மதி தலையசைக்க அவள் உதட்டைச் சுண்டியவன், “நீ எதைத் தான் பார்த்த... எதையும் பார்க்காம யோசிக்காம கோபப்பட மட்டும் தெரியும். கிராமத்தில் மாமா பையன், அத்தைப் பொண்ணு கிண்டல் பண்றது எல்லாம் சகஜம் ஷம்மு. இதைப் போய்த் தவறா நினைச்சிட்டியே. அந்தப் பிரியாவும் நல்ல பெண் தான். என்ன கொஞ்சம் வெகுளி”

“அவளா வெகுளி...? என்னமா வாய் பேசறா? அவளுக்கு நீங்க வேற சப்போர்ட்டா?” அவளின் குரல் கோபத்துடன் ஒலிக்க,

“அய்யோ ஆளை விடு ஷம்மு...” என்று போலியாய் பயந்தவனாய் இருகரத்தையும் சரணாகதி அடைவது போல் தூக்க, “ரொம்பப் பயந்தவர் தான்” அவள் பழிப்புக் காட்ட,

“உண்மையிலேயே நான் பயந்தவன் தான்ம்மா” பயத்துடன் அவள் நெஞ்சில் அடைக்கலம் புகுவது போல் முகம் புதைத்தவனின் உதடுகள் வரம்பு மீற, அதைக் கண் மூடி ரசித்து அனுபவித்தவளைக் கண்டு அவன் மனம் மகிழ்ந்து, “எப்படியிருந்தாலும் நாளைக்குக் காலையில் முதல் வேலையா அந்தப் பிரியாவுக்கு நன்றி சொல்லணும்” என்று சொல்லியபடி அவள் முகம் நோக்கிக் குனிய, ‘அடங்க மாட்ட நீ’ என்பது போல் மதி முறைத்துப் பார்த்தாள்.

“அவளால் தானே இன்னைக்கு நீ...” அவள் காதில் குனிந்து அவன் ரகசியம் பேச, அவனைத் தள்ளிவிட்டவள்,

“ச்சீ... அப்படியெல்லாம் இல்லை. கொஞ்ச நாளாவே என் மனசுக்குள் ஒரு மாறுதல் வந்திருச்சு. முதலில் எல்லாம் என்னைச் சீண்டிக்கிட்டே இருப்பிங்க. ஆனால் திருமணத்திற்கு அப்புறம் என் பக்கம் வர கூடத் தயங்கினீங்க. நீங்க விலகுவது போல் தோணவும் தான் நீங்க என் கூடவே இருக்கக் வேணும்ங்கிற எண்ணம் வலுத்தது. அன்னைக்கு ஷர்மி திருமணத்தின் போது நீங்க என்னை விட்டு விலகிப் போன போது நான் எப்படித் துடித்தேன் தெரியுமா? அது ஏன்னு தான் புரியாமல் இருந்தது. ஆனால் இன்னைக்குப் புரிஞ்சிருச்சு. என் மனம் முழுவதும் நீங்க தான் நிரம்பியிருக்கிங்க. நான் உங்களைக் காதலிக்கிறேன்னு முழுமையாக உணர்ந்தேன். ஷர்மிக் கல்யாணம் முடிந்ததும் உங்களை விட்டு விலகிப் போகணும்ன்னு தான் இருந்தேன். ஆனால் என்னால் முடியல. அதுக்கான காரணம் இன்று உணர்ந்து கொண்டேன். பரத் ஐ லவ் யூ” அவன் மார்பில் முகம் புதைத்தவளைத் தன்னுள் புதைப்பது போல் இன்னமும் இறுக்கிக் கொண்டான்.

“நீங்க ஏன் என்னை விட்டு விலகி விலகிப் போனிங்க?” அவன் மார்பிலிருந்து முகத்தை எடுத்துக் கொண்டவளைப் பார்த்து, “உன் மனதில் நான் இருக்கிறேன். என் மீது உனக்குக் காதலிருக்கிறதுன்னு எனக்குத் தெரியும். ஆனால் நீயே ஒரு வேலிப் போட்டுக் கொண்டு அதைத் தாண்டி வர விரும்பல. உன்னை நீ புரிந்து கொள்ளவில்லையோன்னு சில நேரங்களில் எனக்குத்

தோணும். திருமணத்திற்கு முன் உன்னைச் சீண்டிக் கொண்டிருந்ததற்குக் காரணம் நீ என்னை உணரனும், உனக்காக நான் இருக்கிறேன் என்பதை உனக்குப் புரிய வைக்கணும்ன்னு அப்படிச் செய்தேன். ஆனால் திருமணத்திற்குப் பின் அந்த மாதிரி என்னால் உன்னருகில் நெருங்கி வர முடியவில்லை. முதலிலாவது திருமணமாகவில்லைன்னு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தேன். இப்பொழுது சொந்தமாய்க் கைக்கெட்டும் தூரத்தில் நீ இருந்தும் என்னால் கட்டுப்பாடுடன் இருக்க முடியுமாங்கிற சந்தேகத்தில் தான் உன்னருகில் வரவே பயந்தேன். என்னையுமறியாமல் உன்னைக் காயப்படுத்தி விடுவேனோ என்ற கலக்கம் மனதில் உறுத்திக் கொண்டிருக்க, அதனால் தான் விலகி இருந்தேன்”

தனக்காகப் பார்த்துச் செய்யும், நடந்து கொள்ளும் கணவனைக் காதலுடன் அவள் ஏறிட, அவனோ அவளின் காதல் பார்வையில் தன்னை முற்றிலும் தொலைத்தவனாய் மீண்டும் அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

மறுநாள் காலையில் மதியின் சிவந்த முகத்தையும், விஷ்ணுவின் மலர்ந்த முகத்தையும் பார்த்த யசோதாவிற்கு அப்பொழுது தான் மனம் நிறைந்தது. மகளின் வெட்கச் சிரிப்பு ஆண்டாளுக்கும் நடந்ததை உணர்த்த அதைக் கண்டு அவரும் நிம்மதியடைந்தார்.

அத்தியாயம் : 25

தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணுவின் மனம் தன்னவளை நினைத்துப் பெருமிதத்தில் விம்மியது. டெல்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவக்கல்லூரி மாணவிக்கு நடந்த வன்கொடுமைக்கு எதிராகச் சென்னையில் நடக்கும் போராட்டத்தில் வாயில் கறுப்புத்துணிக் கட்டி, கையில் வன்கொடுமைக்கு எதிரான வாசகங்களைத் தாங்கி இதோ முன்வரிசையில் கம்பீரமாக நடந்து போகிற ஷன்மதியைக் கண்ணிமைக்காமல் பார்த்தான். இவள் என்னவள் என்ற கர்வம் அவனிடத்தில் வந்தது.

இதே வன்கொடுமையால் அன்று பாதிக்கப்பட்டு உருக்குழைந்து இருந்தவள் இன்று தலை நிமிர்ந்து மற்றொரு பெண்ணிற்காகப் போராடுகிறாள் என்றால் அவள் மனதைரியத்தை என்னவென்று சொல்வது! உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வந்த அன்றும் என்ன தைரியமாய் அதை எதிர்கொண்டாள். அந்தக் கயவர்களுக்குத் தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்டுப் போது அன்று முழுவதும் அமைதி காத்தாளே தவிரக் கொஞ்சமும் கண்ணீர் வடிக்கவில்லை. அவன் நினைத்தபடி அவளைப் பாரதிக் கண்டப் புதுமைப் பெண்ணாய் மாற்றிவிட்டான் இல்லை மாறிவிட்டாள். அவள் மனது வைக்காமல் அவனும் அவளை மாற்றி இருக்க முடியாது.

“ஹெய்யா மம்மி... டிவியில் வர்றாங்க” ஷரத்தின் குரலில் தன்னினவைக் கலைந்தவன் சிரிப்புடன் அவனை மடியில் இருத்திக் கொண்டான்.

மதி வீட்டிற்கு வரும் முன் எல்லா வேலைகளையும் செய்து முடித்தவன் ஷரத்திற்கும் உணவு ஊட்டி முடிக்கும் வேளையில் உள்ளே நுழைந்தாள் மதி. பார்க்கும் போதே அவள் களைப்பாக இருப்பதை உணர்ந்தவன், குளிர்ந்த நீரை அவள் முன் நீட்டினான். நன்றியுடன் அதை வாங்கி அவள் பருக, ஷரத் அவள் மடி மீதமர்ந்து, “மம்மி உங்களை டிவியில் பார்த்தேனே” குதூகலத்துடன் சொல்ல, அவன் தலையை வருடிப் புன்னகைத்தாள்.

“ஷம்மு... நீ போய்ச் சாப்பிடு” அவளின் களைப்பை உணர்ந்தவனாய் சொல்லியவன், “ஷரத் தூங்கலாம் வருகிறாயா?” என்க, சின்னவன் தலையசைத்தபடித் தந்தையிடம் தாவ, அவனைத் தூக்கிக் கொண்டு நடந்த கணவனைக் கண்டவள் மனம் இவன் என்னவன் என்று பெருமிதமடைந்தது.

உணவு உண்டுவிட்டுப் படுக்கையறையில் நுழைந்தவள் கணவன் அருகில் அமர, அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டவன், “என்னடா டயர்டா இருக்கா?”

“ம்... கொஞ்சம்”

“உன்னை நினைத்துப் பெருமையாயிருக்கு ஷம்மு...” அவள் கழுத்தில் முகம் புதைத்து உண்மையாய், அவளை உணர்ந்தவனாய் அவன் சொல்ல, அவனின் செயலைக் கண் மூடி ரசித்துக் கொண்டே, “நீங்க இல்லைன்னா நான் இந்த மாதிரி வர முடியுமா?” சிறுமையைக் கண்டு பொங்கும் அவள் எண்ணத்திற்கு எந்தக் கட்டுப்பாடும் அவன் விதிக்கவில்லை.

அதனால் தான் அவள் போராட்டம், பெண்ணியம் என்று பேசிக் கொண்டு வெளியில் செல்ல முடிகிறது. வீட்டில் அவள் இல்லாத நேரங்களில் அவளுக்கும் சேர்த்து அவன் எல்லா வேலைகளையும் செய்வதாகட்டும், ஷரத்திற்கு இன்னொரு தாயாகவே மாறி அவனைக் கவனிப்பதாகட்டும் எல்லாமே அவன் பார்த்துக் கொள்வதால் தான் அவள் நிம்மதியாக இருக்க முடிந்தது. மொத்தத்தில் அவளின் வாழ்க்கை அச்சாணியே விஷ்ணு தான்.

“ஐ லவ் யூ பரத்” கண்களில் மயக்கத்துடன் தன் இருக்கரங்களை அவன் கழுத்தில் மாலையாக்கி அவன் முகத்தைத் தன் முகத்தருகில் வளைக்க, அதில் தன்னை மறந்தவனாய் அவனும் அவள் இதழை தன் இதழால் மூட வர, அவளோ உமட்டிக் கொண்டு குளியலறைக்கு ஓடினாள். பின் மீண்டும் அறைக்கு வந்தவள் கைப்பையிலிருந்து எதையோ எடுத்துக் கொண்டு குளியலறைக்கு ஓட, அவளின் செய்கையில் குழப்பமுற்று விஷ்ணுக்

குளியலறை வாயிலில் அவளுக்காகப் பதட்டத்துடன் காத்திருக்க, மெதுவே கதவைத் திறந்தவள், அவனைக் கண்டு முகம் சிவந்து தலைக்குனிய, “என்னடா... என்ன பண்ணுது?” அவன் குரல் கலக்கமுடன் ஒலித்தது.

“ரொம்ப நாளாவே சந்தேகமாயிருந்தது. அதான் வரும் போதே கிட் வாங்கி வந்தேன்” என்றவளைப் புரியாமல் அவன் பார்க்க, “ஷரத் கூட விளையாட ஒரு ஆள் வரப் போறாங்க” அவள் சொன்னதன் அர்த்தம் வெகுநேரம் கழித்து அவனுக்குப் புரிய, “ஹேய்...” சந்தோசக் கூச்சலிட்டபடி அவளைத் தூக்கிச் சுற்றினான்.

“தேங்க்ஸ்டா...” சொல்லிக் கொண்டே அவள் முகம் முழுவதும் முத்தமிட, அவளோ இன்னமும் வெட்கிச் சிவந்தாள்.

“ஹலோ மேடம் வெளியில் அவ்வளவு கம்பீரமா இருந்துட்டு... வீட்டில் இப்படி வெட்கப்படுறீங்களே”

“நீங்க மட்டும் என்னவாம் வெளியில் லீடிங் லாயர்ன்னு பெத்தப் பேரு. வீட்டில் பொண்டாட்டிப் புடவையெல்லாம் துவைக்கிறீங்களாமே” பதிலுக்கு அவனைக் கிண்டலடிக்க, “என் பொண்டாட்டிப் புடவைத் தானே துவைக்கிறேன். அடுத்தவன் பொண்டாட்டி புடவையையாத் துவைக்கிறேன்?” அவள் மூக்கோடு மூக்கு வைத்து உரச, அவன் பேச்சில் அவள் கலகலத்து சிரித்தாள். அவளின் சிரிப்பை அவன் ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் நினைத்தது போல் அவள் முகத்தில் சிரிப்பை மீட்டெடுத்து விட்டான். அவளின் சிரிப்பிற்காக அவன் பாடுப்பட்டது அவனுக்குத் தானே தெரியும். அந்த அன்புக் கணவனின் அன்புக்குத் தான் விலையேது? எல்லையேது?

****

“ஷம்மு வலிக்கிறதா...” கண்கள் கலங்கக் கேட்ட விஷ்ணுவைப் பார்த்த ஷன்மதிக்கு, ஷரத்தின் பிரசவக்காலம் நியாபகத்தில் வந்தது. அன்று அவன் கண்களில் கண்ட அதே கலக்கம் கொஞ்சமும் குறையாமல் அதேயளவு இருப்பதைக் கண்டு அவள் மனதில் காதல் பெருக்கெடுக்க, அவன் முகத்தைத் தன் இருகைகளால்

பற்றித் தன் முகம் நோக்கி அருகில் இழுத்தவள், “நான் பிழைத்து வருவேன். கவலைப்பட வேண்டாம்... அவ்வளவு சீக்கிரம் உங்களைப் படுத்தாமல் போக மாட்டேன்” அவளின் பேச்சில் அவனுக்குச் சிரிப்பு வர, “போக்கிரி...” அவள் மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

“சார் ஆபரேசன் தியேட்டர் கூட்டிக் கொண்டு போகணும்” செவிலிப்பெண் சொல்லவும் தான் அவர்கள் இருவரும் விலகினார்கள். ஆனால் ஆபரேசன் தியேட்டர் வரும் வரை அவள் கையைப் பிடித்துக் கொண்டே வந்தவன், “தைரியமாயிருக்க வேண்டும்... உனக்காக நானிருக்கிறேன்...எந்த நேரத்திலும்...எப்பொழுதும்...” அன்று சொன்னதை இன்றும் நினைவு வைத்து அவன் சொல்ல, அவள் கண்களில் காதலோடு அவனைப் பார்க்கும் போதே அறையின் கதவு மூடப்பட்டது.

ஷரத்தை மடியில் வைத்துக் கொண்டு படபடப்புடன் காத்துக் கொண்டிருந்தவனை எல்லோரும் சிரிப்புடன் பார்க்க, அவர்களின் சிரிப்பைக் கண்டு கொஞ்சம் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டான். என்னயிருந்தாலும் மனம் பரபரப்பதை அவனால் அடக்க முடியவில்லை.

“பெண் குழந்தைப் பிறந்திருக்கிறது” மருத்துவர் சொல்லவும் தான் அவன் மனதில் நிம்மதி வந்தது. மடியிலிருந்த ஷரத்தைத் தூக்கி முத்தமிட்டவன், “கண்ணா... உன் கூட விளையாடத் தங்கச்சி பாப்பா பிறந்திருக்கு” மகிழ்ச்சியுடன் கூற,

“அய்... பாப்பா பிறந்தாச்சு...” சிறுவன் குதூகலிக்க, ஸ்ரீனிவாசன் அவனைத் தன் கையில் வாங்கிக் கொண்டு, “ஷரத் நாம் போய்ச் சாக்லேட் வாங்கி வரலாம். மாப்பிள்ளை நீங்க போய் மதியைப் பாருங்க” அவனின் தவிப்பை உணர்ந்தவராய் பேச, அவரை நன்றியுடன் பார்த்தவன் உள்ளே வேகமாகச் சென்றான்.

மதியைக் கண்டதும் கண்களில் கண்ணீர் மல்க, ஏதோ யுகம் யுகமாய்ப் பிரிந்தது போல் அவளைக் கண்களில் நிறைத்துக் கொண்டு அவளருகில் வந்தவன், அவள் நெற்றியில் முத்தமிட்டு, “தேங்க்ஸ் ஷம்மு...” என்க, அந்த

ஒற்றை வார்த்தை, அவளிடம் ஆயிரம் அர்த்தங்களைச் சொல்ல, அவன் கையை எடுத்து தன் கன்னத்தோடு வைத்துக் கொண்டு புன்னகைத்தாள் அவன் காதல் மனைவி.

****

மனைவியை உரித்து வைத்துப் பிறந்திருந்த மகளை விஷ்ணுக் கீழே விடவே இல்லை. மகளின் பெயர் சூட்டும் விழாவைப் பெரிதாக அவன் சொந்த ஊரில் எடுக்க, “ஷாலினி” என்று மகளுக்குப் பெயர் வைத்தான். விழாவிற்கு வந்த எல்லோரும் குழந்தையைப் பார்த்து மதியைப் போலிருக்கிறது என்க, ஷரத்தின் மனதில் அது பெரிய காயத்தை உண்டு பண்ணியது. அதிலும் அவனைக் கண்டு கொள்ளாமல் எல்லோரும் குட்டிப்பாப்பாவை கொஞ்சுவதைக் கண்டு உள்ளுக்குள் மருகியவன் கொஞ்சம் கொஞ்சமாக விலகி தன்னறைக்குச் சென்று ஒரு மூலையில் மடங்கி உட்கார்ந்துவிட்டான்.

இதையறியாத விஷ்ணு உணவுவேளையில் அவனைத் தேட, அவனைக் காணாது மதியிடம் கேட்டான். அவளுக்கும் தெரியவில்லை. இருவரும் ஒவ்வொரு இடமாகத் தேட, கடைசியில் தங்களறையில் மூலையில் ஒடுங்கி உட்கார்ந்திருக்கும் அவனைக் கண்டுபிடித்துப் பதறிப் போய் அவனிடம் ஓடினர்.

“ஹேய் ஷரத் இங்கே என்ன பண்ணிட்டிருக்க?” விஷ்ணு மகனைத் தூக்க முயல, அப்பொழுது தான் கவனித்தான் சின்னவன் முகம் அழுது சிவந்திருப்பதை. பதறிப் போய் அவனை வாரியணைக்க, மதி ஷரத்தின் தலையை ஆறுதலாக வருடினாள்.

“கண்ணா ஏண்டா அழுகிறாய்?” விஷ்ணுவின் குரலும் கலங்கியதோ?

“பாப்பா மம்மி மாதிரின்னா... நான் யாரை மாதிரி... ஏன் யாரும் என்னைக் கொஞ்சல? ஷரத் வேண்டாமா?” அவனின் ஒவ்வொரு வார்த்தைகளும் மதியின் மனதைச் சம்மட்டியாய் தாக்க, விஷ்ணுவோ மகனின் பேச்சின் அர்த்தம் புரிந்து அவனை இறுக அணைத்துக் கொண்டு,

“பாப்பா மம்மி மாதிரின்னா... நீ டாடி மாதிரிக் கண்ணா. யார் கொஞ்சினால் என்ன... கொஞ்சாவிட்டால் என்ன... உனக்கு நானிருக்கிறேன் கண்ணா” என்றவன் மகனை அள்ளியெடுத்து முத்தமிட, சின்னவனோ அவன் கொஞ்சியதைக் கூடக் கண்டு கொள்ளாமல், “அப்போ நானும் உங்களை மாதிரி பெருசா வளருவேனா?”

“ஆமாம்... பெருசா... வளருவே. வளர்ந்து... நீ தான் பாப்பாவைப் பத்திரமாப் பார்த்துக்கணும்” தகப்பனின் வார்த்தைக் கேட்டு, “நான் தான் பாப்பாவைப் பார்த்துக்கணுமா? ஐயோ இவ்வளவு நேரம் பாப்பாவைத் தனியா விட்டுட்டேனே?” தன் கவலை மறந்து தங்கையைத் தேடி வெளியில் ஓட, அப்பொழுது தான் மதியைக் கவனித்தான் விஷ்ணு.

“ஏய்... அவன் ஏதோ தெரியாமல் பேசுறான்னா நீயும் இப்படி அழுதுகிட்டு இருந்தா எப்படி...?” அவளின் கண்ணீரைத் துடைக்க, “பரத்...” என்ற கூவலுடன் அவன் நெஞ்சில் சாய்ந்தவளை ஆறுதலாக அணைக்க, எத்தனை நேரம் நின்றிருந்தார்களோ தெரியாது.

“ஷம்மு... பாப்பா பிறந்து ஒரு மாசமிருக்கும் தானே?”

“ம்...” அவன் அணைப்பில் கண்களை மூடிக் கொண்டு அவள் சொல்ல,

“இப்பொழுது ஒரு சின்ன ட்ரையல் பார்க்கலாமா?”

“ம்...” அவன் சொன்னதன் அர்த்தம் புரியாமல் அவள் மயங்கி நிற்க, அவன் அதைச் சம்மதமாய் எடுத்துக் கொண்டு அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

அவனின் நோக்கம் புரிந்து அவள் அவனைத் தள்ளி விட்டு, “நீங்க சொன்ன ட்ரையல் இது தானா? இன்னும் இரண்டு மாசம் கிட்டே வரக் கூடாது” ஒற்றை விரல் நீட்டி எச்சரிக்க, அதைக் கண்டு பயப்படாதவனாய் அவள் விரல் மீது முத்தமிட்டு, “அதை ஏன் கொஞ்சம் தளர்த்தி... இன்று என்று மாற்றக் கூடாது?” அவனின் பார்வையிலும், பேச்சிலும் வேறுபாட்டை அறிந்தவள், இங்கே இருந்தால் தன்னை மயக்கி விடுவான் என்றெண்ணி, “கூப்பிட்டீங்களா

அத்தை...” வெளிப்பக்கம் பார்த்து குரல் கொடுத்தவள் அவனிடமிருந்து விலகி வெளியில் ஓடினாள்.

மதியைத் தொடர்ந்து சிரிப்புடன் வெளியில் வந்த விஷ்ணுவை யுவன் எதிர்கொண்டான். அன்று மதியைக் காதலிக்கும் காலத்தில் பார்த்த விஷ்ணு போல் அதே பார்வையுடன் அதே காதலுடன் நின்றிருந்த நண்பனைக் கண்டு, “எப்படி விஷ்ணு உன்னால் மட்டும் அன்னைக்கு இருந்த மாதிரி... அதே காதலுடன்... இருக்க முடியுது? ஆச்சிரியத்துடன் கேட்க,

“அதெல்லாம் இங்கேயிருந்து வரணும்டா” தன் நெஞ்சைத் தொட்டுக் காண்பித்தான் தன் விழியில் நுழைந்து இதயம் நுழைந்தவளை அன்பால் சிறை செய்து தன்னுள் அடக்கிக் கொண்ட அந்தக் காதல் கணவன். தனக்கு ஏற்பட்ட பயங்கரத்தால் வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கி ஒடுங்கியிருந்தவளைத் தன் காதலால் அன்பால் தன்னைக் காதலிக்கச் செய்து, வாழ்க்கையையும் காதலிக்கச் செய்த விஷ்ணு அவளின் முன்னேற்றத்திற்கு என்றும் உறுதுணையாக இருப்பான் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டுச் சமூகத்திற்குப் பயந்து வெளியில் சொல்ல முடியாமல் மனதுக்குள் போட்டுக் குமுறிக் கொண்டு, வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் தவிக்கும் எத்தனையோ சகோதரிகளுக்கு நடைமுறை வாழ்க்கையில் நீதிக் கிடைக்கவில்லை என்றாலும் என் கதையில் மதிக்கு நீதி கிடைத்ததன் மூலம் அவர்களுக்கு நியாயம் செய்திருக்கிறேன். அப்படிப்பட்ட என் சகோதரிகளுக்கு இந்தக் கதையைச் சமர்ப்பிக்கிறேன்.